# அருளுடைச் சோழ மண்டலம்



T3947
3947
OFFICE OF THE CURATOR
RECEIVED
7 ஜுன் 1976
LIBRARY

ஆசிரியர்
N. சேதுராமன், B. Sc., D. M. I. T.

ராமன் & ராமன்
கும்பகோணம்.



உ ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள்
கோப்பரகேசரி பந்மரான ஸ்ரீ ராஜராஜ
தேவர் எடுப்பித்தருளின உடையார் தாரா
சுரமுடைய மஹாதேவர்க்கே அருளுடைச்
சோழமண்டலம் என்னும் இந்நூலை ஸ்ரீ
பாதபுஷ்பமாக அட்டித் திருவடி தொழுது
காணிக்கை ஆக்கினேன் குடந்தை சேது
ராமனேன் ஸ்ரீபுஜண்டர் திருவடி ரக்ஷை உ

# அருளுடைச்
# சோழ மண்டலம்

ஸ்ரீபுஜண்டரின் அருள்வாக்கின் அடிப்படையில், சாசனச் சான்றுகளின் துணைகொண்டு சோழ மன்னர்களின் சரித்திரத்தின் ஒரு பகுதியையும் பல்லவராயன்பேட்டைச் சாசனத்தையும் ஆராய்ந்து விளக்கும் வரலாற்று நூல்


ஆசிரியர்

**என். சேதுராமன்,** B. Sc., D. M. I. T.

டைரக்டர்

ராமன் & ராமன் பிரைவேட் லிமிடெட்

பிடாரிகுளம் ரோடு

**கும்பகோணம்**

# ARULUDAICH-CHOLAMANDALAM

First Edition – 1976. 1500 copies.
Entire Copyright is reserved by the Author.

**A Free Publication**

This is a humble service by the author to the study of Epigraphy and History.

This book will be supplied free of cost to Libraries, Epigraphy and History Research Institutions, Archaeological Departments, Universities, Colleges, Orienta Research Centres in Foreign Countries and to those who are interested in the allied subjects. Those who receive the books are requested to bear the postal charges only. Reproduction of this book in Tamil or any other language can be done only with the written permission of the author.

*Author's Address:*

**N. SETHURAMAN**, B. Sc., D. M. I. T.
Director
**Raman & Raman Private Ltd.**
PIDARIKULAM ROAD
**KUMBAKONAM**
TAMIL NADU - INDIA

PRINTED AT SRI VIDYA PRESS, KUMBAKONAM.

# தமிழக வரலாற்றுப் பேரவை

## தலைமையமைப்பு

## தஞ்சை மாவட்டம்

நாள்: 5—3—1976

''அருளுடைச் சோழமண்டலம்' என்னும் இந் நூலாசிரியராகிய திரு. என். சேதுராமன் அவர்கள் ராமன் & ராமன் நிறுவனத்தைத் தோற்றுவித்த திரு. பி. எஸ். நாராயண ஐயர் அவர்களின் இரண்டாம் திருப்புதல்வர் ஆவார். இரசாயனம் பொறியியல் ஆகியவை பயின்று பி. எஸ்ஸி. பட்டமும், டி. எம். ஐ. டி. என்னும் பட்டமும் பெற்றவர். ராமன் & ராமன் நிறு வனத்தின் இயக்குநர்களில் ஒருவர். வரலாறு, கல் வெட்டு, தொல்லெழுத்தியல், சிற்பவியல் ஆகியவற்றில் விழைவும், பயிற்சியும் மிக்கவர். இறையுணர்வுடன் திருக்கோயில் பணிகள் ஆற்றும் கலைப் புரவலர். பெரும் பான்மையான பாடல்பெற்ற தலங்களுக்கும், இந்தியா எங்கனும் உள்ள பல வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களுக் கும் சென்று கண்டு ஆராயும் அறிவுக் கருவூலம். இத் தகைய நல்லுணர்வாளரை ஆதரவாளராகப் பெற்றமை யால் வரலாற்றுப் பேரவை பெரிதும் உவப்படைகிறது.

தலைமையலுவலகம்
கோவிந்தபுரம். P.O.
ஆடுதுறை

வே. மகாதேவன்
மாவட்டச் செயலர்

# முன்னுரை

"முன்னோர் ஒழுகிக் காட்டிய உயர்ந்த நெறிகளையும் அன்னோர் கொண்டிருந்த சிறந்த பண்பினையும் பின்னோர்க்கு நினைப்பூட்டி அவர்களை நல்வழிப்படுத்துவன நாட்டின் பழைய சரிதங்களேயாகும்'' என்று கூறினார் மறைந்த மாமேதை திரு. சதாசிவபண்டாரத்தார் அவர்கள். பல ஆன்றோர்களால் ஆராயப்பட்ட பல்லவர், சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மாமன்னர்களின் வரலாறுகள் தமிழகத்தின் தனிப்பெருந் தன்மையையும், அக்காலத்திய மன்னர்கள் மனுநெறி அறநெறிகளைக் கடைப்பிடித்தமையையும் பறை சாற்றுகின்றன.

தமிழகத்தின் வரலாற்றை அறிந்துகொள்வதற்குப் பெரிதும் துணையாக உள்ள சாதனங்கள் முறையே 1 கல்வெட்டுக்கள், 2. செப்பேடுகள், 3. இலக்கியங்கள், 4. புராணங்கள், 5 தொல்பொருள், புதைபொருள் ஆராய்ச்சி ஆகியவைகளாகும். அக்காலத்து அரசர்கள் ஆலயங்களிலும், பாறைகளிலும், வெற்றித்தூண்களிலும் வெட்டு வித்தக் கல்வெட்டுக்களில் நம் நாட்டின் சரித்திரத்தின் உண்மைகள் புதைந்துள்ளன என்று சொன்னால் மிகையாகாது இவ்வுண்மையை முதன்முதல் கர்னல் மெக்கன்ஸி என்ற ஆங்கில ராணுவ அதிகாரி 19-ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் வெளியுலகிற்கு அறியப்படுத்தினார். இவரைத் தொடர்ந்து 1890-இல் திரு. ஹூல்ஷ், திரு கீல் ஹார்ன், திரு. சுவல் போன்ற ஐரோப்பிய பேராசிரியர்கள் கல்வெட்டு ஆராய்ச்சியைப் பெரிதும் விரிவுபடுத்தினர். இப்பெரியோர்கள் தமிழ் இலக்கியங்களையும் ஆய்ந்து, சாசனச் செய்திகளுடன் ஒப்பு நோக்கி, தமிழகத்தின் வரலாற்றுக்கு ஒரு உருவம் தந்தார்கள்.

1930-க்குப் பிறகே தமிழகத்தின் வரலாறு ஒரு முழு உருவம் பெற்றது எனலாம். திரு. நீலகண்டசாஸ்திரியார் அவர்கள் ஆங்

கிலத்தில் முழுமையான தென்னிந்திய வரலாற்றை எழுதினர். தமிழகத்தின் சரித்திரத்தை ஓர் அற்புதமான வரலாருக திரு சதாசிவ பண்டாரத்தாரவர்கள் தமிழிலேயே எழுதினர்கள். தொடர்ந்து மற்றும் பல பெரியோர்களும் தமிழகத்தின் வரலாற்றினைப் பலகோணங்களில் ஆய்ந்து அரிய நூல்களாக வெளியிட்டனர். இப்பெரியோர்கள், "புதிய கல்வெட்டு, புதைபொருள் ஆராய்ச்சிகளால், பிற்காலத்தில் புதிய விளக்கங்கள் கிடைக்கலாம்; அதன் காரணமாக இதுவரை கொண்டுள்ள முடிவுகள் மாறுபட்டும் போகலாம்; பிற்காலத்தில் புதிய கண்டுபிடிப்புக்களால் சர்ச்சைக்குரிய சரித்திரப் பகுதிகளுக்குப் புதிய விளக்கங்கள் பெற வாய்ப்பும் உண்டு" என்றும் கூறியுள்ளனர்.

அறிஞர் பெருமக்கள் அளித்துச் சென்றுள்ள வரலாற்று நூல்கள் என்னுள்ளத்தில் உவப்பினை உருவாக்குவனவாயின. நான் தொழில் துறையினனாயினும் வரலாற்று நூல்களைக் கற்றும் திருக்கோயில்களுக்குச் சென்று கல்வெட்டுக்களைக் கண்டு ஆராய்ந்தும் வளரலானேன். இவ்வாறிருக்கும் காலத்தில் 1975-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஸ்ரீபுஜண்டரின் சுவடி கேட்கும் பேறு பெற்றேன். அவர்தம் அருள்வாக்கில் பல அருமையான சரித்திரக் குறிப்புக்கள் அமைந்துள்ளமை கண்டு அதிசயித்தேன். ஐந்து மாதகாலம் ஸ்ரீபுஜண்டரின் அருள் வாசகங்களைக் கேட்டமையால் சோழர் சரித்திரம் பற்றிய புது உண்மைகள் பல புலனாகியன. பல்லவராயன்பேட்டைச் சாசனத்தை ஆராயுமாறு அவ்வருள் நூல் எண்ணம் கூட்டிற்று; ஆராயவேண்டிய முறைபற்றியும் அறிவுறுத்தியது.

ஸ்ரீபுஜண்டர், சோழர் சரித்திரம் பற்றிக் கூறிய கருத்துக்களைக் கோத்து நூல் எழுதுமாறு பணித்தார். "அருளுடைச் சோழமண்டலம்" என்று அடியெடுத்துக் கொடுத்து இவ் வெளியேனையும் அப்பேரருளாளர் ஊக்கினர். எனையும் ஓர் பொருட்டாகக்கொண்டு அருள்செய்த எம்பிரான் ஏவலின்படி முகிழ்த்ததே இந்நூல்.

ஸ்ரீ புஜண்டரின் அருள்வாசகங்களை அவ்வப்பொழுது எடுத்தோதும் ஞானசிவமாய்த் திகழும் என் நண்பர் திரு. இரமணி அவர்களுக்கும், இந்நூலை எழுதும் காலத்து என்னைப் பெரிதும் ஊக்குவித்த என் நண்பர்களான தளபதி, கேசவன், மாமருத்துவன் ஆகியோருக்கும் யான் என்றைக்கும் கடமைப்பட்டவன்.

நூலின் முகப்பினை அணிசெய்யும் திருவாலங்காட்டுச் செப்பேட்டு இலச்சினையின் புகைப் படத்தையும் மற்றும் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ள நந்தூரு செப்பேடுகளின் புகைப்படம் இரண்டினையும் மத்திய அரசு தொல்லியல் துறையினர் அளித்தனர். அவ்விலாக்காவினருக்கு என் நன்றி என்றும் உரியது.

இந்நூலின் பின்புற அட்டையை அலங்கரிக்கும் ஸ்ரீராஜேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேட்டின் இலச்சினையின் புகைப்படத்தைத் தந்து உதவிய தமிழ்நாடு அரசு தொல்பொருள் இலாக்காவினருக்கும் என் நன்றி என்றும் உரித்ததாகும்,

இந்நூல் எழுதும் காலத்தில் அச்சுப்படிகளைத் திருத்துதல் முதலான பணிகளைச் செய்த புலவர் வே. மகாதேவன் வாழ்வாங்குவாழ இறையருள் புரிவதாகுக, தெலுங்குக் கல்வெட்டுக்களின் பொருளை உணர உதவிய கல்வெட்டு ஆராய்ச்சிப் புலவர் திரு. கே. எம், வேங்கடராமையா, எம் ஏ. அவர்களுக்கும், சிறந்த முறையில் அச்சிட்டளித்த ஸ்ரீவித்யா அச்சக உரிமையாளர்கள் திரு. இராமதாஸ், திரு. இராமசுப்பிரமணியன் அவர்களுக்கும் என் நன்றியுரியதாகும்.

இந்நூல் முழுவதிலும் புதுக்கோணத்தில் சிந்தித்துக் கூறப்பட்டுள்ள செய்திகளை வரலாற்று அறிஞர்கள் ஆராய்ந்து ஏற்குமாறு வேண்டுகிறேன்,

ராமன் & ராமன்
கும்பகோணம்

**என். சேதுராமன்**
5—3—1976.

# பொருளடக்கம்


| | தலைப்பு | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அருளுடைச் சோழமண்டலம் | — | 1 |
| 2. | வரலாற்றுப் பகுதி | ... | 45 |
| 3. | பிற்காலச் சோழர் | ... | 47 |
| 4. | இரண்டாம் இராசராசனின் காலம் | ... | 51 |
| 5. | பல்லவராயன்பேட்டைச் சாசன முகப்புரை | ... | 60 |
| 6. | பல்லவராயன்பேட்டைச் சாசன ஆராய்ச்சி | ... | 63 |
| 7. | மேற்படிச் சாசன பழைய விளக்கம் | ... | 114 |
| 8. | இரண்டாம் இராசாதிராசன் காலம் | ... | 123 |
| 9. | இராசாதிராசன் அரியணை ஏறிய நாள் | ... | 133 |
| 10. | இராசாதிராசனின் இறுதி ஆட்சியாண்டு | ... | 141 |
| 11. | காஞ்சீபுரம் கல்வெட்டில் ஒரு புதிர் | ... | 147 |
| 12. | மூன்றும் குலோத்துங்கன் | .... | 154 |
| 13. | மதுரைகொண்ட மாமன்னர்கள் | ... | 156 |
| 14. | சிதம்பரம் கல்வெட்டு | ... | 165 |
| 15. | ஓர் அதிசய ஒற்றுமை | ... | 175 |
| 16. | பூமருவிய திசைமுகத்தோர் | ... | 182 |
| 17. | சித்தம் தெளியவைக்கும் சித்திசரம் | ... | 186 |
| 18. | சாசனம் தரும் சத்தியசீலன் | ... | 190 |
| 19. | சத்தியசீலன் – இராசாதிராசன் | ... | 191 |
| 20. | புங்கனூர்க் கல்வெட்டு | ... | 197 |
| 21. | கி. பி. 1146 முதல் 1182 வரை | ... | 203 |
| 22. | ஸ்ரீபுஜண்டரின் காலக் கணக்கீடு | ... | 205 |
| 23. | ஆர்ப்பாக்கம் கல்வெட்டில் அகோரபூசை | ... | 209 |
| 24. | சேர்க்கை – 1 | ... | 216 |
| 25. | சேர்க்கை – 2 | ... | 217 |
| 26. | சேர்க்கை – 3 | ... | 218 |
| 27. | முன்னுளில் காரியம் இருந்தபடி | ... | 219 |
| 28. | Summary of this book (in English) | ... | 249 |
| 29. | On Assumption (in English) | ... | 271 |
| 30. | My Experience (in English) | ... | 274 |


GOVT. C...

"ஸ்ரீபுஜண்டர் திருவடி போற்றி"



ஆசிரியர்

**N. சேதுராமன்**

ஆசிரியரின் பின்புறம் உள்ள சுவரில் காணப்படுவது
பல்லவராயன்பேட்டைச் சாசனத்தின்
ஒரு பகுதி ஆகும்

# அருளுடைச் சோழ மண்டலம்

அருளுடைச் சோழ மண்டலம், ஆனந்த சமயமும் பூரணம் கண்டதொரு சோழமண்டலம். பூத்ததொரு சோழமண்டலம். புகழதனைக் கொண்டதொரு சோழ மண்டலம். ஆனந்த சிவனாரும், அறுவகை யோகங்கள் கொண்டோரும், மறைவகை உணர்ந்தோரும், சமய குரவர்களும் நிறைந்து, சார்ந்ததொரு சீர்பெறும் காவிரி நாடாய் ஏற்றங்கள் பல கண்ட சோழமா மன்னர்களும், அரசு கோலோச்சிய சோழ மண்டலத்தின் பெருமை, சரித் திரத்தில் பொன் ஏடுகளில் பொறிக்கத்தக்கதாகும்.

## சோழநாடு – சில பொதுச்செய்திகள்

கி. பி 850 முதல் 1300 வரை சுமார் 450 வருடங்கள் தென்னாட்டில் சோழ சாம்ராஜ்யம் புகழுடன் விளங்கியது. சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தை இட்டவன் விஜயாலயன் ஆவான். அவன் காலம் முதலாகக் கடைசி மாமன்னன் மூன்றும் இராசேந்திரன் காலத்து இறுதிவரை சோழ சாம் ராஜ்யத்தின் புகழ் உலகமெங்கும் கொடிகட்டிப் பறந்தது.

இன்றைய கும்பகோணத்தின் தென்மேற்குப் பகுதி யில் தாராசுரம் என்னும் சிற்றூர் உளது. இதற்கு முற் காலத்தில் "இராசராசபுரம்", "இராசராசபுரி" என்னும் பெயர்கள் பெருமையுடன் விளங்கின. தாராசுரமும் அதன் தென்பகுதியில் உள்ள சோழன்மாளிகை, பட்டீஸ்வரம், முழையூர், பழையாறை, கோபிநாதப்பெருமாள் கோயில், பம்பப்படையூர், ஆரியப்படையூர், புதுப்படையூர், மணப் படையூர், நந்திபுரம் போன்ற சிற்றூர்கள் எல்லாமும்

ஒருங்கிணைந்து, சுமார் ஐந்து மைல் நீளமும், மூன்று மைல் அகலமும்கொண்டு பெருமையுறு மாநகரமாய் " **மும்முடிச் சோழமண்டலம்** " என்று விளங்கியது.

9-ஆம் நூற்றுண்டு முதல் 14-ஆம் நூற்றுண்டுவரை "மும்முடிச் சோழமண்டலம்" தமிழ் மணம் பரப்பித் தென் ஞட்டிலேயே ஓரற்புத நகரமாய்த் திகழ்ந்தது. சோழமா மன்னர், அவர்கள் குடும்பத்தினர், குலத்தினர், அந்தப்புர மகளிர் யாவரும் வாழ்ந்து சீர்பெறும் சிறப்பினைப் பெற்றது இந்த மும்முடிச் சோழ மண்டலம்தான். இந்நகர் கோட்டைக் கொத்தளங்களும், அரண்மனைகளும் நிறைந்து குபேரப் பட்டணம் போன்று புகழுடன் விளங்கியது.

மாமன்னர்கள் வீற்றிருந்த 'காளிங்கராயன்' என்னும் வீரசிம்ஹாஸனத்துடன் கூடிய ஆயிரத்தளி அரண்மனையும்,[1] இராசராசபுர அந்தப்புரங்களும் இந்தத் தலத்தில் தான் மகோன்னத நிலையில் திகழ்ந்தன. திருமுறைகளிலும், தேவாரங்களிலும் போற்றப்படும் பட்டிசரம், திருச்சத்தி முற்றம், பழையாறை, ஆவூர், திருநல்லூர், திருவலஞ்சுழி திருக்குடந்தை முதலிய பாடல் பெற்ற தலங்கள் நிறைந்தும், சூழ்ந்தும் சமயமணம் கமழ்ந்து நின்றது இந்த மண்டலம்தான். சோழ மாமன்னர்கள் பிறந்து. வளர்ந்து பெருமையுடன் முடி சூடிய இந்த மும்முடிச்சோழமண்டலம் சரித்திரத்தின் ஏடுகளில் மங்காத புகழைப் பெற்றிருக்கிறது.

முதல் விஜயாலயன் காலம் முதல், தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயிலை எடுப்பித்த முதல் இராசராசன் காலம்

---

1. EPIGRAPHIA INDICA, Vol 22, பக்கம் 267–81.

வரை (கி. பி 985 – 1014) இன்றைய தஞ்சாவூர், சோழ சாம்ராஜ்யத்தின் இராஜதானியாகத் திகழ்ந்தது.

முதல் இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன் வடவகை தேசங்களை வென்று கங்கை நீரைக் கொணர்ந்து கொள்ளிடத்தின் வடகரையில் கங்கைகொண்ட சோழ புரம் (கி. பி. 1025) என்ற தலைநகரை நிறுவி அதையே சாம்ராஜ்யத்தின் தலைநகராய்ச் செய்தான். இது வலிமை மிகுந்த அரண்களும், திருமதில்களும், அகழியும் சூழப் பெற்றுத் தென்னாட்டிலேயே சிறந்த கோட்டை கொத்த ளங்களுடன் விளங்கியது. முதலாம் இராசேந்திரன் தந்தையைப்போலவே 'பிரகதீஸ்வரம்' என்றும், 'கங்கை கொண்ட சோளீஸ்வரம்' என்றும் புகழப்படும் மிகப் பெரிய சிவனாரின் கோயிலை எடுப்பித்தான். இன்று நாம் காணும் இக் கோயிலின் தென்மேற்கேதான் முன்பு கோட்டைகளும், அரண்மனைகளும் விளங்கின. இங்கிருந்து தான் முதலாம் இராசேந்திரன், வீரராசேந்திரன். இராசாதி ராசன், அதிராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண் டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றும் குலோத்துங்கன், மூன்றும் இராசராசன், மூன்றும் இரா சேந்திரன் முதலிய மாமன்னர்கள் அரசு புரிந்தார்கள். கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டாரால் 'கங்காபுரி'[2] என்று இது சிறப்பிக்கப்பட்டுள்ளது. வடவகை தேச மக்களும், பர்மா, சுமத்திரா, ஜாவா, மலேயா, கம்போடியா, சீனு முதலிய தேசங்களிலிருந்து வந்த தூதுவர்களும், மா மன்னர்களைக் கண்டு அரசியல், வணிகம் இவைகள் பற்றி

---

2. கலிங்கத்துப் பரணி 13, தாழிசை 61.

அளவளாவியதும் திறை கொண்டுவந்து செலுத்தியதும் இத்தலத்தில்தான்.

சுருங்கக்கூறின் அரச குடும்பத்தினர் வாழ்ந்த தலமாக (Royal Family Capital) மும்முடிச் சோழ மண்டலமும், சாம்ராஜ்யத்தின் செங்கோல் ஓச்சும் தலைநகரமாகக் கங்கைகொண்ட சோழபுரமும் விளங்கின.

## சர்ச்சைக்குரிய சரித்திரப் பகுதி

தில்லை நடராஜப் பெருமானையும், சிவகாமி அம்மையையும் குலதெய்வமாகக் கொண்டு செங்கோல் ஓச்சிய சோழர் சரித்திரத்தில் இடைப்பட்ட பகுதியை மையமாக வைத்து இங்கு ஓராராய்ச்சியை விளக்க முற்படுகிறேன். இங்கு எடுத்துக்கொண்ட காலம் கி. பி. 1146 முதல் 1178 வரை உள்ள காலமாகும். இந்த இடைவெளியில் நிகழ்ந்த சரித்திரத்தில் இதுவரை வெளிவராத உண்மைகளை எடுத்து எழுத இறைவன் அருளோடு விழைகிறேன்.

சேக்கிழாரைக்கொண்டு பெரிய புராணம் பாடச் செய்தவன் இரண்டாம் குலோத்துங்கன். அவன் மைந்தன் இரண்டாம் இராசராசன். கி பி 1146-இல் இரண்டாம் இராசராசன் அரசு கட்டில் ஏறினன். அவனுக்குப்பின் இரண்டாம் இராசாதிராசன் அரசு புரிந்தான். அவனுக்குப் பின் கி. பி. 1178-இல் மூன்றும் குலோத்துங்கன் அரியணையில் அமர்ந்தான். இம் மூன்று மாமன்னர்களின் சரித்திர உண்மைகள்தாம் எத்தனை சர்ச்சைகளை ஏற்படுத்துகின்றன? "இம்மூவருக்கும் உள்ள உறவு முறைதான் என்ன? இவர்கள் பங்காளிகளா ? இவரிடையே அமைந்த உறவு யாது? " என்பனவற்றைப் பலரும் இதுவரை அநேக கோணங்களில் ஆராய்ச்சி செய்திருக்கின்றனர்.

இவ்வினுக்களுக்குரிய விடையாகத் திரு. டி. என். சுப்பிரமணியம் அவர்களால் தென்னிந்தியக்கோயிற் சாசனத் தொகுதியிலும்,[3] திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்களால் எபிகிராபிகா இண்டிகா தொகுதியிலும்,[4] திரு. வ. பொன்னுச்சாமிப் பிள்ளை அவர்களால் குலோத்துங்கன் மூவர் என்னும் நூலிலும்[5] பலவாருன விளக்கங்கள் தரப் பட்டுள்ளன. இவ்வாராய்ச்சிக் கட்டுரைகள் சிலாசாசனங் களையும், இலக்கியங்களையும் அடிப்படையாகக்கொண்டு எழுதப் பெற்றவை; பல்வேறு முடிவுகள் உடையவை; நிலையான ஒரு முடிவுக்கு வரமுடியாமல் ஊகமாக முடிவன. இவை இராசாதிராசன் காலத்தனவாகிய பல்லவ ராயன்பேட்டைக் கல்வெட்டு,[6] ஆர்ப்பாக்கம் கல்வெட்டு[7] ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றவை.

துரதிஷ்டவசமாக இக் கல்வெட்டுகளில் சில பகுதிகள் சிதைந்து உள்ளமையால், முக்கியமான உண்மைகளை அறிய முடியாது. ஊகமான ஒரு முடிவிற்கு வரவேண்டியுள்ளது. இதில் ஆச்சரியம் என்னவென்ருல், ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலிருந்து ஆராய்வதால் வேறு வேறு முடிவுக்கே வருகின்றனர். இதை நான் எழுதும் காலத்தில் மேற்குறிப்பிட்ட பெரியோர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் ஒரு சிறிதும் குறைகாணவில்லை. ஆனல்

---

3. **தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், பாகம் 3, பகுதி 2, சரித்திரக் குறிப்புக்கள், பக்கம் 146 - 175.**
4. **தொகுதி 21, பகுதி 5, பக்கம் 223—28.**
5. **பக்கம் 114 - 121.**
6. A. R. E. Year 1924, Ins. No. 433.
7. S. I. I. Vol. 6, **க. எண் 456**; 20 of 1899.

ஒன்றுமட்டும் நிச்சயம். அவர்களது ஆராய்ச்சிகள் சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியைத் தொடர்பு விட்டுப்போகாமல் தெரிந்துகொள்வதற்குப் பெரிதும் உதவுகின்றன. மேலும் அவர்களது கூற்றுகள் ஆராய்ச்சியாளர்களின் சிந்தனைக்குப் பெருவிருந்தாக அமைகின்றன.

## அறிவுறுத்தினர்; ஆணையும் அருளினர்.

நான் இந்தப் பகுதியில் ஈடுபாடுகொண்டு உண்மைகளை ஆராய்ந்து எழுதுவதற்குப் பெரிதும் உதவியவை ஸ்ரீ புஜண்டரின் நாடிக்கிரந்தம் எனப்படும், பனை ஓலையில் எழுதப்பட்டுள்ள தமிழ்ச்சுவடிகளே ஆகும்.

இது என்ன புஜண்டர் நாடி ? அந்தச் சுவடிகள் யாவை ? என்று இங்கு விளக்குவது அவசியம்.

எனது நண்பர் திரு. ஆர். வி. இரமணி என்பவர் 38 வயதுடைய இளைஞர். சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் மாம்பலம் கிளையில் விற்பனையாளராகப் பணிபுரிகிறார். சுமார் 14 வருடங்களுக்குமுன் அவருக்கு ஹரித்வாரம் செல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அங்கு இமயமலைச் சாரலில் 'மஹாவில்வதளமகரிஷி' என்ற மகானைச் சந்தித்தார். அவருடன் சில நாட்கள் தங்கிச் சோதிடக்கலை பயின்றார். அந்த மகான் திரு. இரமணி அவர்களிடம் சுமார் 1800 ஓலைச்சுவடிக் கட்டுகளைக் கொடுத்து, அவையெல்லாம் ஸ்ரீ புஜண்டர் என்னும் மாமுனிவரால் எழுதப்பட்டவையென்றும், அவைகளைப் படித்து மக்களுக்குப் பலன்கள் சொல்லுமாறும் பணித்தார்கள். அந்தச் சுவடிகளில் யார் யாருக்குப் பலன்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவர்கள் விதிப் பயனால் நாளும் வந்து கேட்டுப் பெரிதும்

நன்மை அடைகின்றனர். நானும் எனது நண்பர்களும் அவரிடம் சுவடி படிக்கக் கேட்டு நூற்றுக்கு நூறு உண்மைகளை நேரில் கண்டும் கேட்டும் பலனடைகிறோம். அவர் விலாசம் பின்வருமாறு :—

**திரு. ஆர். வி. இரமணி,**
**விற்பனையாளர்,**
**சௌத் இந்தியா கார்ப்பரேஷன்,**
**8/1, உஸ்மான் ரோடு,**
**தியாகராய நகர்,**
**சென்னை-17.**

இன்றும் அவர் பலன்கள் சொல்லிவருகிறார். யாவரும் சென்று கேட்கலாம். அவர் இதற்கு எந்தவிதமான பிரதி பயனோ, வெகுமதியோ, பணமோ வாங்குவது இல்லை. மிகுந்த தெய்வபக்தி கொண்ட இளைஞர்.

திரு. இரமணி அவர்களை நான் 1975, பிப்ரவரியில் தான் அறிந்து தோழமை பூண்டேன். அவரிடம் சுவடிகள் படிக்கக் கேட்டுப் பல உண்மைகளை அறிந்தேன். என் நண்பர்கள் பலரும் இந்த அனுபவத்தைப் பெற்றார்கள்.

1975ஆம் ஆண்டு மார்ச்சு 5ஆம் தேதி அன்று எனது நண்பர் ஒருவர் திரு. இரமணியுடன் என்னைப் பார்க்க வந்தார். வந்தவர், "இராசராசேஸ்வரம் என்னும் தலம் எங்கு உள்ளது?" என்று கேட்டார். "கும்பகோணத்தின் அருகில் உள்ள தாராசுரம்தான் இராசராசேஸ்வரம்" என்று கூறினேன். "அந்தத் தலத்தில் பலன் கேட்குமாறு நாடியில் வந்துள்ளது; ஆகவே அங்குச் சென்று படிக்க வேண்டும்" என்று நண்பர் கூறினார். என்னையும் வருமாறு அழைத்தார்.

அதன்படி எனது நண்பர், நான், மற்றொரு நண்பர், திரு. இரமணி ஆகிய நால்வரும் மறுநாள் (மார்ச்சு 6-ஆம் தேதி) மாலை 6½ மணிக்குத் தாராசுரம் கோயிலுக்குச் சென்று சிவனாரைத் தரிசனம் செய்தோம். இறைவன் சந்நிதியில் உட்கார்ந்து திரு, இரமணி அவர்கள் சுவடிகளை எடுத்துப் படிக்க நாங்கள் ஆச்சரியமுடன் பல உண்மை களை அறிந்தோம்.

ஸ்ரீ புஜண்டரின் சுவடிகள் எங்களுக்குக் கூறியவை முழுக்க முழுக்க மும்முடிச்சோழமண்டலத்தின் வரலாறு, இரண்டாம் இராசராசன் அந்தக் கோயிலை எடுப்பித்தது. அவன் அவைக்களத்திலிருந்த அதிகாரிகள், பெரியோர்கள் முதலியவர்களைப்பற்றிய செய்திகளாகும். இவ்விதம் சுமார் 5 மாதங்கள் அனேக தலங்களில் சுவடி கேட்டோம். கேட்டவற்றையெல்லாம் டேப் ரிகார்டு செய்து வைத்திருக் கிறேன். நாங்கள் சுவடிகேட்ட தலங்கள் பின்வருமாறு :

1. தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயில்
2. எனது வீடு
3. சென்னை
4. சாக்கோட்டை (இடிந்த கோட்டை உள்ள இடம்)
5. திருநல்லூர் (சிவன் கோயில்)
6. பட்டீஸ்வரத்தில் சோழர்கள் அரண்மனைகள் இருந்து அழிந்துபோய்த் தற்போது தோப்பாய் இருக்குமிடம்
7. மாயவரம் அருகிலுள்ள பல்லவராயன்பேட்டை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயம்

8. கூத்தனூர் சரஸ்வதிகோயில் (ஒட்டக்கூத்தன் வாழ்ந்த இடம்)
9. புத்தகரம் கிராமம் இடிந்த சிவன் கோயில்
10. காஞ்சீபுரம் அருகிலுள்ள ஆர்ப்பாக்கம், திருவாலீஸ்வரர் கோயில்
11. காஞ்சீபுரம் காமாக்ஷி அம்மன் கோயில்
12. கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில்

இந்த இடங்களுக்கு வரும்படி எங்களுக்குக் கட்டளை பிறந்து அதன்படி சென்று சுவடி கேட்டோம். அந்தந்தத் தலங்களில் சோழ சாம்ராஜ்யத்தின் பின்னணியில் உண்மைகள் பலவற்றை ஏற்றுத் திகழ்ந்த ஆச்சரியம் தரும் சம்பவங்கள் கூறப்பட்டன. கல்வெட்டுக்கள், மற்றும் தொல்பொருள் துறை அறிக்கைகளுடன் ஒப்பிடும்போது பெரிதும் பொருத்தமுடன் இருப்பதனையும், புதிய விளக்கங்களைத் திருவாய்மலர்ந்தருளி யுள்ளமையையும் கண்டோம்.

இவைகளைக் கட்டுரைகளாக வெளியிடலாமென்றும், தக்க சான்றுகள் இந்த இராக்ஷஸ வருஷத்திலேயே செப்பேடுகள், சிலாசாசனங்கள் வாயிலாக எங்கள் குழாம் மூலம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்றும் புஜண்டர் நாடி அருளிற்று. மேலும் இக்கட்டுரையையும், "**அருளுடைச் சோழமண்டலம்**" என்று ஆரம்பித்து எழுதும்படியும் அருளாணை பிறப்பித்தது. அதன்படியே இதை எழுதுகிறேன். இத்துணையும் டேப் ரிகார்டு செய்து வைத்திருக்கிறேன். ஆராய்ச்சியாளர் விரும்பினால் மனம் உவந்து கேட்கலாம்.

**மாமன்னன் இரண்டாம் இராசராசன்**

சுவடிகள் முற்றிலும் இரண்டாம் இராசராசனின் காலத்தையே (கி. பி. 1146 — 1172) குறிக்கின்றன. சுவடிகள் கூறியவற்றை எழுதுவதற்குமுன் இரண்டாம் இராசராசனைப்பற்றி இங்குச் சிறிது கூறவேண்டும். "பூமருவிய புவிமாதும்" "பூமருவிய புவியேழும்" என்னும் மெய்க்கீர்த்திகள் இவனுடைய கல்வெட்டுக்களில் காணப் பெறும். இவன் ஒட்டக்கூத்தனால் இராசராசசோழன் உலாவில் சிறப்பித்துக் கூறப்படுகிறான்; தமிழ்விடுதூதிலும் பாராட்டப்படுகிறான். "கண்ணிதொறும் பொன்னாயிரம் சொரிந்த பூபதி" என்று சங்கர சோழனுலாப்[8] பகர்கின்றது. இவன் முத்தமிழ்த் தலைவன், இராசகம்பீரன், இராசபுரந்தரன், வரராசராசன், சனநாதன், குலதீபன் என்றெல்லாம் இலக்கியங்களில் புகழப்படுகிறான். இவன்

> " தந்தையில்லோர்க்குத் தந்தையாகியும்,
> தாயில்லோர்க்குத் தாயாகியும்
> மைந்தரில்லோர்க்கு மைந்தராகியும்,
> மன்னுயிர்கட்குயிராகியும் "

இருந்த உயிர்க்காவலன் என்றும், "கோபுரக் கொற்றவாசலில் வந்தீண்டி மாமன்னர் பலரும் இவனுக்குத் திறை செலுத்தினர்" என்றும் மெய்க்கீர்த்திகள் கூறுகின்றன. இவ்விதம் சிறப்பித்துக் கூறப்படுகின்ற இரண்டாம் இராசராசனின் சரித்திரத்தின் பகுதியைச் சுவடியில் ஸ்ரீபுஜண்டர் கூறியவாறே எழுதுகிறேன்.

**"மன்மதனும் தோற்றிடும் வகையதனில் மாருப் பெருமை கொண்டு, திரண்டதொரு புஜமும், அருள்கொண்டதொரு திருமார்பும் கொண்டு, ஆனந்த பராக்கிரமங்கள் அழகுடனே கொண்டோன். அன்னநடை என்றும், அருள்நடையோன் என்**

---

8. சங்கரசோழனுலா. கண்ணி எண் 26.

றும், பெருமிதத்தால் வெற்றியின் காளேயோ என்று மக்கள் உணர ஆடவரும், பெண்டிரும் அன்னவனேக் கண்டு காதல் மிகவே கொள்ளும் களிநடனம் புரியும் கருணேக் கண்களே யுடையோன் பொருள நிறைந்ததொரு தனத்தோனுய், அருள் இரக்கம் கொண்ட ஏழை பங்காளனுய்ப் போற்றிப் புகழப்பட்டோன்'' என்பது ஸ்ரீ புஜண்டர் அருள்வாக்கு.[9]

அந்த ஒரு மாமன்னனே இரண்டாம் இராசராசன். (கி. பி. 1146 – 1172). அந்த அரசன் இன்பமுடன் கரம் பிடித்த நங்கையாம் பெருநிலக்கிழத்தி (புவனமுழுதுமுடையாள்) என்னும் அரசியுடன் அரியணேயில் அமர்ந்து செங்கோல் ஓச்சுகின்ற காலம். "ஆனந்தமுடன் மும்முடிச் சோழ மண்டலத்தில் அருளுடன் அழைக்கின்ற'' இராசராசேஸ்வரம் என்னும் கோயிலே எடுப்பித்தான். இது இன்றைய தாராசுரம். கலேயழகு மிகுந்த இக்கோயிலே வெளி நாட்டிலிருந்தும் மன்னர்களும் மக்களும் திரள் திரளாய் வந்து கண்டு களித்தனர். அந்த ஆலயம் இன்று பாழ்பட்டு நின்ருலும், இராக்ஷஸ ஆண்டு வைகாசிக்குமேல் (1975 மே) திருப்பணிகள் துவக்கமாகும். (தற்போது ஓரளவு செப்பனிடப்பட்டிருப்பது உண்மை) இராக்ஷஸ ஆண்டின் இறுதியில் (ஏப்ரல், 1976) பெருமளவில் திருப்பணிகள் இன்றைய அரசாங்கத்தாரால் செய்யப்பட்டு, மக்களாலும், பக்தர்களாலும் போற்றப்பட்டுப் பூரிப்புடன் விளங்கும்.

## அரசனும் போற்றிய அருளுடை நாயகன்

மாமன்னனின் சபையில் அவனது வலதுகரமாய் இருந்து எல்லாத் துறைகளிலும் பணி புரிந்து, மன்னனின்

9. இக்கட்டுரையில் மேற்கோள்குறிக்குள் தடித்த எழுத்தில் எழுதப்பட்டவை புஜண்டரின் வாயிலாகக் கூறப்பட்ட அருள் வாசகங்களே ஆகும்.

நம்பிக்கைக்குப் பெரிதும் பாத்திரமாய் இருந்தோன், "திருச்சிற்றம்பலமுடையான் ஆன பெருமான் நம்பிப் பல்லவராயன்" என்பவன் ஆவான். அவன் மன்னனின் முதல் மந்திரியாயும், அறங்காவலனாயும், படைத்தளபதி யாயும், தக்க சமயங்களில் அறிவுரை கூறும் மதி மந்திரியா யும் விளங்கினான். அவனைக் கேளாது மன்னன் எந்த ஒரு செயலும் செய்ததில்லை. மன்னனது குடும்ப விவகாரங்களி லும், அரண்மனை, அந்தப்புரம் முதலிய அரச குலத்தோர் வழிமுறைகளிலும் இவனே உயிர்க்காவலனாய்த் திகழ்ந் தான். மன்னன் அரசியலில் மட்டுமின்றித் தனது சொந்த குடும்ப விவகாரங்களிலும்கூட இவனுடைய அறிவுரை களையே பெரிதும் எதிர்நோக்கியிருந்தான். திருச்சிற்றம்பல முடையானை மாமன்னன் "அறங்காவலன், அருளுடை நாயகன்" என்றே அழைத்தான். நாமும் அவனை அறங் காவலன் என்றே இக்கட்டுரையில் குறிப்பிடுவோம்.

அறங்காவலன் சிறந்த சிவபகதன். இராசராசேஸ் வரம் கோயில் எடுப்பிக்கப்படும் காலத்தில் முழுவதும் மேற்பார்வையிட்டு இனிதே பணி புரிந்தவன். ஒருசமயம் பாண்டிநாட்டில் சமர் புரிந்து வெற்றியுடன் திரும்பும் போது மதுரை மீனாக்ஷியிடமும், ஆலவாய் சுந்தரேஸ்வர ரிடமும் மனதைப் பறிகொடுத்தான். சோழநாடு திரும்பிய தும், குளத்தூரில் (மாயவரம் அருகில் உள்ள இன்றைய பல்லவராயன்பேட்டை) மீனாக்ஷி சுந்தரேஸ்வரரின் ஆல யத்தை எடுப்பித்தான். பாண்டி நாட்டுப் பெண் தெய்வங் களுக்கு இரண்டு கைகள்தாம் உண்டு. அவ்விதமே மீனாக்ஷி அன்னைக்கும் இரண்டு கைகள்தாம் உண்டு. அறங்காவலன் ஆகமசாத்திர விதிகளை நன்குணர்ந்தவன். சோழ நாட்டு ஆலய விதிமுறைகளிலும், கலைப்பண்பாடு முதலியவை

களிலும் தேர்ச்சியுற்றவன். சோழநாட்டுப் பெண் தெய்வங்களுக்கு நான்கு கைகள் உண்டு. இதை மனதில் வைத்துச் சோழநாட்டில் பல்லவராயன்பேட்டையில் அறங்காவலன் மீனாக்ஷியை நான்கு கைகளுடன் உருவகப்படுத்தினான். (ஸ்ரீ புஜண்டர் சுவடியில் அந்த ஆலயத்தைக் காணுமாறும், காணும் காலத்து அம்மனுக்குப் பச்சைப் புடவை சாத்தி யிருக்குமென்றும் கூறினர். அதன்படியே பச்சைப் புடவையுடன் நான்கு திருக்கரங்களுடன் கூடிய அம்மனைக் கண்டு தரிசித்தேன். இந்த ஆலயத்தில்தான் மீனாக்ஷி அம்மனுக்கு நான்கு கைகள் உள்ளன.)

மாமன்னனும் இவனது பணியைப் பாராட்டி அந்த ஆலயத்தில் பட்டயம் வடித்துப் போற்றிப் புகழ்ந்தான்.[10]

அறங்காவலன், மக்களுக்கும், ஆலயங்களுக்கும் சிறந்த தொண்டுகள் செய்தான். மாமன்னனும் அவனைப் போற்றி "உன்னால் அல்லவோ யானும் பெருமை கொண்டேன்" எனக் கூறி நாகை நீலாயதாக்ஷி அம்மன் கோயிலின் மூலவரின் தென்பிரகார சுவரில் பட்டயம் வடித்து அனேக கிராமங்களைத் தென்மேற்குத் திசையில் தானமாக அளித்தானும். அங்கு அறங்காவலன் அனேக அன்னதான சத்திரங்களையும், சாவடிகளையும் கட்டினனும் அக்கிராமம் இப்போது 'கொழுக்கொம்பு' என்னும் பெயருடன் மருவி வழங்குகிறது. அங்கு ஒரே ஒரு சாவடிதான் இன்று நிலவுகிறது என்று சுவடி கூறுகிறது.

---

**10. இவ்வாலயத்தில் இராசராசன் காலத்தைச் சேர்ந்தனவாகப் பதினாறு கல்வெட்டுக்கள்படி எடுக்கப்பெற்றுள்ளன.**

A. R. E. Year 1924, Ins. No. 427 : 428 ; 429 ; 430 ; 431 ; 434 ; 435 ; 436 ; 437.

A. R. E. Year 1925, No. 6; 8 ; 9 : 10; 13 ; 15; 16.

"நீலாயதாக்ஷி அம்மன் கோயிலில் மாமன்னன் அறங்காவலனுக்கு மற்றொரு பட்டயமும் அளித்தான். அச்செப்புப் பட்டயம் கோயிலில் பாழ்பட்ட "ஓர் அகழியின் அருகே முக்கோண வடிவுடைய சுரங்கப் பாதையின் அருகில்" தற்போதும் புதைந்து உள்ளது. அது வெளி வரும். அச் செப்பேட்டில் அறங்காவலன், 'அருளுடை நம்பி' எனவும், 'பெருவளர்நம்பி' எனவும், 'பெருவளர்த்தான்' எனவும் 'பொருளுடைநம்பி' எனவும் போற்றப்படுகிறான்" என்று புஜண்டர் சுவடியில் அருளிச் செய்கிறார்.

(அந்த அறங்காவலன் இக் காலத்திலும் மீண்டும் ஜனனம் எடுத்துள்ளான் என்றும், அவன் பெயர், தகப்பனார், குடும்பம், செய்யும் தொழில் எல்லாவற்றையும் சுவடி கூறிற்று; 'எங்கள் குழாத்தில் அவர் இன்னார்' என்றும் கூறியது. காரணகாரியம் கருதி அவரை இன்னார் என்று இங்குக் கூறாது விடுக்கிறேன்).

## காளி அருள் பெற்ற காவலன்

அறங்காவலன் காளி உபாசகன். அறங்காவலன் காளியின் அருள்கொண்டுதான் மன்னனுக்கு மதியுரைகள் வழங்கினான். அவன் சொற்படி மாமன்னன் மூன்று காளிகளைத் தோற்றுவித்தான்; ஒரு காளியைத் திருக்கருகாவூரில் பிரதிஷ்டை செய்தான். அறங்காவலன் ஆகம சாத்திர விதிகளின்படி இரண்டு குளங்களை வெட்டச் செய்தான். (அவ்வூரில் இரண்டு குளங்கள் உள்ளன) ஒன்றில் வெண்டாமரையும், மற்றொன்றில் செந்தாமரையும் வளர்த்து, மன்னன் காளியை வெண்டாமரையால் அருச்சிக்கவும், அரசி செந்தாமரையால் அருச்சிக்கவும் ஏற்பாடு செய்தான். வெண்டாமரை மலர் கொண்டு அருச்சித்தால்

நாட்டில் வெற்றியும், செந்தாமரை மலரால் அருச்சித்தால் சுபீட்சமும், அஷ்ட ஐஸ்வர்யங்களும் ஏற்படும் என்பது அறங்காவலன் அறிந்த ஆகமசாத்திர விதி. அரசன் அறங் காவலனைப் போற்றித் திருநல்லூரில் சிவனார் கோயிலில் பட்டயங்களை அளித்தான்.

பிற்காலத்தில் திருக்கருகாவூரிலிருந்த காளியின் ஆலயம் பாழ்பட்டதால் காளியை மக்கள் திருநல்லூர் ஆலயத்தின் வடபகுதியில் வைத்தனர் என்றும், " அஷ்டபுஜங்களுடன் அமர்ந்த திருக்கோலத்தால், வலது காலை மடித்து, இடது காலைப் பூமகள்மீது ஊன்றி, அசுரனை அழித்திடும் கோலத் துடன் இருக்கும் அக் காளியைத் தரிசித்து வா " என்றும் சுவடி கூறிற்று. நானும் அந்த "நல்லூர் நாயகியைக்" கண்டு தரிசித்தேன். "அறங்காவலன் இந்த நல்லூர் நாயகி யின் திருவடியில், மன்னனின் முடியை வைத்துப் பின் நல்லூரின் கிழக்கே உள்ள முடிகொண்டசோழபுரம் அரண்மனைக்கு எடுத்துச் சென்று மன்னனின் தலையில் அம் முடியைச் சூட்டி வீராபிஷேகம் செய்வித்தான் " என்றும் சுவடி கூறுகிறது. (ஆயிரத்தளி என்னும் சோழர் அரண் மனை அங்குதான் இருந்ததென்பது சரித்திர உண்மை).

மற்றுமொரு காளி சாக்கோட்டை என்னும் தலத்தில் எள் விளைவிக்கப் பெறும் ஓரிடத்தில் புதைந்துள்ளாள் என்றும், அவள் மீண்டும் வெளிவருவாள் என்றும் சுவடி கூறியது. (அந்த இடத்தை நாங்கள் சென்று பார்த்தோம்; காளியை எதிர்பார்த்திருக்கிறோம்).

மூன்றாவது காளிக்கு மாமன்னன் அகோரபூசை செய்தான். பூசையிலிருந்து ஒரு கனி (எலுமிச்சம்பழம்) தெறித்து அறங்காவலனிடம் வந்தது. அதை வாங்கி அறங்

காவலன் நேத்திரத்தில் இட்டுக் காளியின் வேலாயுதத்தை எடுத்து மாமன்னனின் இரண்டாம் மகனிடம் கொடுத்து, "வென்று வாடா மகனே" என்று கூறினான். மகனும் அனேக தீவுக் கூட்டங்களை வென்று திரும்பி வந்து காளியின் பாதத்தில் முத்துக்களைப் பதித்து வணங்கினான். "அன்னவளும் முத்துப்பாதக் காளியாய், அம்மங்குடி என்னும் தலத்தின் தென்மேற்குத் திசையதனில்" இன்று புதையுண்டு உள்ளாள். முத்துக்கள் பளபளக்க அவள் பூரிப்புடன் வெளிவரும் காலமும் நெருக்கமாய் உள்ளது என்றும் சுவடி கூறுகிறது. (சுவடியில் கூறப்பட்ட அடையாளங்களுடன்கூடிய தலத்தைக் கண்டோம். இங்கும் ஒரு காளியை எதிர்பார்த்திருக்கிறோம்).

## தளபதியும் மாமருத்துவனும்

மாமன்னனிடத்தில் மிகப் பெரிய குதிரைப்படை ஒன்று இருந்தது. புரவிக்கூட்டத்தின் தளபதியாய் ஒருவன் இருந்தான். தளபதி மாமன்னனின் அன்புக்குப் பாத்திரமானவன். அனேக போர்களில் வீரசாகஸம் புரிந்தவன். பெண்களிடம் சல்லாபத்தில் சற்றுத் தாராளமாகவே இருப்பானும். ஆனாலும் பெருவீரன்; அஞ்சாநெஞ்சம் கொண்ட ஆண்மகன். ஒருசமயம் மன்னன் ஆணையின்படி முகமதியரைச் சாளுக்கிய நாட்டில் புறமுதுகிட்டு ஓடச் செய்தவன்.[11]

---

11. இரண்டாம் குலோத்துங்கனால் வெல்லப் பெற்றவருள் துருக்கரும் ஒருவராகக் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் 5ஆம் பாடலில் கூறப்பட்டுள்ளனர். இளவரசு நிலையிலிருந்த இராசராசன், குலோத்துங்கனின் பொருட்டு இன்றைய கோலாப்பூர்ப் பகுதியை ஆண்ட சாளுக்கியருடன் இணைந்து போரிட்டுத் துருக்கரை வென்றான் எனலாம் — தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், பாகம் 3, பகுதி 2, பக்கம் 145 – 6 காண்க.

# திருநல்லூர்க் காளி



OFFICE OF THE CURATOR
RECEIVED
7 ஜுன் 1976
GOVT. OR

பக்கம் 15 காண்க.

அந்தத் தளபதி இப்போது மறுபிறப்புக் கொண்டுள்ளான் என்றும், எங்கள் நண்பர் குழாத்தில் அவர் இன்னுர் என்றும் சுவடி கூறிற்று. மேலும், "முன் ஜனனத்தில் அவனுக்குப் புரவிகளிடையே நாட்டம் இருந்த காரணத்தினுல், இந்த ஜனனத்திலும் அவனுக்கு இரு குதிரைகள் உண்டு என்றும், அதில் ஒன்று சாளுக்கிய தேசத்திலும், முகமதியர் வசிக்கும் பெரிய நகரத்திலும் தனத்தைத் தேடிக் கொடுக்கும்" என்றும் சுவடி கூறிற்று. அவ்விதமே எனது நண்பர் தளபதிக்கு இரண்டு குதிரைகள் உண்டு. அவற்றுள் ஒன்று பங்களூரிலும், ஹைதராபாத்திலும் பந்தயத்தில் ஓடி (Horse Race) பணம் சம்பாதித்து நண்பருக்குப் பெருத்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

மாமன்னன் இராசராசனின் சபையில் '**பழுவேட்டரையன்**' என்ற மருத்துவன் இருந்தான். மன்னன் போரில் காயம் பட்டபோது இவன் தனது இரத்தத்தையே நல்கிக் காப்பாற்றினுன். மன்னனின் அரசி முதற்குழவியை ஈன்ற போது, இவன் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுத்தானும். அவன் அரச குடும்பத்தினர் எல்லோருக்கும், மற்றைய அதிகாரிகளுக்கும் மாமருத்துவம் செய்து புகழ் பெற்றுன். அந்த மருத்துவன் இப்போதும் ஜனனம் எடுத்துள்ளான் என்றும், எங்கள் நண்பர்களில் இன்னுர் என்றும் கூறி அவருடைய குடும்பத்தைப்பற்றிய இன்றைய நிலையையும் சுவடி தெளிவாகக் கூறியது. இந்த ஜனனத்திலும் அவன் மருத்துவனே என்றும் கூறிற்று. ஆம். அந்த நண்பர் ஒரு டாக்டர்.

## அருமறை உணர்ந்த அந்தணுளன்

இராசராசனின் சபையில் '**கேசவன்**' என்ற அந்தணர் இருந்தார். இவர் வடமொழி விற்பன்னர்; நான்கு மறை

யும், ஆறு தரிசனங்களும் கற்ற பெரியவர்; மன்னனுக்கும், அவனுடைய இரண்டு குழவிகளுக்கும் சாத்திரங்கள் பயில்வித்தவர். மன்னன் அவரைப் போற்றிச் சாஸனங்களும், பட்டயமும் அளித்தான். சுவாமிமலைக்கு நேர் வடக்கே காவிரியின் வடக்குப் பகுதியில், மண்ணியாற்றின் தென்கரையில் கேசவனுக்கு ஓராலயத்தை மாமன்னன் அமைத்தான். அதில் கேசவன் இறைவழிபாடு நடத்திப் பசித்தோர்க்கு அன்னதானம் செய்தான்; தாக சாந்திக்கு வருபவர்களுக்குத் தண்ணீர்ப் பந்தலும் அமைத்தான். அந்த இடத்திற்குச் 'சதுர்வேதிமங்கலம்' என்று அப்போது பெயர். மாமன்னன் அந்த ஆலயத்தில் கேசவனைப் போற்றிச் சாஸனங்களும், பட்டயங்களும் வடித்தான். அவைகள் இப்போது இடிபாடு கொண்டுள்ளன வென்றும், விரைவில் அச் சாஸனங்கள் வெளி உலகிற்கு வரும் என்றும் சுவடி கூறுகிறது.

(சங்கர சோழனுலாவை ஊன்றிக் கவனித்தால் ஒன்று புலப்படும். இராசராசன், கேசவசுவாமி என்னும் புலவருக்குக் காவிரிக் கரையில் இராசேந்திரசோழச் சதுர்வேதி மங்கலத்தில் சாஸனங்கள் வழங்கி, நிலபுலன்கள் தானமளித்தான் என்று உலாக் கூறுகிறது[12]). அந்தக் கேசவன் இன்றும் ஜனனம் எடுத்துள்ளான் என்றும், அவன் எங்கள் நண்பர் குழாத்தில் இன்னார் என்றும் சுவடி கூறிற்று. மேலும் அந்த நண்பர் திருமணம் ஆகாது இறை வழிபாட்டில் ஈடுபாடு கொண்டிருப்பார் என்றும் விளக்கியது. ஆம். அந்த நண்பருக்கு இதுவரை மணமாக வில்லை. திருமண நோக்கமும் அவருக்கு இல்லை.

---

12. குலோத்துங்கன் மூவர், திரு பொன்னுசாமி பிள்ளை, பக்கம், 105.

## அந்தணாளன் செய்த அகோர பூசை

பட்டீஸ்வரத்தில் சோழர்கள் வாழ்ந்த அந்தப்புரம் உடைய அரண்மனை இருந்த இடம், இன்று தென்னந் தோப்பாகக் காட்சி அளிக்கிறது. அங்கு உட்கார்ந்து சுவடி கேட்டோம். நாங்கள் உட்கார்ந்து சுவடி கேட்ட இடத் தின் வடமேற்கில் ஒரு வாவி புதைந்துள்ளது என்றும் அவ்விடத்தில் மாமன்னன் அகோர பூசை செய்ய ஏற்பாடு செய்தான் என்றும், அந்த அறுகோண குண்டம் இன்றும் அங்குப் புதைந்து உள்ளது என்றும் சுவடி கூறுகிறது. அகோர பூசையின் விளக்கங்கள் வருமாறு :

மாமன்னனிடத்தில் தலைசிறந்த சோதிடர் ஒருவர் இருந்தார். இவர் சிறந்த சிவபக்தர் ; வேத சாத்திரங்களி லும், சோதிடக் கலையிலும் கரை கண்டவர். மாமன்னனும், அவன் குடும்பத்தினரும் தினமும் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஆசி பெறுவர். அவர் பெயர் "**உமாபதி**" என்றும், "**ஞானசிவன்**" என்றும் கூறுவர். ஞானசிவன் எல்லோருக்கும் குருவாகத் திகழ்ந்தார். அறங்காவலனாகிய பெருமான்நம்பிப்பல்லவரையன் அவரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான்.

ஒருசமயம் சிங்களப் படையினர் பாண்டி நாட்டை வென்று, சோழ நாட்டிற்குள்ளும் படையெடுத்து வர ஆயத்தம் செய்தனர். சோழநாடே கதி கலங்கியது; மக்கள் பீதியுற்றனர் ; மன்னன் செய்வது அறியாது திகைத்தான். அப்போது அறங்காவலன் **ஞானசிவரைக் கொண்டு மும்முடிச்சோழ மண்டலத்தில் அகோர பூசை செய் வித்தான்.** அகோர பூசையைப்பற்றி, ஆர்ப்பாக்கத்தில் ஸ்ரீபுஜண்டர் சுவடி வாயிலாக அருளிய விளக்கம் பின் வருமாறு :

"சதுர்வேதமங்கலத்து, சதுர்மறை அறிந்த கேசவனை துணைகொண்டும், வேதங்களை அறிந்த எழுபத்து ஏழு வேதியர் துணைகொண்டும், அறங்காவலன் அருள் ஆதரவைக்கொண்டும் ஞானசிவர் காளிக்கு அகோர பூசை செய்வித்தார்".

"காளி தனக்கு, அன்னவளை அகம் குளிரவே அணி யாபரணங்கள் சூட்டி, அருள்கொண்டு, 27 வகை கொண்ட நதிவகை நீரை அதனில் வைத்து, நல்லதொரு குடங்களில் அதனை வைத்து, நலமாகக்கொண்டு 27 வகை கொண்ட சூலா யுதங்கள் அதனதனில் வைத்து, அருள்வடிவமாய் சூலாயுதம் தன்னில் நல்லதொரு கனிவகை சாற்றி, அதனதனுக்கும், அருள் கொண்ட 27 வேதியர்கள் தம்மைக்கொண்டு, அருள் நிறைந்த் தொரு வகையதனில், 27 தினமதனிலும், ஏற்றதொருவகை யதனில், பூசை வழிபாடுகள் செய்து, ஆனதொரு 27-ஆம் தினம் அன்று, நல்லதொரு வகையதனிலே, ஞானசிவனும், அருள் நிறைந்த கடமதனில், 5-ஆம் கடமதனையும், 7-ஆம் கடமதனை யும், தாவி நிற்கின்ற காலத்து 27-ஆம் கடத்தையும் எடுத்து சூலத்தே அபிஷேகம் செய்வான். துள்ளியே வரும் அதனதனில் இட்டதொரு கனியும், துள்ளி வரும் கனியதனின் திசை அறிந்து மாமன்னனின் படையும் விரைந்து ஏகி எதிரிப்படையை அழிக் கும். மாமன்னன் வெற்றிதனைக்கண்டு பின் காளியின் பாதத் தில் அணியாபரணம் சூட்டுவான்".

ஒரு கனி துள்ளி அறங்காவலனிடம் வர, அவன் சிங்களப்படைகளை வென்று[13] அவர்கள் தளபதியின் தலையைக் கொய்தான். மன்னனும் ஞானசிவனைப் போற்றி அந்த ஆர்ப்பாக்கம் கிராமத்தையே அவனுக்குத் தானம் செய்தான்.

## மாறுபட்ட கோள்களில் மன்னனின் மக்கள்

இராசராசனுக்கு ஆண் குழந்தைகள் இல்லையென்று இக்கால ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர். ஆனால் உண்மை

13. S. I. I. Vol. 6, கல். எண், 456; 20 of 1899.

அதுவன்று என்பது சுவடியில் அருளப் பெற்றுள்ளது. மாமன்னனுக்கு இரண்டு குழவிகள் உண்டு. மூத்தவன் சமயப்பற்று மிகுந்தோனாயும், இளையவன் ஆனந்த பராக் கிரமம் கொண்டு அரசருக்குரிய இலட்சணங்களுடனும் விளங்கினான். மூத்தமகன் பிறந்து ஒரு வருஷத்திற்குப் பின் இளையோன் பிறந்தான். "மூத்தவன் நாமக்கோளும், இளையவன் நாமக்கோளும், மாறுபட்ட கோள்கள் ஆகும். இது குலத்திற்குக் கேடு விளைவிக்கும்" என்று சோதிடர் கூறினார். மேலும், "இளையோன் பிறந்த காலம் முதல் இரு குழவிகளும் 14 ஆண்டுகள் மறைவிடத்தே பிறர் அறியாது மாற்றான் குழவிகள்போல் வளர்க்கப்படவேண்டும்" என்றும் ஞானசிவர் கூறினார். மூத்தோன் ஜாதகப்படி அரசாட்சி செய்ய இயலான் என்றும், இளையோனே 18-ஆம் வயதுக்குமேல் பூரணமாய் அரியணை ஏறவேண்டும் என்றும் கூறினார். தவிர, அரச குலத்தில் சிலர் அக் குழவிகளை அழித்திடவும் முற்பட்டனர். அரசனும் நலி பிணிகள் கொண்டான். ஆகவே குலத்திற்குக் கேடு செய்யும் உறவினர்களை அழித்து, ஆயிரத்தளி அரண்மனை விட்டு, அரசன் இராசராசபுரத்துக்கு வந்தான்.

ஞானசிவர், அறங்காவலன், மாமருத்துவன், கேசவன் ஆகியோர் குழவிகளை மறைவிடத்தே வளர்த்தனர். எட்டு வருஷகாலம் குழவிகள் கங்கைகொண்டசோழபுரத்தில் வளர்க்கப்பட்டனர். அறங்காவலன், ஞானசிவன், கேசவன் முதலியோர் தகுந்த பயிற்சி அளித்தனர். மூத்தோன் சமய வழியில் நின்றும், இளையோன் அரசர்க்குரிய நியமங்கள் பயின்றும் வந்தனர். இதற்கிடையே 15 தினங்களுக்கு ஒருமுறை அறங்காவலன் குழவிகளை இராசராச

புரத்து அந்தப்புரத்திற்குக் கொணர்ந்து அரசனுக்குக் காட்டுவது வழக்கம்.

மூத்தோன் 5 வயதும் இளையோன் 4 வயதும் பூரண மாகக் கொண்டு இருக்கும் காலத்தில், மன்னன் இருகுழவி களையும் திருவலஞ்சுழி ஆலயத்திற்குத் தருவித்து அந்தணர் களைக்கொண்டு ஹோமங்கள் பலவற்றைச் செய்து, தான தர்மங்களும் செய்து இளையோனைக் குடமுழுக்கிட்டான். குடமுழுக்கிடும் சமயம் அறங்காவலன் உடைவாளை உருவி அதன் பேரிலும், மற்றும் ஞானசிவர், மாமருத்துவர். கேசவன் ஆகியோரும், "அரசன் வாழ்ந்தாலும் அல்லது இறந்தாலும், உரிய காலத்தில் இளையோனைக் காப்பாற்றி அரியணைமீது அமர்த்துவோம்" என்று சபதம் செய்தனர். பின்பு அறங்காவலன் பிள்ளைகளை மீண்டும் கங்கை கொண்டசோழபுரத்திற்கு அழைத்துச் சென்று மறைத்து வளர்க்கலானான்.

## இராசாதிராசனுக்கு முடிசூட்டுவிழா

இதற்கிடையில் அரசனின் நலிபிணிகள் அதிகமாயின, இரத்த அழுத்தமும், இருதயக் கோளாறும் அவனை வருத்தின. (Blood pressure and Heart attack) ஆகவே மாமன்னன் தனது 52-ஆம் ஆண்டில் மந்திரியை வரவழைத்து ஆலோசனை செய்தான். அறங்காவலன் ஏற்றதொரு திட்டம் தீட்டி, ஞானசிவனாரின் ஆசியுடன் ஒரு வழிமுறையையும் சொன்னான்.

இளையோனின் நாமக்கோள் சித்திரை ஆகும், ஆகவே அவன் 14-ஆம் வயது வரை மறைந்தே வாழவேண்டும். 14-ஆம் வயதிற்குமேல்தான் அவனுக்கு இளவரசுப்பட்டம்

கட்டப்பட வேண்டும் என்பது சோதிடர் ஞானசிவர் உரைத்தது. மேலும் 18-ஆம் வயது நிறைவுற்ற பின்னுல் தான் அரியாசனம் ஏறலாம். இதற்கிடையில் அரசன் இறந்துவிட்டால் என்ன செய்வது? ஆகவே வேறு ஒருவனை அரியாசனம் ஏறச்செய்து, தக்க தருணத்தில் அரசனின் இளைய மகனிடம் இராச்சியத்தை ஒப்படைக்கச் செய்யவேண்டும். மாமன்னன் இருந்தாலும், இறந்தாலும் இதைச் செய்வதாக அறங்காவலன் ஆகிய பெருமான்நம்பிப் பல்லவரையனும், தளபதி, ஞானசிவர், மாமருத்துவர், கேசவன் ஆகியோரும் உறுதி பகன்றனர்.

இதற்குரிய வேலைகள் துரிதமாகச் செயல்பட ஆரம்பித்தன.

மாமன்னனுக்கு இளைய சகோதரி ஒருத்தி உண்டு. அவளுக்கு ஒரு மகன் இருந்தான். அவளை அவன் கணவன், பெருமையறியாது புறக்கணித்தான். எனவே அவள் மாமன்னன் அருளால் தன் மகனுடன் கங்கை கொண்டசோழபுரத்தில் வசித்து வந்தாள். அவளுடைய மகனை மாமன்னனுகப் பட்டம் சூட்டுவது என்றும், பின்னர் உரிய தருணத்தில் அவன் இராச்சியத்தை, மாமன்னனின் இரண்டாம் மகனிடத்துத் தந்திடல் வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. மன்னனின் இளைய சகோதரியும், அவ்விதம் செய்வதாகச் சத்தியம் செய்தாள். அவள் மகனும் அவ்விதமே செய்வதாகத் தன் மாமனிடம் சத்தியம் செய்து கொடுத்தான்.

அறங்காவலன், மாமன்னனுக்கு 52-ஆம் ஆண்டு நடக்கும் காலத்தே மன்னனின் இளைய சகோதரியின் மகனும், மற்றும் மன்னனுடைய இரண்டு பிள்ளைகளும்

ஆக மூவரைக் கங்கைகொண்டசோழபுரத்தில் இருந்து மும்முடிச்சோழமண்டலத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பித்தான். நல்லதொருநாளில் மன்னனுடைய சகோதரியின் மகனுக்கு அபிஷேகம் செய்விக்கப்பட்டது. மாமன்னன் முன்னிலையில் இளையசகோதரியின் மகன் இளவரசுப் பட்டம் கட்டப்பட்டான்.

இராசராசன் இளைய சகோதரியின் பெயர் நெறியுடைய நாயகி. (நெறியுடைப் பெருமா). அவளுடைய மகனே பத்து நாலாம் வயதில் (14-ஆவது ஆண்டு நிறைவுற்று 15-ஆவது வயது நடக்கும் காலத்தில்) 'இராசாதிராசன்' என முடிசூட்டப்பட்டான்.[14] முடிசூட்டுமுன் மாமன்னனே 'பூங்குழலி' என்பாளை இவனுக்கு மணம் செய்வித்தான் என்றும் ஸ்ரீ புஜண்டர் நாடி கூறுகிறது.

6-10-75 அன்றும் 8-10-75 அன்றும் ஸ்ரீ புஜண்டர் மேலும் சில விளக்கங்களைத் தந்தார். இராசாதிராசனுக்கு 14-ஆம் வயது முடிந்து 15-ஆம் வயது நடக்கும்போது அவனுக்குத் திருமணம் செய்விக்கப்பெற்றது. முடிசூடுவதற்குரிய தகுதிகளில் ஒன்றாகிய மணவினை நடந்த பின்னர் இதே ஆண்டில் முடிசூட்டுவிழா நடந்தது என்னும் செய்தி ஸ்ரீபுஜண்டரால் புகலப்பெற்றது.

இராசாதிராசனுக்கு முடிசூட்டிய காலத்தில் (கி. பி. 1166) இரண்டாம் இராசராசனின் மூத்த மகனுக்கு வயது 7. இளையோனுக்கு வயது 6. மன்னன் நலிபிணிகள்

---

**14.** வரலாற்றாய்வாளர் கருத்துப்படி இராசாதிராசனுக்கு முடிசூட்டப்பட்டது, கி. பி. 1166-இல் நிகழ்ந்ததாகும். Epigraphia Indica, Vol 10, பக்கம், 127.

# பல்லவராயன்பேட்டை
# மீனாட்சியம்மன்

T.3947.



OFFICE OF THE CURATOR
RECEIVED
7 ஜுன் 1976
GOVT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

பக்கம் 12, 13 காண்க.

கொண்டு 57-ஆம் ஆண்டு முடிந்த காலத்தில் இருதயக் கோளாறால், இரத்த அழுத்தம் மிகவும் கொண்டு, மாமருத்துவன் செய்த மருத்துவத்தினாலும் பயன் பெறாது, இரத்த நாளங்கள் வெடித்துக் குருதி வெளிப்பட்டு இறந்து போனான். (மாமன்னன் 57-ஆம் ஆண்டு முடிந்து இறந்து போனான் என்பதால் இது 1172-இல் நிகழ்ந்திருக்க வேண்டும்).

இராசாதிராசன் ஆட்சிபுரியத் தொடங்கி அனேக அறச் செயல்களைச் சோழ நாட்டில் செய்தான். திருச்சிற்றம்பலமுடையான், ஞானசிவன், தளபதி, மாமருத்துவன், கேசவன் ஆகியோரிடத்தில் மிகவும் அன்புடனும், மரியாதையுடனும் நடந்துகொண்டான். இவன் ஆட்சியின் எட்டாம் ஆண்டில், ஆந்திரத்திலிருந்து 'பெசவப்பன்' என்பவனும், வேங்கி நாட்டிலிருந்து 'கங்கண்ணன்' என்பவனும், அரசியல் நிமித்தமாக இராசாதிராசனின் துணை வேண்டி, உதவி புரிந்திடவேண்டுமென்று அழைத்தனர்.

இராசாதிராசனும் வேங்கி நாட்டுக்குச் சென்றான். சென்றவன், வேங்கி நாட்டில் 'பொம்மண்ணன்' என்பவனின் மகளைக் காந்தர்வ மணம் புரிந்தான்.

## இராசாதிராசனும் இராசராசன் புதல்வரும்

சோழநாட்டில் இராசாதிராசனின் தாய் நெறியுடைய நாயகி இதை அறிந்தாள். மேலும் தன் சகோதரனுக்கு அளித்த வாக்குறுதியையும் நினைவு கூர்ந்தாள். அப்பொழுது இராசராசனின் இளைய மகனுக்குப் பதினான்கு வயது பூர்த்தியாகிப் பதினைந்தாம் வயது நடந்துகொண்டிருந்தது. நெறியுடைய நாயகி, திருச்சிற்றம்பலமுடையான், தளபதி,

ஞானசிவர், கேசவன் இவர்களுடன் ஆலோசனை செய்தாள்; முன்பு ஞானசிவர் உரைத்தபடி இளையோன் இனி மறைந்து வாழ விதியில்லை என்று தீர்மானித்தாள்; பதினான்கு வருட மறைவு வாழ்வுக்குப்பின் பதினைந்தாம் வயதில் (15 ஆம் வயது நடக்கும் காலத்தில்) உலகோர் அறிய, மறைந்த இராசராசனின் இளைய மகனாகிய குலோத்துங்கனை இளவரசனாக்கினாள். திருச்சிற்றம்பலமுடையான் முடியை எடுத்துக்கொடுக்க, ஞானசிவர் குலோத்துங்கன் சிரசில் முடி சூட்டினார் என்று ஸ்ரீ புஜண்டர் நாடி கூறுகிறது.

இந் நிகழ்ச்சிக்குப் பின்னர்ச் சில மாதங்களில் பல்லவரையன் நோய்வாய்ப்பட்டான். தான் எடுப்பித்த ஆலயத்தில் அமைத்த அன்னை மீனாட்சியின் அடியிணையில் வீழ்ந்து பக்தி மிகக் கொண்டு கதறிக் கண்ணீர் விட்டு ஆவி போக்கினான். இச்செய்தியை அறிந்த இராசாதிராசன் வேங்கி நாட்டிலிருந்து வந்தான். பல்லவரையனின் பணிகளைப் பாராட்டி, அவனுடைய மனைவியருக்கும், மக்களுக்கும், உறவினருக்கும், தன்னுடைய தளபதி மூலமாகப் பல வேலி நிலங்களைத் தானமாகக் கொடுத்தான்; இச் செய்தியைச் சாசனத்திலும் வடித்தான். அதனுள், தான் அரசேற்றமையையும், சோழ அரச விவகாரங்களில் பல்லவரையன் ஆற்றிய பணிகளையும்பற்றிக் குறிப்பிட்டுள்ளான் என்று புஜண்டர் நாடி கூறுகிறது,

"பாரடா, **அந்ததொரு** பல்லவராயனின், **அழகுதரும் தலத்திலே, ஆனந்த அருள் மீனாக்ஷியாம், பூரணம் கண்டதொரு தலத்திலேயும், ஏற்றதொரு வகையதனிலே, பதினைாம் ஆண்டதனிலே** மாமன்னன் **அருளதனைக்கேட்டு, அதனதன் நிமித்த**

மாய், முன்னவர் பற்றிநின்ற வழியதனிலே, சோதரிநாயகி, நெறியுடைய நாயகியின் குழவி தனக்கு ஏற்றதொரு பட்டயம் தன்னை, மாமுனியும், மற்றோரும்கூட உற்றதொரு ஞானசிவ னின் அருளதனைக் கொண்டதொரு சாத்திர விதிப்படி, உற்ற தொரு மணிமகுடங்கள், சாற்றியே நின்றோமென்று, கொண்ட தொரு, பட்டயமும் உண்டு" என்பது புஜண்டர் வாக்கு.

[ஸ்ரீபுஜண்டர் கூறியபடியே மேற்கண்ட செய்திகளை எல்லாம் உடையதாக இராசாதிராசனின் 8-ஆம் ஆண்டுக் குரிய சாசனமொன்று பல்லவராயன்பேட்டை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் உள்ளது. இதனுள் கூறப் பட்டுள்ள, 'பழையனூருடையான் வேதவனமுடையான் அம்மையப்பரான பல்லவராயன்' என்பவன் புஜண்டர் கூறும் தளபதி எனலாம்.]

சில வருடங்கள் சென்றன. குலோத்துங்கனுக்கு 18-ஆவது வயது பூர்த்தியாயிற்று. ஞானசிவர், "குலோத் துங்கன் இனிப் பூரணமாய் மாமன்னனாக அரசு புரியலாம்" என்று கூறினர். மேலும், "இராசாதிராசன் விதிப் பயனாய் 30 ஆண்டுகட்குமேல் வேங்கி நாட்டில் வாழ்வது திண்ணம்" என்றும் கூறினார்.

இராசாதிராசனின் தாயாகிய நெறியுடையநாயகி சூழ் நிலையை ஆராய்ந்தாள்; தன் மகனாகிய இராசாதிராசன் வேங்கி நாட்டிற்கும், சோழநாட்டிற்குமாக அலைந்து திரி வதை நோக்கினாள்.

தன் மகனிடம், இராசராசனின் கட்டளையை நினைவு படுத்தினாள்; இராசாதிராசனின் சம்மதத்தைப் பெற்றாள்; குலோத்துங்கனுக்குப் 18-ஆம் வயது பூர்த்தியான காலத்

தில் மாமன்னனுகைத் திருஅபிஷேகம் செய்விக்கச் செய்தாள். குலோத்துங்கன் முறைப்படி சோழ மன்னனுக (கி.பி. 1178-இல்) பிரகடனம் செய்யப்பட்டான். சின்னுள் கழித்து இராசாதிராசன் வேங்கிநாடு சென்று நிலையாகவே அங்குத் தங்கிவிட்டான். வேங்கி நாட்டில் இராசாதிராசன் செவ்வனே ஆட்சிபுரிந்து. 'திராக்ஷாராமா' என்னும் தலத்தில் உள்ள பீமேஸ்வரர் ஆலயத்திற்கு அனேக திருப்பணிகள் செய்தான்.[15] (அவ்வாலயத்தில் இராசாதிராசனின் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் தெலுங்கு மொழியில் இன்றும் உள்ளன.)

சோழநாட்டில் மூன்றும் குலோத்துங்கன் சிறந்த முறையில் ஆட்சிசெய்து புகழுடன் விளங்கினுன்; பல ஆலயங்களுக்குத் திருப்பணிகள் செய்து, பெருவீரன் என்று உலகோர் புகழுமாறு அனேக வருடங்கள் ஆட்சி புரிந்தான் என்றும் ஸ்ரீ புஜண்டர் நாடி கூறுகிறது.

இரண்டாம் இராசராசனின் மூத்த மகன் பெயர் '**ஞானசேகரராசன்**' என்பதாகும். இவன் மூல நக்ஷத்திரத்தில் பிறந்தவன். இம்மைந்தன் சமயப்பற்று மிகக் கொண்டவன் ; சைவம் தழைக்க அறப்பணிகள் பல செய்வதற்கு விழைந்தான் ; இளமையிலேயே துறவிபோல் வாழ்க்கையை மேற்கொண்டான். மாமன்னன் இராசராசன் இறந்த பிறகு, ஞானசேகரராசன் மணிபல்லவத் தீவுக்கு (இன்றைய யாழ்ப்பாணத்தின் சமீபம்) சென்றுன். அந்தத் தீவின் தென்மேற்கில் ஒரு சிவாலயத்தில் அனேக கல்வெட்டுக்களை வெட்டச் செய்தான். அக்கல்வெட்டுக்களில் தன் குடும்பத்தாருக்குத் திருச்சிற்றம்பலமுடையா

---

15. Epigraphia Indica Vol. 31, Part 6 Page 271.

ஞன பெருமான்நம்பிப்பல்லவரையன், கேசவன் ஆகியோர் ஆற்றிய பணி, தன் குடும்ப இரகசியங்கள் ஆகிய அனைத்தையும் பதித்துள்ளான். அவை இன்று புதையுண்டு போயின என்றும், வருங்காலத்தே வெளிப்படும் என்றும், அதிலிருந்து பல உண்மைகள் வெளிவரும் என்றும் ஸ்ரீபுஜண்டர் கூறுகிறார். ஞானசேகரராசனுக்கு வேங்கியில் இருந்த இராசாதிராசனும் பல உதவிகள் செய்தான். மேலும், இராசாதிராசன் ஆந்திராவில் ஒரு ஆலயத்தில், ஞானசேகரராசன், திருச்சிற்றம்பலமுடையான், ஞானசிவர் இவர்களைப்பற்றிய குறிப்புக்களைக் கல்வெட்டில், தெலுங்கு மொழியில் எழுதியுள்ளான் என்றும் அவை பிற்காலத்தே வெளிவரும் என்றும் ஸ்ரீபுஜண்டர் கூறுகிறார். ஞானசேகரராசன் சின்னாள் கழித்து இளம் வயதிலேயே மணிபல்லவத் தீவில் சிவனாரின் திருவடி அடைந்தான்.

இராசாதிராசனுக்கும், குலோத்துங்கனுக்கும் விரோதம் இல்லை. அவர்கள் சமர் ஏதும் புரியவில்லை. இருவரும் சமரற்ற நிலையில், அன்புடனும் பாசத்துடனும் தோழமை பூண்டு இருந்தனரே அன்றி இருவரிடமும் பகையேதும் இல்லை என்று ஸ்ரீ புஜண்டர் கூறுகிறார். மேலும் வேங்கி நாட்டிலிருந்து இராசாதிராசன் குலோத்துங்கனுக்கு அன்புடன் எழுதிய ஓலையின் வாசகங்கள் கல்வெட்டுக்களில் உள்ளன என்றும், இவை கங்கைகொண்ட சோழபுரத்தில் புதையுண்டுள்ளன என்றும், பிற்காலத்தே வெளிவரும் என்றும் ஸ்ரீபுஜண்டர் கூறுகிறார். பல்லவராயன் பேட்டைச் சாசனம், செப்பேடுகளில் எழுதப்பட்டது. அச்செப்பேடுகள் கங்கைகொண்டசோழபுரத்தில் புதையுண்டுள்ளன. அவை பிற்காலத்தே வெளிவரும் என்றும் ஸ்ரீ புஜண்டர் சுவடியில் கூறுகிறார்.

**சுவடியில் ஸ்ரீபுஜண்டர் கூறிய பிற விவரங்கள் :**

1. மும்முடிச்சோழமண்டலத்தில், கோட்டைக் கொத்தளங்கள் இருந்து இடிபாடுகொண்ட இடங்களை இக்கால அரசினர் அகழ்ந்து தொல்பொருள் ஆராய்ச்சி செய்வர். இங்கு ஏராளமான செல்வங்களும், விக்கிரகங் களும் புதைந்துள்ளன ; சுரங்கப் பாதைகளும் உள்ளன. அவை வருங்காலத்தே அகழப்படும். இரண்டாம் இராச ராசனால் எடுப்பிக்கப்பெற்ற இராசராசேஸ்வரம் எனப் பெற்ற தாராசுரம் கோயிலில், இரு சுரங்கப் பாதைகள் உள்ளன. இவற்றுள் ஒன்று தஞ்சாவூருக்குச் செல்வது ; மற்றொன்று தாராசுரத்தின் தென்மேற்குப் பகுதியில் இவ் வரசனால் கட்டப்பட்ட மும்முடிச்சோழ மண்டலத்து அரண்மனைக்குச் செல்வது. இவ்விரண்டாம் சுரங்கப் பாதையின் 33-ஆம் படிக்கட்டில் இரண்டாம் இராசராச னின் சிலையும் உள்ளது. முகமதியர் (மாலிக்காபூர்) மும் முடிச்சோழ மண்டலத்தை அழிக்கும் காலத்தில் இருந்த அரசி ஒருத்தி, விக்கிரகம் முதலாகிய விலை மதிப்பற்ற கலைப்பொருள்களையும், மற்றைய செல்வங்களையும், இச் சுரங்கப் பாதைகளில் மறைத்து வைத்தாள். இன்று நீரில் மூழ்கி இருக்கும் அப்பொருள்கள் விரைவில் வெளிப் படுத்தப்பெறும் என்று சுவடி கூறுகிறது.

2. திருநல்லூரின் தென்கிழக்கே மேட்டுப்பகுதியில் அக்காலத்திய போர்க்கருவிகள் புதைந்து உள்ளன. அவை வெளிவரும்.

3. திருவலஞ்சுழியின் மேற்றிசையில், சாளுக்கிய நாட்டிலிருந்து வந்த கருமான்கள் செய்வித்த போர்க்கருவி கள் புதைந்துள்ளன. இவ்வாலயத்தில் ஐந்து சுரங்கப்

பாதைகள் உள்ளன. இவற்றுள் ஒன்றில் உமையவளின் சிலை உள்ளது.

4. கங்கைகொண்ட சோழபுரத்தில், சிவனூர் கோயிலின் தென்மேற்குப் பகுதியில், வெளிநாட்டிலிருந்து வந்த பொருள்களும் வடவகை தேசத்துப் பொருள்களும் புதைந்துள்ளன.

5. அவ்விடத்திற்குச் சிறிது தென்மேற்கே 'ஆயுதக் களம்' என்னும் இடத்தில் போர்க்கருவிகள் புதைந்துள்ளன.

6. மும்முடிச்சோழமண்டலத்தில் இராசராசேஸ்வரம் என்னும் கோயிலை இரண்டாம் இராசராசன் எடுப்பித்த காலத்தில் இருந்த தலைமை ஸ்தபதி மறு ஜனனம் எடுத்துள்ளார். இவர் இப்பிறப்பில் அரவின் நாமம் உடையவர்; புதைபொருள் ஆய்வாளர் என்று சுவடி கூறுகிறது.

7. "மாமன்னன் இரண்டாம் இராசராசன் மீண்டும் பிறந்துள்ளான். இவன் ஆழி கடந்த தலத்தில் செந்நிற மக்களிடையே ஒரு தீவில் கோடானுகோடிச் சீமானாய்ப் பிறந்துள்ளான். அவன் 1975-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 51 வயதுடையோனாக இருப்பான். அவனுக்குக் குழவிகள் இல்லை. அவனுடைய கையில் பச்சை குத்தியிருக்கும்; வலது மார்பின் காம்பில் ஒரு மச்சம் உள்ளது. அவன் சோழர்காலக் கோயில்களைக் காணுவதற்குக் கும்பகோணத்திற்கு வருவான். ஒரு சகடையின் நியமத்தே (Automobiles or Tractors) என்னையும், எனது நண்பர்களையும் சந்தித்து அக் கோயிலுக்குச் செல்வான்; கோயிலுக்கும் அறப்பணிகள் செய்வான்", என்றும் சுவடி கூறுகிறது.

8. இராசராசபுர அரண்மனையின் எட்டாவது வாயிலில் இருந்த துர்க்கை அம்மன் இன்று பட்டீஸ்வரத்தில் சிவனார் கோயிலில் காட்சி தருகிறாள்.

9. பல்லவராயன் பேட்டையிலும் சுரங்கப் பாதைகள் உள்ளன. அவைகளும் விரைவில் அகழப்படும்.

10. ஒட்டக்கூத்தனுக்கு மாமன்னன் இராசராசன் கூத்தனூர் அருகே, திருச்சிற்றம்பலமுடையான் வாயிலாகப் பட்டயம் அளித்தான். இப்பட்டயத்தில் கூத்தனால் அவனுடைய ஊரிலுள்ள சரஸ்வதி கோயிலுக்கு விளக்கு எரிப்பிப்பதற்காக அரசன் ஏழு காணி நிலம் அளித்துள்ளமை கூறப்படுகிறது. அந்தப் பட்டயம் கூத்தனூருக்குத் தென்கிழக்குத் திசையில் உள்ள பகுதியில் புதைந்துள்ளது. இது இன்றைய அரசாங்கத்தின் கைக்குக் கிடைக்கும்.

11. கூத்தனூருக்குத் தென்கிழக்குத் திசையில் நடராஜர், சிவகாமியின் விக்கிரகங்கள் புதையுண்டுள்ளன, அவை இன்றைய அரசாங்கத்திற்குக் கிடைக்கும்.

12. திருச்சிற்றம்பலமுடையானை பெருமான்நம்பிப் பல்லவரையனைப் போற்றி மாமன்னன் ஏழு செப்பேடுகள் தந்தனன். அவை சரஸ்வதி ஆலயம் உள்ள கூத்தனூரில் புதையுண்டுள்ளன. அவையும் விரைவில் அரசாங்கத்திடம் கிடைக்கும்.

---

(கூத்தனூர் தஞ்சை ஜில்லா பேரளம் ரயில் நிலையத்திலிருந்து சுமார் நான்கு மைல் தூரத்தில் உள்ளது)

# பட்டிசரம் துர்க்கை



CURATOR
RECEIVED
7 ஜுன் 1976
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRA

பக்கம் 32 காண்க.

## விநாயகர் சதுர்த்தியன்று விளம்பிய விவரங்கள் :—

பூரணமான விஷயங்கள் 1975-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ஆந்தேதி விநாயக சதுர்த்தி அன்று எங்கள் மனையில், விநாயகரைப் பூசை செய்த பின், விநாயகர் முன்னிலையில் சுவடி படிக்கக் கேட்டபோது புலனாயின. அதற்குரிய நட்சத்திரம் சித்திரை. விநாயகர்முன் ஸ்ரீ புஜண்டர் சுவடியில் கூறியவாறு அப்படியே இங்கு எழுதுகிறேன். ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படும். டேப் ரிகார்டும் உள்ளது.

**" மாமன்னனின் உயிர் ஊசலாடும் காலம், ஏற்றதொரு கவர்ந்ததொரு காலம் — சொல்லலுறுவேன் ஐம்பத்தியேழாம் ஆனதொரு ஆயுட்காலம், உற்றதொரு இருதயம் தன்னிலே, ஏற்றதொரு ரணவகை சிகிச்சை, காணவும் மனமில்லாது, அன்னவன் உதிரத்தின் அழுத்தமும், ஏற்றதொரு நரம்பு வகை மண்டலத்திலே, குருதியும் வெடித்துமே, அன்னவன் மாண்டனன் அப்பா· அன்னவன் மாண்டதொரு காலம்தான், அன்னவன் தனக்குமே ஏற்றதொரு அருஞ்செயலதனைச் செய்ததொரு ஞானசேகரனும், மாமருத்துவனும் உற்றதொரு வகையதனிலே அறச்செயல் செய்தோனும் அருகதனில் நின்றதொரு காலம் தான் பாரடா அந்த படைத்தளபதியாம் அந்ததொரு காலம் வேங்கி நாட்டதனிலே, ஆனந்த அழகிகளின் சல்லாபம், அருளுடனே கொண்டுமே நின்றான்· அந்ததொரு காலத்தே நெறியுடைய நாயகியின் குழவியாம், அந்ததொரு சோதரியின் குழவிதனை, பூரணமாய்க்கொண்டான்· இன்னவன் தனக்குமே ஐம்பான் இரண்டதனில் வந்ததொரு துயர்காலம், ஏற்றதொரு கோளதனைப் புரிந்தோனும், ஞானசிவனும், இந்ததொரு குழவிகள் தம்மில் தந்தனது உதிரத்து உதித்ததொரு குழவிகள், ஆனதொரு காலம், ஈரேழு ஆண்டுகள் மறைவிடத்தே வசித்திடல் வேண்டுமென்று, விளக்கங்கள் சொன்னதினால், நெறியுடைய நாயகியின் குழவிதனக்கு, பதினன்காம் காலபலம் தன்னில்**

பத்தும் நாலாய், கொண்டதொரு காலத்தே, ஆனந்த முடி யதனைச் சூட்டி, மகிழ்வுடனே கண்டானும் கண்டதொரு குழவி தனக்கு, பூங்குழலி எனும் நாமத்தாளை, பூத்ததொரு வகைய தனிலே, அருள்கொண்டுமே மணமதுவு மூவைந்தாம் (15) காலம் தான், முடித்து நின்றதொரு காலம்.

பாரதனில் அந்ததொரு காலம், மாமன்னனின் உதிரத்து உதித்ததொரு சாந்தமும் சக்தியும்கொண்டு, சகல வேதங்களும் அறிந்திடத் துடித்ததொரு பாலகன், அட்டம ஆண்டதுவும் கொள்ள, பூரணம் கொண்டதொரு குலோத்துங்கன் என்னும் திருநாமம் ஆனவன்தானடா, அவன் தனக்கு ஆறதுவு ஆண் டதுவாம், அவன் தனக்கு உற்றதொரு காலம் இராசாதிராசன் என்பான் ஆவதுதான் பட்டமதுவு சூடி நின்றான்.

இந்ததொரு வித்தையெல்லாம் மாமன்னன் தனக்கு அன் னவன் ஆயுளது ஓடி நின்றாலும், உந்தனது உதிரக்குழவிதனை, அரியாசனத்தில் யானதுவும் ஏற்றிவைப்பேன் என்று, தானது உறுதியும், அன்னவனின் மனைவியாய் வந்ததொரு பெருவழகியி னிடத்தும், உற்றதொரு உடைவாளின்மேலும் சத்தியம் செய்த அறங்காவலனே, அருள் கொண்டோனே, கேசவனே, மாமருத் துவனே, உற்றதொரு வகைகொண்ட தளபதிகளும் நான்கது வாம் ஆண்டதுவு அக்குழவிதனக்குமே நடந்ததொரு காலத்தே ஆனந்த குடமுழுக்கதனை, அழகுடனே விநாயகனின் முன் பூரணமாய், திருவலஞ்சுழியாம் பூரித்ததொரு தலத்திலே, செய் வித்து நல்லதொரு முடியதனை, நலமதுவு காணும் காலம், செய் வேன் என்றான். உற்றதொரு நெறியுடைய நாயகியின் உதி ரத்தே, உதித்ததொரு பாலகனும், ஆவதுதான் அப்பா எட்டு ஆண்டுகள் இந்த்தொரு மும்முடிச்சோழமண்டலத்திலே, பூரண ஆட்சிதனைச் செய்ததொரு காலம்

அன்னவன் தனக்கு பெசவப்பன் எனும் நாமம் கொண் டோன், அன்னவனின் துணையதனிலே, அந்ததொரு கங்கண ணன் என்பவனும், வேங்கி எனும் நாட்டதனிலே ஏற்றதொரு சூழ்நிலை தன்னிலே, வந்ததொரு தடையதனை நீக்கவே, துணை

யதுவும் வந்திடல் வேண்டுமென்று விடுத்ததொரு காலம். இன்னவனும் வேங்கி நாடு. ஆவதுதான் அங்குமே அடைந்து, பொம்பண்ணனின் குழவிதன்னின், பெருவுடைநாயகிதனே, காந்தர்வ வகையதனிலே மணந்து, அன்னவனும் ஆட்சிதனிலே, இன்னவன் தனக்குமே, ஆங்குமே ஓர் பட்டமும் சூட்டி. அந்த தொரு தலத்திலே, இன்னவனும் ஆட்சியே செய்யவேண்டு மென கேட்க.

இந்ததொரு காலத்தே ஞானசிவனும், ஆவதுதான் இரா சாதிராசனும் அன்னவனிடத்துமே, அதிகாரத்துவக் கட்டளை இதுவென்றும், மாமன்னனின் கட்டளை இதுவென்றும் கூறி அன்னவனே அந்ததொரு வேங்கி நாட்டதனிலே, ஆனதுதான் இன்னுமோர் முப்பான் ஆண்டு ஆளுவது திண்ணமென்றும், அந்ததொரு காலத்துவத்தில் விதியதனே வைத்து

உற்றதொரு மாமன்னனின் மூத்த குழவியோ, பெற்றதொரு காலத்தே வந்ததொரு குழவியாம், அந்ததொரு குழவியின் ஜன னம், தாயவள் தந்தைக்கும். தந்தையின் தானத்தோன் தனக் கும், ஆகாது என்றும். உற்றதொரு மறு குழவி, ஏற்றதொரு குலோத்துங்கனும் சித்திரைக் கோளதனில் வந்தான். சித்தி ரைக் கோளதனில் வந்ததினுல். சித்திரைக் கோளதுவும் ஓடும் காலம், உந்தனுக்கு அதனின் விளக்கங்கள் சொல்லுவேன். இந்ததொரு விநாயகனேக் கருதியே நிற்கும் காலம், சித்திரைக் கோளதுவும் ஓடிடும் அந்ததொரு சித்திரைக் கோளதனிலே, ஏற்றதொரு குலோத்துங்கனும், ஆனதுதான் பிறந்ததொரு கார ணத்துவத்தால் வாய்த்ததொரு மும்முடிச்சோழமண்டலத்திலே அன்னவன் தனக்குமே, இன்னவனே நல்லதொரு வகையதனில் பட்டயங்கள் காண, ஆனதொரு பதினேந்து ஆண்டதுவு நுழை யும் காலம், பாரதனில் பெருவகை வேந்தரும் எதிர்த்திட்டா லும், அன்னவரை வேங்கைபோல, சமரதுவு புரிந்துமே சாதுர்ய வகையதனில் வென்றுமே வரும் திறம்படைத்த அந்ததொரு குலோத்துங்கன் தனக்கு, பூரணமாய் ஞானசேகரனும், அருள் வகையதனிலே அருகதனில் நிற்க, ஆனந்த வகையதனிலே

படைத்தளபதி திருக்கோலமும், உற்றதொரு அறவகைச் செயலதனைச் செய்ததொரு திருக்கோலமும் கொண்டோன், மணி மகுடம் தன்னை எடுத்து, ஞான தேவனாய் வந்த ஞானச்சிவனிடத்தே தந்து சூடிடல் வேண்டுமெனக் கேட்க, சூடுகின்ற காலம், இன்னவன் தனக்குமே, எந்ததொரு குறையும் வாராது, மாமன்னனின் நியமத்துவத்தே, இன்னவனை இறுதிநாள் வரை காத்திடுவேன் என்று சூளுரைத்ததை, அறவுடைக் காவலனே உனக்குச் சொல்லுவேன்.

வேங்கியது நாட்டதனிலே சென்றேனடா. அன்னவன் காமக்களியாட்டங்கள், தானதுவு கொண்டும், அதனுடனே நல்லதொரு அறச் செயலும், பாட்டனின் பெருமைதனையும், தந்தையின் வகையதனிலே காணவொண்ணா ஓர் குறையதனை உள்ளத்திலே நினைத்தான். பாட்டனின் பெருமைதனைக் காணச் செய்யவேண்டுமாம். ஆதலினால் அன்னவனும் தாய்வகை குலமக்களால், தந்ததொரு பெருமைதனை உள்ளத்தே நினைத்து, ஆங்குமே நல்லதொரு ஆலயத் திருப்பணிகளும், அழகு தரும் மேன்மைகளும் செய்தான்.

அந்ததொரு தலத்திலே இருந்து மணிபல்லவத் தீவுதனில் உள்ள தந்தனது மாமனின் குழவியாய் வந்தோன், அவன் தனக்கு பெருவகை பெருமையும் செய்வித்து, கௌரவ வகைகள் செய்தனனே அன்றி, இருவர் தமக்கும் சமரதுவு வந்தது இல்லை, இல்லை என்றும். சாத்திரத்தின் கூறதனில் இதற்கு ஏற்றதொரு உவமையும் உள்ளதோ, சாட்சியதுவு உள்ளதோ என்றால்; பாரடா அந்ததொரு கங்கைகொண்டசோழநாடதனிலே, சோழனின் காலம்தான், கங்கைதனைக் கண்டுமே வந்தான். அந்ததொரு தலத்திலே புதையுண்ட கல்வகை வெட்டு எனும், ஆராய்ச்சித் திறம் அதனிலே, புதைந்ததொரு பொருள் எல்லாம் உண்டு, உண்டு.

அருள்கொண்ட பட்டயமும் உண்டு. வேங்கி நாட்டதனிலே இருந்து அன்னவனும், மக்களை அனுப்பி அருள்கொண்ட தமிழகமென்னும், இந்ததொரு மும்முடிச்சோழ மண்டலத்தின், பெரு

மைதனை அறிந்துவர எழுதியே நின்ற, எழுத்தோலையின் ஏற்ற தொரு பிம்பமும், அந்ததொரு கல்வெட்டுதனில் உள்ளது. இவை யெல்லாம் வரும் காலத்தே காணுதல் வேண்டும். ஏற்றதொரு பெருமை கொண்டோனும்.

உற்றதொரு பலன் எல்லாம் கண்டுமே நிற்கின்ற, பாரடா அந்த ஒரு நெறியுடையநாயகி, தந்தனது குழவி தனக்கு, உற்ற தொரு மணமதுவும், நடத்தியும், ஏற்றதொரு பெருமைகள் கொண்டும், தந்தனது சோதரனின் குழவி தனக்கு இந்த ஒரு அரசுதனை ஆனந்தமுடன் தந்து நிற்க, அதனதனை வேண்டி நின்றாள். ஆதலினால் அன்றோ, அந்ததொரு வெறிகொண்ட இராசாதிராசனும், ஆனந்தமுடன் வேங்கி நாட்டதனிலே, விளை யாட்டு இதுவெனக் கருதியே, ஆங்குமே நின்றான் அன்று; ஆத லினால் இருவர் தமக்கும், சமரெதுவு வந்தது இல்லை, இல்லை; சமர் அற்ற முறையிலே, நல்லதொரு வணிக நியமங்களும், கண்டுமே வந்தனர் என்று நீட்டோலை உளது உளது என்பேன்.

பூரணம் கொண்டதினால் இந்ததொரு மன்னனும், உந்த மக்கு அருள்தனில் பெருமைதந்த மாமன்னன், அன்னவனின் உதிரத்தின் உதிரமாய், கொண்டதொரு குழல் நாணும், வெடித்த தொரு காலம், அதனதனில் மாண்டனனென்றும், அன்னவன் மாண்டதொரு காலம், இராசராசனின் காலமும், உற்றதொரு குலோத்துங்கனின் காலமும், பெருமையுடன் நின்றதொரு பெருமைதான் என்னே.

பாரடா, அந்ததொரு பல்லவராயனின், அழகுதரும் தலத் திலே, ஆனந்த அருள் மீனாக்ஷியாம், பூரணம் கண்டதொரு தலத்திலேயும், ஏற்றதொரு வகையதனிலே. *பதினாலாம்* ஆண் டதனிலே மாமன்னன் அருளதனைக்கேட்டு, அதனதனின் நிமித்த மாய். *முன்னவர் பற்றி நின்ற வழியதனிலே*, சோதரி நாயகி நெறியுடைய நாயகியின் குழவி தனக்கு, ஏற்றதொரு பட்டயம் தன்னை, மாமுனியும், மற்றோரும்கூட, உற்றதொரு ஞானசிவ னின், அருளதனைக் கொண்டதொரு சாத்திர விதிப்படி, உற்ற

**தொரு மணிமகுடங்கள், சாற்றியே நின்றேமென்று, கொண்ட தொரு பட்டயமும் உண்டு.''**
என்பது ஸ்ரீ புஜண்டர் அருள்வாக்காகும்.

## ஸ்ரீபுஜண்டரின் அருள் வாசகமும், பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டும்.

மாமுனி ஸ்ரீபுஜண்டரின் அருள் வாக்குகளைப் பல்லவ ராயன்பேட்டையில் உள்ள இராசாதிராசனின் 8-ஆம் ஆண்டுக் கல்வெட்டுடன் ஒப்பு நோக்குவோம். இக் கல் வெட்டு 1924-ஆம் வருஷம் வெளிவந்துள்ள ஆர்க்கிய லாஜிகல் ரிப்போர்ட்டில் 433-ஆம் எண் கொண்ட சாசனம் ஆகும். இதனை எபிகிராபியா இண்டிகா தொகுதி 31-இல் பக்கம் 223-இல் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்க ளும், திரு. டி. என். சுப்பிரமணியம் அவர்களும் ஆராய்ந்து எழுதி உள்ளார்கள். (அவர்கள் கண்ட முடிவு இம்முடிவி லிருந்து வேறுபட்டது). இங்குக் கல்வெட்டின் மூலத்தை நோக்குவோம். கல்வெட்டில் உள்ள 10. 11. 12. 13 ஆவது வரிகளே ஆராய்ச்சிக்கு உரியவையாகும். எபிகிரா பியா இண்டிகாவில் வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டு மூலம் பின் வருமாறு :

வரி 10 :— பெரியதேவர் எழுந்தரு(ளி) . . . . . ந(ா)ளிலே திரு அபி (ஷேகத்துக்) கு உரிய பிள்ளைகள் இன்றியே . . . . (ருக்கி)

வரி 11 :— றபடியை பார்த்து (மு)ன்னுளிலே காரியம் இருந்தபடி வி . . . . . . . . சய்து கங்கை கொ(ண்)ட சோழபுர . . . . தருளி இரு(க்) கிற பிள்ளைகளை . . . . யாணம் பண்ணு . . . . டையார் விக்(கி)ரமசோழ தேவர் பேரனுர்

வரி 12 :— நெறியுடைப்பெருமா(ள்) திருமகனுர் எதிரிலிப் பெருமாளைப் பெரி . . . . . . . . (சி) அருளின நாளிலே மண்டை கவி(ப்)பித்து . . . . தார் ஆனவாறே இவரைத் திரு அபி (ஷேகம் பண்ணு)விக்கக் கடவரா(க) . . . . . . . . து நாலாம் திருநக்ஷத்திரத்திலே ராஜாதி ராஜ தேவர் எ

வரி 13 :— ன்று திரு (அ)பிஷேகம் பண்ணுவித்து உடன் கூட்டமும் நாடு(ம்) ஒன்றுபட்டுச் செல்லும் படி பண்ணி(வித்தருளி)னுர்.

(அ) இக்கல்வெட்டில் ......... இவ்வாறு புள்ளி யிட்ட பகுதிகள், கல்வெட்டுக்களில் மறைந்தோ, சிதைந் தோ போன பகுதிகளைக் குறிக்கும். ஒவ்வொரு புள்ளியும் ஒவ்வோரெழுத்தைக் குறிக்கும்.

(ஆ) ( ) இவ்வாறு அடைப்புக் குறியீட்டிற் குள் உள்ள எழுத்துக்கள் ஆராய்ச்சியாளர்களால் ஆராய்ச் சியின் நிமித்தம் ஊகமாய்ப் பூர்த்தி செய்துகொள்ளப் பெற்றவையாகும்.

(இ) அசல் கல்வெட்டில் புள்ளியிட்ட பகுதிகளி லும் ( ) அடைப்புக் குறியிட்ட பகுதிகளிலும் உள்ள எழுத்துக்கள் சிதைந்தோ, மறைந்தோ உள்ளன.

(ஈ) இக்கல்வெட்டில் 12-ஆம் வரியில் 'பெரி' என்பதன் பின்னும் 'சி' என்னும் எழுத்தின் முன்னும் அமைந்த இடைவெளியில் எட்டு எழுத்துக்கள் மறைந்து இருப்பதாக எபிகிராபியா இண்டிகா கூறுகிறது. ஆனல் இந்த இடைவெளியில் ஆறு எழுத்துக்களுக்குமேல் இருக் கவே முடியாது என்பதனை நான் நேரில் அளந்து கண்

டேன். இதனைக் கருத்தில் கொண்டு ஸ்ரீ புஜண்டர் கூற்றினை மற்றைய வரிகளுடன் ஒப்பு நோக்கினால் பின்வரும் வாசகங்கள் உருவாகும்.

வரி 10 :— பெரியதேவர் எழுந்தரு(ளி) இருக்கிற ந(ா)
1 2 3 4 5
ளிலே திரு அபி(ஷேகத்துக்)கு உரிய பிள்ளை
கள் இன்றியே இருக்கி
1 2 3 4

வரி 11 :— றபடியை பார்த்து (மு)ன்னாளிலே காரியம்
இருந்தபடி (வி)சாரணை செ(ய்)து கங்கை
123 4 5 6
கொ(ண்)ட சோழபுரம் எழுந்தருளி இரு(க்)
1 2 3 4
கிற பிள்ளைகளையும் பிரயாணம் பண்ணுவித்து
1 2 3 4 1 2 3
உடையார் விக்(கி)ரமசோழ தேவர் பேரனார்
4

வரி 12 :— நெறியுடைப்பெருமா(ள்) திருமகனார் எதிரி
லிப்பெருமாளைப் பெரியதேவராசி அருளின
1 2 3 4 5 6
நாளிலே மண்டை கவி(ப்)பித்து அளித்தார் -
1 2 3
ஆனவாறே இவரைத் திரு அபி(ஷேகம்
பண்ணு)விக்கக் கடவராகப் பத்து நாலாம்
1 2 3
திருநக்ஷத்திரத்திலே ராஜாதிராஜதேவர் எ

வரி 13 :— ன்று திரு(அ)பிஷேகம் பண்ணுவித்து உடன்
கூட்டமும் நாடு(ம்) ஒன்றுபட்டுச் செல்லும்
படி பண்ணி(வித்தருளி)னார்.

மேற்கண்டவாறு ஸ்ரீபுஜண்டர் கூறியபடி கல்வெட்டை

எழுத்திட்டு வாசித்தால் சில உண்மைகள் புலப்படும். அவையாவன :

1. பன்னிரண்டாவது வரியில் "இராசராசன் உயிருடன் இருந்த காலத்திலேயே அவன் முன்னிலையில் இராசாதிராசன் அரசுப் பட்டம் கட்டப்பட்டான்" என்ற ஸ்ரீபுஜண்டர் கூற்றுக்கு 'ஆசி அருளின நாளிலே' என்பது ஒத்து வருகிறது.

2. பதினோருவது வரியில் உள்ள "முன்னாளிலே காரியம் இருந்தபடி விசாரணை செய்து" என்ற தொடர் ஸ்ரீபுஜண்டர் கூறுவதுபோல் 'முன்னவர்பற்றி நின்ற வழியதனிலே' என்ற கூற்றுக்கு ஒத்து வருகிறது.

3. பதினோருவது வரியில் உள்ள "கங்கைகொண்ட சோழபுரம் எழுந்தருளி இருக்கிற பிள்ளைகளையும் பிரயாணம் செய்வித்து" என்ற தொடர், இராசராசனின் இரு குழவிகளையும் இராசாதிராசனும் ஆக மூவரைக் குறிக்கின்றது.

4. பதினோருவது, பன்னிரண்டாவது வரியில் அமைந்த வம்சாவளி பின்வருமாறு :—

**விக்கிரமசோழ தேவர்**

|

**இரண்டாம் குலோத்துங்கன்**

|

**இரண்டாம் இராசராசன்** — **நெறியுடைய நாயகி (நெறியுடைப் பெருமா)**

|

**எதிரிலிப்பெருமாள் என்னும் இரண்டாம் இராசாதிராசன்**

5. பன்னிரண்டாவது வரியில் 'து' என்ற எழுத்திற்குமுன் 'ப்பத்' என்பதைச் சேர்த்து வாசித்தால் பத்துநாலாம் வயது என்று ஏற்படுகிறது. (பத்துநாலு - பதினான்கு).

6. பன்னிரண்டாவது வரியில் 'நெறியுடைப்பெருமாள்' என்று வருகிறது. கோயிலில் உள்ள மூலச் சுவரினை நேரில் கண்டேன். அதில் '**நெறியுடைப்பெருமா**' என்றுதான் இருக்கிறது. 'ள்' என்ற எழுத்து இல்லை. ஆகவே இது ஒரு பெண்ணிற்குரிய சொல் என்பது வெளிப்படை.

7. நெறியுடைப்பெருமா இராசராசனின் தங்கை என்பதும் அவளுடைய மகனாகிய எதிரிலிப்பெருமாளே இராசாதிராசன் என்பதும், இராசராசன் உயிருடன் இருந்த போதே இராசாதிராசன் 14-ஆம் வயதில் அரசனாக்கப்பட்டான் என்பதும் இதுவரை சரித்திரத்தில் காணப்பெறாத உண்மைகளாகும்.

## தொகுப்புரை

இதுகாறும் கூறியவற்றால் ஸ்ரீபுஜண்டர், "இராசராசனுக்கு இருவர் ஆண் மக்கள் இருந்தனர். முன்னவன் மூல நட்சத்திரத்தினன். இவன் பிறந்து ஓராண்டுக்கால இடைவெளிக்குப் பின்னர் இளையவனான குலோத்துங்கன் தோன்றினான்; இவன் சித்திரை நாளில் பிறந்தவன். "இவ்விரு மக்களுடைய கோள்களும் மாறுபட்டன" எனக் கோள் நூல் வல்லார் கூறினர். "மூத்தவன் அருள்வாழ்வு கொள்வான்; இளையவன் அரசேற்பான்; என்றாலும் இன்னும் பதினான்கு ஆண்டுக் காலம் மாற்றான் குழவிகள்போல் இவர்கள் மறைத்து வளர்க்கப்பட வேண்டும்; பதினெட்டாம் வயதினனாக இருக்கும் போதுதான் குலோத்துங்கன் அரசுரிமை ஏற்பான்" என்று ஞானசிவர் கூறினார்.

இளையவனை குலோத்துங்கன் அடுத்துச் சோணாட்டரசனாக ஆக்கப்பெற வேண்டியவன் என்பதனைத் திருவலஞ்சுழிகோயிலில் இவனுடைய நான்காம் வயதில் குடமுழுக்காட்டித் தீர்மானித்தனர். ஆயினும், இராசராசன் தான் நலிபிணிகளுடையவனாக இருத்தலின் இடைவெளிக் காலத்தே ஒருவனை அரசனாக்க நினைத்தான்; பெருமான் நம்பிப் பல்லவரையன் முதலானவருடன் கலந்தாலோசித்தான்; கருவூர் மன்னனான ஞானசேகரவல்லோரையன் என்பானால் கைவிடப்பட்ட தன் சகோதரியான நெறியுடைப்பெருமா என்பவளின் மகனான எதிரிலிப்பெருமாளைத் தேர்ந்தெடுத்தான். நெறியுடைப்பெருமாவும், எதிரிலிப்பெருமாளும் உரிய காலத்தே குலோத்துங்கனுக்கு அரசினை அளிக்க ஒப்பினர்; அலுவலர் சூளுரைத்தனர். இராசராசன் எதிரிலிப்பெருமாளுக்கு மணமுடித்து இராசாதிராசன் என்னும் பெயர் சூட்டி அரசனாக்கினான்; இம்முடிசூட்டு விழாவிற்குப்பின் சில ஆண்டுகள் உயிருடன் இருந்து இறந்தான். இராசாதிராசன், இராசராசனைப் போலவே அமைச்சர்பாலும், இளையவரான அரசமக்கள் பாலும் அன்புடன் ஒழுகி அரசு புரிந்து வந்தான்.

குலோத்துங்கன் உரிய பருவம் அடைந்தான்; இச்சமயத்தில் தன் எட்டாம் ஆண்டு வாக்கில் வேங்கி நாடு சென்ற இராசாதிராசன் ஆங்கோர் மங்கையைக் காந்தருவ மணம் புரிந்துகொண்டு வாழ்ந்து வந்தான். இதனை அறிந்த மன்னனின் சகோதரி தன் மகன் நிலைகண்டு தளர்வுற்றாள்; தான் தன் அண்ணனுக்கு அளித்த வாக்கினை நினைவு கூர்ந்தாள். அமைச்சருடன் ஆலோசித்தாள்; மூன்றாம் குலோத்துங்கனிடம் அரசு பொறுப்பினைத்தர முடிவெடுத்தாள். குலோத்துங்கனுக்குப் பதினைந்து வயது நடக்கும் காலத்தில் சோழ நாட்டு அரசுப் பொறுப்பினை நல்கினாள்; இளவரசாக்கினாள்.

பதினெட்டாம் ஆண்டுக்குப் பின்னரே குலோத் துங்கன் பூரணமாக அரசு பொறுப்பேற்கவேண்டும் என்று ஞானசிவர் உரைத்துள்ளமையால் உரியகாலம் வந்தவுடன் நெறியுடைப்பெருமாவும் இராசாதிராசனும் குலோத்துங்க னிடம் முழு அரசு பொறுப்பினையும் ஒப்படைத்தனர்; இராசாதிராசன் இங்குமங்குமாக இருந்து. பின் தன் வாழ் நாளின் இறுதியை ஆந்திராவில் கழிப்பவனானன். நட்புற வுடன் இவ்விரு மன்னரும் ஆட்சி நடத்தினர்'' என்று நவின்றுள்ளார் என்பது புலனாகும். மூன்றாம் குலோத் துங்கனின் தமையனான ஞானசேகரராசன், இராசாதிராச னின் தாயான நெறியுடையப்பெருமா, இராசராசனின் அமைச்சரான பெருமான்நம்பிப்பல்லவரையன், ஞானசிவர் ஆகியோரைப்பற்றியும், மற்றும் புதையுண்ட கோநகரங்க ளான பழையாறை, கங்கைகொண்டசோழபுரம் முதலா னவை பற்றியும் விவரங்கள் பல ஸ்ரீபுஜண்டரால் புகலப் பட்டுள்ளன. ஸ்ரீபுஜண்டர் "சோழர் வரலாறு பற்றிய உண்மைகள் பல விரைவில் புலனாகும்'' என்றும் புகலு கிறார். ஸ்ரீபுஜண்டரின் அருளாசியாலும், அவர்தம் கருவி களான ஆய்வாளர் உழைப்பாலும் வரலாற்றுப் பெருமை கள் அனைத்தும் வெளிப்பட்டு அழியாப்புகழ் பெறுவதாகுக இவ் அருளுடைச் சோழமண்டலம்.



# அருளுடைச் சோழமண்டலம்

## வரலாற்றுப் பகுதி

கி. பி. 1146 முதல் 1182 வரை

# வரலாற்றுப் பகுதி

ஐந்துமாத காலமாகச் சுவடிகேட்கும் காலத்தில் ஸ்ரீ புஜண்டரின் அருள்வாக்கில் அருமையான வரலாற்றுண்மைகள் அமைந்திருத்தலை அறிந்தேன். ஸ்ரீபுஜண்டரின் சுவடியிற்கண்ட செய்திகளை அறிய எண்ணிச் சாசன அறிக்கைகள், கல்வெட்டுத்தொகுதிகள், அறிஞருடைய ஆராய்ச்சி நூல்கள் ஆகியவற்றைப் படிக்கலானேன். கல்வெட்டுக்களில் ஸ்ரீ புஜண்டர் அருளிய உண்மைகள் புதைந்து கிடத்தலை அறிந்தேன். அவ் உண்மைகளை வெளிப்படுத்துமாறு குருவருளாணை கிடைத்தது. அதன் படி, வரலாற்றுப் பகுதியினை இந் நூலுக்கு உருவாக்கலானேன்.

# பிற்காலச் சோழர்

(கி. பி. 985 முதல் 1146 வரை)

சோழ ராஜ்யத்திற்கு அஸ்திவாரம் இட்டவன் 'விஜயாலயன்' ஆவான். இவனது நேர் பரம்பரையில் வந்தவனே முதலாம் இராசராசன்.

'முதல் இராசராசன்' கி. பி. 985 முதல் 1014 வரை அரசாண்டான். இவன் காலத்தில் சோழநாடு தெற்கே குமரி முதல் வடக்கே துங்கபத்திரை நதி வரை பரவி இருந்தது. ஆந்திராவில் கோதாவரி ஜில்லா உள்ளிட்ட பகுதிகள் வேங்கிநாடு எனப்படும். இந்நாட்டு இளவரசனுன விமலாதித்தனுக்கு, இராசராசன் தன் மகள் குந்தவையை மணம் புரிந்து கொடுத்தான். இதன் மூலமாக வேங்கி நாட்டு மன்னர்கள் சோழர்களுக்கு உறவினர்கள் ஆனுர்கள். இம் மணவினைத் தொடர்பு, பிற்காலச் சோழ அரசர்களாலும் பின்பற்றப்பட்டது. முதல் இராசராசன் காலத்தில், இன்றைய இலங்கையும் சோழ நாட்டிற்குள் ஒரு பகுதியாக அடங்கியிருந்தது. சுருங்கக்கூறின் சோழராஜ்யம் என்ற பெயர், **சோழ சாம்ராஜ்யம்** என்று கூறப்படும் அளவிற்கு, முதல் இராசராசன் சோழநாட்டை விஸ்தரித்தான். தஞ்சைப் பெருஉடையார் கோயிலை எடுப்பித்தவனும், திருமுறைகளைத் தொகுத்தவனும் இச் சோழமன்னனே ஆவான்.

முதல் இராசராசனுக்குப் பிறகு, இவன் மகன் முதலாம் இராசேந்திரன் அரசுபுரிந்தான். இவன், கங்கை வரை சென்று வடபுலமன்னரை வென்று, கங்கைநீரைக் கொண்டு

வந்தமையால் 'கங்கைகொண்டசோழன்' என்ற பெயர் பெற்றான். இவன், சுமத்திரா, மலேயா, பர்மா முதலிய தென்கிழக்குத் தேசங்களை, தன் வலிமை மிகுந்த கடற் படையால் வென்றுவந்தான்.

முதல் இராசேந்திரனுக்குப் பிறகு, அவனது மூன்று புதல்வர்களும் ஒருவர்பின் ஒருவராக அரசாண்டனர். இவர்களில் முதல் இருவரான இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன் ஆகிய இருவரும் வாரிசு இல்லாமலேயே இறந்தனர்.

ஆகவே கி. பி. 1063-இல் இராசேந்திரனின் மூன்றும் மகனான வீரராசேந்திரன் அரியணை ஏறினான்.

கி. பி. 1070-இல் வீரராசேந்திரன் இறந்தான். அவன் மகனான அதிராசேந்திரனும் வாரிசு இல்லாமல் இறந்தனன். ஆகவே வீரராசேந்திரனின் சகோதரி அம்மங்கை தேவியின் மகன் 'இராசேந்திரன்' என்பவன் சோழ சிம்மாசனம் ஏறினான்.

அம்மங்கையின் மகன் இராசேந்திரனே 'குலோத்துங்கன்' என்னும் அபிடேக நாமம் ஏற்றவன். இவன் சோழர் பரம்பரையில், முதல் இராசராசசோழனது மகனான இராசேந்திரனின் மகள் வயிற்றுப் பேரன்.

முதல் இராசராசனின் மகள் குந்தவை வேங்கி நாட்டு மன்னன் விமலாதித்தனை மணம் புரிந்தாள் என்பதனை முன்பே கூறினோம். இவர்களுக்குப் பிறந்தவனே 'இராசராச நரேந்திரன்' என்பவன். முதல் இராசராசனின் மகனான இராசேந்திரனின் மகள் அம்மங்கை, இராசராசநரேந்திரனை மணம் புரிந்திருந்தாள். அவர்களுக்குப் பிறந்தவனே இராசேந்திரன் என்னும் முதல் குலோத்துங்கன்.

அதாவது அம்மங்கை தன் அத்தை மகனை மணம் புரிந்து பெற்றெடுத்த தவப்புதல்வனே முதற் குலோத்துங்கன் ஆவான். முதற் குலோத்துங்கனுக்குப் பிறகு அவன் மகன் விக்கிரமசோழனும், இவனை அடுத்து இரண்டாம் குலோத்துங்கனும் அரசு புரிந்தனர்.

இரண்டாம் குலோத்துங்கன் கி.பி. 1133-இல் அரியணை ஏறினன். 17 வருடங்கள் ஆட்சி புரிந்து, கி. பி. 1150-இல் இறந்தான். தான் இறப்பதற்கு முன். கி. பி. 1146-இல் தன் மகன் இரண்டாம் இராசராசனை இளவரசனாக முடி சூட்டியிருந்தான்.

## கி. பி. 1146 முதல் 1182 வரை

கி. பி. 1146-இலிருந்து இரண்டாம் இராசராசன் அரசு புரியத் தொடங்கினன். இவனுக்குப்பின், இரண்டாம் இராசாதிராசனும், பின்னர் மூன்றும் குலோத்துங்கனும் அரியணை ஏறினர்.

இம்மூன்று அரசர்களுக்கும் உரிய உறவு முறையை ஆய்வாளர் இதுவரை சரியாக வரையறுக்கவில்லை. கி. பி. 1146 முதல் 1182 வரையிலான இடைப்பட்ட காலச் சோழரது சரித்திர அரசியல் விவகாரங்கள், சர்ச்சைக்கும் ஆராய்ச்சிக்கும் உரியனவாக உள்ளன. ஆகவே இவ் விடைப்பட்ட காலத்தைப் பின்வரும் பகுதிகளில் விரிவாக எடுத்து எழுத இறைவன் அருளோடு விழைகிறேன்.

இப்பகுதியில், "இராசராசனின் ஆட்சிக் காலம் எது? பல்லவராயன்பேட்டைச் சாசனத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவை? இராசாதிராசன் எவ்வாண்டில் பட்டம் ஏற்றான்? இராசாதிராசனுக்கும் இவனுக்குப் பின்னர் ஆண்ட மூன்றும் குலோத்துங்கனுக்கும் இடை

யில் அமைந்த உறவு, நட்பு முறையில் நடந்த செயல்கள் யாவை ?'' முதலான பல விஷயங்கள் ஆராயப்பட்டுள்ளன. ஸ்ரீ புஜண்டர் தந்த அறிவுத் திறவுகோல் கொண்டு, கல்வெட்டுக்கள், செப்பேடுகள், இலக்கியப் பகுதிகள் ஆகிய வரலாற்று மூலங்களை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு தர்க்கரீதியாக எழுதப்பட்டுள்ள வரலாற்றுப் பகுதி இது.



# இரண்டாம் இராசராசனின் காலம்

இரண்டாம் இராசராசன், இரண்டாம் குலோத்துங்கன் என்பவனின் மகனுவான். இவ்விராசராசன், சோழ அரசர் மாறி மாறிச் சூடிக்கொண்ட பட்டங்களுள், 'பரகேசரி' என்னும் பட்டத்தைச் சூடிக்கொண்டான். இம்மன்னன் சோழர்கள் நமக்குத் தந்த கலைச் செல்வங்களுள் ஒன்ருகிய தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலை எடுப்பித்தவனுவான். இம்மன்னன், கி. பி. 1146-இல் பட்டத்திற்கு வந்தவன் என்பது வரலாற்றறிஞர் அனைவர்க்கும் ஒப்ப முடிந்த கருத்தாகும். இவன் ஆட்சிப்பரப்பில், பாண்டிய, சேர மண்டலங்களும் வேங்கி நாடு, கொங்கு நாடு, தொண்டை நாடுகளும் அடங்கியிருந்தன. "இவ்விராசராசன் எத்தனை ஆண்டுகள் அரசு புரிந்தான்? இவனுடைய ஆட்சியிறுதிக் காலம் எது?" என்பதனை அவனுடைய சாசனங்களின் வாயிலாக ஆராய்வோம்.

## இராசராசனின் பிற்காலக் கல்வெட்டுக்கள்.

இரண்டாம் இராசராசனுடைய ஆட்சிக் காலத்தின் முற்பகுதிக்குரிய கல்வெட்டுக்கள், தமிழகத்தில் மிகுதியாகவும் ஆந்திர மாநிலத்தில் ஒரு சில இடங்களிலும் காணப்படுகின்றன. இவனுட்சியின் பிற்பகுதிக்குரிய கல்வெட்டுக்கள், ஆந்திராவில் பரவலாகவும் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் காணப்படுகின்றன. இராசராசனுட்சியின் பிற்காலத்தனவாகிய அக்கல்வெட்டுக்களின் பட்டியலை அடுத்த பக்கத்தில் காணலாம்.

இக் கல்வெட்டுக்களே அன்றியும் இராசராசனின் ஆட்சியின் இறுதி எது? என்று நிர்ணயிப்பதற்கு மற்றும் சில சாசனங்களும் துணைபுரிகின்றன.

## இரண்டாம் இராசராசனின் பிற்காலக் கல்வெட்டுக்கள்

| எண் | ஆட்சி ஆண்டு | கி. பி ஆண்டு | சகர ஆண்டு | கல்வெட்டு உள்ள ஊர் | வெளியிடப் பட்டுள்ள சாசன அறிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | 19 | 1164—65 | —— | சித்தலிங்கமடம் | 411/1909 |
| 2, | 19 | 1164—65 | —— | திருப்புகலூர் | 86/1928 |
| 3. | 19 | 1164—65 | —— | திருவண்ணாமலை | 551/1902 |
| 4. | 20 | 1165—66 | 1087 | திராக்ஷாராமம் | தெ. இ. சா. 4/1050 |
| 5. | 20 | 1165—66 | 1087 | பெனுமுலி | 132/1917 |
| 6 | 20 | 1166 | 1088 | திராக்ஷாராமம் | தெ. இ. சா. 4/1051 |
| 7. | 21 | 1166—67 | —— | தாராசுரம் | 17/1908 |
| 8. | 21 | 1166—67 | 1088 | கொல்லூரு | 708/1920 |
| 9. | 21 | 1167 | 1089 | கொண்டபரிஞ்சலூரு | நெல்லூர் INS 0. 59 |
| 10. | 23 | 1169 | 1091 | பாபட்லா | C.P. 23/1916—17 |
| 11. | 24 | 1170 | 1092 | பெதகொண்டூரு | 695 1920 |
| 12 | 26 | 1172 | 1094 | கொல்லூரு | 704/1920 |
| 13. | 27 | 1172—73 | —— | திருவொற்றியூர் | 123/1912 |
| 14. | 28 | 1173—74 | 1095 | கொனிதேனை | தெ. இ. சா. 6/626 |

## 1165-க்குரிய திருப்புகலூர்க் கல்வெட்டு

திருப்புகலூரில் இராசராசனுடைய 19-ஆம் ஆட்சி யாண்டுக்குரிய கல்வெட்டொன்று காணப்படுகிறது[1]. இக் கல்வெட்டில் காணப்படும் பஞ்சாங்கக் குறிப்புகளைக் கணக்கிட்ட கணிதவியலார், இதன் காலம் 1—2—1165 திங்கட்கிழமை என்று உறுதி கூறியுள்ளனர்[2].

## 1170-க்குரிய பெருநகர்க் கல்வெட்டு

தொண்டை நாட்டில் இராசராசனின் பிற்காலக் கல்வெட்டுக்கள் உள்ளன. வரலாற்றறிஞரின் சிந்தனைக் குள்ளான 27-ஆம் ஆண்டுக்குரிய திருவொற்றியூர்க் கல் வெட்டு மட்டுமல்லாமல் மற்றொரு கல்வெட்டும் உள்ளது. இது இரண்டாம் இராசராசனுடைய 25-ஆம் ஆண்டுக்குரி யது; காஞ்சீபுரம் தாலூகா, பெருநகர் என்னும் ஊரிலுள்ள பிரம்மபுரீசுவரர் கோயிலில் உள்ளது[3]. இக்கல்வெட்டு 5—2—1170-க்கு உரியது என்பது கல்வெட்டுக் கணித வியலறிஞர் திரு. சுவாமிக்கண்ணுப் பிள்ளை அவர்களின் முடிவாகும்[4].

## ஒரு செப்பேட்டுச் சான்று

இரண்டாம் இராசராசனின் 23-ஆம் ஆட்சியாண்டிற் குரிய செப்பேடு ஒன்று ஆந்திர மாநிலத்தில் உள்ள பாபட்லாவில் கிடைத்துள்ளது. இச்செப்பேடு 1916—17 ஆம் ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்ற

1. Ins. No, 86 of 1928.
2. A. R. E. Year 1927—8, Page, 45.
3. Ins. No. 351 of 1923.
4. A. R. E. Year, 1923—4, Page 89.

தாகும். இச் செப்பேடு 'நந்தூரு பட்டயம்' என்று அறிஞ ரால் கூறப்படும்.

இச்செப்பேடு,[5] வரலாற்று முக்கியத்துவம் உடைய செப்பேடு மட்டுமல்லாமல், கீழைச்சாளுக்கியர் வேல நாட்டுச் சிற்றரசர் ஆகியோர் மரபினையும் தரக்கூடியதாக உள்ளது. இது ஐந்து இதழ்களைக் கொண்டது. வேல நாட்டுச் சிற்றரசன், 'குலோத்துங்க இராசேந்திர சோட ராசன்'[6] என்பவன் 'இனுங்காறு' என்றும் சிற்றூரைப் பிரமதேயமாக ஓரந்தணனுக்குத் தந்தமை பற்றிக் கூறுகிறது.

இச்செப்பேட்டில் கண்ட காலக்குறிப்புச் சோழர் வரலாற்றுக்கு ஒளி தருவதாக உள்ளது. இச்செப்பேடு, இரண்டாம் இராசராசனின் 23-ஆம் ஆட்சியாண்டில், சக ஆண்டு 1091-இல் வெளியிடப்பட்டது என்பதனை இப் பட்டயத்தால் அறிகிறோம். இவ்வாண்டு கி. பி. 1169-க்கு உரியதாகும்.

''தமிழ் நாட்டில், இராசராசனுடைய 19-ஆவது ஆண்டுக்கு மேல் உள்ள கல்வெட்டுக்கள் பொதுவாகக் காணப்படுவதில்லை ; ஆயினும் இராசராசனுடைய 27-ஆம் ஆட்சியாண்டுக்கு உரியதாக ஒரே ஒரு கல்வெட்டு

---

5. No. 23. List of Copper plates examined during the Year 1916—17. Text published in Epigraphia Indica, Vol. 29, Pages 225—47.

6. **குலோத்துங்க இராசேந்திர சோடராசன் இராசராசன் காலத்தினன்.**

A. R. E. 1934 Part II, Paragraph 25, also see S. I. I. Vol. IV, 1051 ; 1063 ; 1083 ; 1086 ; 1108 ; 1112 ; 1113.

மட்டும் காணப்படுவது ஐயத்திற்குரியதாக உள்ளது. தற்போது ஆராய்ச்சியில் உள்ள இச்செப்பேட்டில், 1091 என்னும் சகர ஆண்டு இராசராசனின் 23-ஆம் ஆட்சி யாண்டு என்று கொடுக்கப்பட்டுள்ளமை, பேராசிரியர் திரு. கீல்உறார்ன், இராசராசன் கி. பி. 1146-இல் பட்டம் ஏற்றவன் என்று கணித்துள்ளமையை உறுதி செய்வ தோடன்றி இராசராசன் 19 ஆண்டுகட்கு மேலும் அரசாட்சி புரிந்தான்; 27-ஆம் ஆண்டுவரையிலும்கூட ஆட்சி புரிந்தவன் ஆகலாம் என்றும் காட்டுவது'' என்று இச் செப்பேட்டில் கண்ட காலக் குறிப்பினைப் பற்றிச் சாசன அறிக்கை எழுதியுள்ளது.[7]

இராசராசனுடைய 23-ஆம் ஆட்சியாண்டில் இச் செப்பேடு வழங்கப்பெற்றது என்று குறிக்கப்பட்டுள்ளமை உற்று நோக்கற்குரியதாகும். அரச மரபினைக் கூறுவதாக அமையும் இச்செப்பேட்டு இதழ்கள், வளையம் ஒன்றில் கோக்கப்பட்டுள்ளன. வளையத்தின் பூட்டுவாயில் காணு தற்கு அரியதொரு முத்திரை காணப்படுகிறது. இம் முத்திரையின் இடையில் 'திரிபுவனங்குச' என்னும் தொடர் எழுதப்பட்டுள்ளது. 'திரிபுவனங்குச' என்பது சோழர் சிறப்புப் பெயர்-குறிப்பாக இராசராசனின் சிறப்புப் பெயர்[8] என்பது இராசராசன், இராசாதிராசன் காலத்துத் தெலுங்குக் கல்வெட்டுகளால் அறியப்பெறும். மற்றும்

---

7. A. R. E. 1917, Part II Paragraph, 26.

8. 'திரிபுவனங்குச' என்பது திரிபுவன வீரதேவன் என்பது போன்ற ஒரு சிறப்புப் பெயர். இரண்டாம் இராசராசன் சூடியது. இப்பெயர் ஓரளவுக் கலத்தின் பெயராக இராசராசன் (S. I. I. vol. iv. No. 1064) இராசாதிராசன். (S. I. I. vol. vi. No. 1028) காலத் தெலுங்கு மொழிக் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

இலச்சினையமைப்பும் காணற்கரியதொன்றாக உள்ளது. இவ் விலச்சினையில் 'திரிபுவனாங்குச' என்னும் சிறப்புப் பெயரின் மேற்புறம், சந்திரன், விண்மீன், சாமரம், சோழரின் சின்னமாகிய புலி, அங்குசம், தாமரை ஆகியவற்றின் உருவங்களும், தொடரின் கீழ்ப்புறம், சாளுக்கியரின் சின்ன மாகிய சக்கரம் (Boar Disk) பாதரக்ஷை, முரசு, இரட்டைக் கொம்பு (double counch) விளக்குத் தண்டுகளின் உருவங்களும் மற்றும் யாதென அறிய முடியாத சில உருவங்களும் உள்ளன. இவ்வரச இலச்சினை, சோழருக்கும் சாளுக்கிய அரசருக்கும் இடை யில் அமைந்த நட்புறவினை உணர்த்தும் அரியதொரு இலச்சினை ஆகும். பூட்டுவாயில் இவ்விலச்சினையை உடையதான, செப்பேடுகள் நோக்கப்பெற்ற வளையம் செப்பேடு ஆய்வாளரிடம் வரும்போது சற்றும் உடையா மல் இருந்தது என்பது ஆராய்ச்சியாளர் சிந்தனைக்கு உரிய தாகும். இத்தகைய அரிய செப்பேட்டில்-சோழர் சாளுக்கியர் ஆகிய இருவரின் அரசிலச்சினையை உடைய செப்பேட்டில் இராசராசன் கி. பி. 1169-இல் அரசனாக இருந்தான் என்று கூறப்பட்டுள்ளமை எவ்வாற்றாலும் மறுக்க இயலாததாகும்.

## இரண்டாம் இராசராசனின் காலம்

எனவே மேற்கண்ட சான்றுகளின் துணைகொண்டு இரண்டாம் இராசராசனின் இறுதியாட்சியாண்டு எது என நோக்குதல் வேண்டும்.

1. இவனுடைய கல்வெட்டுக்களுள் 28-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி. பி. 1173) இறுதியானது ஆந்திர மாநிலத்தில், கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள



கி. பி. 1169-இல் இராசராசன் உயிருடன் இருந்தபோது வேலநாட்டுச் சிற்றரசனுன குலோத்துங்க இராசேந்திரசோடராசனுல் வெளியிடப்பட்ட தான நந்தூரு செப்பேடுகள். *பக்கம் 53 – 56 காண்க.*

( Copy right Archeological Survey of India — Mysore )

OFFICE OF THE CURATOR
RECEIVED
7 ஜுன் 1976
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

# நந்தூரு செப்பேடு – வளையத்திலுள்ள இலச்சினை



மேற்புறத்தில் உள்ள
சோழர் இலச்சினை



கீழ்ப்புறத்தில் உள்ள
சாளுக்கிய இலச்சினை

OFFICE OF THE CURATOR
RECEIVED
7 ஜூன் 1976
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

( Copy right Archeological Survey of India — Mysore )

'கொனிதேன' என்னும் இடத்தில் இக்கல்வெட்டு இருக்கிறது. இக் கல்வெட்டின் சகாயாண்டு சரியானதன்று; பிழையுடையது. எனவே இதனை இறுதியாண்டாகக் கொள்ளவியலாது.

2. திருவொற்றியூரில் (2) 7-ஆவது ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டொன்று இருக்கிறது. இக்கல்வெட்டிலக்கத்தில் 2 என்பது காணப்படவில்லை; ஊகித்து நிரப்பப்பட்டுள்ளமையால் இக்கல்வெட்டும் ஐயத்திற்கிடமானதாகும்.

3. இராசராசனின் 26-ஆவது ஆட்சியாண்டான சகம் 1094-க்கு உரியதொரு கல்வெட்டு, ஆந்திர மாநிலம் 'கொல்லூரு' என்னும் இடத்தில் உள்ளது. இக்கல்வெட்டு கி. பி. 1172-க்கு உரியதாகும்.

4. கொல்லூரு கல்வெட்டுக்குச் சமகாலத்ததான திருமழபாடிக் கல்வெட்டு[9] ஒன்று இராசராசனைப் 'பெரிய தேவர்' என்று குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு இரண்டாம் இராசாதிராசனின் 6-ஆம் ஆட்சியாண்டுக்கு உரியது. எனவே இராசராசன் இராசாதிராசனின் ஆறும் ஆட்சியாண்டான கி. பி. 1171-72-இல் இறந்தவன் என்பது உறுதி. ஆதலின் கி. பி. 1172-க்கு உரிய 26-ஆவது ஆட்சியாண்டே இராசராசனின் இறுதியாட்சியாண்டு ஆகும் என்பது தெள்ளிது.

5. கி. பி. 1146-க்கும், கி. பி. 1172-க்கு உரிய கொல்லூரு கல்வெட்டுக்கும், இடையில் தொடர்ச்சியான ஆட்சியாண்டுகளையுடைய கல்வெட்டுக்கள் உள்ளன.

---

9. Ins. No. 90 of 1920.

ஆதலால் "கி. பி. 1146-இல் அரியணை ஏறிய இரண்டாம் இராசராசன் 26 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்; கி. பி. 1172-இல் இறந்தான்" என்று கருதலாம்.

## இராசராசனின் ஆட்சியில்

இராசராசனின் மெய்க்கீர்த்திகள் இவனுடைய ஆட்சியின் சிறப்பையும் இவன் சமயம் தமிழ் முதலியவற்றிற்குப் புரிந்துள்ள தொண்டுகளையும் பெரிதும் விவரிக்கின்றன. விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன் ஆகியோர் காலத்தில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் இராசராசனின் காலத்தும் வாழ்ந்தவர். தக்கயாகப்பரணி, இராசராச சோழனுலா முதலிய தமிழ் இலக்கியங்களை இயற்றியவர் இவ் ஒட்டக்கூத்தரே ஆவர். கூத்தர் தம்முடைய தக்கயாகப்பரணியில் இராசராசனைப்பற்றியும் அவன் எடுப்பித்த இராசராசேச்வரம் என்னும் கோயிலைப்பற்றியும் புகழ்ந்து பாடியுள்ளார்.

இம்மன்னனின் அன்புக்குப் பெரிதும் பாத்திரமாய் இருந்தோன், திருச்சிற்றம்பலமுடையான் ஆன பெருமான் நம்பிப் பல்லவரையன் என்பவன் ஆவான். இவன் மன்னனின் முதன் மந்திரியாயும், படைத்தளபதியாயும், அரசகுல விவகாரங்களில் அறிவுரைகூறும் மதிமந்திரியாயும் விளங்கினன். இவன், தன் அரசனின் பெயரால் மாயவரம் அருகில் உள்ள குளத்தூரில் "இராசராசேச்வரம்" என்னும் ஓர் அழகிய சிறு கோயிலை எடுப்பித்தான். அக்குளத்தூர் இன்று பல்லவராயன்பேட்டை என்றும், கோயில் "மீனாக்ஷிசுந்தரேசுவரர்" ஆலயம் என்றும் வழங்குகின்றது. பல்லவரையனும் கூத்தரால் தக்கயாகப்பரணியில் புகழப்பட்டுள்ளான்.

இராசராசன் ஆயிரத்தளி அரண்மனையில் வாழ்ந்து வரும் காலத்தில் நலிபிணிகள் கொண்டான்; தான் இறந்து விடுவோமோ என்றும் எண்ணம் கொண்டான்; தனது பிள்ளைகள் இளஞ்சிறுவர்களாக இருப்பதைக் கண்டான்: தனக்குப்பின் சோழநாட்டை யார் அரசு புரிவது என்று கவலையுற்ருன். தவிரவும் இக்காலத்தில் குடும்பத்திலும் நாட்டிலும் சில கலக்கங்கள் உருவாகி இருத்தலை அறிந்தான்.

முதன் மந்திரி திருச்சிற்றம்பலமுடையானின் ஆலோசனை கொண்டு தக்கதொரு திட்டம் தீட்டினுன். பல்லவரையனும் அரசனின் விருப்பத்தைச் செயல்படுத்தலானுன்.

இராசராசனுல் இளவரசுப் பட்டம் கட்டப்பட்டவன் யார்? எந்தச் சூழ் நிலையில் அவன் இளவரசனுனன்? இராசராசனுக்கும், இளவரசனுக்கும் உள்ள உறவுமுறை யாது? பல்லவரையன் செய்த பணி என்ன? என்பனவற்றை விளக்குகிறது பல்லவராயன் பேட்டைச் சாசனம். அச்சாசனத்தை அடுத்து வரும் பகுதியில் காண்போம்.



# பல்லவராயன்பேட்டைச் சாசன முகப்புரை

பல்லவராயன்பேட்டைச் சாசனத்தை ஆராயப்புகு முன் ஒரு சிறிய முகப்புரை அளிக்கவேண்டியது அவசிய மாகிறது. அதாவது இராசராசன் எப்போது இறந்தான் என்ற ஒரு முடிவை அடிப்படையாகக் கொண்டு இச் சாசனத்தை ஆராயவேண்டும். சாசனம் இரண்டாம் இராசாதிராசன் சோழ மாமன்னனுகத் திருஅபிஷேகம் செய்யப் பெற்றுப் பிரகடனப்படுத்தப்பட்ட செய்தியைக் கூறுகிறது. இராசாதிராசன் திருஅபிஷேகம் செய்யப் பட்டபோது இரண்டாம் இராசராசன் உயிருடன் இருந்த வனு அல்லது இறந்தவனு என்னும் வினவுக்குரிய விடையே இம்முகப்புரை.

## இராசராசன் இருந்தவனு அல்லது இறந்தவனு?

வரலாற்று அறிஞர் இவ்வினவிற்குப் பலவாருன விளக்கங்களைக் கண்டுள்ளனர்.

1. 1913-ஆம் ஆண்டு, கல்வெட்டு ஆண்டறிக்கைப் பகுதி-2, பக்கம் 107-இல் பத்தி, 36, 'இரண்டாம் இராசராசன் கி. பி. 1172 வரை அரசாண்டான்' என்று கூறுகிறது.
2. 1921-ஆம் ஆண்டுக்குரிய அறிக்கை பக்கம் 92-இல், 18-ஆம் பத்தி, 'இராசராசன் கி. பி. 1172 வரை அரசாண்டான்' என்று கூறிப் பல கல்வெட்டுச் சான்றுகளையும் முன் வைக்கிறது.

3. பல்லவராயன்பேட்டைச் சாசனம் 1924-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. திரு. ஜி. வெங்கோப ராவ் அவர்கள் 1923—24-ஆம் ஆண்டு அறிக்கைப் பகுதி இரண்டில், பத்தி 19-21-இல் இச்சாசனத்திற்கு விளக்கங்கள் கூறியுள்ளார். இப் பகுதியில், " இராசராசன் கி. பி. 1163 இலேயே இறந்துவிட்டான் " என்றும் கூறியுள்ளார்.

4. எபிகிராபியா இண்டிகா தொகுதி 21-இல், 184-193 பக்கங்களில், திரு. வி. வெங்கடசுப்பா அய்யர் அவர்கள், பல்லவராயன்பேட்டைச் சாசனத்தை ஆராய்ந்து, " இராசராசன் கி. பி. 1163-இல் இறந்தான் " என்ற முடிவுக்கு வந்தனர்.

5. எபிகிராபியா இண்டிகா தொகுதி 22-இல், பக்கம் 86—92-இல், திரு. வி. வெங்கடசுப்பா அய்யர் அவர்கள், இராசாதிராசனின் 12-ஆம் ஆண்டுக்குரிய திருவாலங்காட்டுக் கல்வெட்டினை ஆராய்ந்துள்ளார். அப்பகுதியில் 86-ஆம் பக்கத்தின் அடிக்குறிப்பில் " இராசராசன் கி பி 1164—65-இல் இறந்தான் " என்று கூறியுள்ளார்.

6. 1956 எபிகிராபியா இண்டிகா தொகுதி 31-இல், 223–228ஆம் பக்கத்தில், பல்லவராயன்பேட்டைச் சாசனத்தைத் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்த்திரியார் அவர்களும் திரு. டி. என். சுப்பிரமணியம் அவர்களும் ஆராய்ந்துள்ளனர். அதில் பக்கம் 228-இல், " இராசராசன் கி பி. 1173 வரை அரசாண்டான் " என்று கூறியுள்ளனர்.

7. 1956 எபிகிராபியா இண்டிகா தொகுதி 31-இல் பக்கம் **269—273**-இல் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்த்திரியார் அவர்களும் திரு. டி. என். சுப்பிர மணியம் அவர்களும் ஹேமாவதிக் கல்வெட்டை ஆராயும் காலத்து "இராசராசன் கி. பி. 1173 வரை அரசாண்டான்" என்று வலியுறுத்தி உள் ளனர்.

பல்லவராயன்பேட்டைச் சாசனம், இராசாதிராச னுக்குத் திருஅபிஷேகம் செய்விக்கப்பெற்றமை பற்றிக் கூறுகிறது. இராசாதிராசன் திருஅபிஷேகம் செய்விக்கப் பட்டு கி. பி. 1166-இல் மாமன்னனுகப் பிரகடனம் செய்யப் பட்டான் என்பது மேற்கண்ட எல்லா அறிக்கைகளிலும் ஏற்கப்பட்டுள்ளது. ஆகவே பல்லவராயன்பேட்டைச் சாசனத்தை ஆராயப் புகுமுன் "இராசாதிராசனுக்குத் திரு அபிஷேகம் செய்விக்கப்பட்டு மாமன்னனுகப் பிரகடனம் செய்யப்பட்ட காலத்தும், அதற்குப்பின் பல ஆண்டு களும் இரண்டாம் இராசராசன் உயிருடன் இருந்தான்" என்ற கருத்தினை மனதில் நிலையாக நிறுத்திச் சாசனத்தை அணுக வேண்டும்.



# பல்லவராயன்பேட்டைச் சாசன ஆராய்ச்சி

## அமைவிடம்

தஞ்சை மாவட்டம், மாயூரத்திலிருந்து நீடூர் செல்லும் வழியில் பல்லவராயன்பேட்டை என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரில் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயம் என்னும் திருக்கோயில் உள்ளது[1]. இச்சிவாலயத்தின் அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு இரண்டாம் இராசாதிராச சோழனுடைய எட்டாவது ஆட்சியாண்டுக்கு உரிய கல்வெட்டு ஆகும். இக்கல்வெட்டு, இக்கட்டுரையில் **'பல்லவராயன் பேட்டைச் சாசனம்'** என்று குறிக்கப்பெறும்,

## சரித்திரம்தரும் சாசனம்

பல்லவராயன்பேட்டைச் சாசனம், பிற்காலச் சோழரின் சரித்திரம் பற்றிய பல உண்மைகளைச் சாற்றும் வரலாற்று முக்கியத்துவமுடைய சாசனமாகும். சோழர் சரித்திரத்தில் ஒரு பகுதிக்கு அடிப்படையாக — அதாவது கி.பி. 1146–78க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அமைந்த சோழர் வரலாற்றுக்கு அஸ்திவாரமாக அமைவது இச்சாசனம். இதனை இங்கு ஆராய்வோம்.

---

**1. இத்திருக்கோயில், இரண்டாம் இராசராசனின் பத்தாவது ஆட்சியாண்டாகிய கி. பி. 1155-இல் திருச்சிற்றம்பலமுடையானை பெருமான்நம்பிப்பல்லவரையனால் எடுப்பிக்கப் பெற்றதாகும்.**

A. R. E. 1924 Ins. Nos. 434 & 435.

## பதிப்பித்தோரும் ஆராய்ந்தோரும்

1. முதன்முதலாக, மத்தியத் தொல்லியல் துறையினர் 1924-ஆம் ஆண்டு இச்சாசனத்தை மசிப்படி எடுத்தனர்; 433-ஆம் எண் கொண்ட சாசனமாக வெளியிட்டனர். இதிற்கண்ட செய்திகளைத் திரு. ஜி. வெங்கோப ராவ் அவர்கள், 1923–24-ஆம் ஆண்டறிக்கையில் இரண்டாம் பகுதியில் பத்திகள் 19-21-இல் ஆராய்ந்துள்ளார்.

2. திரு. வி. வெங்கடசுப்பா அய்யர் அவர்கள் இச்சாசனம் முழுமையையும் எபிகிராபியா இண்டிகா தொகுதி 21-இல் 31-ஆவது சாசனமாக 184–93-ஆம் பக்கங்களில் பதிப்பித்துள்ளார்.

3. எபிகிராபியா இண்டிகா 31-ஆம் தொகுதியில் 30-ஆவது சாசனமாக (பக்கம் 223–228) இச்சாசனத்தின் 10-13-ஆம் வரிகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. Note on Pallavarayanpettai Inscription of Rajadhiraja II என்னும் தலைப்பில் திரு. நீலகண்ட சாஸ்திரியாரும் திரு. டி. என். சுப்பிரமணியம் அவர்களும் இச்சாசனத்திற் கண்ட செய்திகளை இங்கு ஆராய்ந்துள்ளனர்.

4. Quarterly Journal of Mythic Society என்னும் தொகுதியில் (Q. J. M. S.) தொகுதி 19-இல் திரு. சோமசுந்தர தேசிகர் இச்சாசனத்தை ஆராய்ந்துள்ளார்.

5. திரு. நீலகண்டசாஸ்த்திரியார் அவர்கள் தாம் எழுதிய சோழர் வரலாறு என்னும் நூலின் இரண்டாம் தொகுதியில், முதல் பகுதியில், Note. C. on Pallavarayanpettai Inscription என்னும் தலைப்பில், 89-95-ஆம் பக்கங்களில் இச்சாசனம் பற்றி எழுதியுள்ளார்.



தாராசுரத்து ராஜராஜேஸ்வரம்



THE CURATOR
RECEIVED
7 ஜுன் 1976
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

குளத்தூர் (பல்லவராயன்பேட்டை)
ராஜராஜேஸ்வரம்

பக்கம் 11, 12, 58 காண்க

6. திரு. இராமச்சந்திர தீக்ஷிதர் அவர்கள், தாம் எழுதிய மூன்றும் குலோத்துங்கன் என்னும் நூலின் பிற்பகுதியில் இச்சாசனத்தை ஆராய்ந்துள்ளார்.

7. திரு. சதாசிவபண்டாரத்தாரவர்கள், தம் பிற்காலச் சோழர் சரித்திரத்தின் இரண்டாம் பகுதியில் சேர்க்கை 5-ஆக இச்சாசனம் முழுமையையும் வெளியிட்டுள்ளார். (பக்கம் 262 – 265.)

## சாசனச் செய்தி

பல்லவராயன்பேட்டைச் சாசனம், பெருமான் நம்பிப் பல்லவரையன் இறந்தபிறகு, அவனுடைய மனைவியருக்கும் மக்களுக்கும் இரண்டாம் இராசாதிராசனால், குளத்தூரில் 40 வேலி நிலம் தரப்பட்டமையைக் கூறுகிறது. கல்வெட்டு, தானச் செய்தி மட்டும் கூறுவதோடு நில்லாமல் சில சரித்திரநிகழ்ச்சிகளையும் சாற்றுகிறது. பெருமான் நம்பிப்பல்லவரையன் இராசாதிராசனை அரசனாக ஆக்கியமையும், ஈழப்போரில் பங்கேற்று வீரம் விளைத்தமையும் இதிற்கண்ட வரலாற்றுச் செய்திகளாகும்.

## நுணுக்கமான நோக்கம்

பல்லவராயன்பேட்டைச் சாசனம் துரதிஷ்டவசமாகப் பல இடங்களில் சிதைந்தும், தேய்வுற்றும், அழிந்தும், காரையால் மறைப்புண்டும் காணப்படுகிறது. வரலாற்றறிஞர் எழுத்துக்கள் மறைந்த இடங்களில் தாம் ஊகமாக எழுத்துக்களை இட்டு நிரப்பி, அவ்வாதாரங்களின் அடிப்படையில் கட்டுரைகளைச் செய்துள்ளனர். மறைந்த பகுதிகளை நிரப்ப,

1. தற்போது கல்வெட்டுள்ள நிலையை அறிவதற்காக என்னால் எடுக்கப்பெற்ற அண்மைக்கால மசிப்படி (Recent estampage).

2. மறைந்த எழுத்தினையுணர்த்தும் புள்ளிகளுடன் எபிகிராபியா இண்டிகா தொகுதிகளில், வெளியிடப்பட்டுள்ள சாசன வாசகங்கள் ஆகியவை ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன.

நான் பல்லவராயன்பேட்டைச் சிவன் கோயிற்குச் சென்றேன் ; மூலச்சுவரில் கல்வெட்டு எழுதப்பட்டுள்ளமையைக் கண்டேன். கல்வெட்டு, மூலச்சுவரில் சமமாக அமைந்த பகுதியில் ஓடுவதோடு இடையிடையே உள்ள சிறு தூண்களிலும் வெட்டப்பட்டுள்ளது. மேலும் இக் கல்வெட்டில் காலத்தின் கோலத்தால் — எழுத்துக்கள் சிதைந்தோ அல்லது மறைந்தோ உண்டாகியுள்ள இடைவெளிகள் சில இருப்பதனையும் கண்டேன். இவ்விடைவெளிகளில் சில எழுத்துக்கள் மறைந்துள்ளன. நான் இவ்விடைவெளிகளை அளந்தேன். என் ஆய்வுக்குரிய எழுத்துக்களற்ற இடைவெளிப் பகுதியின் மேலுள்ள வரிகளிலும், கீழே உள்ள வரிகளிலும் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் எத்தனை ? என்பதனையும் அளந்து ஒப்பிட்டேன். மேலும் எவ்வளவு எழுத்துக்களை அங்கே இட்டு நிரப்பிப் பொருள்படுமாறு பூர்த்தி செய்ய இயலும் ? என்றும் ஆராய்ந்தேன். இதற்கு முன்னிருந்த ஆராய்ச்சியாளர்கள் நான் எடுத்துக் கொண்ட இடைவெளிகளில் இட்டு நிரப்பியுள்ள எழுத்துக்களைக் கூர்ந்து நோக்கினேன் ; அவ்வளவு எழுத்துக்களை அவ்விடைவெளியில் இட்டு எழுத முடியுமா ? என்று ஒப்பிட்டுப் பார்த்தேன். முன்பு ஆய்வாளர்கள் எபிகிராபியா

இண்டிகா தொகுதிகளில் இவ் விடைவெளிப் பகுதிகளில் இட்டு நிரப்பியுள்ள எழுத்துக்களை ஒரு சில பகுதிகளில் சரியாக அவ்விடைப்பட்ட பகுதிகளில் இட்டு நிரப்பவே முடியாது என்பதனைக் கண்டு வியந்தேன். எனவே இக் கல்வெட்டினை மீண்டும் ஆராயவேண்டிய நிலைக்கு உந்தப் பட்டேன். ஆகையால் இம் முழுக்கல்வெட்டுப் பெரிதும் வேறுபட்ட கோணத்தில் இங்கு ஆராயப்படுகிறது. கல் வெட்டில் உள்ள இடைவெளி அளவு, விடுபட்ட எழுத் துக்கள், உண்மைப்பொருள் ஆகியவற்றை மனத்திற் கொண்டு, பல சிக்கல்களை ஆராய்ந்து முடிவுகட்டும் முகத் தான் இக்கட்டுரை தொடர்கிறது.

### சாசனத்தில் உள்ள சர்ச்சைக்குரிய பகுதி.

பல்லவராயன்பேட்டைச் சாசனத்தில், எழுத்துக்கள் இட்டு நிரப்பப்பட வேண்டிய ஆராய்ச்சிக்குரிய வரிகள் பின்வருமாறு:

**வரி 7:** க்குங் கடவருமா யெல்லா வரிசைகளும் முன் னேவல் உள்ளிட்டு முதலிகள் பெறக் கடவ ஏற்றங்களும் பெற்று நின்று, பெரியதேவர் துஞ்சி அருளிப் பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண் டும் திருநக்ஷத்திரமா

**வரி 8:** கையால் ஆயிரத்தளிப்படை வீடும் விட்டுப் போத வேண்டிப் போதுகிற இடத்துத் திருவந்தப்புர மும் ... ஆரங்களும் உள்ளி(ட்)டன எல்லாம் பரிகரித்துக் (கூட்டி)க் கொடுபோந்து ராஜ

**வரி 9:** (ரா)ஜபுர(த்)திலே இருந்த இட(த்துக்கு) (சூழ்ந்)த இடங் .... யாறு மிகுதிப் ...... (ர)த்து உடன்

கூட்டத்த(ர) ........ (ரா)லும் எல்லாக் (கலக்க) ... ... (சோழ ராஜ்யத்துக்கு ..... யே இருப் பார்) காரண வருட .....

வரி 10 : வேண்டிப்புறத்து எல்லா அடைவு கேடுகளும் வ(ராத) இடத்து இங் .......லும் பரிகரித்து இவ் ...... பெரியதேவர் எழுந்தரு(ளி) .... நாளிலே திருஅபி (ஷேகத்தக்)கு உரிய பிள்ளைகள் இன் றியே ... (ருக்கி)

வரி 11 : றபடியை பார்த்து (மு)ன்னுளிலே காரியம் இருந்த படி வி ..... (செ)ய்து கங்கை கொ(ண்)ட சோழ புர ..... தருளி இரு(க்)கிற பிள்ளைகளை .. யாணம் பண்ணு .... டையார் விக்கிரமசோழ தேவர் பேரனுர்

வரி 12 : நெறியுடைப்பெருமா திருமகனுர் எதிரிலிப்பெரு மாளைப் பெரி ...... (சி) அருளின நாளிலே மண்டைகவிபிபித்து ... தார் ஆனவாறே இவ ரைத் திருஅபி(ஷேகம் பண்ணு) விக்கக் கடவரா (க)... து நாலாந் திருநக்ஷத்திரத்திலே ராஜாதி ராஜ தேவர் எ

வரி 13 : ன்று திருஆ(அ)பிஷேகம் பண்ணுவித்து உடன் கூட்டமும் நாடும் ஒன்றுபட்டுச் செல்லும்படி பண்ணி (வித்து அருளி)னுர் ......

இப்பகுதியில் இடைவெளி உள்ள பகுதிகளில் சாச னம் எழுதப்பட்டுள்ள சுவரில் இன்று எழுத்துக்கள் காணப்படவில்லை.

## பொதுவாகப் புலனாகும் செய்தி

சாசனத்தில் உள்ள சிதைந்த பகுதிகளில் எழுத்துக்களை இட்டு நிரப்புமுன் பொதுவாகப் பின்வரும் செய்திகள் அறியப்பெறுகின்றன. இராசராசனின் பிள்ளைகள் ஒரு வயதும் இரு வயதும் உடையவராக இருந்தமை; அந்தப்புர மகளிரையும் மக்களையும் ஆயிரத்தளி அரண்மனையில் இருந்து இராசராசபுரத்திற்குக் கொணர்ந்தமை; நாட்டாலும், உடன் கூட்டத்தாலும் ஏற்பட்டிருந்த கலக்கங்கள் அனைத்தையும் நீக்கியமை; இராசராசதேவர் எழுந்தருளியமை; அரசனாக ஆக்குவதற்காக விசாரணைகள் செய்து, 'எதிரிலிப்பெருமாள்' என்பவனைத் தேர்ந்தெடுத்தமை, இவனுக்கு மண்டைகவிப்பித்து, 'இராசாதிராசன்' என்னும் அபிஷேகப் பெயர் சூட்டியமை முதலியவை இச்சாசனத்தினால் அறியப்பெறும் செய்திகளாகும். இப்பணிகளில், திருச்சிற்றம்பலமுடையான் ஆன பெருமான்நம்பிப் பல்லவரையன் பங்கேற்றமையும் இதனுள் பகரப்பட்டுள்ளது. சாசனத்தில் காணப்பெறும் இடைவெளிகள், எழுத்துகள் இட்டு நிரப்பப்பட வேண்டியவைகளாக உள்ளமையால் தொடர் வாரியாக ஆராய்வோம்.

## ஏழாம் வரியும் எண்ணவேண்டியவையும்

"க்குங் கடவருமாயெல்லா வரிசைகளும் முன்னேவல் உள்ளிட்டு முதலிகள் பெறக்கடவ ஏற்றங்களும் பெற்று நின்று பெரியதேவர் துஞ்சி அருளிப் பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திரமா" (கையால்) என்பது 7-ஆம் வரி. இவ்வரியில் 1. இராசராசன் எப்

போது துஞ்சினன்? 2. இராசராசனின் பிள்ளைகள் யாவர்? 3. அவர்கட்கு ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திரமாக இருந்தது எப்போது? என்னும் வினக்களுக்கு அமைந்துள்ள விடைகளை அறிதல் வேண்டும்.

## இராசராசன் எப்போது துஞ்சினன்?

இச் சாசனம், இராசாதிராசனின் 8-ஆம் ஆட்சி ஆண்டுக்குரியது. இதனுள் இராசராசன் துஞ்சிய (இறந்த) வகைக் கூறப்பட்டுள்ளான் என்று இரண்டு இடங்களை ஆராய்ச்சியாளர் குறிப்பர். முதலாவது 'பெரியதேவர் துஞ்சி' என்று இவ் ஏழாம் வரியில் காணப்படுவது. இரண்டாவது வரலாற்று ஆய்வாளரால் எழுத்து இட்டு நிரப்பி உருவாக்கப்பெற்ற, 'பெரியதேவர் துஞ்சி அருளிய நாளிலே' என்னும் 12-ஆவது வரியில் உள்ள சொற்றொடர் இவ்விரு தொடர்களையும் ஆதாரமாகக்கொண்டு, "இராசாதிராசனுக்கு முடிசூட்டி அந்நாளிலேயே இராசராசன் இறந்தான்" என்று முடிவு கட்டினர்.

## பத்தாம் வரியில் பகரப்படும் செய்தி

ஏழாம் வரி 'பெரியதேவர் துஞ்சி' எனக் கூறுகிறது.

"வேண்டிப்புறத்து எல்லா அடைவு கேடுகளும் வராதவிடத்து இங்கல்களும் பரிகரித்து இவ் . . . . . . பெரிய
1 2 3 4 5 6
தேவர் எழுந்தருளிய நாளிலே" என்பது இச்சாசனத்தின் பத்தாம் வரியின் ஒரு பகுதி[2].

---

[2] இடைவெளிக்குமுன் 'வ்' என்னும் எழுத்து இருப்பதாக E. I. 21-ஆம் தொகுதியில் உள்ளது. இந்நாளிலும் 'வ்' இருந்ததை நான் நேரில் கண்டேன்.

'இவ் ...... பெரியதேவர் எழுந்தருளின' என்னும் பகுதியில் இடைவெளியில் உள்ள எழுத்துக்களை நிரப்புதல் வேண்டும். அப்பொழுதுதான் ஏழாவது வரியின் பொருளை அறிய முடியும்.

சாசனத்தின் இவ்வரி, மூலச்சுவரில் இருந்து தூணில் ஏறி இறங்குகிறது. அத்தூணில் ஏற்பட்ட சிதைவு காரணமாக இவ்வரியில் இவ்விடைவெளி அமைந்துள்ளது.

| மூலச்சுவர் | | தூண் | | | மூலச் சுவர் |
|---|---|---|---|---|---|
| | | பக்கம் 1 7.5 செ மீ. | பக்கம் 2 15 செ. மீ. | பக்கம் 3 12·5 செ.மீ. | |
| 10-ஆவது வரி | இவ் | . . 12 | . . . . 1234 | பெரிய | தேவர் |

எபிகிராபியா இண்டிகா 21-ஆம் தொகுதியில் மூலச்சுவரில் அமைந்த இவ் என்னும் எழுத்துக்களும், தூணின் மூன்றும் பக்கத்தில் உள்ள 'பெரிய' என்னும் எழுத்துக்களும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இதே பகுதியில் கீழ்ப்புறம் அமைந்துள்ள மற்ற வரிகளுடன் ஒப்பிடும்போது 7.5 செ. மீ. உள்ள முதல் பக்கத்தில் இரண்டு எழுத்துக்களும், 15 செ. மீ. உள்ள இரண்டாம் பக்கத்தில் நான்கு எழுத்துக்களும் ஆக ஆறு எழுத்துக்கள்தான் உள்ளன. இதேபோலப் பத்தாவது வரியிலும் இந்தப் பகுதியில் ஆறு எழுத்துக்களே இருக்க வேண்டும். எனவே இத்தொடரை, இவ் வித மாகப் பெரியதேவர்

1 2     3 4 5 6

என்று நிரப்பலாம். ஆகவே 10-ஆவது வரி "இவ்விதமாகப் பெரியதேவர் எழுந்தருளின நாளிலே" என்றுசொல்லுவது அறியற்பாலது.

## இறந்தவர் எழுந்தது எப்படி?

வரி 7-இனை ஆதாரமாகக்கொண்டு, 'பெரியதேவர் இறந்தார்' என்னும் முடிவுக்கு ஆய்வாளர் வந்தனர். 8-ஆம் வரி முதல் 10-ஆம் வரி வரை சோழ நாட்டில் நடந்த கலக்கம், அரண்மனை மாற்றம் முதலிய செய்திகள் சொல்லப்படுகின்றன. பத்தாம் வரி, "இன்னல்களும் பரிகரித்து இவ்விதமாகப் பெரியதேவர் எழுந்தருளின நாளிலே பட்டத்துக்கு உரியவன் ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டான்" என்று கூறுகிறது. ஏழாம் வரியில் இறந்துபோன இராசராசன் பத்தாம் வரியில் பிழைத்துக்கொண்டது எப்படி?

'இவ்விதமாகப் பெரியதேவர் எழுந்தருளின நாளிலே என்கிறது பத்தாம் வரி. **எவ்விதமாகப் பெரியதேவர் எழுந்தருளினர்?**

1. அகத்தும் புறத்தும் விளைந்திருந்த எல்லா அடைவு கேடுகளும் வராத இடத்தை அடைந்தார். 2. இன்னல்களை எல்லாம் நீக்கினர். 3. பின் பெரியதேவர் எழுந்தருளினர்.

**எழுந்தருளிய இடம் யாது? எவ்வாறு கேடுகளில்லாத இடத்தை அடைந்தார்?**

1. ஆயிரத்தளி அரண்மனையிலிருந்து இராசராசபுரம் அரண்மனையை அடைந்தார்.

2. மனைவியர் பரிவாரங்கள் உள்ளிட்டன எல்லாவற்றையும் கொண்டு சென்று அங்குத் தங்கினர். தங்கக்

காரணம் 'தன் மக்களுக்கு ஒன்றும் இரண்டும் வயதாக இருந்தமை' என்பது 8, 9-ஆம் வரிகளில் கூறப்பட்டுள்ள செய்தியாகும்.

இன்னல்களை எல்லாம் நீக்கியபின் இவ்விதமாக இராசராசன் எழுந்தருளிய நாளிலே என்று சொன்னால், புதல்வர் குழவிகளாதலால் ஆயிரத்தளியில் இருந்து இராசராசபுரம் வந்தமையும் இன்னல்களை நீக்கியமையும் எழுந்தருளிய நாளுக்கு முன்னர் நடந்தவைதாமே? உயிருடன் எழுந்தருளும் இராசராசன் இறந்தான் என்பது எங்ஙனம் பொருந்தும்?

## பெரியதேவர் இராசராச தேவர்

சாசனம், இரண்டாம் இராசராசனைப், 'பெரியதேவர் ராஜராஜதேவர்' 'பெரியதேவர் துஞ்சி அருளி' 'பெரிய தேவர்' ... அருளின நாளிலே' என்று குறிப்பிடுகிறது. இவற்றால் சாசனம் எழுதப்பட்ட இராசாதிராசனின் எட்டாம் ஆட்சியாண்டைப் பொறுத்தவரை (கி. பி. 1173-74 முன்) இராசராசன் இறந்தவன் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

இச் சாசனத்தில் இராசராசன், '**இராசராசதேவர்**' என்று தனித்துக்கூறப்படாமல், '**பெரியதேவர்**' என்றே, '**பெரியதேவர் இராஜராஜதேவர்**' என்றேதான் கூறப்பட்டுள்ளான். பெரியதேவர் என்பது இறந்த வேந்தனைப் பெரு மரியாதையுடன் குறிக்கும் சொற்றொடராகும். எனவே இச் சாசனம் '**காலஞ்சென்ற இராசராசன்**' என்று குறிப்பிடுதலை நோக்கமாகக் கொண்டது என்பது பெறப்படும்.

## துஞ்சியால் வரும் சிக்கல்கள்

ஏழாவது வரியில் உள்ள துஞ்சி ஒன்றுதான் சாசனத்தில் வெளிப்படையாக உள்ளது. இவ்வொரு துஞ்சியை அடிப்படையாகக்கொண்டு இராசராசன் இறந்தான் என்ற முடிவுக்கு வந்தால்,

1. அரண்மனை மாற்றம், கலக்கம் நீக்கியமை முதலியன இராசராசன் இறந்தபின் நடந்த நிகழ்ச்சிகள் ஆகிவிடும்.

2. இறந்த இராசராசன் எல்லா இன்னல்களும் நீக்கப்பட்டபின் சோழ அரண்மனையில் எழுந்தருளி ஆராய்ச்சி செய்தவன் ஆகவேண்டும்.

3. இராசராசன் எதிரிலிப்பெருமானைத் தேர்ந்தெடுத்து முடிசூட்டி மீண்டும் அதே நாளில் இறக்கும் காரியம் நடக்கவேண்டும்.

இறந்து, பிழைத்து, மீண்டும் இறக்கும் இவ் வேடிக்கையான செய்திகளுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வினாவிற்கு விடை தருதல் வேண்டும். இக் கல்வெட்டில் ஆராய்ச்சியாளர் கண்டபடி கி. பி. 1163-இல் இராசராசன் இறந்தான் என்றால்,

அ. அவனுடைய கல்வெட்டுக்கள் 1163-க்குப் பின்னும் தொண்டை மண்டலத்திலும், சோழ நாட்டிலும் காணப்படுவது எப்படி ?

ஆ. பல ஆண்டுகள் இருந்தான் என்பதனை உணர்த்தும் கல்வெட்டுக்கள் ஆந்திராவில் இருப்பது ஏன் ?

இ. மூன்றும் குலோத்துங்கனின் குறுக்கைக் கல்வெட்டு[3] "இரண்டாம் இராசராசன் 1163-க்கு மேலும் 19-ஆவது ஆண்டிலும் ஆண்டான்" என்று கூறும்போது கி. பி. 1164-இல் உயிருடன் இருந்தான் என்று கூறும்போது—எவ்வாறு இறந்தான் என்று கொள்ளலாம் ? என்னும் வினாக்களுக்குச் சரியான விடைகளைத் தருதல் வேண்டும்.

## இராசாதிராசன் காலம் பற்றியது

இராசராசன் கி. பி. 1163-க்குப் பின்னரும் உயிருடன் இருந்தான் என்று திட்டவட்டமாக அறியப்படுவதனால், இச்சாசனத்தின் ஏழாவது வரியில் 'பெரியதேவர் இராச ராசதேவர் துஞ்சி' என்று கூறப்பட்டுள்ளது, இராசாதி ராசனின் 8-ஆம் ஆட்சியாண்டை (கி. பி. 1173 — 74) நோக்கிக் கூறப்பட்ட செய்தி என்பது புலனாகும். அதாவது இராசாதிராசனின் 8-ஆம் ஆட்சி ஆண்டுக்கு முன்னே இறந்துபோன—காலஞ்சென்ற இராசராசன் (LATE RAJA RAJA) என்று பொருள்கொள்ளுதல் வேண்டும்.

இக்கல்வெட்டில், 'துஞ்சிய பெரியதேவர்' என்னும் (பெயரெச்சத்) தொடரே 'பெரியதேவர் துஞ்சி' என்னும் (வினையெச்சத்) தொடராக எழுதுவோனால் பிழைபட எழுதப்பட்டுள்ளது என்பது புலனாகும்.

## பிள்ளைகளையுடைய பெரியதேவர்

பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திரமா (கையால்) என்பது ஏழாம் வரியின் இறுதிப் பகுதி.

---

3. Ins No. 239 of 1917.

பெரியதேவர் பிள்ளைகளையுடையவர் என்று இப் பகுதியில் கூறப்பட்டுள்ளார். 'பிள்ளைகள்' என்னும் சொல் பொதுவாக ஆணையும், பெண்ணையும் குறிக்கும் சொல். எனவேதான் வரலாற்றுராய்ச்சியாளர், "இப் பிள்ளைகள் பெண்மக்கள்; எனவே இராசாதிராசனுக்குப் பட்டம் சூட்டப்பட்டது" என்ற முடிவுக்கும் வந்தனர்.[4]

பிள்ளைகள் என்பது ஆணையும், பெண்ணையும் குறிக்கு மேனும் இங்கு ஆண் மக்களையே குறிப்பதாகும். ஆண், பெண் இருபாலையும் குறிக்கவேண்டிய சொல், ஒரு பாலினை உணர்த்தாமல் ஒருபாலை மட்டும் குறிப்பாக உணர்த்துமா ஞல் அது ஒன்றெழி பொதுச்சொல் என்று இலக்கண நூல்களுள் கூறப்படும். வினைப்பயனிலை நோக்கி நாம் குறிப் பாகப் பொருள் உணர்வது இங்கு அவசியம். சாசனத்தில், "மன்னன் அரசுகட்டில் ஏறத்தக்க பிள்ளைகளை (மக்களை)த் தேர்ந்தெடுக்க நினைக்கிறன். வயதோ அரசு ஏற்றற்கு ஏலாத சிறுவயது—இளங் குழவிகள். எனவே அவ்வரச குழவிகட்கு வயது காரணமாக முடிசூட்ட இயலாது போகிறது," என்பது கூறப்பட்டுள்ளது. அரசராக வரும் தகுதி படைத்தவர் ஆண்மக்கள்தான். எனவே இங்குப் பிள்ளைகள் என்பது ஆண்மகனையே குறிக்கும் சொல் என்பது புலனுகும்.

## இராசராசனுக்குப் பிள்ளைகள் இருவர்

இராசராசனுக்கு உரிய ஆண் பிள்ளைகள் இருவரா? பலரா? என்பதற்கும் இத்தொடர் விடை இயம்புகிறது.

---

4. Quarterly Journal of Mythic Society Volume 19, pp. 62 and 63.

'பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திரமாகை யால்' என்பது இப்பகுதி.

இராசராசனின் பிள்ளைகளில் ஒருவன் ஒரு வயதுடை யவன். மற்றொருவன் இருவயதுடையவன். ஆதலால் இவர்களை அரசமகளிரோடு இராசராசபுரத்து அரண்மனைக் குக் கொண்டுசென்று பாதுகாத்தனர் என்று தொடர்கிறது இச்சாசனம். இதனுள் இராசராசனின் மக்களில் ஒருவன் ஒரு வயதுடையவன்; இன்னொருவன் இரு வயதினன் என் பது கூறப்பட்டுள்ளது. எனவே இராசராசனின் மக்கள் இருவர் என்பது புலனாகிறதன்றோ? மூன்றாவது ஆண் மகன் இருந்திருப்பின் அவன் வயதும் இக் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும் என்பது வெள்ளிடைமலை. இம் மக்களுள் ஒருவன் மூன்றாம் குலோத்துங்கன் (1178-1216) ஆவான்.[5]

## பிள்ளைகளுக்கு இவ்வயதானது எப்போது?

"பிள்ளைகள் ஒரு வயதும் இரண்டு வயதும் உள்ளவ ராக இருந்தனர். எனவே அவர்கள் ஆயிரத்தளி அரண்

5. மூன்றாம் குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தி புதுக் கோட்டை மாவட்டத்தில் உள்ள சேரனூர், குடுமியான்மலை என் னும் இரண்டே ஊர்களில் மட்டும் காணப்படுகிறது. இம் மெய்க் கீர்த்திப் 'புயல் வாய்த்து மண் வளர' என்று தொடங்குவதாகும். இதனுள், 'தரணிகொள் திருத்தாதை இராசராசீச்சுரத்தார்க்குக் காரணச் சிறந்த கோயில் அணிதிகழ்பொன் வேய்ந்தருளி' என் றுள்ளது. இப்பகுதியால் தாராசுரம் கோயிலை எடுப்பித்த இரண் டாம் இராசராசனை-தன் தாதை அதாவது தந்தை என்று மூன்றும் குலோத்துங்க சோழன் குறித்துக் கொள்வது அறியப்பெறும். எனவே இராசராசனின் இரு குழவிகளில் ஒருவன் குலோத்துங்கன் ஆவான் என்பதனை உணரலாம். (புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுக்கள், எண். 163 and 166)

மனையிலிருந்து கூட்டிச் செல்லப்பெற்றனர். இவ் வரச குமரருடன் அரண்மனை மகளிரும், அந்தப்புரப் பரிவாரங் களும் உடன்கொண்டு செல்லப்பெற்றனர். இராசராசபுர (தாராசுர)த்தில் இருந்த புது அரண்மனையில் பல்லவரைய னின் பாதுகாப்பில் வைக்கப்பெற்றனர்" என்று 8-ஆம் வரி கூறுகிறது. எனவே இராசராசபுரம் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பொழுதில்தான் பிள்ளைகள் ஒரு வயதும் இரு வயதும் உடையவராக இருந்தனர் என் பதனை அறியலாம். ஆனால் இராசாதிராசனுக்கு முடி சூட்டிய நாளில் இராசராசனின் மக்கள் ஒன்றும் இரண்டும் வயதுடையவர் என்று வரலாற்றுய்வாளர்கள் எழுதி யுள்ளனர். நாம் இக்கருத்தை ஆராய்வோம்.

1. சாசனத்தில் ஒன்பதாம் வரி சிதைந்துள்ளது. இவ்வரியில் அரண்மனையில் அனைவரும் பாதுகாக்கப்பட்ட பின்னல் நடந்த நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. சோழ இராச்சியத்தில், நிலவிய குழப்பங்களால் நாடு கலக்கமுற் றது. இக் குழப்பங்களில், (அ) அரச குடும்பத்தினரும் (ஆ) உடன்கூட்டம் எனப்படும் உயர்மட்ட அரசியல் அதிகாரிகளும் (இ) வெளிப்புறத்தினரும் பங்கேற்றனர். இராசராசனின் நம்பிக்கைக்குரிய பல்லவரையனும் பிறரும் அரச குடும்பத்தார், உயர்மட்ட அலுவலர் ஆகியோரின் செயல்களை முயன்று நீக்கினர்; வெளிப்பகைகளையும் நீக்கி னர் என்று கூறப்பட்டுள்ளது. (இக்குழப்பம், அரசுரிமை பற்றியதாகலாம்).

2. 10-ஆவது வரி, 'உள்ளிருந்து விளைந்த துன்பங் களும் வெளியில் இருந்து விளைந்த துன்பங்களும் நீக்கப் பட்டன' என்று கூறுகிறது. (இத் துன்பங்களை நீக்கும்

செயல் பல ஆண்டுகள் எடுத்துக் கொண்டிருக்கும் என்பது வெளிப்படை). இவ்விதமாக எல்லாத் துன்பங்களும் நீக்கப்பெற்றுச் — சோழ நாட்டில் அமைதி நிலவிய நாளில் பெரியதேவர் எழுந்தருளினர்; சிறுவராக உள்ள தன் பிள்ளைகள் அரசேற்றற்குரிய பருவம் அடையாமையை நோக்கினர் என்று கூறுகிறது.

3. எனவே அரசேற்றற்குரிய ஒருவனை ஆராய்ந்து தேர்ந்தெடுக்கிறார்; மண்டை கவிப்பித்து அபிஷேகம் செய்கிறார் என 11, 12, 13-ஆம் வரிகளால் அறிகிறோம்.

இவ்வாறு சாசனத்தை ஊன்றிப் பார்க்கும்போது இராசாதிராசனுக்கு முடிசூட்டு விழா நடந்ததற்குப் பல ஆண்டுகட்கு முன்புதான் இராசராசனின் மக்கள் ஒரு வயதும் இரு வயதும் உடையவராக இருந்தனர் என்பது புலப்படும்.

## வரி 11 – 13-இல் அமைந்த செய்தி

மேற்கூறியவாறு, பிள்ளைகளைப் பாதுகாத்துக் கலக்கத்தை நீக்கியபின் இராசராசன் அரண்மனையிலிருந்து எழுந்தருளிச்செய்த காரியங்கள் 11, 12, 13-ஆம் வரிகளில் கூறப்பட்டுள்ளன. இப் பகுதி பல இட்டு நிரப்பப்பட்ட இடைவெளிகளை யுடையது. இப்பகுதியில், இராசாதிராசனுக்கு முடி சூட்டும் காலத்தில்,

(1) முடி சூடுவதற்குத் தக்கவர் இல்லை என்று அறிந்தமை, (2) தக்கவரை முன்னவர் முறைநெறிப்படி ஆராய்ந்தமை, (3) கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள அரச குமாரரைத் தருவித்தமை, (4) எதிரிலிப்பெருமானை (இராசாதிராசனை)த் தேர்ந்தெடுத்தமை, (5) இவனுக்கு

முடிசூட்டி அபிஷேகம் செய்வித்தமை என்னும் நிலைகளைக் காணலாம்.

**(சாசனத்தில் இப்பகுதியில் சில இடைவெளிகள் காணப்படுகின்றன. இடைவெளிகளில் எழுத்துக்கள் மறைந்தோ சிதைந்தோ உள்ளன. இடைவெளிகளை எழுத்திட்டு நிரப்பும்போது பின்பற்ற வேண்டிய விதிகள் 39-ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளன. அவற்றுடன் இடைவெளி அளவிற்கும், அங்கு எத்தனை எழுத்துக்களை எழுதலாம் என்பதற்கும் முக்கியத்துவம் தருதல் தலையாவதாகும்).**

## வரி 10-இன் வாசகம்

**வரி 10 :** இவ்வரி 'பெரியதேவர் எழுந்தரு(ளி) . . . .
1 2 3 4
நாளிலே திருஅபிஷேகத்துக்கு உரிய பிள்ளைகள் இன்றியே
. . . (ருக்கி)
1 2 3

**வரி 11 :** றபடியை " என்று எபிகிராபியா இண்டிகா 21-ஆம் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதே வரி "பெரியதேவர் எழுந்தரு (ளி) . . . . .
1 2 3 4 5
நாளிலே திருஅபிஷேகத்துக்கு உரிய பிள்ளைகள் இன்றியே
. . . . (ருக்கி) றபடியை " என்று எபிகிராபியா இண்டிகா
1 2 3 4
31-ஆம் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வரியினைப் 'பெரியதேவர் எழுந்தருளி இருக்கிற நாளிலே திருஅபிஷேகத்துக்கு உரிய பிள்ளைகள் இன்றியே இருக்கிற' என்று முழுமையாக நிரப்பலாம்.

## திருஅபிஷேகத்துக்குப் பிள்ளைகள் இல்லையா?

திருஅபிஷேகத்துக்கு உரிய பிள்ளைகளாக "இரண்டாம் இராசராசனின் மக்கள் இல்லை" எனச்சாசனம் குறிக்கிறது. 'திருவபிஷேகம்' என்பது எது? 'முடிசூட்டுவிழா' தான் திருவபிஷேகம் என்று கூறப்பெறும்.

இரண்டாம் இராசராசன் முறைப்படி தன்மகனையே இளவரசனுக்க நினைக்கிறான். ஆனால் அம்மக்கள் முடிசூடிக்கொள்வதற்குரிய பருவம் இல்லாதவர். எனவே தனக்குப்பின் முடிசூடிக்கொள்வதற்குத் தகுதியுடைய ஒருவனைத் தேடும் பணியில் (இராசராசபுரத்து அரண்மனையில் (உயிருடன்) எழுந்தருளியிருக்கிற நாளில்) இராசராசன் ஈடுபட்டான் என்பதனை இச்சாசனத் தொடர் காட்டுகிறது.

### வரி 11, 12-இன் வாசகநிலை

**வரி 11:** "ற படியை பார்த்து முன்னாளிலே காரியம் இருந்தபடி வி.....சய்து கங்கைகொண்ட சோழ
12345
புர.....தருளி இருக்கிற பிள்ளைகளை ..யாணம் பண்ணு
12345 12
....டையார் விக்கிரமசோழதேவர் பேரனார்
1234

**வரி 12:** நெறியுடைப்பெருமா(ள்) திருமகனார் எதிரிலிப்பெருமானை" என்பது எபிகிராபியா இண்டிகா 21-இல் வெளியிடப்பட்டுள்ள வாசகம்.

இதே வரிகள் (11) 'றபடியை பார்த்து முன்னாளிலே காரியம் இருந்தபடி வி.......(செ)சய்து கங்கைகொண்ட
1234567

சோழபுர . . . . தருளி இருக்கிற பிள்ளைகளை . . . .
1234 1234
யாணம் பண்ணு . . . . டையார் விக்கிரமசோழதேவர்
1234
பேரனுர் (12) நெறியுடைப்பெருமா(ள்) திருமகனுர் எதிரிலிப்பெருமாளை' என்று எபிகிராபியா இண்டிகா 31-ஆம் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வரிகளில் இடைவெளிப் புள்ளிகளில் வேறுபாடுகள் காணப்பட்டாலும்,

**வரி 11:** "றபடியைப்பார்த்து முன்னுளிலே காரியம் இருந்தபடி விண்ணப்பஞ்செய்து கங்கைகொண்டசோழ
1 2 3 4 5 6
புரத்திலே எழுந்தருளி இருக்கிற பிள்ளைகளை பிரயாணம்
1 2 3 4 5 6 7 1 2
பண்ணுவித்து உடையார் விக்கிரமசோழதேவர் பேரனுர்.
1 2 3 4

**வரி 12:** நெறியுடைப்பெருமா(ள்) திருமகனுர் எதிரிலிப்பெருமாளை" என்று எபிகிராபியா இண்டிகா தொகுதிகளில் ஒரேவிதமாக எழுத்துக்கள் இட்டு நிரப்பப் பட்டுள்ளன.

**விண்ணப்பமா? விசாரணையா?**

முதலாவதாக,

இருந்தபடி வி . . . . . . . சய்து" (எபி. இண். 31)
1234567
என்னும் இடைவெளியில் அமைந்துள்ள எழுத்துக்கள் யாவை? என்று நோக்குவோம். எழுத்துக்கள் இல்லாத இவ்விடைவெளியில் ஏழு எழுத்துக்களை இட்டு நிரப்பலாம். இப்பகுதி

இருந்தபடி விண்ணப்பஞ்செய்து
1 2 34 5 6
என்று எபிகிராபியா இண்டிகா 21-ஆம் தொகுதியில் நிரப்

பப்பட்டுள்ளது. இன்னும் ஓரெழுத்து நிரப்புவதற்கு இட மிருக்கிறது.

'விண்ணப்பஞ்செய்து' என்று நிரப்பினால், "பெருமான் நம்பிப் பல்லவரையன் திருவபிஷேகத்துக்கு உரிய பிள்ளை கள் இல்லாமல் இருத்தலைக் கண்டான்; பெரியதேவர் முன் னிலையில் 'முன்னுளில் காரியம் இருந்தபடி'பற்றி விண்ணப் பஞ் செய்தான்; உரியவன் ஒருவனைத் தேர்ந்தெடுத்தான்" என்னும் பொருள்கொள்ள நேரும். இப்பகுதியை,

இருந்தபடி விசாரணையுஞ்செய்து
1 2 3 4 5 6 7

என்று நிரப்பலாம். நேரில் சென்று ஆறு எழுத்துக் களையோ அல்லது நீட்டுவாக்கிலமையும் ஐந்து எழுத்துக் களையோதான் இப்பகுதியில் இட்டு நிரப்ப முடியும் என்ப தனைக் கண்டேன். எனவே

இருந்தபடி விசாரணைசெய்து
1 2 3 4 5

என்று நிரப்புவதே சாலப்பொருத்தமானது. இவ்வாறு நிரப்பினால், முன்னுளில் காரியம் இருந்தபடி பல விசாரணை களைப் புரிந்தபின், சோழ அரசனுக்கு ஏற்ற **பெருமையும், ஆளுமையும், உரிமையும்** உடையவன் ஒருவன் தேர்ந் தெடுக்கப்பட்டான் என்னும் பொருள் உருவாகும். திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்த்திரியார் 'விசாரணை' என்றே நிரப்பி யுள்ளார்.[6]

## இராசராசபுரம் நோக்கிப் பிரயாணம்

அடுத்த இடைவெளிப் பகுதி. கங்கைகொண்டசோழ புரம் எழுந்தருளி இருக்கிற பிள்ளைகளை . . . . யாணம்
1 2 3 4

6. The Colas, Vol. 2, Part 1, Page 91.

என்பதாகும். (எபி. இண். 31) இப்பகுதியில் நான்கு எழுத்துக்களை இட்டு நிரப்பலாம். எபிகிராபியா இண்டிகா 21-இல்

பிள்ளைகளை பிரயாணம்
1 2

என்று நிரப்பப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு எழுத்துக்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இதனைப்

பிள்ளைகளை யும்பிரயாணம்
1 2 3 4

என்றுதான் நிரப்பலாம். இவ்வாறு நிரப்பினால், "அரச குடும்பத்தினருள் ஒருவனாகிய எதிரிலிப்பெருமானும், இன்னும் சிலரும் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து பிரயாணம் செய்விக்கப்பெற்றனர்" என்பது புலப்படும். (கல்வெட்டு, கங்கைகொண்ட சோழபுரம் எழுந்தருளி இருக்கின்ற என மிகமரியாதை தோன்றக் குறிப்பதால், பிரயாணம் செய்விக்கப் பெற்றவருள் மாமன்னன் இராசராசனுடைய குமரரும் இருந்தமை பெறப்படும்).

## இவ்வரி இறுதி இயம்பும் செய்தி

11-ஆவது வரியின் இறுதிப் பகுதியும், அடுத்த வரியின் முதற்பகுதியும் பட்டத்துக்குரியவனைத் தேர்ந்தெடுக்கப் பெற்றவன் யார்? என எடுத்துரைக்கின்றன. பட்டத்துக்குரியவனைத் தேர்ந்தெடுக்கப் பெற்றவன் 'எதிரிலிப்பெருமாள்' என்னும் பெயரினன்; நெறியுடைப்பெருமாளின் மகன்; விக்கிரம சோழனின் பேரன் என்பது கூறப்பட்டுள்ளது.

## முன்னுளில் காரியம் இருந்தபடி

சாசனம் 'எதிரிலிப்பெருமாள்' என்பவனை 'முன்னுளிலே காரியம் இருந்தபடி விசாரணை செய்து' தேர்ந்தெடுத்தனர் என்று குறிக்கிறது.

முன்னாளில் காரியம் இருந்த முறை யாது ?

முதல் இராசேந்திரனின் மகன் வீரராசேந்திரசோழன் ஆவான்; இவன் மகன் அதிராசேந்திர சோழன்; இவ்வதி ராசேந்திரனுக்கு மகன் இல்லை. நோய்வாய்ப்பட்டிருந்த அதிராசேந்திரன் திடீரென்று இறந்தான். இவனுக்குப்பின் சோழநாடு அரசனின்றி அல்லல் உற்றது. நேர்வழி முறையில் அரசரில்லாமையால் சோழநாட்டு மக்கள் பெருந்துன்பம் உற்றனர். அப்பொழுது 'குலோத்துங்கன்' என்பவன், " பொன்னி ஆடை நன்னிலப் பாவை தனிமையும் தவிர வந்து புனிதத் திருமணி மகுடம் உரிமையிற் சூடி"னன். இக்குலோத்துங்கன் என்பவன் யார் ?

## பெண்வழி வந்தவன்

முதலாம் இராசராசசோழன் காலம் முதல், சோழர் குலத்தினர் வேங்கி நாட்டையாண்ட கீழைச் சாளுக்கியருடன் மணவினைத் தொடர்புடையவராக இருந்தனர்.

முதல் இராசராச சோழனின் மகள் இரண்டாம் குந்தவை என்பவள் ஆவாள். இராசராசன், இவளைச் சாளுக்கிய அரசன் விமலாதித்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். இவ்விருவரும் ஒரு மகனைப் பெற்றனர்; இராசராசநரேந்திரன் எனப் பாட்டன் பெயரை இட்டு அழைத்தனர்.

இவ்விராசராசநரேந்திரன் (கி. பி. 1022-62) உரிய பருவம் அடைந்தான். முதல் இராசராசனின் மகனும், இவனுடைய மாமனுமாகிய முதல் இராசேந்திரன் தன் மகள் அம்மங்காதேவியை இவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். இவ்விருவருக்கும் ஒரு மகன் பிறந்தான். இராசேந்திரன் எனப் பாட்டன் பெயரை இட்டு மகிழ்ந்

தனர் பெற்றோர். இச் சாளுக்கிய இராசேந்திரன் தன் மாமன் வீரராசேந்திரனால் பெரிதும் அன்பு செலுத்தப் பெற்றான்.

இவ்வாறு இருக்கும் காலத்தில் கி. பி. 1070-இல் வீர ராசேந்திர சோழன் இறந்தான். சில மாதங்கள் மட்டும் வீரராசேந்திரனுடைய மகன் அதிராசேந்திர சோழன் அரசனாக இருந்தான். இவனும் நோய்வாய்ப்பட்டு இறந் தான். இவன் மகன் இல்லாதவனாகையால் சோழநாடு அரசன் இன்றி அல்லற்பட்டது. அப்போது பெண்வழி யிலே வந்தவனும், வீரராசேந்திரனின் தங்கை மகனுமான, 'இராசேந்திரன்' சோழநாட்டரசனானான். இவனே 'முதற் குலோத்துங்கன்' என்றமைகிறது சோழர் வரலாறு.[7]

இரண்டாம் இராசராசன் தன் மக்கள் அரசு பொறுப் பேற்றற்கு ஏலாச் சிறுவர்கள் என்பதனை உணர்கிறான். சோழப் பேரரசு முன்பு ஒருகால் வாரிசின்றித் தவித்தபோது முன்னாளிலே என்ன செய்தனர்? என்று விசாரணை செய் கிறான் இரண்டாம் இராசராசன்.

"அக்கால மன்னனி (வீரராசேந்திரனி)ன் சகோதரி (அம்மங்காதேவி)யின் மகன் (குலோத்துங்கன்) அரசனாக ஆக்கப்பட்டான்" என்பதனை ஆராய்ந்து அறிகிறான்.

முன்னவர் வழியைத் தன் காலத்திலும் செயல்படுத்த நினைக்கிறான். தன் சகோதரியாகிய 'நெறியுடைபெருமா' வின் மகன் எதிரிலிப்பெருமாளை அரசனாக்குகிறான் என்ப தனைத்தான், '‘முன்னாளிலே காரியம் இருந்தபடி விசாரணை செய்து" என்னும் கல்வெட்டுத் தொடர் உறுதி செய்கிறது.

---

7. மணவினைத் தொடர்புபற்றிய பட்டியலைச் சேர்க்கை எண் 2-இல் காண்க. இக்காலம்பற்றிய விவரங்களைச் சேர்க்கை எண் 3-இல் காண்க.

## எதிரிலிப்பெருமான் யார்?

'எதிரிலிப்பெருமாள்' என்பவன் இராசாதிராசன் என்னும் அபிஷேக நாமம் பெற்று இராசராசனுக்குப் பின்னர் சோழநாட்டை ஆண்டவன். இவன் "விக்கிரமசோழனின் பேரனார்; நெறியுடைப்பெருமா திருமகனார்" என்று இச் சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ளான்.

## மகன் வழியினனா? மகள் வழியினனா?

வரலாற்று அறிஞர் பலர், 'விக்கிரம சோழனின் மக்களுள் ஒருவன் நெறியுடைப்பெருமாள்; நெறியுடைப் பெருமானின் மகன் எதிரிலிப்பெருமாள்' என்று கருதுகின்றனர். 'நெறியுடைப்பெருமா'வை ஆண் என்று வரலாற்று அறிஞர் கருதுவதற்குக் காரணம் என்ன? என்பது புலனாகவில்லை. ஆனால் நீலகண்ட சாஸ்த்திரியாரவர்கள், நெறியுடைப்பெருமா ஒரு சமயம் பெண்ணாகவும் இருக்கலாம் என்ற ஐயத்தையும் தம் சோழர் வரலாற்றில் எழுப்பியுள்ளார்.[8] இதனால் நெறியுடைப்பெருமா பெண்ணாகவும் இருக்கலாம் என்னும் கருத்து வலிமை பெறும்.

## இராசராசனின் சகோதரி

பல்லவராயன்பேட்டைச் சாசனத்தில் 'நெறியுடைப் பெருமா' என்றுதான் இருக்கிறது. 'ள்' என்ற எழுத்து இல்லை. 'நெறியுடைப்பெருமா' என்பது ஒரு பெண்ணின் பெயர் என்பது இச்சொல் வாயிலாகவே பெறப்படும். 'பெருமாள்' என்பதுதான் 'பெருமா' என்றுள்ளது என

---

8. The colas, தொகுதி 2, பகுதி 1, பக்கம் 92; பெண்ணே என்பது 95-ஆம் பக்கத்திலுள்ளது. Also see, History of Tamilnadu by என். சுப்பிரமணியம், பக்கம் 240.

வாதிடலாம். 'பெருமாள்' என்பது ஆண் பெண் என்னும் இருபாலரையும் குறிக்கும் பொதுச்சொல். பெருமாள் என்பது பெண்ணையும் குறித்ததை லெக்ஸிகனால் அறியலாம்.

## விக்கிரமசோழன் குறிக்கப்பெற்றதேன் ?

'எதிரிலிப்பெருமாள்' விக்கிரமசோழனுடைய பேரன் என இச்சாசனம் கூறுகிறது. (பேரன் என்பதற்கு இங்குக் கொள்ளுப்பேரன் என்று பொருள் கொள்ள வேண்டும்).

இராசராசனுக்குப் பின்னால் யார் அரசேற்பது ? என்பதுபற்றிச் சோழ நாட்டில் பல கருத்துக்கள் நிலவின. சோழநாட்டு அரசியல் அதிகாரிகளும், அரச குடும்பத்தினரும் கருத்து வேறுபாடுடையராக இலங்கினர். எதிரிலிப் பெருமாளைத் தேர்ந்தெடுத்து அரசனாக்கி நாடும் கூட்டமும் ஒன்றுபட்டுச் செல்லும்படி செய்தது என்பது இச்சாசன வாயிலாக அறியப்படுகிறது. இராசாதிராசனாகப் பெயர் பெற்ற எதிரிலிப்பெருமாள்தான் அரசனாக ஆவதற்குத்தகுந்தவன். அரச மரபுக்குருதி (Royal Blood) அவனுடலில் ஓடுவது என்பதனை உணர்த்துவதற்காக விக்கிரமசோழனுடன் அமைந்த தொடர்பு கூறப்படுகிறது எனலாம்.[9]

---

9. நெறியுடைப்பெருமாவின் கணவன், 'ஞானகுணசேகரன் என்றும், வல்லோரையன் என்றும் அழைக்கப்பெற்றவன் ; பழுவேட்டரையர் இனத்தினன் ; கருவூரில் இருந்த சிற்றரசன் ; மனைவியைக் கைவிட்டு வேங்கிநாட்டு மங்கைபால் மாறாக்காதல் கொண்டு வேங்கிநாடு சென்று உயிர் நீத்தவன்' என்று சுவடியில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் கல்வெட்டில் நெறியுடைப்பெருமாவின் கணவனின் பெயர் கூறப்படவில்லை. கல்வெட்டின் நோக்கம், நெறியுடைப்பெருமாவுக்கும் விக்கிரமசோழனுக்கும் குருதிவழியமையும் அரசமரபுத் தொடர்பு கூறுவது. பிற விவரங்கள் கூறுதலன்று. எனவே இச்சாசனத்தில் கணவன் பெயர் கூறப்பெறவில்லை எனலாம்.

## விக்கிரமசோழனின் கொள்ளுப்பேரன்

பேரன் என்னும் சொல் மகனின் மகனையும், மகளின் மகனையும் குறிக்கும் சொல்லாகும். இச்சாசனம், " உடையார் விக்கிரம சோழதேவர் பேரனார், நெறியுடைப்பெருமா திருமகனார் எதிரிலிப்பெருமாள் " என்று இராசாதிராசனைக் குறிக்கிறது. இங்கு விக்கிரமசோழனின் பேரன் என்று எதிரிலிப் பெருமாள் குறிக்கப்பட்டுள்ளான். இத்தொடரில் அமைந்த பேரன் என்னும் சொல் கொள்ளுப் பேரனைத் தான் குறிப்பதாகும். முதல் குலோத்துங்கனின் மகனான விக்கிரமசோழன் கி. பி. 1093-இலிருந்து வேங்கி நாட்டில் சோழப்பிரதிநிதியாக இருந்தவன் ; கி. பி. 1118-இல் சோழ நாட்டு ஆட்சியை ஏற்றுக் கி. பி. 1135-இல் இறந்தவன். ஆனால் பிள்ளைப்பருவத்தினனான இராசாதிராசன் (விக்கிரம சோழனின் இளமைப் பருவத்திற்கு 73 வருடங்களுக்குப் பின்) கி. பி. 1166-இல் பட்டமேற்றவன்.

பல்லவராயன்பேட்டைச் சாசனம், திரு அபிஷேகத் துக்கு உரிய பிள்ளைகள் இல்லாமையை நோக்கிக், கங்கை கொண்ட சோழபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளை களுள் ஒருவனாகிய எதிரிலிப்பெருமாளைக் கொண்டுவந்த மையை உறுதியாக்குகிறது. இவ் வெதிரிலிப்பெருமாள் விக்கிரம சோழனின் மகளின் மகன் அல்லது மகனின் மகனாக இருப்பானானால் பிள்ளைப் பருவத்தினனாக இரான். வயது முதிர்ந்தவனாகவே இருப்பான்.

இராசாதிராசனுக்கு (எதிரிலிப்பெருமாளுக்கு) முடி சூட்டிய இரண்டாம் இராசராசனே விக்கிரமசோழனின் பேரன்தான். பேரனாகிய இவ்வரசன் மற்றொரு பேரனான எதிரிலிப்பெருமாளைத் தேர்ந்தெடுத்து அரசனாக்கினான்

என்பதைவிட கொள்ளுப் பேரனைத் தேர்ந்தெடுத்தான் என்பதே பொருத்தமாதலை, "விக்கிரமசோழனின் பேரனும் நெறியுடைப்பெருமாளின் மகனுமான எதிரிலிப்பெருமாள் என்று பொருள் கொண்டனர் பலரும். இதுவும் பொருத்த முடையதே. ஆனால் விக்கிரமசோழன் ஆட்சிக்கும் அவன் பேரனை இரண்டாம் இராசராசன் ஆட்சி இறுதிக்கும் இடைப்பட்ட காலநீட்சியை நோக்கும்போது விக்கிரம சோழனுடைய பேரன் மகனே எதிரிலி என்று கொள்வது மிகவும் ஏற்றதாகிறது. மேற்கூறிய நெறியுடைப்பெரு மாள் (எதிரிலியின் தந்தை) அச்சோழனுக்குத் தௌகித்ர னாக (மகளுக்கு மகனாக)க் கருத இடமுண்டு"[10] எனத் திரு. வி. ரா. இராமச்சந்திர தீக்ஷிதர் கூறியுள்ளமையாலும் அறியலாம்.

இத் தொடர்க்கு, விக்கிரம சோழனின் பேரனாராகிய நெறியுடைப்பெருமா என்பவளின் மகனாகிய எதிரிலிப் பெருமாள் என்று ஆற்றொழுக்கான பொருள் கூறலாம். முதல் இராசராசன் தன் அக்காளாகிய குந்தவை நாச்சி யாரை மரியாதை தோன்ற 'அக்கன்' என்னும் ஆண்பால் விகுதிப் பெயரால் குறித்துள்ளமை நோக்கற்பாலது. எனவே இங்கும் பேத்தியார், பேரனார் என மரியாதை காரணமாகக் குறிக்கப்பட்டுள்ளாள் எனலாம். எனவே எதிரிலிப்பெருமாள் விக்கிரம சோழனின் கொள்ளுப் பேரனே ஆவான்.

## தங்கையின் மகன் தரணி ஆளலாம்

முதல் குலோத்துங்க சோழன், சோழ நாட்டு மணி மகுடத்தை உரிமையுடன் சூடினன் என்று அவனுடைய

10. மூன்றாம் குலோத்துங்கசோழன், பக்கம், 145.

மெய்க்கீர்த்திக் கூறுகிறது. அதாவது தன் மாமனுடைய நாட்டாட்சிப் பொறுப்பு, நேர்வழி மைந்தரில்லாதபோது மருகற்குச் சேரக்கூடியது என்பது இச் சாசன வாயிலாக அறியப்பெறும் அக்கால அரசியல் முறை.

அதிராசேந்திரன் கி. பி. 1070 – 71-இல் இறந்தபின் சோழ நாடு அரசனின்றி அல்லலுற்றபோது முதலாம் இராசராசனின் பேத்தியும் வீரராசேந்திரனின் சகோதரியும் ஆன அம்மங்கைதேவியின் மகனை — குலோத்துங்கனை அரசனாக்கினர் அந்நாளினர். முன்னவர் வழிமுறைப் படியே பின்னும் ஒருநேரத்தில் அரசு வாரிசில்லா நிலையை அடைந்தபோது இரண்டாம் இராசராசன், விக்கிரமசோழ னின் பேத்தியும் தன் சகோதரியும் ஆன நெறியுடைப்பெரு மாவின் மகனை அதாவது எதிரிலிப்பெருமாளை அரசனாக்கி னன். 'முன்னுளிலே காரியம் இருந்தபடி விசாரணை செய்து' என்பதும் விக்கிரம சோழனுடைய தொடர்பு கூறப்பட்டுள்ளமையும் இச் செய்தியைக் கூறுவதேயாகும். இதனாலும் நெறியுடைப்பெருமா பெண் என்பது புல னாகும்.

இதுவரை கூறியவற்றால் "**எதிரிலிப்பெருமாள் என்பவன் விக்கிரமசோழனின் கொள்ளுப் பேரன் ; இவ் வெதிரிலிப்பெருமாள் இராசராசனின் சகோதரியாகிய 'நெறியுடைப்பெருமா' என்பவளின் மகன்**" என்ற செய்திகள் புலனாகும்.

**வரி 12-இன் வாசக நிலை**

**வரி 12 :** நெறியுடைப்பெருமா திருமகனார் எதிரிலிப் பெருமாளைப் பெரி . . . . . .(சி) அருளினநாளிலே மண்டை
1 2 3 4 5 6
கவிப்பித்து . . . தாரானவாறே இவரைத் திருஅபிஷேகம்
1 2 3

பண்ணுவிக்கக் கடவரா(க) . . . து நாலாந்திருநக்ஷத்திரத்
1 2 3
திலே ராஜாதிராஜதேவர் எ

வரி 13: ன்று திருஅபிஷேகம் பண்ணுவித்து, என்று எபிகிராபியா இண்டிகா 21-ஆம் தொகுதி பதிப்பித்துள்ளது.

இதே பகுதி,

வரி 12: நெறியுடைப்பெருமா திருமகனார் எதிரிலிப் பெருமாளைப் பெரி . . . . . . . . (சி) அருளின நாளிலே
1 2 3 4 5 6 7 8
மண்டை கவிப்பித்து . . . . தாரானவாறே இவரைத்
1 2 3 4
திருஅபிஷேகம் பண்ணிவிக்கக் கடவரா(க) . . . . . . . . து
1 2 3 4 5 6 7 8
நாலாம் திருநக்ஷத்திரத்திலே ராஜாதிராஜதேவர் எ

வரி 13: ன்று திருஅபிஷேகம் பண்ணுவித்து என்று எபிகிராபியா இண்டிகா தொகுதி 31-இல் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பகுதியை,

வரி 12: நெறியுடைப்பெருமா திருமகனார் எதிரிலிப் பெருமாளைப் பெரியதேவர் துஞ்(சி) அருளின நாளிலே
1 2 3 4 5 6 7
மண்டை கவிப்பித்துப் போந்தாரானவாறே இவரைத்
1 2 3 4 5
திருஅபிஷேகம் பண்ணுவிக்கக் கடவரா(க) நிச்செயித்து
1 2 3 4 5 6
நாலாந்திருநக்ஷத்திரத்திலே ராஜாதிராஜதேவர் எ

வரி 13: ன்று திருஅபிஷேகம் பண்ணுவித்து என்று எபிகிராபியா இண்டிகா 21-ஆம் தொகுதியில் உள்ள அடிக்குறிப்பு நிரப்புகிறது. இப்பகுதியில், உள்ள இடைவெளிகளை,

1. 'பெரியதேவர் துஞ்சி அருளின' என்று நிரப்புவதனுல் இராசாதிராசனுக்கு, இராசராசன் பட்டம் சூட்டினுன்; அன்றே இறந்தான்.

2. 'மண்டை கவிப்பித்துப் போந்தாரானவாறே' என்று நிரப்புவதனுல் முடிசூட்டினுன்; அன்றே இறந்தான்; இராசராசன் இறந்தபின் அவன் முடிசூட்டிப் போந்ததுபோலப் பின்பு திருஅபிஷேகம் செய்விக்கப்பெற்றது.

3. 'நிச்செயித்து நாலாம் திருநக்ஷத்திரத்திலே திருஅபிஷேகம் பண்ணுவித்து' என்று நிரப்புவதனுல், இராசராசன் மண்டை கவிப்பித்து இறந்த நான்கு வருடங்களுக்குப் பின்னுல் இராசாதிராசன் அரசனுனுன் என்ற கருத்துக்கள் உருவாகின்றன. புள்ளிகள் அற்ற இடைவெளிகளில் இட்டு நிரப்பப்பட்ட சொற்களை நாம் மீண்டும் நோக்குவோம்.

## இராசராசதேவர் இங்கும் துஞ்சினுரா?

வரி 12-இல் பெரி . . . . . . (சி) அருளின நாளிலே
1 2 3 4 5 6
என்னும் இடைவெளியில் பெரியதேவர் துஞ்சி என்னும்
1 2 3 4 5 6 7
எழுத்துக்களை இட்டு நிரப்பிப் பெரியதேவர் துஞ்சி அருளி என்று வாசித்துள்ளனர். இது பொருத்தமானதா? கல்வெட்டில் "அருளின" என்னும் எழுத்துக்களின்முன் சிறிது சிதைந்த 'ச'கரத்தின் ஒரு பகுதி காணப்படுகிறது. அது முழுமையாக "சி" என்று இல்லை. மேல்பாகம் உடைந்து உள்ளமையால் "ச" போன்று காட்சியளிக்கிறது. ஆகவே இப்பகுதியில் 'ச' என்னும் எழுத்துக்கு முன் ஏழு எழுத்துக்களுக்கு உரிய இடைவெளி இருக்கிறதா? என்று நோக்குதல் வேண்டும். 12-ஆம் வரி ஒரு

தூணில் ஏறி இறங்கும்போது இந்த இடைவெளி உண்டா கிறது. அப் பகுதியை நோக்குவோம். (புகைப் படம் காண்க.)

| | மூலச் சுவர் | தூணின் பகுதி பக்கம் 1 10 செ. மீ. | பக்கம் 2 15 செ. மீ. | | பக்கம் 3 7.5 செ. மீ. | மூலச் சுவர் |
|---|---|---|---|---|---|---|
| வரி 11 நிரப்பப் படாதது | படிவி | ... | . . | . ச | ய் து | |
| வரி 11 நிரப்பப்பட்டது | படிவி | சா ர | ணை | ெ ச | ய் து | |
| வரி 12 நிரப்பப் படாதது | பெரி | ... | . . | ச அரு | ளி ன | |
| வரி 12 நிரப்பப்பட்டது | பெரி | ய தெ | வ ரா | சி அரு | ளி ன | |
| வரி 13 | நாடு | மொ | ன் று | ப் ப | ட் டு | |
| வரி 14 | டிலே | ப ை | ட க | ளு ங் | கா ர | |
| வரி 15 | திலே | ந் து | ள ன் | னு ை | ட ய | |
| | | | 7 c. m. | 8 c. m. | | |

இப்பகுதியைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும்.

1. வரி 11-இல் 10 செ மீ. பகுதியில் 3 எழுத்துக்கள் நிரப்பப்பட்டுள்ளன. 15 செ. மீ. பகுதியில் 3 எழுத்துக்கள் நிரப்பப்பட்டுள்ளன. 7·5 செ. மீ. பகுதியில் இரண்டு எழுத்துக்கள் உள்ளன.

2. வரி 12 பற்றிப் பின்னர் நோக்குவோம்.

3. வரி 13-இல் 10 செ. மீ. பகுதியில் 3 எழுத்துக்கள் உள்ளன. 'ச' என்னும் எழுத்தின் கீழே உள்ள 'ப்' என்னும் எழுத்தின் முன்னால் இரண்டு எழுத்துக்களும் பின்னால் ஓரெழுத்தும் உள்ளன. 7·5 செ. மீ. பகுதியில் இரண்டு எழுத்துக்கள் உள்ளன.

4. வரி 14-இல் 10 செ.மீ. பகுதியில் இரண்டு எழுத்துக்கள் உள்ளன; 15 செ. மீ. பகுதியில் 4 எழுத்துக்கள் உள்ளன. 'ஞ' என்னும் எழுத்து 'ச' என்னும் எழுத்துக்கு நேராகக் கீழே அமைந்துள்ளது. 'ஞ'வின் முன் இரண்டும், பின் ஒன்றும் ஆக நான்கு எழுத்துக்கள் இவ்வரியில் உள்ளன. 7·5 செ. மீ. பகுதியில் மூன்று எழுத்துக்கள் உள்ளன.

5. வரி 15-இல் 'ந்து' என்னும் இரண்டு எழுத்துக்கள் 10 செ.மீ. பகுதியில் உள்ளன. 15 செ. மீ. பகுதியில் 4 எழுத்துக்கள் உள்ளன. 'ச' என்னும் எழுத்தின் கீழே 'னு' என்னும் எழுத்து உள்ளது. இதன் முன்னால் இரண்டும், பின்னால் ஒன்றுமாக நான்கு எழுத்துக்கள் உள்ளன. 7·5 செ.மீ. பகுதியில் இரண்டு எழுத்துக்கள் உள்ளன.

**சிந்திக்கவேண்டிய செய்திகள் சில**

இனிப் பிரச்சனைக்குரிய 12-ஆம் வரிக்கு வருவதன் முன் பின்வரும் செய்திகள் அறியத்தக்கன. இப்பகுதியில்,

1. சுவரிடைத் தூணின் முதல் பக்கமாகிய 10 செ. மீ. பகுதியில் இரண்டு எழுத்துக்கள்தான் எழுதப்படும். மிகமிக நெருக்கி எழுதினாலும்கூட மூன்று எழுத்துக்களைத் தான் எழுதலாம்.

2. 15 செ. மீ. பகுதியில் மொத்தம் ஐந்து அல்லது நான்கு எழுத்துக்களையே எழுதமுடியும். ஆறு எழுத்துக்களும் அகலவாக்கில் அமையாதனவானால் மிகவும் நெருக்கி எழுதலாம் (இதுவும் கடினமே).

3. 12-ஆம் வரியில் 'ச' என்னும் எழுத்து உடைந்து காணப்படுகிறது. இவ்வெழுத்தின் நேர்கீழே 'ப்', 'ளு', 'னு' என்னும் எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்களுக்கு முன்னர் உள்ள பகுதி 7 செ. மீ. அளவு உள்ளதாகும். 13, 14, 15-ஆம் வரிகளில் இவ் 7 செ. மீ. பகுதியில் இரண்டு எழுத்துக்கள்தான் காணப் படுகின்றன. இவ்விடைவெளியில் மூன்று எழுத்துக்களை எழுதுவது கடினம்; நான்கு எழுத்துக்களை எழுதவே முடியாது; எனவே 'ச'வின் முன்னும் இரண்டு அல்லது மூன்று எழுத்துக்களைத்தான் எழுத முடியும்.

**பெரியதேவர் துஞ்சியருளியா?**

12-ஆம் வரியின் இப்பகுதி

பெரிய__________________________ச அருளி

என்று காணப்படுகிறது. இப்பகுதி எபிகிராபியா இண்டிகா 21-ஆம் தொகுதியில்

| | மூலச்சுவர் | தூண் இடது 10 CM | தூண் முன் 15 CM | தூண் வலது 7.5 C.M | மூலச்சுவர் |
|---|---|---|---|---|---|



| | | | | | |
|---|---|---|---|---|---|
| [illegible] | படி வி | | ச | ய்து | கங்கை கொடசொ |
| [illegible] | ளேப்பெரி | | ᑊ அரு | ளின | நாளிலை மண்டைக |
| 13 | [illegible] ம் நாடு | | ப் ப | ட்டு | ச்செல்லும் படிப |
| 14 | [illegible] டி லெ | பை | டகளுங் | கார | ணவ ரா ஞரையுட |
| 15 | [illegible] கி லெ | ந்த | என்னு ை | டய | ரா ஜும் நான்பெ |

[illegible]ரி 1[illegible] இல், 'ச அரு 'வுக்குமுன், 'வர் துஞ்' என்னும் நான்கு எழுத்துக்களை எழுதவே முடியாது; 'வரா' என்றுதான் எழுதமுடியும். — பக்கம் 93 – 8 காண்க.

| பெரி | யதெ<br>1 2 3 | வர்துஞ்(சி) அரு<br>4 5 6 7 | ளின |
|---|---|---|---|

என்று நிரப்பப்பட்டுள்ளது.[11]

முதல் பக்கமான 10 செ.மீ. பகுதியில் மூன்று எழுத்துக்களைத்தான் எழுத முடியும். இரண்டாம் பக்கமான 15 செ. மீ. பகுதியில் 'சஅரு' என்பதன் முன் இரண்டு அல்லது மூன்று எழுத்துக்களைத்தான் எழுதமுடியும். ஆக மொத்தம் ஆறு எழுத்துக்களைத்தான் இட்டு நிரப்பலாம். ஆதலால், "பெரியதெவர் துஞ்சி" என்று ஏழு
1 2 3 4 5 6 7
எழுத்துக்களை எழுதவே இயலாது. மற்றும் இதில் 'வ' என்பதும் 'து' என்பதும் நீண்டவாக்கில் அமையும் எழுத்துக்கள். 'ச'(சி)யும் சற்றுப் பெரியதாக உள்ளது. இதனை, இவ் விடைவெளியில் உள்ள கல்வெட்டு எழுத்துக்களோடு ஒப்பிட்டு நோக்கினால் இவ்வாறு இட்டு நிரப்புதல் முடியவே முடியாது என்பது பெறப்படும்.[12] இவ்வாறு நிரப்பினால் இராசராசன் இராசாதிராசனுக்கு முடிசூட்டிய அன்றே இறந்தான் என்னும் பொருள் வரும். இறந்த இராசராசனுடைய கல்வெட்டுக்கள் பின்னும் பத்து வருடங்கள் கி. பி. 1172 வரை காணப்படுவது ஏன்? என்னும்

---

**11.** E. I. தொகுதி, 21-இல், 'ச'வுக்குமுன் 6 புள்ளிகளை இருப்பதாக வெளியிட்டு ஏழு எழுத்துக்களை நிரப்பியுள்ளது. தொகுதி 31-இல் 'ச' வுக்குமுன் எட்டு புள்ளிகளை வெளியிட்டு ஏதும் நிரப்பாமல் அமைந்துள்ளது.

**12.** மேலும் இச்சாசனத்தில் 7-ஆம் வரியில், மிக நெருக்கமாக எழுதப்பட்டும் 'வர்துஞ்' என்பது 10 செ. மீ. அளவில் எழுதப்பட்டுள்ளது. எனவே இங்கு 7 செ. மீ அளவில், 'வர்துஞ்' என்பதை எழுதவே முடியாது என்று துணியலாம்.

வினு எழுகிறது. இவ்வொரு கல்வெட்டில் இறந்து எனப் பொருள்படும் 'துஞ்சியை' எழுத முடியாதிருந்தும் இட்டமையால் பல ஆண்டுகளில் சோழநாடு, தொண்டைநாடு ஆந்திர நாடுகளில் வெட்டப்பட்ட கல்வெட்டுக்களைப் பிழை எனத் தள்ளவேண்டியதாகிறது. ஆனுல் அக் கல்வெட்டுக்கள் இராசராசனுடையவையே என்பது வரலாற்ருய்வாளர் கருத்து. எனவே, இராசரர்சன் இராசாதிராசனின் முடிசூட்டு விழாவின் பின்னும் உயிருடன் இருந்தமை புலப்படும்.

## பெரியதேவர் ஆசியருளினர்

ஆகவே இப்பகுதியை,

| | | | |
|---|---|---|---|
| பெரி | யதே<br>1 2 3 | வ ரா சி அ ரு<br>4 5 6 | ளின |
| | 10 செ. மீ. | 15 செ. மீ. | |

என்றே நிரப்பலாம்.[13] பெருமான் நம்பிப்பல்லவரையனும், பிறரும் பெரியதேவர் வாழ்த்தியருளின நாளில் எதிரிலிப் பெருமாளுக்கு மண்டை கவிப்பித்தற் பணியில் ஈடுபட்டனர் என்பது இத்தொடரின் பொருள்.

---

**13. 7 செ. மீ. 'வரா' என்றுள்ளதனை மூன்று எழுத்துக்களாகக் கருதுதல் இயலாது. தூணில், எல்லா வரிகளிலும் இரண்டு எழுத்துக்கள் மட்டுமே வெட்டப்பட்டுள்ள 7·5 செ.மீ. அளவுள்ள மூன்ருவது பக்கத்தில் 14-ஆவது வரியில் மட்டும், 'காஈ' என்னும் எழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளன. இதனுல், ஆகாரக் குறியீடும் (ா) ர என்னும் எழுத்தும் ½ எழுத்துக்குச் சமம் என்பது பெறப்படும். புகைப்படத்தைக் காண்க.**

**போந்தாரானவாறே**

இராசாதிராசனுக்கு முடிசூட்டிய அன்றே இராச ராசன் இறந்துபோக இராசாதிராசன் அரசு பொறுப்பேற்ருன் என்னும் கருத்தை—

கவிப்பித்.............. தாரானவாறே

என்னும் பகுதியை எழுத்திட்டு நிரப்புவதனுல் உறுதி செய்துள்ளனர்.

கவிப்பித்து ... தாரானவாறே என்று எபிகிராபியா
123
இண்டிகா 21-லும், கவிப்பித்து .... தாரானவாறே என
1234
எபிகிராபியா இண்டிகா 31-லும் இத்தொடர் இடைவெளி யுடன் காணப்படுகிறது. அதாவது இவ்விடைவெளிகளில் 'மூன்று' அல்லது 'நான்கு' எழுத்துக்களை இட்டு நிரப்ப லாம். இதே எபிகிராபியா தொகுதிகள் இரண்டிலும்

கவிப்பித்துப் போந் தாரானவாறே
1 2 3 4 5

என்று இத்தொடர் 'ஐந்து' எழுத்துக்களிட்டு நிரப்பப் பட்டுள்ளது. இவ்வளவு எழுத்துக்களை எவ்வாறு இங்கு நிரப்பவியலும்? இயலாது.

இவ்வாறு நிரப்பப்பெற்றுள்ள பகுதியை ஏனைய வரி களோடு ஒப்பிட்டு நோக்கவேண்டும். இப்பகுதி சுவரி டையே அமையும் சிறு தூணில் வெட்டப்பட்டுள்ளது. இப்பகுதி பின்வருமாறு :—

| வரி | மூலச் சுவர் | தூண் * 7·5 செ.மீ. | 15 செ. மீ. | 12·5 செ. மீ. | மூலச் சுவர் |
|---|---|---|---|---|---|
| 11 | சொ | மு பு | ர . . . ம் எ ழு | . த ரு ளி ந் | இரு |
| 12 | க வி | பி பி | த் . . . | தாரானவ | ாறே |
| 13 | படிப | ண் ணி | வி . . . த் த ரு | . ஞர் மி ளி | கை |
| 14 | யு மி | கு தி | ப் . . . பெ ா | . விட்டு த | |
| 15 | பெ | று ம் | ப . . . டி ப ண் | ண வே | ணுமெ |

தூணில் எழுத்துக்கள் விடப்பட்டுள்ள நடுப்பகுதி 15 செ. மீ. அளவுள்ளது. ஒவ்வொரு வரியிலும் அவ்விடைவெளியில் நான்கு எழுத்துக்களைத்தான் இடமுடியும். அதற்கு மேல் இடமுடியாது. வரி 12-இல் '**கவி**' என்பது மூலச் சுவரில் உள்ளது. '**பிபி**' என்பது தூணில் 7·5 செ. மீ. பகுதியில் உள்ளது. தூணில் 15 செ. மீ. பகுதியில் '**த்**' என்னும் எழுத்து உள்ளது. இதனை அடுத்து 'து' என்னும் எழுத்து காணப்படவில்லை. '**த்**' என்னும் எழுத்தை அடுத்து மூன்று எழுத்துக்கள்தான் சிதைந்து உள்ளன. தூணின் 12·5 செ. மீ. பகுதியில் 'தாரானவ' என்று உள்ளது. எனவே இடையில் மூன்று எழுத்துக்கள் மட்டுமே இட்டு

---

* **71-ஆம் பக்கத்தில் கூறப்பட்ட தூணும் இதுவே.**

| | | | | |
|---|---|---|---|---|
| கவி | பி பி | த்தளித் | தாரானவ | ாறே |

என்று நிரப்பலாம்,

தமிழ் இலக்கண முறைப்படி, செய், செய்வி, செய்விப்பி என்னும் மூவகை வினைகள் காணப்படுவதுண்டு. தானே முடிசூட்டுதல் 'கவித்தல்'; மற்றொருவன் மூலமாகச் சூட்டுவித்தல் 'கவிப்பித்தல்'; மூன்றுமவன் மூலமாகச் சூட்டுவிப்பித்தல் 'கவிப்பிவித்தல்'. கவி என்னும் பகுதியின் 'செய்விப்பி' என்னும் வினைவடிவமாகிய கவிப்பிவித்தல் என்பதன் திரிபே 'கவிபிபித்து' என்று கல்வெட்டில் காணப்பெறுகிறது எனலாம்.

**நாலாண்டு இடைவெளியா ?**

'துஞ்சி அருளின நாளிலே' என்றும் 'போந்தார்' என்றும் இட்டு நிரப்பிய ஆய்வாளர், "இராசாதிராசனின் முடிசூட்டு விழா நிகழ்ச்சியை நடத்திய அன்றே இராசராசன் இறந்தான்; நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் திருஅபிஷேகம் நிகழ்ந்தது" என்னும் முடிவு கண்டனர். இம் முடிவுக்குவரப் பின்வரும் இடைவெளியில் எழுத்திட்டு நிரப்பிய சொற்றொடர் அடிகோலியது.

இப்பகுதி,

'கடவரா(க) . . . . . . . . து நாலாம்'
1 2 3 4 5 6 7 8

என எபிகிராபியா இண்டிகா 31–இல். பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி 8 எழுத்துக்களை இடலாம்.

கடவராக . . . து நாலாம் திருநக்ஷத்திரத்திலே என்று
1 2 3

எபிகிராபியா இண்டிகா 21-ஆம் தொகுதியில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதன்படி இவ் விடைவெளியில் மூன்று

எழுத்துக்களைத்தான் இட்டு நிரப்பலாம். ஆனால் ஆய்வாளர்

கடவராக நி ச் செ ய த் து
1 2 3 4 5 6

என்று ஆறு எழுத்துக்களை இட்டு நிரப்பியுள்ளனர். இது இயலாததாகும்.

## அளவியலாய்வு

இவ்விடைவெளிப் பகுதியின் மேலுங்கீழும் அமைந்த வரிகளில் எத்தனை எழுத்துக்கள் அமைந்துள்ளன என நோக்குவோம்.

| வரி | மூலச் சுவர் | தூண் 4.5 செ.மீ. | தூண் 11.75 செ.மீ. | தூண் 14 செ.மீ. | மூலச் சுவர் |
|---|---|---|---|---|---|
| 10 | அபி | . ஷ | . . . க த் து | . கு உ ரி க் | ய |
| 11 | பண்ணு | . வி | . . . த் து உ | . ட ய ா ை | ர் |
| 12 | டவரா | க | . . . ப் ப | . து ந ா த் | லா |
| 13 | கள்எ | ல் | ல . . ா ரை | . ஞ் செ ய | ந |
| 14 | பண்ணி | ஈ | . . . மூ த் தா | . . ா ண் ன் ப | டியனர் |

இவ்வாறு அமைந்துள்ள இப்பகுதியில் தூண் முழுமையிலுமாக எட்டு அல்லது ஒன்பது எழுத்துக்களைத் தான் எழுத முடியும். தூணின் நடுப்பகுதியில் மூன்று அல்லது இரண்டு எழுத்துக்களைத்தான் எழுதமுடியும்.

எனவே, 'நி ச் செ ய த்' என்னும் ஆறு எழுத்துக் களை இவ்விடைவெளியில் எழுதமுடியாது. எனவே இதனைக்

| | | |
|---|---|---|
| கடவராக | ப்ப<br>1 2 | த்து நாலாம் திருநக்ஷத்திரத்திலே<br>3 |

என நிரப்புவது பெரிதும் பொருந்துவதாகும்.[14] அல்லது,

| | | |
|---|---|---|
| கடவராக | வேப<br>1 2 3 | த்து நாலாம்<br>4 |

என்றும் நிரப்பலாம். இதனால், "இராசராசன், எதிரிலிப் பெருமாளுக்குப் பதினன்காம் வயதில் (அதாவது பதினைந் தாம் வயது நடந்துகொண்டிருக்கும்போது) முடிசூட்டித் திருஅபிஷேகம்செய்து, 'இராசாதிராச தேவர்' என்னும் அபிஷேக நாமமும் அளித்தான்" என்பது பெறப்படும்.

## வரலாற்று அறிஞர் கருத்து

வரலாற்றறிஞர், "இராசராசன் எதிரிலிக்கு (மணிமுடி) கவிப்பித்துப் போந்தாரானது கி பி. 1163–இல்; அன்றே இராசராசன் இறந்தான்; இது நடந்த நான்கு வருடங்கள்

---

14. 'ப்ப' என்னும் இரண்டு எழுத்துக்கள், இச்சாசனப் பகுதியில் பல இடங்களில் எட்டு செ. மீ. அளவில் எழுதப்பட் டுள்ளன. இருபுறங்களிலும், அமைப்பும் வெளியையும் (Space) இங்கே கவனத்திற்கொள்ளவேண்டும்.

சென்ற பின்னுல் ' இராசாதிராசன் ' என்னும் பெயருடன் திருஅபிஷேகம் செய்விக்கப்பெற்ருன் " என்பர்.

## திருநக்ஷத்திரம் என்பதன் பொருள்

மேற்படிக் கருத்து, ' நிச்செயித்து நாலாம் திருநக்ஷத்திரத்திலே ' என்று நிரப்பியதனுல் தோன்றுவதாகும். இக் கல்வெட்டில், திருநக்ஷத்திரம் என்னும் சொல் 7-ஆவது வரியிலும், 12-ஆவது வரியிலும் கையாளப்படுகிறது. 7-ஆவது வரியில். திருநக்ஷத்திரம் என்பது ' வயது ' என்னும் பொருளையும் 12-ஆவது வரியில், ' வருஷம் ' என்னும் பொருளையும் தரும் என்பது அறிஞர் கருத்து.

அறிஞர், 12-ஆவது வரியில் உள்ள ' து ' என்பதனை அடுத்துள்ள ' நாலு ' என்பதனை மட்டும் மனத்திற் கொண்டு, நாலு வயதில் திருஅபிஷேகம் நடக்காது ஆகையினுல் நாலுவயது என்று பொருள் கொள்ளாமல் முடிசூட்டுவிழா நடந்த நாலு ஆண்டுகட்குப்பின் திருஅபிஷேகம் நடந்தது என்று முடிவு செய்தனர்.

## வெவ்வேறு நாள் நிகழ்ச்சிகளல்ல

முடிபுனை விழா என்பதும் திரு அபிஷேகம் என்பதும் வெவ்வேறு விழாக்களாக நடந்தவை என்று வேறு எங்கும் குறிப்பிடக்காணேம். இரண்டும் ஒரேநாளில் நடைபெறும் நிகழ்ச்சிகள்தாம்.

முடிபுனை விழாவில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கலிங்கத்துப்பரணி முறையாக வருணிக்கிறது.

முடிசூடப்போகும் வேந்தன் பல (நான்கு) கடலில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள நீரால் அபிஷேகம் செய்

| மூலச்சுவர் | தூண் | | |
|---|---|---|---|
| | இடது 7.5 C.M | முன் 15. C.M ←12.C.M→ | வலது 12.5 C.M |



| வரி | மூலச்சுவர் | இடது | முன் | வலது |
|---|---|---|---|---|
| 10 | ம்பரிகரிநு இவ் | | | பெரிய |
| 11 | கங்கைகொடசொ | ழபு | | தருளி |
| 12 | நாளிலெமண்டைக்ஷி | பிபி | த் | காரானவ |
| 13 | செல்லும்படி ப | ண்ணி | வி | ஞர்மி |
| 14 | ண்வராஞ்ரையுமி | குதி | ப் | த விட் |

வரி 12-ல் தூணின் முன்பக்கத்து 12 C. M. இடைவெளியில், 'துப்போந்' என்று எழுத முடியாது ; 'தளித்' என்றே நிரப்பலாம்

OFFICE OF THE CURATOR RECEIVED 7 ஜுன் 1976 GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

யப்பெறுவான். அப்போது மறையவர் வேதம் ஓதுவர்; மன்னர்கள் வாழ்த்துக் கூறுவர்.

விரிபுனல் வேலை நான்கும்
வேதங்கள் நான்கும் ஆர்ப்பத்
திரிபுவ னங்கள் வாழ்த்தத்
திருஅபிஷேகஞ் செய்தே

திருஅபிஷேகத்துக்குப் பின்னர் வேந்தன் உடைதரித்துச் சிங்காதனம் நோக்கிச் செல்வான். அப்பொழுது அரசர்கள் அறுகம் புல்லினை அவன் பாதத்தில் இட்டு, "புல்வகையில் மிகச் சிரேஷ்டமான இவ்வறுகம் புல்லைப்போல அரசருள் சிறந்தவனாக நீ வாழ்க" என்று வாழ்த்துக் கூறுவர். அரசர் வாழ்த்தியபின் மறையவர் திருமுடியினை வேந்தன் தலையின்மீது சூட்டுவர்.

அறைகழல் அரசர் அப்பொழுது
அடிமிசை அறுகு எடுத்திட
மறையவர் முடி எடுத்தனர்
மனுநெறி தலைஎ டுக்கவே

இவ்வாறு முடிசூட்டப்பட்டபின் வேதியர் மந்திர விதிப்படி அபிஷேகம் புரிவர்.

நிரைமணி பலகு யிற்றிய
நெடுமுடி மிசை விதிப்படி
சொரிபுனல் இடைமு ழுத்தன
துறைகளின் அறம்அ னைத்துமே

என்று கலிங்கத்துப்பரணி கூறுவதனால் முடிசூட்டுவிழாவில் திருஅபிஷேகம் ஓரங்கம் என்பது புலப்படும். சாசனங்களும் இதனை உறுதி செய்கின்றன.

1. வேள்விகுடிச் செப்பேடு அகத்தியர் பாண்டியனுக்கு முடிசூட்டியமையைக் "கும்பசம்பவகரப் பிராப்த அபிஷேகக்கிரிய" எனக் கூறுகிறது. முடிசூட்டுவிழா அபிஷேகக் கிரியைகளை உடையதென்பது இதனால் பெறப்படும்.
2. வீரபாண்டியனுடைய சிவகாசிச் சாசனம், 'மன்னியமணி முடிகவித்து மகாபிஷேகம் மகிழ்ந்த நாளில்' என்று கூறுகிறது. முடிகவிக்கும் நாளிலேயே திருஅபிஷேகம் நடைபெறும்; இது மகாபிஷேகம் எனப்பெறும் என்பது இதனால் அறியப்பெறும்.

இச்சான்றுகளால், மண்டைகவிப்பித்தலும், திருஅபிஷேகம் செய்தமையும் ஒரே நாளில் நடந்தவை என்பது புலனாகும். எனவே 'கடவராகப்பத்து நாலாம் திருநக்ஷத்திரத்திலே' என்று சாசனத்தில் உள்ளமையால் முடிசூட்டப்பட்டபோது இராசாதிராசன் 14-ஆம் வயதினன் என்பது அறியப்பெறும்.

## உரிய பிள்ளை யார் ?

அரசனாக முடிசூட்டுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிரிலிப்பெருமாள் அபிஷேகத்துக்கு உரிய பிள்ளையாக இருந்தவன் என்பதனை 'அபிஷேகத்துக்குரிய பிள்ளைகள் இன்றியே இருக்கிறபடியைப் பார்த்து' என்று இச்சாசனத்தில் கூறப்பட்டுள்ளமையால் உறுதியாக அறியலாம். இவன் முடிசூட்டுவிப்பதற்காகக் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்து பிரயாணம் பண்ணுவிக்கப்பெற்ற பிள்ளைகளில் ஒருவன்.

கல்வெட்டு, ". . . து நாலாம் திருநக்ஷத்திரத்தில் திருஅபிஷேகமும் முடிசூட்டுதலும் நிகழ்ந்தது" எனக்

கூறுகிறது. இவ்வரியில் இடைவெளி இருக்கிறது. எனவே எத்தனை வயதில் இவ்விழா நடந்திருக்கவியலும்? என்று சிந்திக்கவேண்டும். இருபத்து நாலு, முப்பத்து நாலு, அறு பத்து நாலு என்றுகூட இவ்விடைவெளியை நிரப்பலாம். இவை பிள்ளைப்பருவத்துக்குரிய வயதுகள் அல்ல. எனவே நிரப்பிப்பெறும் வயது, பிள்ளைப்பருவத்துக்குரிய வய்தாக இருக்கவேண்டும்.

''முடிசூட்டு விழாவின்போது மனைவியுடன் அமர்ந்து தான் அரசன் முடிசூடிக் கொள்வான்'' என்பது மெய்க் கீர்த்தி வாயிலாகவும் இலக்கிய வாயிலாகவும்[15] பெறப் படும் செய்தியாகும்.

அரசியருக்குரிய பல உரிமைகளுள் அரசனுடன் சம மாகச் சிங்காதனத்தில் வீற்றிருக்கும் உரிமையும் உண்டு; இது 'உடன் இருக்கை' என்று மெய்க்கீர்த்திகளில் கூறப் பட்டுள்ளது. இவ்வாறு ஒன்றாக அமர்ந்து முடிசூடுதலை, ''உடனுறையும் திருவாணையும் உடன் செல்ல முடி கவித்தாள்'' என்று இரண்டாம் இராசாதிராசனுடைய மெய்க்கீர்த்தியும், ''மங்கையருக்கரசாகி உலகுடைய பெரு மாளுடன் ஒக்கமணி முடிகவித்தாள்'' என்று மூன்றாம் இராசராசனின் மெய்க்கீர்த்தியும் உறுதி செய்கின்றன. 'திருமணமானவனே' முடிசூடுவதனால்தான், 'அவளுடன் வாழ்கெனச் சொல்லி' மெய்க்கீர்த்தி அமையவேண்டும்

---

15. 'கவினும்–மடமயி லொக்க மகுடம் கவித்தாள்' (குலோத் துங்கசோழனுலா, வரி, 120–21) 'திருமகள்போல ஒருமையின் ஒட்டி, உடன்முடி கவித்த கடனறிகற்பின் இயற்பெருந்தேவி' (பெருங்கதை, 2.4; 22–24) என்பன அரசியும் அரசனோடு அமர்தலை உணர்த்தும் இலக்கியச் சான்றுகளாகும்.

என்று பாட்டியல் நூல்கள் வலியுறுத்துகின்றன. பாட்டியல்கள் விதிப்பதற்கேற்ப,

> விசையாபிஷேகம் பண்ணி வீரசிம்மாசனத்துப்
> புவன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய
> கோவிராசகேசரிபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள்
> ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு

என்பதுபோலச் சோழர் மெய்க்கீர்த்திகள் காணப்படுகின்றன.

## மணம் புணர்ந்து மகுடம் தரித்தான்

அரசர்கள், உடனிருக்கை உரிமையுடைய தம் மனைவியருள் முதல்வியோடு அமர்ந்து திரு அபிஷேகம் செய்து கொள்ளுதலே முடிபுனை விழாவாகும். இவ்வாறு அபிஷேகம் செய்துகொண்டவளே பட்டத்தரசி எனப் பெறுவாள். அரசியோடமர்ந்து அரசன் அபிஷேகம் செய்து கொள்வான் என்பதனை

> " மாதரில்
> ஒக்க அபிஷேகம் சூடும் உரிமைக்கண்
> தக்க தலைமைத் தனித்தேவி — மிக்க
> புவனி முழுதுடைய பொற்றொடி "

என்னும் குலோத்துங்க சோழனுலாப்பகுதி[16] அறிவுறுத்துகிறது.

இராசாதிராசன் பிள்ளைப்பருவத்தினன். இப் பருவத்திலுள்ள ஒரு நாலு வயதினன்; அதாவது பதினாலு வயதினன். அவனை அரசனுக்குவது என முடிவு செய்தனர். முடிசூட்டக் கருதினர். முடிசூட்டு விழாவில் அரசகுமரன்

---

16. குலோத்துங்க சோழனுலா, வரி, 70-73.

மனைவியோடு அமர்ந்து மகுடாபிஷேகம் செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் முடிசூடிக்கொள்ளு தற்குரிய தகுதி படைத்தவனுவான். ஆதலினுல் மணப் பருவம் உற்ற அம் மைந்தனுக்கு மணம் முடித்து மகுடம் புனைவித்தனர். இக் கருத்தினை உணர்த்தும் அகச்சான்ருக, " உளம் மகிழ வந்தருளிய உலகுடை முக்கோக்கிழானடி யுடன் வாழிவாழி மணம் புணர்ந்து ஊழிஊழி பலவோங்கிச் செம்பொன் வீரசிம்மாசனத்து உலகுடைமுக்கோக்கிழா னடிகளோடும் வீற்றிருந்தருளிய கோவி ராஜகேசரி பந்ம ரானதிரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜதேவர்" என்னும் மெய்க்கீர்த்திப் பகுதி அமைந்துள்ளது. இப்பகுதி யில் முக்கோக்கிழானடிகளை மணந்து அரியணையில் அமர்ந்தான் என்று கூறப்பட்டுள்ளமை நோக்கற்பாலது. 'முக்கோக்கிழானடியுடன் மணம் புணர்ந்து' 'வீற்றிருந் தருளிய' என்று அமையும் தொடரால் இராசாதிராசன் மணம் புரிந்துகொண்டபின் அரியணை ஏறியமை அறியப் பெறும்.

## திருமண வயது எது ?

ஆண் 16 ஆண்டு தொடங்கும்போது திருமணம் புரிந்து கொள்வான் என்று அகப்பொருள் நூல்களால் அறிகிருேம். இரண்டு மாதம் முன்பு களவு மணம் தொடங்குமாதலின் 15-ஆவது வயது நடக்கும்போது ஆண் திருமணத்திற்கு உரியவனுகிருன். அப்போது ஆண் 14-ஆம் வயது நிறைவுற்றவனுக இருப்பான் என்றுணர லாம்.

ஆகவே பிள்ளைப்பருவத்தைச் சார்ந்ததும், மணம் புரிந்துகொள்ள உரியதும் ஆன 14-ஆம் வயதில் இராசாதி ராசனுக்கு முடிசூட்டு விழா நடந்தது என்ற முடிவு ஏற்

படும். எனவே இத்தொடர், 'பத்துநாலாம் திருநக்ஷத்திரத்திலே' என்றே நிரப்பத்தக்கதாகும்.

**பல்லவரையன் பண்ணுவித்தருளியன**

இத்தகைய ஆய்வுகட்குப் பின்னர், சோழர் குடும்பத்திற்குத் திருச்சிற்றம்பலமுடையானை பெருமான்நம்பிப் பல்லவரையன் செய்த செயல்கள் எவை என்பதனை அறிவிக்கும் பல்லவராயன்பேட்டைச் சாசனத்தின் சரியான சாசன வாசகத்தைக் காண்போம்.

**வரி 7 :** க்குங் கடவருமா யெல்லா வரிசைகளும் முன்னேவல் உள்ளிட்டு முதலிகள் பெறக்கடவ ஏற்றங்களும் பெற்று நின்று பெரியதேவர் துஞ்சி அருளிப் பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திரமா

**வரி 8 :** கையால் ஆயிரத்தளிப் படைவீடும் விட்டுப் போதவேண்டிப் போதுகிற இடத்துத் திருவந்தப்புரமும் . . . ஆரங்களும் உள்ளி(ட்)டன எல்லாம் பரிகரித்துக் (கூட்டி)க் கொடுபோந்து ராஜ

**வரி 9 :** (ரா)ஜபுர(த்)திலே இருந்த இட(த்துக்கு) (சூழ்ந்)த இடந் . . . . யாறு மிகுதி . . . . . . (ர)த்து உடன் கூட்டத்த (ர) . . . . . . . . (ரா) லும் எல்லாக்(கலக்க) . . . . . . (சோழராஜ்யத்துக்கு . . . . . யே இருப்பார்) காரண வருட . . . . .

**வரி 10 ;** வேண்டிப்புறத்து எல்லா அடைவு கேடுகளும் வ(ராத) இடத்து இங் . . . . . . . ளும் பரிகரித்து இவ் வி த மா க ப் பெரியதேவர் எழுந்தரு(ளி)
1 2 3 4 5 6

இருக்கிற நாளிலே திருஅபி (ஷேகத்துக்) கு
1 2 3 4 5
உரிய பிள்ளைகள் இன்றியே இருக்கி
1 2 3 4

வரி 11 : றபடியை பார்த்து முன்னுளிலே காரியம்
இருந்தபடி வி சா ர ணை செய்து கங்கைகொ
1 2 3 4 5
(ண்)ட சோழபுர ம் எ ழு ந் தருளி இரு(க்)கிற
1 2 3 4
பிள்ளைகளை யு ம் பி ர யாணம் பண்ணு வி த் து உ
1 2 3 4 1 2 3 4
டையார் விக்கிரமசோழதேவர் பேரனுர்

வரி 12 : நெறியுடைப்பெருமா திருமகனுர் எதிரிலிப்பெரு
மாளைப் பெரி ய தெ வ ரா சி அருளின நாளிலே
1 2 3 4 5 6
மண்டைகவிபிபித் த ளி த் தாரானவாறே இவ
1 2 3
ரைத் திருஅபிஷேகம் பண்ணு விக்கக் கடவராக
ப் ப த் து நாலாந் திருநக்ஷத்திரத்திலே ராஜாதி
1 2 3
ராஜதேவர் எ

வரி 13 : ன்று திருஅபிஷேகம் பண்ணுவித்து உடன்
கூட்டமும் நாடும் ஒன்றுபட்டுச் செல்லும்படி
பண்ணி (வித்து அருளி)ஞர் .... .... என்பது
இச்சாசன வாசகம். இவ்வாசகம் இதுவரை
வரலாற்ருய்வாளர்களால் தரப்பெற்ற மூலங்களி
லிருந்து பெரிதும் மாறுபட்டதும், முற்றிலும்
புதியகோணத்தில் ஆராய்ந்து அமைக்கப்பெற்
றதுமாகும்.

## இதனால் அறியப்பெறும் இராசராசன் கால வரலாறு

இராசராசனின் இரண்டு பிள்ளைகளில் ஒருவன் ஒரு வயதுடையவனாகவும், மற்றொருவன் இரண்டு வயதுடைய வனாகவும் இருந்தனர். இக்காலத்தில் சோழ நாட்டில் குழப்பம் ஒன்று நிலவிற்று. இராசராசனின் மக்கள் இளஞ் சிறுவராக இருந்ததனால் பல்லவரையன் அவர்களைப் பழை யாறைமாநகரில் இருந்த 'ஆயிரத்தளி' எனப்பட்ட பழைய அரண்மனையில் இருந்து, 'இராசராசபுரம்' (தாராசுரம்) என்னும் பகுதியிலமைந்த புது அரண்மனைக்குக் கொண்டு சென்றான்; அந்தப்புர மகளிர் முதலான அனைவரும் உடன் கொண்டு செல்லப்பெற்றனர்; பாதுகாக்கப் பெற்றனர்.

பாதுகாத்த பின்னல், சோழநாட்டில் கலக்கமொன்று காணப்படுவதைக் கண்ட பல்லவரையன், கலக்கம் நீக்கும் காரியங்களில் ஈடுபட்டான்; சோழநாட்டில் இருந்த உயர் மட்ட அரசியல் அதிகாரிகள், குறுநில மன்னர்கள் ஆகி யோர் சில தீச்செயல்களைப் புரிந்து கலக்கம் விளையக் காரணமாக இருந்தனர். பல்லவரையன் இவர்கள் அனை வரையும் ஒடுக்கும் காரியத்தில் ஈடுபட்டான்; பல ஆண்டுகள் பாடுபட்டு வெற்றியும் பெற்றான்.

இவ்வாறாக எல்லா அடைவு கேடுகளும் நீங்கிய நாளில் — அமைதியான சூழ்நிலை சோழ நாட்டில் நிலவிய நாளில் இராசராசன் அரண்மனையில் எழுந்தருளினான்; தன் மக்கள் சிறுவராகையினால் அரசு ஏற்றற்கு உரியவர் எவரேனும் இருக்கிறார்களா? என்று ஆராய்ந்தான்; முன் னாளில் காரியம் இருந்தபடி விசாரணைகள் செய்தான்; கங்கைகொண்டசோழபுரத்தில் எழுந்தருளி இருக்கும்

பிள்ளைகளைப் பிரயாணம் செய்வித்தான்; விக்கிரம சோழனின் கொள்ளுப்பேரனும், நெறியுடைப்பெருமா என்னும் பெயருடைய தன் சகோதரியின் மகனுமாகிய எதிரிலிப் பெருமாள் என்பவனைத் தேர்ந்தெடுத்தான். எதிரிலிப்பெருமாள் 14-ஆம் வயதில் இராசாதிராசன் என்னும் அபிஷேக நாமத்துடன் முடிசூட்டுவிக்கப் பெற்றான். பின்னர் நாடு, உடன் கூட்டம் முதலியன ஒன்றுபட்டுப் போகுமாறு பல்லவரையன் செய்தான் என்பது பல்லவராயன்பேட்டைச் சாசனத்தில் கூறப்பட்டுள்ளது.

### சில புதுச்செய்திகள்

1. இராசராசனின் மக்கள், பழையாறை ஆயிரத்தளியில் இருந்து தாராசுரத்து அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்ட காலத்தில், அதாவது இராசாதிராசனுக்கு முடிசூட்டிய ஆண்டுக்குச் சில வருடங்களுக்கு முன்னர் ஒரு வயதும் இரு வயதும் உடையவராக இருந்தனர்.

2. இராசராசன், இராசாதிராசனுக்கு முடிசூட்டிய பின்னரும் பல ஆண்டுகள் உயிருடன் இருந்தான்.

3. இராசாதிராசன், இராசராசனின் சகோதரியாகிய நெறியுடைப்பெருமா என்பவளின் மகனாவான்.

4. இராசாதிராசன் முடிசூட்டப்பட்டபோது 14 வயதினன், என்பன பல்லவராயன்பேட்டைச் சாசனத்திற்குத் தரப்பட்டுள்ள இப் புதுவிளக்கத்தினால் அறியப்பெறும் புதிய செய்திகளாகும்.

---

# பல்லவராயன்பேட்டைச் சாசனப் பழைய விளக்கம்

பல்லவராயன்பேட்டைச் சாசனத்தின் விளக்கங்களை முற்றிலும் புதிய கோணத்தில் கல்வெட்டு அளவியல், மற்றும் இலக்கியச் சான்றுகளுடன் முற்பகுதியில் விளக்கி யிருக்கிறோம். எம் கருத்துக்கள் இதுநாள்வரை அறிஞர் பலர் சாசனத்திற்கு அளிக்கும் பழைய விளக்கங்களினின் றும் பெரிதும் மாறுபடுகின்றன. பழைய விளக்கங்கள் சிக்கல்களை உருவாக்குகின்றன. அப் பழைய விளக்கங் களைக் காண்போம்.

## பழைய விளக்கம் — முதற் கருத்து

பல்லவராயன்பேட்டைச் சாசனத்திற்குக் கீழ்க்கண்ட பகுதிகளில் விளக்கங்கள் காணப்படுகின்றன.

(அ) 1923–24-ஆம் ஆண்டு, கல்வெட்டு ஆண்டு அறிக்கை, 2-ஆம் பகுதி, பக்கம் 103, பத்தி 19-21.

(ஆ) எபிகிராபியா இண்டிகா, தொகுதி, 21, பக்கங்கள் 184–193.

எல்லா வரலாற்றறிஞரும், மேற்கண்ட தொகுதிகளில் உள்ள சாசன விளக்கத்தை ஆதாரமாகக்கொண்டு, ஒரே மாதிரியான கருத்தினைத் தத்தம் நூல்களில் வலியுறுத்தினர். அக்கருத்து சாசனத்தின் 12-ஆம் வரியில் எழுத்துக்கள் மறைந்த இடங்களில் ஊகித்து நிரப்பப்பட்டதால் உருவா னது. அவ்வாறு உருவான பழைய விளக்கத்தின் வாசகங் களைக் காண்போம்.

"பெரியதேவர் துஞ்சி அருளின நாளிலே மண்டை கவிப்பித்துப்போந்தாரானவாறே இவரைத் திருஅபிஷேகம் பண்ணுவிக்கக் கடவராக நிச்செயித்து நாலாந்திரு நக்ஷத்திரத்திலே ராஜாதிராஜதேவர் என்று திருஅபிஷேகம் பண்ணுவித்து" என்பது சாசனத்தின் 12–13ஆம் வரிகளின் பழைய வாசகமாகும். இவ்வாறு எழுத்துக்கள் மறைந்து போன இடங்களில், "துஞ்சி" "துப்போந்தார்" "நிச்செயித்து" என்று நிரப்புவதால் (1) இராசராசன் எதிரிலிப் பெருமாளுக்கு முடிசூட்டினன். (2) அன்றே இறந்தான். (3) முடிசூட்டிய நான்காம் ஆண்டு எதிரிலிப்பெருமாள் (பல்லவரையனால்) திரு அபிஷேகம் செய்யப்பட்டு "இராசாதிராசதேவர்" என்று அபிஷேக நாமம் அளிக்கப் பட்டான். என விளக்கங்கள் தந்தனர். (4) காலக்கணக்கீட்டின் துணைகொண்டு கி. பி. 1163-இல் இராசராசன் எதிரிலிப்பெருமாளுக்கு முடிசூட்டினன்; அன்றே இறந்தான். (5) அன்றையிலிருந்து நான்காம் ஆண்டாகிய கி. பி. 1166-இல் எதிரிலிப்பெருமாள், "இராசாதிராசதேவர்" என்று திரு அபிஷேகம் செய்யப்பட்டான், என்றும் பொருள் கொண்டனர். இவ்வாறு பொருள் கொள்வதால் ஏற்படும் சிக்கல்களைக் காண்போம்.

**சிக்கல் 1.**

இராசராசன் கி. பி. 1163-இல் இறந்தான் என்றால் அது அவனுடைய 18-ஆம் ஆட்சியாண்டாகும். அவ்விதமானால் அவன் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் கி. பி. 1163-க்கு மேலும் 1172 வரை காணப்படுவது எங்ஙனம்? அரசன் உயிருடன் இருந்தால் அல்லவா கல்வெட்டுக்கள் காணப்பெறும்? உயிருடன் இல்லை எனில் கல்வெட்டுக்கள் இருக்கக் காரணம் என்ன? இம் முதல் சிக்கலுக்கு

ஆய்வாளர் பின்வருமாறு சமாதானங்கள் கூறினர்கள். அவை வருமாறு :

(அ) "இராசராசனின் 18, 19-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள், சோழ நாட்டிலும், தொண்டை நாட்டிலும் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் என்னவென்ருல் கி. பி. 1163-இல் எதிரிலிப்பெருமாள் முடிசூட்டப்பட்டாலும், கி. பி. 1166-இல்தான் முறைப்படி திருஅபிஷேகம் செய்விக்கப்பட்டு இராசாதிராசன் என்னும் அபிஷேக நாமம் ஏற்ருன். அபிஷேக நாமம் ஏற்ற ஆண்டாகிய கி. பி. 1166 வரை அவன் இளவரசு நிலையிலேயே இருந்தான். ஆகவே கி. பி. 1166 வரை இறந்த இராசராசனின் பெயரிலேயே கல்வெட்டுக்கள் வெட்டப்பட்டன. (அதாவது கல்வெட்டில் ஆட்சியாண்டு அபிஷேக நாமம் ஏற்ற நாளிலிருந்துதான் கணக்கிடப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் 1163-ஐ இராசாதிராசனின் ஆட்சித் தொடக்கமாகக் கொள்ளவில்லை).

(ஆ) சோழ நாட்டிலேயே இராசராசனது 19-ஆம் ஆட்சிக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் இல்லையெனில் நெடுந்தூரத்தில் உள்ள ஆந்திராவில் 26, 28-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் எங்ஙனம் இருத்தல் கூடும்? ஆகவே இவன் இறந்த பின்னரும் ஆந்திரநாட்டுக் கல்வெட்டுக்களில் இவன் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் காணப்படுவது அறியாமையால் நேர்ந்த பிழையே எனலாம். ஆதலால் அவ்வாண்டுகளில் இராசராசன் உயிர் வாழ்ந்திருந்தான் என்று கொள்வது எவ்வாற்ருலும் ஏற்புடைத்தன்று."

**இச்சமாதானத்தை நோக்குவோம்**

1. "இராசராசன் கி. பி. 1163-இல் எதிரிலிப்பெருமாளுக்குப் பட்டம் சூட்டினான்; அன்றே இறந்தான்; நான்கு ஆண்டுகளுக்குப் பின்புதான் எதிரிலிப்பெருமாள் இராசாதிராசன் என்னும் அபிஷேக நாமத்துடன் அரியணை ஏறினான்." என்னும் கருத்துக்கள் பல்லவராயன்பேட்டைச் சாசனத்தில் எழுத்துக்களை இட்டு நிரப்பி ஊகித்துப் பெறப்பட்டவையாகும். கல்வெட்டில் 12-ஆவது வரியில் பொருந்தாத வார்த்தைகளை இட்டு நிரப்பித் தாமாக ஊகித்துக்கொண்ட முடிவால், ஆந்திர மாநிலத்துச் சிற்றரசரால் வெட்டப்பட்டதும், சரியான சகரயாண்டுகளுடன் காணப்பெறுவதும் ஆன இராசராசனின் இறுதியாண்டுக் கல்வெட்டுகளை — 19-ஆம் ஆட்சியாண்டுக்குப் பின்னமைந்த கல்வெட்டுக்களைத் தள்ளினர். ஊகமொன்றினையே ஆதாரமாகக்கொண்டு அக்காலத்தார் அறியாமையில் ஆழ்ந்து கிடந்தனர் என்று சமாதானம் கூறுவது ஏற்புடைத்தன்று. கல்வெட்டில் "துஞ்சி", "போந்தார்", "நிச்செயித்து" என்று எழுத்திட்டு நிரப்பவே முடியாது என்று அளவியல் (Measurement) அடிப்படையில் முன் கட்டுரையில் விளக்கியுள்ளோம். இன்றும் அச்சாசனம் பல்லவராயன் பேட்டை ஆலயத்தில் உள்ளது. நேரில்சென்று கண்டால் உண்மை விளங்கும்.

2. கி. பி. 1163-க்கும் கி. பி. 1172-க்கும் இடைப்பட்ட 9 ஆண்டுக்கால இடைவெளியில் பன்னாட்டகத்தும் இருந்த குறுநில மன்னரும், அதிகாரிகளும் தவறாகவா எழுதி யிருப்பர்? இப் பணியில் ஈடுபட்ட எல்லாப் பணியாளரும் அறியாமையிலா மூழ்கியிருப்பர்? எனவே

அறியாமையால் ஆந்திரத்தில் கல்வெட்டுக்கள் அமைந்தன என்று கூறுதல் ஒவ்வாதது.

3. இராசராசன் இறந்தான் என்றாலும், இராசாதிராசன் அரியணை ஏறும் வரை, இறந்த இராசராசனின் பெயரால் அக்காலத்தார் கல்வெட்டெழுதினர் என்பது வரலாற்றாராய்ச்சிக்கு ஒவ்வாதது.

4. சோழர்கட்கு இளவரசுப் பட்டம் எய்தியது முதல் கையாளப்பெறும் ஆட்சியாண்டுகள், கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறும். ஆதலால் உயிருடன் இருந்த இராசாதிராசனின் ஆட்சி ஆண்டுகள் கணக்கில் கொள்ளப் பெறாமல், இறந்த இராசராசனின் ஆண்டுகளையே குறித்தனர் என்பது எவ்வாற்றாலும் ஏற்புடையதன்றாம்.

5. முடிசூட்டுவிழாவும், திருஅபிஷேகநாளும் வெவ்வேறான நிகழ்ச்சிகள் அல்ல என்பதனை முன்பே விளக்கியுள்ளோம். கி. பி. 1163-இல் முடிசூட்டுதலும் கி. பி. 1166-இல் திருஅபிஷேகம் செய்வித்தலுமாகிய இரண்டு நிகழ்ச்சிகள் இருக்கமுடியாது. இரண்டும் ஒரே நிகழ்ச்சியாகத்தான் இருக்கவேண்டும்.

"இராசாதிராசன் கி. பி. 1163-இல் முடிசூட்டப் பட்டான். கி. பி. 1166-இல் திருஅபிஷேகம் செய்யப் பட்டான். அபிஷேகம் செய்யப்பட்ட ஆண்டிலிருந்து தான் ஆட்சியாண்டு தொடங்கவேண்டும். ஆகவே கி. பி. 1163 முதல் கி. பி. 1166 வரை இராசாதிராசனின் கல் வெட்டுக்கள் மறைந்த இராசராசனின் பெயரில் வெட்டப் பட்டன" என்று கூறிய ஆய்வாளர், இராசாதிராசனின் சரித்திரத்தை எழுதுங்கால் முன்பு தாம் கூறியதற்குமாறாக கி. பி. 1163-இலிருந்தே இவன் ஆட்சியைக் கணக்கிட்ட

னர். தமிழகத்தில் இராசாதிராசனின் இறுதிக் காலத்தைக் கணக்கிடும்போது அபிஷேக ஆண்டாகிய கி. பி. 1166-ஐக் கொள்ளாமல் கி. பி. 1163-இலிருந்து கணக்கிட்டனர். இது முற்றிலும் முன்னுக்குப்பின் முரணானது.

**சிக்கல் 2.**

தமிழகத்திலே இராசராசனின் 20-ஆம் ஆட்சியாண்டுக்கு (கி. பி. 1166) மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன.

1. தாராசுரம்--21-ஆம் ஆண்டு (கி. பி. 1166-67)[1]
2. பெருநகர்-25-ஆம் ஆண்டு (கி. பி. 1170).

இவைகள், இராசாதிராசன் திருஅபிஷேக நாமம் கொண்ட பிறகு, இராசராசனின் பெயரில் தமிழ்நாட்டில் வெட்டப் பெற்ற கல்வெட்டுக்கள். இராசாதிராசன் இளவரசு நிலையைத் தாண்டி விட்டானே? ஏன் அவன் பெயரில் இக் கல்வெட்டுக்கள் இல்லை? இந்த இரண்டாம் சிக்கலுக்கு இதுவரை யாதொரு விளக்கமும் இல்லை. காரணம், இதற்குப் பதில் அளிக்கமுடியாது.

**மூன்றும் குலோத்துங்கன் சாட்சி கூறுகிறான்**

திருக்குறுக்கையில்[2] உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழனின் 2-ஆவது ஆட்சி யாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று, இரண்டாம் இராசராச சோழனுடைய 19-ஆவது ஆட்சி யாண்டினைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு, "இராசராசசோழனின் 19-ஆம் ஆண்டுக்காலத்தில் கோயில் கருவூலத்தில் கோயிற்பணியாளர் 60 காசுகளை முதற்பொருளாக வைத்தனர்; இதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு தினந்தோறும் கோயிலில் அர்த்தஜாம வழிபாட்

1. A. R. E. 1926-27 Page 82 Para 25
2. Ins. No. 229 of 1917

டின்போது தேவையான கற்பூரம் பெறுதற்குப் பயன் படுத்தவேண்டும் என்று விதித்தனர். இராசராசசோழனின் 19-ஆம் ஆண்டில் நடந்த இவ்வறச்செயல் மூன்றாம் குலோத்துங்க சோழனின் 2-ஆவது ஆட்சியாண்டிலும் உறுதி செய்யப்பெற்றுள்ளது'' என்று குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டினால், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (ஆவணங்களை ஒப்பிட்டு நோக்கி) இராசராசனின் 19-ஆம் ஆண்டில் (கி. பி. 1164-65) செய்த அறப்பணி உறுதி செய்யப்பட்டமை அறியப்பெறும். 18 ஆண்டுகளே ஆண்ட அரசனுக்கு இக்கல்வெட்டு 19-ஆம் ஆட்சியாண்டினைத் தருகிறது. இக்கல்வெட்டு, இராசராசன் கி. பி. 1163-க்கு மேலும் உயிருடன் இருந்தான் என்பதற்கு மூன்றாம் குலோத்துங்கன் கூறும் சாட்சியமாக அமைகிறது. ஆகவே ஒன்று மட்டும் நிச்சயமாகிறது. அதாவது, இராசாதிராசனுக்குத் திருஅபிஷேகம் செய்யும்போது இராசராசன் இறந்தவன் என்றுகொண்டு பல்லவராயன் பேட்டைச் சாசனத்தை ஆராய முடியாது. சிக்கல்கள் ஏற்படும். சமாதானமும் கூற முடியாது. இராசராசன் அதற்குப் பின்னும் பல ஆண்டுகள் உயிருடன் இருந்தான்[3] என்றுகொண்டுதான் சாசனத்தை அணுகவேண்டும்.

**பழைய விளக்கம் – இரண்டாம் கருத்து**

எபிகிராபியா இண்டிகா, தொகுதி 31-இல் பக்கம் 223–4இல் திரு K. A. நீலகண்ட சாஸ்திரியார் அவர்களும்

---

3. காலக்கணக்கீட்டை, (Ephemeris) சுமார் மூவாயிரம் வருடத்துப் பஞ்சாங்கக் குறிப்புக்களை வெளியிட்ட திரு. L. D. சுவாமிக் கண்ணுப் பிள்ளை அவர்கள், Ephimeris Vol. I. Part II பக்கம் 70-இல் இராசராசனின் காலத்தும், இராசாதிராசனின் சாசனங்கள் காணப்படுகின்றன, என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

திரு. T. N. சுப்பிரமணியம் அவர்களும், இச்சாசனத்தை ஆராய்ந்தார்கள். இராசராசன் இறக்கவில்லை என்ற அடிப்படையில் சாசனத்தை அணுகினார்கள். (1) துஞ்சி (2) போந்தார் (3) நிச்செயித்து என்ற மூன்றில் "துஞ்சியை" விட்டுவிட்டார்கள். மீதியுள்ள இரண்டையும் வைத்து மேலும் சில விளக்கங்கள் கூறியுள்ளார்கள். விரிவுக்கு அஞ்சிச் சுருக்கமாக எழுதுகிறேன். (1) இரண்டாம் குலோத்துங்கனே எதிரிலிப்பெருமாள். (2) எதிரிலிப் பெருமாள் என்னும் இரண்டாம் குலோத்துங்கன் விக்கிரம சோழனின் பேரன் (மகன் அல்லன்) என்ற முடிவுக்கு வந்தனர். (3) விக்கிரமசோழன் தன் பெண் வயிற்றுப் பேரனை, எதிரிலிப்பெருமாள் என்னும் இரண்டாம் குலோத்துங்கனை மகனாகச் சுவீகாரம் செய்துகொண்டான். பின் குலோத்துங்கனுக்கு முடிசூட்டினான். (4) முன்பு விக்கிரமசோழன் செய்ததைப்போன்றே, இராசராசனும் இராசாதிராசனுக்குத் திருஅபிஷேகம் செய்வித்தான். (5) இராசாதிராசன் எவனோ தெரியாது என்றனர். இவை மேலும் குழப்பங்களை விளைவிக்கின்றன. அதனால் இவைகளை ஏற்றுக்கொள்வதற்கில்லை. செல்லூர்ப் பட்டயங்கள் இரண்டாம் குலோத்துங்களை விக்கிரம சோழனின் மகன் என்றே அறிவிக்கின்றன. ஒட்டக்கூத்தரும் குலோத்துங்க சோழனுலாவில் குலோத்துங்கன் விக்கிரமனின் மகன் என்றே கூறுகிறார். ஆகவே வேறு சான்றுகள் தேவையில்லை. எபிகிராபியா இண்டிகா 31-ஆம் தொகுதியை வெளியிட்ட அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு. சர்க்கார் அவர்கள் மேற்கண்ட விளக்கங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பகுதியிலேயே தம் மறுப்பையும் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே பல்லவராயன்பேட்

16

டைச் சாசனத்தின் பழைய விளக்கங்கள் சிக்கல்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்துகின்றன என்பதை எளிதில் உணரலாம்.

## அஸ்திவாரம் எது ?

(1) இராசாதிராசனுக்குத் திருஅபிஷேகம் செய்யும்போது இராசராசன் உயிருடன் இருந்தான்.

(2) முடிசூட்டுதலும், திரு அபிஷேகம் செய்வித்தலும் வேறு வேருன இரண்டு நிகழ்ச்சிகள் அல்ல. இரண்டும் ஒரே நிகழ்ச்சிதான்.

என்னும் இவ்விரண்டு அடிப்படைக் கருத்துக்களின் துணை கொண்டு, இச் சாசனத்தை ஆராயும் முறையே, சாசனப் புதிய விளக்கத்தின் அஸ்திவாரமாகும். இவ்வஸ்திவாரத்தின் அடிப்படையில் நாம் முன்பு விளக்கியுள்ள புதிய கருத்துக்கள், குழப்பங்களும் சிக்கல்களும் இல்லாமல் தெளிவாக உள்ளமையை எளிதில் அறியலாம். இனிச் சாசனத்தின் புதிய கருத்துக்களின் அடிப்படையில் சரித்திரத்தின் மற்றைய பகுதிகளைக் காண்போம்.



# இரண்டாம்
# இராசாதிராசன் காலம்

இரண்டாம் இராசராசன் தன் மக்கள் மிக இளையவ ராக இருந்தமையால் தன்னுடைய சகோதரி 'நெறியுடைப் பெருமா' என்பவளின் மகனை எதிரிலிப்பெருமாளைச் சோழ அரசனாக்கினான்; 'இராசாதிராசன்' என்று திரு அபிஷேக நாமம் தந்தான். இவ் விராசாதிராசன், 'இராச கேசரி' என்னும் பட்டம் சூடி அரசாண்டவனாவான். இவன் கி. பி. 1172 வரை இரண்டாம் இராசராசனுடன் அரசாட்சி புரிந்தான். இராசாதிராசன் எவ்வாண்டில் ஆட்சியைத் துவக்கினான்? எதுவரை ஆட்சி புரிந்தான்? என்பது முதலான செய்திகளை இப்பகுதியில் நோக்குவோம்.

## இராசாதிராசன் பட்டமேற்ற காலம்

வரலாற்றாய்வாளர் இராசாதிராசன்

(1) கி. பி. 1163-இல் பட்டம் ஏற்றான்.

(2) கி. பி. 1166-இல் பட்டம் ஏற்றான்

என்னும் இருவிதக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இவற்றுள், 'இராசாதிராசன் கி. பி. 1163-இல் பட்டம் ஏற்றான்' என்பது பேராசிரியர் திரு. கீல்ஹார்ன் அவர்கள் கணக்கிட்டுக் கூறிய கருத்தாகும். ஆய்வாளர் இதை அடிப்படையாகக்கொண்டு சாசன அறிக்கைகளில் ஆட்சி யாண்டின் காலத்தை வெளியிட்டனர். இக் கருத்திற்குத் துணைபுரியும் சாசன அறிக்கைகளில் உள்ள கல்வெட்டுக் களின் விவரங்கள் பட்டியல் (1)-இல் தரப்பட்டுள்ளன. இப் பட்டியலில் ஆட்சியாண்டின் காலமும், இராசாதி ராசனின் முதலாம் ஆட்சியாண்டின் தொடக்கக் காலமும் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### பட்டியல் 1.

| சாசன எண் | கல்வெட்டு உள்ள ஊர் | ஆட்சி யாண்டு | ஆட்சியாண்டின் நாள் | முதல் ஆண்டின் தொடக்க நாள் |
|---|---|---|---|---|
| 421/1912 | வழுவூர் | 5 | 1—7—1167 | 1—7—1163 |
| 494/1912 | ஊட்டத்தூர் | 5 | 24—6—1168 | 24—6—1164 |
| 504/1920 | ஆலங்குடி | 6 | 24—1—1168 | 24—1—1163 |
| 224/1917 | குறுக்கை | (6) | 30—5—1169 | 30—5—1164 |
| 122/1927-28 | அய்யம்பேட்டை | 8 | 6—12—1170 | 6—12—1163 |
| 158/1931-32 | திருப்புறம்பயம் | 10 | 19—11—1173 | 19—11—1164 |
| 340/1921 | திருக்கோயிலூர் | 10 | 21—8—1172 | 21—8—1163 |
| 132/1927 | ஆத்தூர் | 12 | 5—2—1175 | 5—2—1164 |
| 449/1912 | கோட்டூர் | 13 | 29—7—1175 | 29—7—1163 |
| 451/1912 | கோட்டூர் | 13 | 26—7—1175 | 26—7—1163 |
| 80/1913 | திருச்செங்காட்டங்குடி | 13 | 24—7—1174 | 24—7—1162 |
| 133/1927 | ஆத்தூர் | 13 | 8—1—1176 | 8—1—1164 |
| 537/1921 | நீடூர் | 14 | 16—11—1176 | 16—11—1163 |

ஆண்டு அறிக்கைகளில் காலத்தை வெளியிடும்போது ஒவ்வொரு கல்வெட்டுக்கும் (1) கிழமை மாறியிருக்க வேண்டும். (2) நக்ஷத்திரம் அல்லது திதி மாறியிருக்க வேண்டும். (3) அநேகமாக உத்தேசமாகக் கொள்ளலாம். என்பதுபோன்ற குறைகளும் கூறப்பட்டுள்ளன. கல்வெட்டில் கூறப்பட்டிருக்கும் ஆட்சியாண்டு மற்றும் மாதத்தை மாற்றுவதும் ஊகிப்பதும் இக் கணக்கீட்டில் சில இடங்களில் காணப்படுகின்றன.

"திரு. கீல்ஹார்ன், இராசாதிராசன் பட்டம் ஏற்றமை பற்றிக் கூறுகின்ற கல்வெட்டுக்கள் சிலவற்றைச் சரியாகக் கணக்கிடவில்லை. இராசாதிராசனின் ஆட்சித் தொடக்கம் கி. பி. 1163-க்குப்பின் இருந்தது என்பதனைச் சில கல்வெட்டுக்களில் காணலாம். இக் கல்வெட்டுக்கள், இவன் ஆட்சி கி. பி. 1166-இல் ஏதோ ஒரு நாளில் தொடங்கியது என்பதனை நம் கவனத்திற்குக் கொண்டுவருவன" என்று திரு. நீலகண்ட சாஸ்திரியார் தம் சோழர் வரலாற்றில் எழுதியுள்ளார்.[1]

திரு. வெங்கடசுப்பா அய்யர் அவர்கள் எபிகிராபியா இண்டிகா, 21-ஆம் தொகுதியில், 185-ஆம் பக்கத்தில் இது பற்றி விவாதித்துள்ளார். "திரு. கீல்ஹார்னின் கணக்கீட்டை ஏற்றுக்கொண்டால் இராசாதிராசன் கி. பி. 1163-இல் பட்டம் ஏற்றான் என்று கொள்ளவேண்டியுள்ளது. ஆனால் சில கல்வெட்டுக்களை (571/1907; 127 & 428/1912; 19/1913.) ஆராய்ந்தால் அவன் கி. பி. 1166-இல் பட்டம் ஏற்றவன் என்பது தெளிவாகும். ஆகவே இக் குழப்பங்கள் பிற்காலத்துக் கண்டுபிடிப்புக்களால்தான் நீக்கப்படவேண்டும்" என்று கூறியுள்ளார்கள்.

1. The Colas Vol. II. Part I, Pages 93-95.

பட்டியல் 1-இல் ஆட்சியாண்டுகளிலும் காலக் கணக்கீட்டிலும் குழப்பம் காணப்படுகிறது. அவற்றுள் இராசாதிராசன் எவ்வாண்டில் ஆட்சியைத் தொடங்கினன் என்பது தலையானதாகும். பட்டியலை நோக்கும்போது இராசாதிராசன் 24–7–62-க்கும், 19—11—64-க்கும் இடைப்பட்ட $2\frac{1}{2}$ ஆண்டுக்கால இடைவெளியில் உள்ள ஏதோ ஒரு நாளில் ஆட்சியைத் தொடங்கியதாகத் தெரிகிறது. அப்படியானல் 62-63 அல்லது 63-64 அல்லது 64–65 இவனுடைய முதலாட்சியாண்டாக அமையும். மூன்றுமே முதலாட்சியாண்டுகளா? தொடக்க ஆட்சியாண்டுபற்றிச் சரியாக வரையறுக்க இயலாத இக்கணக்கீடு எவ்வாற்ருலும் பொருத்தமற்றதாகும்.

## ஏற்றுக்கொண்டால் ஏற்படும் சிக்கல்கள்

சில குறைபாடுகளுடையதாயினும் இராசாதிராசன் கி. பி. 1163-இல் ஆட்சியைத் துவக்கினன் என்னும் கருத்தினை வாதத்துக்காக ஏற்றுக்கொள்வோம்.

திருமழபாடியில் இராசாதிராசனின் ஆருவது ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டொன்று உள்ளது.[2] இக் கல்வெட்டு, இரண்டாம் இராசராசனைப் பெரியதேவர் என்று கூறுகிறது. (பெரியதேவர் என்பது இறந்த அரசரை மரியாதை கருதிக் குறிக்கும் தொடராகும்) இராசாதிராசனின் இக்கல்வெட்டு, திரு. கீல்ஹார்னின் கணக்கீட்டின்படி கி. பி 1169-க்கு உரியதாகும். ஆனல் இராசராசனே கி.பி. 1172 வரை உயிருடன் இருந்தவன். இருந்த வேந்தனை இறந்தவனுக ஆக்கும் நிலை கி. பி. 1163-இல் இராசாதிராசன் ஆட்சியைத் தொடங்கினன் என்னும் கருத்தினுல் உருவாகும்.

---

2. Ins. No. 90 of 1920.

பல்லவராயன்பேட்டைச் சாசனம், முதலில் இறந்தவன் இராசராசன்; இவனுக்குப் பின்னால் இறந்தவன் பல்லவரையன் என்பதனை உணர்த்துவதாகும். இச் சாசனம் இராசாதிராசனின் எட்டாம் ஆட்சியாண்டுக்கு உரியதாகும். திரு. கீல்ஹார்னின் கணக்கீட்டின்படி இராசராசன் கி. பி. 1163-இல் ஆட்சியைத் துவக்கியவன் எனில் இச்சாசனம் கி. பி, 1170-71-க்கு உரியதாகும். இச்சாசன காலத்துக்கு முன்னர், அதாவது கி. பி. 1169—70-இலாவது இராசராசன் இறந்திருக்க வேண்டும். ஆனால் இராசராசன் கி. பி. 1172 வரை உயிருடன் இருந்தான் என்பது நாமறிந்த செய்தியாகும்; இதன்படி உயிருடன் இருந்த வேந்தனை இறந்தவனாக ஆக்கவேண்டிவரும்; ஆனால் இராசாதிராசன் கி. பி. 1166-இல் பட்டமேற்றவன் என்று கொண்டால், பல்லவரையன் இறந்த கி.பி.1174-க்கு இரண்டு ஆண்டுகட்குமுன் இராசராசன் இறந்தவனாகக் காணப்படுகிறான்.

எனவே, இராசாதிராசன் கி. பி. 1166-இல் ஆட்சியைத் துவக்கினான் என்னும் குழப்பங்களை நல்காததாக அமையும், கருத்தே கொள்ளற்பாலதாகும்.

## கி. பி. 1166-இல் ஆட்சியைத் தொடங்கினான்

கல்வெட்டு ஆய்வாளர், 'இராசாதிராசன் கி. பி. 1166-இல் ஆட்சியைத் தொடங்கினான்' என்றும் கணக்கிட்டுக் கூறியுள்ளனர். இம் முடிவுகாணத் துணைபுரியும் கல்வெட்டுக்களின் விவரங்கள் பட்டியல் (2)-இல் தரப்பட்டுள்ளன.

பட்டியல் 2

| சாசன எண் | கல்வெட்டு உள்ள ஊர் | ஆட்சி ஆண்டு | ஆட்சியாண்டின் நாள் | முதலாம் ஆண்டின் தொடக்க நாள் |
|---|---|---|---|---|
| 19/1913 | ஆடுதுறை | 5 | 12-10-1170 | 12-10-1166 |
| 311/1921 | திருக்கோயிலூர் | 7 | 21- 9-1172 | 21- 9-1166 |
| 251/1950-51 | திருக்குவளை | 10 | 26-12-1175 | 26-12-1166 |
| 428/1912 | வழுவூர் | 12 | 18- 8-1177 | 18- 8-1166 |
| 571/1907 | நந்தலூர் | 12 | 21- 1-1178 | 21- 1-1167 |

இரண்டாம் பட்டியலிலிருந்து இராசாதிராசனின் முதலாம் ஆட்சி ஆண்டுக்காலம் 18—8—1166-இலிருந்து 21-1-1167 வரை பரவியுள்ளதைக் காணலாம். ஆகவே இவன் கி. பி. 1166-இன் இடைப்பகுதிக்குமுன் திருஅபிஷேகம் செய்யப்பட்டுச் சோழ மன்னனானான் என்பது தெளிவு.

## தனியாட்சிக் காலம்

கி. பி. 1172-இல் இரண்டாம் இராசராசன் இறந்தான். கி. பி. 1178 ஜுலை 6-8-ஆம் தேதிகட்கிடையில் மூன்றாம் குலோத்துங்கன் பட்டம் ஏற்றான் என்று வரலாறு கூறுகிறது.[3] எனவே கி. பி. 1172 முதல் கி. பி. 1178 ஜுலை வரை இராசாதிராசன் முழு உரிமை படைத்தவனாக இருந்து தனி ஆட்சி நடத்தினான் எனலாம்.

## இரு வேந்தராண்ட காலம்

மூன்றாம் குலோத்துங்கன் இரண்டாம் இராசராசனின் மகன் என்பது நாம் அறிந்ததே. இவன் கி. பி. 1178-

3. Epi. Ind. IV, Page 266 & VIII, Page 264.

இல் ஆட்சியைத் தொடங்கினுன். ஆனால் இராசாதிராச னின் கல்வெட்டுக்கள் தமிழகத்தில் இவனுடைய 15-ஆம் ஆட்சி ஆண்டுவரை காணப்படுகின்றன. அதாவது இரா சாதிராசன் கி. பி. 1180 முடியத் தமிழகத்தில் இருந்தவன் என்பது புலனுகும். கி. பி. 1178 முதல் கி. பி. 1180 முடியக் குலோத்துங்கனுடன் இராசாதிராசனும் சேர்ந்து ஆட்சி புரிந்தான் எனலாம்.

கி. பி. 1180-க்குமேல் இராசாதிராசனுடைய கல் வெட்டுக்கள் ஆந்திராவில் காணப்படுகின்றன. அக் கல் வெட்டுக்களின் விவரம் பட்டியல் 3-இல் தரப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்கள் தென்னிந்திய சாசனத் தொகுதி 4-இல் வெளியிடப்பட்டுள்ளன. இப்பட்டியலில் இருந்து இராசாதிராசன் தமிழகத்தைவிட்டுச் சென்றபின் ஆந்திரா வில் கி. பி. 1215-16 வரை ஆட்சிபுரிந்தான் எனலாம்.

பட்டியல் 3

| சாசன எண் | ஆட்சி யாண்டு | கி. பி. ஆண்டு | சகர ஆண்டு |
|---|---|---|---|
| 1223 | 28 | 1193-4 | 1115 |
| 1331 | 28 | 1194-5 | 1116 |
| 1332 | 29 | 1195-6 | 1117 |
| 1279 | 35 | 1201-2 | 1123 |
| 1257 | 40 | 1205-6 | 1127 |
| 1118 | 47 | 1212-3 | 1134 |
| 1218 | 30 | 1196-7 | 1118 |
| 1092 | 31 | 1197-8 | 1119 |
| 215 | 35 | 1201-2 | 1123 |
| 1117 | (4) 6 | 1212-3 | 1134 |
| 1330 | 49 | 1215-6 | 1137 |

## இருவரிடை இலங்கும் இன்னுறவு

மூன்றும் குலோத்துங்கன் கி பி. 1178-இல் அரசு பொறுப்பேற்ருன். இந் நிகழ்ச்சிக்குப் பின்னுல், இரண்டு வருட காலம் வரை, இராசாதிராசன், குலோத்துங்கன் என்னும் இரண்டு அரசர்களுக்குரிய கல்வெட்டுக்களும் தமிழகத்தில் காணப்படுகின்றன. கி. பி. 1180-க்குப் பின்னுல், இராசாதிராசனுடைய கல்வெட்டுக்கள் தமிழகத்தில் காணப்பெறவில்லை; ஆந்திராவில் மட்டுமே காணப்பெறுகின்றன. இதற்குரிய காரணம் யாது என நோக்குவோம்.

பல்லவராயன்பேட்டைச் சாசனம், இராசராசன் தன் மகனுகிய குலோத்துங்கனும் இன்னெருவனும் சிறுவராக இருந்தமையால் இராசாதிராசனை அரசனுக்கினுன் என்று கூறுகிறது. வாரிசுகளுக்கு அரசேற்றற்கு உரிய வயது இல்லாமையால் அரசனுன இராசாதிராசன், குலோத்துங்கனுக்கு அரசேற்றற்குரிய பருவம் வந்தவுடன் சோழநாட்டு அரசு பொறுப்பினை அவனிடம் ஒப்படைத்தான்; இரண்டு ஆண்டுகள் குலோத்துங்கனுடன் இருந்து பின் வட மாநிலத்தில் பல்லாண்டுகள் அரசாண்டு மறைந்தான் என்பது தெள்ளிது.

## நட்புறவே நிலவியது

ஒருசில அறிஞர், "இராசாதிராசனுக்கும் குலோத்துங்கனுக்கும் இடையில் பகைமை உணர்வு இருந்தது" என்று கருதுவதும் உண்டு. ஆனுல், இராசாதிராசனுக்கும் குலோத்துங்கனுக்கும் இடையே பகைமை உணர்வு சிறிதும் இல்லை; நட்புறவே நிலவியது என்பது கல்வெட்டுக்களின் வாயிலாக அறியப்பெறுவதாகும்.

இராசாதிராசனை அடுத்துச் சோழநாட்டு அரசுரிமை யைப் பெற்றவன் மூன்றும் குலோத்துங்கனுவான். இவன் தனக்கு முன்னர்ச் சோழ நாட்டை ஆண்டவனுன இரா சாதிராசனைப் ‘ பெரியதேவர் இராசாதிராசதேவர் ’ என்று பெருமரியாதையுடன் குறிப்பிட்டுள்ளமையைக் கோவந்தப் புத்தூர், பெருஞ்சேரி ஆகிய ஊர்களில் அமைந்த சாசன வாயிலாக அறிகிறேம். (பெரியதேவர் என்னும் தொடர் தனக்கு முன்னராண்ட அல்லது இறந்துபோன அரசரை மரியாதையுடன் குறிக்கக் கூடியது; இராசாதிராசன் உயி ருடன் இருப்பினும் முன்னுல் சோழ நாட்டை ஆண்டு குலோத்துங்கனிடம் ஒப்படைத்தமைபற்றி இங்குப் பெரிய தேவர் எனப்பட்டுள்ளான்). (குலோத்துங்கனுக்குரிய, கோவந்தப்புத்தூரில் உள்ள 16-ஆம் ஆண்டுக் கல்வெட் டும்,[4] பெருஞ்சேரியில் உள்ள 28-ஆம் ஆண்டுக் கல் வெட்டும்[5] இராசாதிராசனைப் பெருமதிப்புடன் குறிப்ப தோடல்லாமல் அவனுட்சிக் காலத்தில் நிறுவப்பெற்ற அறச்செயல்களைக் குறைவின்றி நடத்த — விட்டுப்போன அறங்களை நிறுவச்செய்த செயல்களைக் குறிப்பனவாகவும் இருத்தல் நோக்குதற்குரியது.

இராசாதிராசனின் 13-15 ஆம் ஆட்சியாண்டுகளும், மூன்றும் குலோத்துங்கனின் 1—3-ஆம் ஆட்சியாண்டு களும் முறையே சமமானவை. கி பி. 1178-க்கும் 81-க் கும் இடையில் அமைந்துள்ள இரண்டாண்டுக்கால இடை வெளியில் இவ்விருவருடைய கல்வெட்டுக்கள் சோழ நாட்டில் — குறிப்பாக இராசதானியான பழையாறையை (மும்முடிச் சோழ மண்டலம்) சுற்றியுள்ள 50 மைல்

4. Ins, No, 189 of 1929.
5. Ins, No, 37 of 1925.

சுற்றளவில் அமைந்த அநேக தலங்களில் காணப்பெறு கின்றன. இவ்விருவரிடையே பகைமை உணர்வு இருந் திருக்குமாயின் சமகாலக் கல்வெட்டுக்கள் இருக்க நியாய மில்லை. **ஆகவே** இருவரும் நட்புரிமைகொண்டே வாழ்ந் தனர் என்பது உறுதி.[6] **(இருவரிடையிலும் நட்புறவே நிலவியது என்பது பின்னல் வரும் கட்டுரைகளில் விரிவாக விளக்கப்படும்).**

## இராசாதிராசனின் ஆட்சிக் காலங்கள்

இதுவரை கூறியவற்ருல்

| | | |
|---|---|---|
| இராசாதிராசன் முடி சூடியது | .... | கி. பி 1166 |
| இராசராசன் இறந்தது | .... | கி. பி. 1172 |
| இராசாதிராசன் முழு உரிமை பெற்றது | .... | கி. பி. 1172-78 |
| குலோத்துங்கன் அரசேற்றது | .... | கி பி. 1178 |
| குலோத்துங்கனும் இராசாதிராச னும் ஒன்ருக அரசு புரிந்தது | | கி. பி. 1178-80 |
| இராசாதிராசன் ஆந்திரத்தில் ஆண்டது | | கி. பி. 1181-1215 |

என்னும் செய்திகள் புலனுகும்.

---

**6. திரு. நீலகண்ட சாஸ்திரியாரின், ‘தென்னிந்திய வரலாறு’ “இராசாதிராசன், கி. பி. 1182 வரை தமிழகத்தில் இருந்தவன்” என்று கூறுகிறது.** A History of South India, **பக்கம் 196.**

# இராசாதிராசன் அரியணை ஏறிய நாள்

'பஞ்சாங்கம்' என்ற சொல்லுக்கு ஐந்து பாகங்கள் என்பது பொருள். அவை (1) வருடம், (2) மாதம், (3) நாள் அல்லது கிழமை, (4) திதி (வளர்பிறை அல்லது தேய்பிறை) (5) நக்ஷத்திரம் என்பன ஆகும்.

சாதாரணமாக, நாம் பஞ்சாங்கப் புத்தகத்தின் துணை கொண்டு நல்ல காரியங்கள், சுப முகூர்த்தங்கள் ஆகியவை களை நிர்ணயிக்கிறோம். அதேபோன்று சிறந்த நாட்கள் அல்லாதனவற்றில் முக்கிய காரியங்களைத் தொடங்குவ தில்லை. இவையெல்லாம் மனிதனின் சமய, சமூக ஒழுக லாற்றின் நம்பிக்கையைப் பொறுத்தது ஆனால் ஆராய்ச்சி யைப் பொறுத்த அளவில் பஞ்சாங்கக் குறிப்புக்கள் பெரி தும் துணைபுரிகின்றன. பஞ்சாங்கக் குறிப்புக்கள் சூரியன், சந்திரன், பூமி முதலிய கிரகங்கள், நக்ஷத்திரங்கள் ஆகிய வைகளின் கதியையும் நிலையையும் பொறுத்துக் கணிக்கப் படுகின்றன. இவைகளின் பூரணமான கணித இயல்முறை கள் இங்குத் தேவையில்லை. ஆனால் அக் குறிப்புக்களால் ஆராய்ச்சியாளர்கள் அடையும் பயனே முக்கியமானது.

## பஞ்சாங்கமும் கிறித்துவ ஆண்டும்

தற்காலத்தில் ஆண்டு, மாதம், தேதி முதலியன கிறித் துவ ஆண்டின் அடிப்படையில் புழக்கத்தில் உள்ளன. திரு. சுவெல், திரு. கீல்ஹார்ன், திரு. சுவாமிக்கண்ணுப் பிள்ளைபோன்ற பெரியோர்கள் பஞ்சாங்க விதிகளை ஆராய்ந் தனர். சுமார் 3000 வருடங்களுக்குப் பின்னேக்கிக் கணக் கெடுத்து, இம் மூவாயிரம் வருடங்களுக்குமுரிய பஞ்சாங்

கத்தைக் கணித, வான சாத்திரங்களின் துணைகொண்டு நிர்ணயித்தனர் இவை "எபிமரீஸ்" எனப்படும் தமிழில் 'காலக்கணக்கீடு' என்று கூறுவார்கள். இக்கணக்கீட்டுப் பகுதிகள் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. எபிமரீஸ் எனப்படும் காலக்கணக்கீடு ஆராய்ச்சிக்குப் பயன்படும் ஒரு அரிய பொக்கிஷம் ஆகும். ஐந்து அங்கங்களான வருடம், மாதம், திதி, கிழமை, நக்ஷத்திரம் ஆகியவைகளை அறிந்தால் 'எபிமரீஸ்' துணைகொண்டு கிறித்துவ ஆண்டைக் கணித்து விடலாம்.

## கல்வெட்டில் பஞ்சாங்கக் குறிப்புக்கள்

அரசர்கள் தாங்கள் வெளியிடும் சாசனங்களில் தங்கள் ஆட்சியாண்டைக் குறிப்பதுடன் சில சமயங்களில் பஞ்சாங்கக் குறிப்புக்களையும் கல்லில் வெட்டினார்கள். இக் குறிப்புக்களின் துணைகொண்டு "எபிமரீஸ்" மூலம் சாசனம் வெளியிடப்பட்ட கிறித்துவ ஆண்டை நிர்ணயிக்கலாம். இக்குறிப்புக்களில் வருடம் குறிக்கப்படாமல், மற்றைய பகுதிகளான மாதம், கிழமை, திதி, நக்ஷத்திரம் ஆகியவைகள் மட்டும் கொடுக்கப்பட்டிருக்குமானால், கிறித்துவ ஆண்டை நிர்ணயிப்பது கடினம்; இந்நான்கும் இதற்குக் குறைவான குறிப்புக்களும் போதுமானவை அல்ல. சிலசமயங்களில் இவை ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளைக் கொடுக்கும். சாசனத்தின் மற்றைய சரித்திர நிகழ்ச்சிகளைக் கொண்டுதான் சரியான வருடத்தைக் காணமுடியும்.

## இராசாதிராசன் காலக் கல்வெட்டுக்கள்

இதுவரை இராசாதிராசனின் காலத்தனவாகத் தமிழகத்தில் 82 கல்வெட்டுக்களுக்குமேல் படியெடுத்துள்ளனர்.

இவைகளில் சுமார் 27 கல்வெட்டுக்களில் பஞ்சாங்கக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இந்த 27 கல்வெட்டுக்களில் இரண்டே இரண்டு கல்வெட்டுக்களில்தான் முழுமையாக வருடம், மாதம், கிழமை, திதி, (வளர்பிறை, தேய்பிறை) நாள் ஆகியவைகள் காணப்படுகின்றன. மற்றைய 25 கல்வெட்டுக்களில் வருடம் காணப்படவில்லை. முழுமையான பஞ்சாங்கக் குறிப்புக்களுடன்கூடிய இவ்விரண்டு கல்வெட்டுக்களே ஆராய்ச்சிக்கும், நிலையான காலத்தை நிர்ணயிப்பதற்கும் ஏற்றவையாகும். அவைகளை நோக்குவோம்.

## நந்தலூர்க் கல்வெட்டு

நந்தலூர்க் கல்வெட்டு[1] இராசாதிராசனின் 12-ஆம் ஆட்சியாண்டிற்குரியது. இதில் குறிக்கப்படும் பஞ்சாங்கக் குறிப்புக்கள் (1) ஹேமளம்பி வருடம், (2) மகர மாதம் (தை மாதத்திற்குச் சமம்), (3) வளர்பிறை, பிரதமை (பூர்வ பக்ஷம்), (4) சனிக்கிழமை, (5) அவிட்ட நக்ஷத்திரம் என்பவை ஆகும். இவை முழுமையான பஞ்சாங்கக் குறிப்புக்கள். இவைகளை ஆய்ந்த திரு. சுவல் அவர்கள், 'எபிமரீஸ்' துணைகொண்டு இந்நாள் 1178-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதி என்று நிர்ணயித்தார். இக் கணிப்பு, பூரணமான அடிப்படையில் எழுந்ததால் பெரிதும் நம்பகமான கணிப்பாகும்.

## திருப்பாச்சூர்க் கல்வெட்டு

இக் கல்வெட்டு[2] இராசாதிராசனின் 9-ஆம் ஆட்சியாண்டுக்குரியது. இக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள

1. Epigraphia Indica, Vol, 10, Page 127.
2. Ins. No. 134 of 1929-30.

பஞ்சாங்கக் குறிப்புக்கள் (1) சக ஆண்டு - 1095, (2) மாசி மாதம், (3) சுக்கில பக்ஷம் (வளர்பிறை) திரயோதசி, (4) ஞாயிற்றுக்கிழமை என்பவை ஆகும். 'எபிமரீஸ்'[3] துணைகொண்டு, திருப்பாச்சூர்க் கல்வெட்டு, 17-2-1174 -க்கு உரியது என்பதனைக் கண்டேன்.

## நந்தலூரும் திருப்பாச்சூரும்

நந்தலூர், திருப்பாச்சூர்க் கல்வெட்டுக்களின் காலக் கணக்கீடுகளைக்கொண்டு இராசாதிராசனின் முதலாம் ஆட்சியாண்டினை நோக்குவோம்.

| ஆட்சி ஆண்டு | நந்தலூர்க் கல்வெட்டுப்படி | திருப்பாச்சூர்க் கல்வெட்டுப்படி |
|---|---|---|
| 12 | 21—1—1178 | |
| 11 | 21—1—1177 | |
| 10 | 21—1—1176 | |
| 9 | 21—1—1175 | 17—2—1174 |
| 8 | 21—1—1174 | 17—2—1173 |
| 7 | 21—1—1173 | 17—2—1172 |
| 6 | 21—1—1172 | 17—2—1171 |
| 5 | 21—1—1171 | 17—2—1170 |
| 4 | 21—1—1170 | 17—2—1169 |
| 3 | 21—1—1169 | 17—2—1168 |
| 2 | 21—1—1168 | 17—2—1167 |
| 1 | 21—1—1167 | 17—2—1166 |
| 0 | 21—1—1166 | 17—2—1165 |

இப்பட்டியலிலிருந்து இராசாதிராசன் 21-1-1166 -லிருந்து 17-2-1166-க்குள் உள்ள ஏதோ ஒரு நாளில் அரியணை ஏறினான் என்பதனை அறியலாம்.

3. Indian Ephimeris A. D. 700 to A. D. 1799; by L. D. Swamikannu Pillai. Vol. I. Part I

இக்கணக்கீட்டில் கல்வெட்டின் கிறித்துவ ஆண்டைக் கணித்து, பிறகு பின்னோக்கிச் சென்றோம். இது சரித்திர ஆராய்ச்சியில் நடைமுறையில் உள்ளதுதான். ஆனால் அக்காலத்திய அரசர்கள், இக்காலத்திய "காலண்டர் வருட முறை"யை (Calendar year) பின்பற்றவில்லை. ஒரு மன்னன் எவ்வாண்டில், எந்த ஒரு மாத, திதி, நக்ஷத்திரத்தில் அரியணை ஏறினானோ, அதற்கு அடுத்த ஆண்டு அதே மாத திதி நக்ஷத்திரத்தையே தன் இரண்டாம் ஆண்டாகக் கொள்ளுவான்[4] (பஞ்சாங்கத்தின் மூலம் பிறந்த நாளைக் கணக்கிடுவதுபோல). இம் முறையின்படி, நந்தலூர், திருப்பாச்சூர்க் கல்வெட்டுக்களின் பஞ்சாங்கக் குறிப்புக்களை முழுமையாகக் கி. பி. 1166-க்குக் கொண்டு செல்ல வேண்டும். இதன் விபரம்வருமாறு:

| பஞ்சாங்கக் குறிப்புக்கள் | 1166-இல் எபிமரீஸ்படி | ஆட்சி ஆண்டு |
|---|---|---|
| தை மாதம், பூர்வ பக்ஷம் பிரதமை அவிட்ட நக்ஷத்திரம் | 4-1-1166 | 0 |
| மாசி மாதம், பூர்வ பக்ஷம், திரயோதசி | 14-2-1166 | 1 |

இப்பட்டியலின்படி இராசாதிராசன் அரியணை ஏறிய நாள் 4—1—1166-க்கும், 14—2—1166-க்கும் இடையில் உள்ளதனை அறியலாம். ஆலங்குடியில் இராசாதிராசனின் 6-ஆம் ஆட்சியாண்டிற்குரிய கல்வெட்டொன்று உள்ளது.[5] இதில் மாதம் காணப்படவில்லை. மற்றைய பஞ்சாங்கக் குறிப்புக்களான, சுக்கில பக்ஷத்துத் திரயோதசி, புஷ்ய

4. A. R. E. 1947/48 Page 3
5. Ins. No. 504 of 1920

நக்ஷத்திரம், புதன் கிழமை ஆகியவைகள் கூறப்பட்டுள்ளன. சுக்கில பக்ஷத்துத் திரயோதசியும், புஷ்ய நக்ஷத்திரமும் தை மாத அமாவாசைக்குப் பிறகுதான் இணைந்து வருவன ஆகும். ஆகவே இக்கல்வெட்டின் காலம் 21—1—1171 ஆகும். இதிலிருந்து முதலாம் ஆண்டாகிய 1166-இன் தை மாதச் சுக்கில பக்ஷத்துத் திரயோதசி, புஷ்ய நக்ஷத்திரத்திற்குரிய நாள் 16—1 —1166 என்பதனைக் காணலாம். **ஆகவே இராசாதிராசன் 4-1-1166-க்கும் 16-1-1166-க்கும் இடையில் உள்ள ஏதோ ஒரு நாளில் அரியணை ஏறினன் என்று துணிந்து வரையறுக்கலாம். இதுவே துல்லியமான (absolute perfection) கணக்கீடாகும்.**

## 1163-ஆட்சித் தொடக்கமா ?

"இராசாதிராசன், கி. பி. 1163 மார்ச்சில் முடி சூடியவன்" என்னும் கருத்திற்கு இணைந்த, திரு. கீல்ஹார்ன் அவர்களின் காலக்கணக்கீடு முதன்முதல் 1907–8-ஆம் வருடத்திய எபிகிராபியா இண்டிகா தொகுதி 9-இல், பக்கம் 211-இல் வெளியிடப்பட்டது. இக் கணக்கீடு, 1904-ஆம் ஆண்டுவரை கண்டுபிடிக்கப்பட்ட 5 கல்வெட்டுக்களையே ஆதாரமாகக் கொண்டது. இக் கல்வெட்டுக்களில் வருடத்தின் பெயர் காணப்படவில்லை. ஆனால், திரு. கீல்ஹார்ன் அவர்கள், "தான் இக் கணக்கீட்டை, இராசாதிராசன் கி. பி. 1163-இல் முடிசூடியவன் என்னும் ஊகத்தின்பேரில் (Assumption) செய்ததாகக்" கூறியுள்ளார்கள்.[6] வருடமில்லாத மற்றைய பஞ்சாங்கக்

6. "The first four dates work out regularly on the assumption that this King commenced to reign between (approximately) the 28th February and the 30th March A. D. 1163" – Professor F. Kielhorn, Ep. Ind. Vol. 9, Page 211. assumption என்ற சொல்லைக் கவனிக்கவும்.

குறிப்புக்களைக்கொண்டே கீல்ஹார்ன் அவர்கள் இக் கணக்கீட்டினைக் கணித்துள்ளார். பிற்காலத்தில், இன்றுவரை கண்டுபிடிக்கப்பட்ட இராசாதிராசனின் கல்வெட்டுக்கள் பல இக் கணக்கீட்டிற்கு ஒத்துவரவில்லை. ஆனால் திரு. கீல்ஹார்ன் போன்ற பெரியோர்களைக் குறைகூற முடியாது. 1907-இல் அவர்கள் கொண்ட கருத்து, ஊகத்தின் அடிப்படையில் (Assumption) எழுந்ததுதான். கிடைத்திருக்கும் ஆதாரங்களைக்கொண்டே இவ்வாறு தான் கருதுவதாகத் திரு. கீல்ஹார்ன் கூறினர்.[7] அது அன்றைய நிலை. கி. பி. 1166-ஐத் தொடக்கமாகக் கொள்ளலாம் என்பதற்கு ஆதாரமான கல்வெட்டுக்கள் திரு. கீல்ஹார்ன் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்குள் அப்பெரியார் மறைந்துவிட்டார்.

வருடத்தின் பெயருடன்கூடிய நந்தலூர்க் கல்வெட்டைத் திரு. சுவல் அவர்கள் 1909-இல் ஆராய்ந்தார். இவர் இக்கல்வெட்டில், ஆண்டு (1) 2 என்று தெளிவாக உள்ளதை,15 என்று திருத்திப் படிக்கச்சொன்னர்.[8] நந்தலூர்க் கல்வெட்டு ஒளி தருவதாய் இருந்தும், இதில் அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை.' சகர ஆண்டுடன்கூடிய திருப்பாச்சூர்க் கல்வெட்டும் கவனிக்கப்படவில்லை. இவ்விரண்டு கல்வெட்டுக்களின் துணைகொண்டு பிற்காலத்தில் சுமார் 70 வருடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட இராசாதிராசனின் கல்வெட்டுக்களை ஆராய்ந்து ஆட்சியாண்டுகளைப்

---

7. " From the materials available I therefore infer..." Prof. F. Kielhorn, Ep. Ind. Vol. 9, Page 213.

8. இத் தொகுப்பைப் பதிப்பித்த திரு. ஹால்ஷ் அவர்களும் திரு. வெங்கையா அவர்களும் 'கல்வெட்டில் (1) 2 என்றுதான் உள்ளது' எனக் கூறியுள்ளார்கள். Ep. Ind. Vol. 10, Page 127.

பரிசீலித்திருக்கலாம். ஆனால், "இராசாதிராசன் கி. பி. 1163-இல் அரியணை ஏறியவன்" என்று முதன் முதலாக 1907-இல் ஏற்பட்ட கருத்தும், பல்லவராயன்பேட்டைச் சாசனத்தின் பழைய விளக்கங்களும் இன்றுவரை பின் பற்றப்பட்டுள்ளன.

இராசாதிராசன் கி. பி. 1166-இல் தான் அரியணை ஏறியவன் என்பதனை நாம் நிரூபித்துள்ளோம்.[9] இதனை வரலாற்று உலகம் ஏற்குமாக.

**பின் குறிப்பு :** வருடம், மாதம், திதி, கிழமை, நக்ஷத்திரம் ஆகிய 5 அங்கங்களைக்கொண்ட பஞ்சாங்கக் குறிப்புக்களே சரியான காலத்தை வரையறுக்கத் துணைசெய்யும்; வருடம் இல்லாத மற்றைய குறிப்புக்களால் முடிவான காலத்தைக் காணுதல் கடினம் என்பது இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.



---

9. கணித வல்லுநர்கள் இக்கருத்தின் அடிப்படையில் இராசாதிராசனின் ஆட்சியாண்டுக் கணக்கீடுகளைச் சரியான பஞ்சாங்கக் குறிப்புக்களுடன் மறுபடியும் கணித்தால், முறையான கிறித்துவ ஆண்டு, மாதம், தேதி ஆகியவைகளை நிச்சயமாகக் காணலாம்.

# இராசாதிராசனின் இறுதி ஆட்சியாண்டு

கி. பி. 1166-இல் அரியணை ஏறிய இரண்டாம் இராசாதிராசன், சோழ நாட்டை எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் ? சோழ நாட்டில் இவனுடைய இறுதி ஆட்சியாண்டு எது ? என்பதனை நோக்குவோம்.

இராசாதிராசனின் பிற்கால ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்களில் 13, 14-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் சோழ நாட்டில் அனேக தலங்களில் காணப்படுகின்றன. ஆகவே இவன் கி. பி. 1180 வரை முழுமையாக ஆட்சி புரிந்தான் என்பது திண்ணம். 14-ஆம் ஆட்சியாண்டுக்கு மேல் இவனது கல்வெட்டுக்கள் உள்ளனவா ? அவை யாவை ? என்பதையும் ஆராய்வோம்.

## திருவதிகைக் கல்வெட்டு

திருவதிகை வீரட்டானமுடையார் ஆலயத்தில் இராசாதிராசனின் கல்வெட்டு ஒன்று உள்ளது.[1] இதில் உள்ள பஞ்சாங்கக் குறிப்புக்களைக்கொண்டு, இச் சாசனத்தின் காலம் 16-11-1178-க்குச் சமம் என்று சாசன இலாக்காவின் அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ளது.[2] ஆய்வாளர் இக்காலக் கணக்கீட்டைக்கொண்டும், இராசாதிராசன் கி. பி. 1163-இல் அரியணை ஏறியவன் என்ற கருத்தின் அடிப்படையிலும், இச் சாசனம் இராசாதிராசனின் 16-ஆம் ஆட்சியாண்டுக்குரியது என்று முடிவுகட்டினர்.

---

1. Ins. No. 389 of 1921.
2. A. R. E. 1921-22, Page, 84.

ஆனால் ஆண்டு அறிக்கையில், "இக்கல்வெட்டு (16)-ஆவது ஆட்சியாண்டிற்கு உரியது" என்றுதான் வெளியிட்டிருக் கிறார்கள். அதாவது, கல்வெட்டில் ஆட்சியாண்டு சரி யாகக் காணப்படவில்லை; ஆகவே ஊகித்து நிரப்பப் பட்டது என்பதனையே ( ) என்னும் அடைப்புக்குறி உணர்த்துகிறது.

"இராசாதிராசன் கி. பி. 1166-இல் அரியணை ஏறிய வன். 21—1—1178-க்கு உரிய நந்தலூர்க் கல்வெட்டே 12-ஆம் ஆட்சியாண்டுக்குரியது. ஆகவே, 16-11-1178க்கு உரிய திருவதிகைக் கல்வெட்டு 13-ஆம் ஆட்சியாண் டுக்கு உரியதாகத்தான் இருக்கவேண்டும்" என்னும் ஐயம் என்னுள் உருவாகியது. இதை நேரடியாகக் காணத் திருவதிகை என்னும் தலத்திற்குச் சென்று சாசனத்தை நேரில் கண்டு படி எடுத்தேன். இச்சாசனம் பழைய வாகன மண்டபத்தின் சுவரிலும், இதன் தொடர்ச்சி வெளிப்பிரகாரத்துச் சுவரிலும் வெட்டப்பட்டுள்ளது. இத் தொடர்ச்சியில், "ராஜாதிராஜதே......... ௩ ஆவது" என்று காணப்படுகிறது. மூன்றிற்குரிய '௩' என்னும் இலக்கத் தின் முன்பகுதியின்கால் சிறிது உடைந்துள்ளது. இதனை, "ராஜாதிராஜதேவர்க்கு யாண்டு ௰௩ ஆவது" என்றுதான் கொள்ளவேண்டும் ஆகவே இத் திருவதிகைக் கல்வெட்டு இராசாதிராசனின் 16-ஆம் ஆட்சியாண்டுக்குரிய கல் வெட்டு அன்று. இது அவனுடைய 13-ஆம் ஆட்சியாண் டுக்கே உரியது. இக் கல்வெட்டை அவனுடைய இறுதி ஆட்சியாண்டுக் கல்வெட்டாகக் கொள்ளமுடியாது.

## இறுதி ஆட்சியாண்டுக் கல்வெட்டு எது ?

பல்லவராயன்பேட்டையில் இராசாதிராசனின் 15-ஆம் ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று உள்ளது.[3] இச் சாசனத்தில், "பூமருவிய திருமாதும்" என்னும் இரண்டாம் இராசராசனுடைய மெய்க்கீர்த்தியும், 'பரகேசரி' என்னும் பட்டமும் இராசாதிராசனுக்கு உரியதாகக் கூறப்பட்டுள்ளன. ஆய்வாளர் இச் சாசனத்திற்கு இரண்டு காலக்கணக்கீட்டைத் தந்தனர்.[4]

முதல் கணக்கீட்டின்படி, "இச்சாசனம் 12-6-1178-க்கு உரியது என்று கொள்ளலாம்; ஆனால் இராசாதிராசன் கி. பி. 1163 மார்ச்சில் முடிசூடியவனாகக் கொண்டால் ஆட்சியாண்டு 16 என்று அல்லவா வரவேண்டும்; கல்வெட்டில் 15 என்றுதான் உள்ளது; மேலும் "பூமருவிய திருமாதும்" என்னும் மெய்க்கீர்த்தி உள்ளது. இராசாதிராசன் பரகேசரி என்று இராசராசனுடைய பட்டப் பெயரால் அழைக்கப்படுகிறான். ஆகவே, இக் கல்வெட்டு இராசாதிராசனுடையது அன்று; இது இரண்டாம் இராசராசனுக்கு உரியதாகலாம்" என்ற முடிவுக்கு ஆய்வாளர் வந்தனர்.

இரண்டாவதான காலக்கணக்கீட்டின்படி, "இக் கல்வெட்டின் காலம் 19-6-1161-க்குச் சமமாகும். ஆகவே இது இராசராசனின் 15-ஆம் ஆட்சியாண்டுக்குரியது. கல்வெட்டில் இராசராசன் என்பதற்குப் பதிலாக இராசாதிராசன் என்று தவறுதலாக வெட்டப்பட்டுள்ளது" என்றும் ஆய்வாளர் முடிவுகட்டினர்.

---

3. Ins. No. 11 of 1925

4. The Colas. Vol. II, Part II, Page 654

ஆய்வாளர்களின் இம் முடிவை ஆராய்வோம்.

இராசாதிராசன் இராசராசனின், மெய்க்கீர்த்திகளை முழுமையாகவோ அல்லது தொடக்கமாகவோ தனக்கும் உரியதாகப் பல சாசனங்களில் வடித்துள்ளான். இதனை அடுத்துவரும் பகுதிகளில் விரிவாகக் காணலாம். ஆகவே மெய்க்கீர்த்தி ஒரு பிரச்சனை அன்று. இராசாதிராசன், இராசராசன் ஆகியோருடைய கல்வெட்டுக்கள் சிலவற்றில் பரகேசரி, இராசகேசரி என்னும் பட்டப் பெயர்கள் மாறிமாறி வந்துள்ளன. இவ்வாறு பட்டப்பெயர்கள் மாறி வருதல் இவ் விருவரிடையே சாதாரணமாகக் காணப்படுகின்றது என்று திரு. ஹூல்ஷ் அவர்களும் கூறியுள்ளார்கள்.[5] இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டப்பெயர்கள், முதற் குலோத்துங்கன், மூன்ரும் குலோத்துங்கன் ஆகியோருடைய கல்வெட்டுக்களில்கூட, சில இடங்களில் மாற்றி இடப்பட்டுள்ளன. ஆகவே இப் பட்டப் பெயர் மாற்றி இடப்படுவது ஒரு பிரச்சனை ஆகாது. இக்கல்வெட்டில் "ராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு பதிநஞ்சாவது" என்று தெளிவாகக் காணப்படுகிறது.[6] சாசன அறிக்கைகளிலும் அவ்வாறே வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே, இக் கல்வெட்டு இராசாதிராசனுடையதுதான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆய்வாளர்களின் கருத்தின்படி இக் கல்வெட்டு இராசராசனுக்கு உரியது; இதன் காலம் 19-6-1161 என்பதை வாதத்திற்காக ஏற்ருல்,

---

5. S. I. I. Vol. 3, Page 207

6. நேரில் சென்று இக் கல்வெட்டைப் படித்து, இப் பகுதியைப் படி எடுத்தேன்.

(1) ஆய்வாளர் கருத்தின்படி எதிரிலிப்பெருமாள் என்பவன் கி. பி. 1163-இல் முடிசூடி, கி. பி. 1166-இல் அல்லவா இராசாதிராசன் என்ற அபிஷேக நாமம் ஏற்கிருன் ?

(2) கி. பி. 1166-இல் இராசாதிராசன் என்று ஒருவனுக்கு இடப்போகும் அபிஷேக நாமத்தை ஐந்து வருடங்களுக்குமுன் 1161-இல் எப்படித் தவருக எழுத முடியும் ? 1161-இல் இராசாதிராசன் என்ற ஒரு பெயரே இல்லையே ; இல்லாத ஒரு பெயரை முன்கூட்டியே எப்படித் தவருகச் சாசனத்தில் வடிக்க முடியும் ? என்ற வினக்கள் எழுகின்றன. ஆகவே இக் கணக்கீடு முன்னுக்குப்பின் முரணுக உள்ளது என்பதை அறியலாம். எனவே இச் சாசனத்தை வேறு விதத்தில் நோக்குவோம்.

## கி. பி. 1180 ஜூன் மாதம்

இக் கல்வெட்டு இராசாதிராசனின் 15-ஆம் ஆண்டுக்கு உரியது. கல்வெட்டில் மிதுன மாதம் என்று உள்ளது. இராசாதிராசன் கி. பி. 1166-இல் ஜனவரியில் முடிசூடியவன். ஆகவே இராசாதிராசனின் 15-ஆம் ஆட்சியாண்டுக்குரிய பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டு கி. பி. 1180 ஜூன் மாதத்திற்கு உரியது என்பதனை அறியலாம். இதுவே இவனுடைய இறுதி ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இவ்வாய்வுகளுக்குப்பின் தொகுத்து நோக்கினல் பின்வருமாறே முடிவு காணவேண்டும்.

**கி. பி. 1166-ஜனவரியில் இராசாதிராசன் அரியணை ஏறினன் ; சோழ நாட்டில் 14 வருடங்கள் முழுமையாக ஆட்சி புரிந்தான். கி. பி. 1180 ஜூனுக்குமேல் ஆந்திராவில் சென்று நிலையாகத் தங்கி ஆட்சி புரிந்தான்.**

கி. பி. 1178 ஜூலையில் குலோத்துங்கன் அரியணை ஏறியவன்; கி. பி. 1180 ஜூன் முடிய இவனுக்கு இரண்டு ஆட்சியாண்டுகள் நகருகின்றன. ஆகவே இராசாதி ராசன் கி. பி. 1178-இலிருந்து 1180 வரை குலோத் துங்கனுடன் இணைந்து ஆட்சி புரிந்து, பின் ஆந்திரம் சென்றான்.

## ஆந்திராவில் இராசாதிராசன்

ஆந்திராவில் இராசாதிராசனின் 16-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது.[7] ஆகவே இவன் ஆந்திராவில் 16-ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியைத் தொடங் கினான் என்பது உறுதி. இவனது கல்வெட்டுக்கள் ஆந்தி ராவில் 49-ஆம் ஆட்சியாண்டு வரை காணப்படுகின்றன. ஆகவே, இராசாதிராசன் கி. பி. 1215 வரை ஆந்திராவில் ஆட்சி புரிந்தான் எனலாம்.[8]

7. S. I. I. Vol. IV, 1074; பேராசிரியர், திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் இக் கல்வெட்டினை ஆய்ந்து, இது 'இராசாதி ராசனின் 16-ஆம் ஆட்சியாண்டுக்குரியது' என்று கூறியுள்ளார்கள்' The Colas; Reprinted 1975, Page 358.

8. S. I. I. Vol. IV, 1330.

# காஞ்சீபுரம் கல்வெட்டில் ஒரு புதிர்

காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் இராசாதிராச னின் எட்டாம் ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டொன் றுள்ளது. இக் கல்வெட்டை 1893-ஆம் ஆண்டு தொல் பொருள் இலாகாவினர் படி எடுத்து 7-ஆம் எண்கொண்ட சாசனமாக ஆங்கிலக்குறிப்பை மட்டும் வெளியிட்டுள் ளனர். இதன் மூலப்பகுதியை 1903-இல் தென்னிந்திய சாசனங்கள் மூன்றும் தொகுதியில் 207-ஆம் பக்கத்தில் திரு. ஹுல்ஷ் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

## கல்வெட்டிலமைந்த காலக்குறிப்பு

இச் சாசனத்தின் முதலிருவரிகள் ஆராய்ச்சிக்குரியன. இப்பகுதி "இராசாதிராசனின் 8-ஆவது வருடத்துக்கு முன்னுல் இருப்பதும், இராசராசனின் ஏதோ ஒரு வருடத் தில் இருந்து தொடங்குவதுமான கால இடைவெளியில் 15 வருடங்கள் இருக்கின்றன" என்னும் வரையறையைத் தருகிறது.

1. ஸ்வஸ்திஸ்ரீ கட(ல்) சூழ்ந்த பார்மாத(ரு)ம்... ...............கொப்பரகேஸரிபங்மரா(ன திரு) புவனச்சக்கர வர்த்திகள் ஸ்ரீ ராஜாதிராஜதேவர்க்கு யாண்டு அ ஆவது கார்த்திகை மாஸத்து முதற்றியதிநாள் உடையார்

2. ராஜராஜ (தே) தவர்க்கு யாண்டு ய (கூ) ஆவது தை மாஸ முதல் திருபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு அ ஆவது ஐப்பசிமா(ஸ)ம் (வ)ரை யாண்டு பதினைஞ்சில்–என்பது ஆராய்ச்சிக்குரிய அப்பகுதி

யாகும். இச்சாசனத்தை 1893-இல் படி எடுத்து ஆராய்ந்தோர், இராசராசனின் 19 ஆம் ஆட்சியாண்டிற்கும் இராசாதிராசனின் 8-ஆம் ஆட்சியாண்டிற்கும் நடுவில் 15 வருடங்களிருக்கின்றன என்ற முடிவுக்கு வந்தனர்.

## ஆராயவேண்டியதென்ன ?

இக்காஞ்சிக் கல்வெட்டு இராசாதிராசனின் 8-ஆம் ஆட்சியாண்டிற்கும், இராசராசனின் ஆட்சிக் காலப் பகுதியில் அமைந்ததான ஏதோ ஒரு ஆட்சியாண்டிற்கும் நடுவில் பதினைந்தாண்டுக் கால இடைவெளி இருக்கிறது என்பதனைத் தெரிவிக்கிறது. இரண்டாம் இராசராசன் கி. பி. 1146-இல் பட்டமேற்றவன் என்பது வரலாற்றறிஞர் அனைவர்க்கும் ஒப்ப முடிந்த கூற்றாகும். கல்வெட்டில் உள்ள இராசராசனுடைய ஆட்சியாண்டின் உருவம் வரலாற்றறிஞரால் ஓர் எண்ணிட்டு நிரப்பிப் பெற்றதாகும். எனவே இராசாதிராசனின் 8-ஆம் ஆட்சியாண்டுக்குப் பதினைந்தாண்டுக்கால இடைவெளிக்கு முன்னரமையும் இராசராசனுடைய ஆட்சியாண்டு எது என்பது ஆய்வுக்குரியதாகும். இவ்வாராய்ச்சிக்கு முடிவு கண்டால் இராசாதிராசன் எவ்வாண்டில் ஆட்சியைத் தொடங்கினன் என்பது உறுதியாகும்.

## 1904-ஆம் ஆண்டறிக்கையில்

1904-ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டாண்டறிக்கையில் திரு. வெங்கையா அவர்கள் இக்கால இடைவெளியைப் பற்றிச் சிந்தித்துள்ளார். இவ்வறிக்கையில்[1]

"1903-4-ஆம் ஆண்டுகளில் சோழர் சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சியில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

1. A. R. E. year 1904, Part II, Page 12, pp. 21.

பேராசிரியர் திரு. கீல்ஹார்ன் அவர்கள் கல்வெட்டுக்களை ஆராய்ந்து இரண்டாம் இராசராசன் கி. பி. 1146-இல் பட்டத்திற்கு வந்தவன் என்று கணித்துள்ளார்கள். காஞ்சீ புரம் கல்வெட்டின் வாயிலாக இராசராசனின் 19-ஆம் ஆட்சியாண்டின் 15 வருடங்களுக்குப் பிறகு இராசாதிராச னின் 8-ஆம் ஆட்சியாண்டு தொடர்கிறது என்பதை அறி கிறோம். ஆகவே இராசாதிராசன் கி. பி. 1171—2-இல் பட்டமேற்றவன்" என்று திரு. வெங்கையா அவர்கள் எழுதியுள்ளார்கள்.

திரு. வெங்கையா அவர்கள் இராசராசனின் 19-ஆம் ஆண்டு என்னும் முடிவினை ஒத்துக்கொண்டார். இதன் படி 15 வருட இடைவெளிக்கு முன்னர் அமையும் கி. பி. ஆண்டு 1165 ஆகும். இடைவெளிக்குப் பின்னமையும் ஆண்டு கி. பி. 1180 ஆகும். கி. பி. 1180 என்பது இராசாதி ராசனின் 8-ஆவது ஆட்சியாண்டாதலினால் இவன் கி. பி 1171-2-இல் ஆட்சி ஏற்றவன் என்று முடிவு கட்டினார்.

இவ்வறிக்கை எழுதப்பெற்ற 1904-க்குப் பின்னர் சோழர் சரித்திர சம்பந்தமான புதிய செய்திகளைத் தரக் கூடிய கல்வெட்டுக்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அக்காலநிலையில் திரு. வெங்கையாவின் கூற்று ஒளிதரு வதாக இருந்தாலும் இன்றுள்ள கல்வெட்டாதாரங்களின் அடிப்படையாக நோக்கினால் இராசாதிராசன் கி. பி. 1171-2-இல் பட்டத்திற்கு வந்தவனல்லன் என்பது புலனாகும். எனவே இக்கல்வெட்டில் இராசராசனின் 19-ஆம் ஆட்சி யாண்டு குறிக்கப்படவில்லை என்பது நிச்சயம்.

### கல்வெட்டில் உள்ள புதிர்

கல்வெட்டு வாசகத்தை உற்று நோக்குதல் வேண்டும். கல்வெட்டில் இராசராசனது ஆட்சியாண்டுகளைக் காட்டும்

எண்களின் முழுவுருவமும் இல்லை. பத்து என்பதனைக் குறிக்கும் ஒரே ஒரு குறியீட்டெண்ணாகிய ம என்பது மட்டும் காணப்படுகிறது. அவ்வெண்ணின் பின்னர் ஏதோ ஒரு எண் மட்டும் இருக்கவேண்டும். அது, 1-ஆகவும் இருக்கலாம் அல்லது 9-ஆகவும் இருக்கலாம்.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். கல்வெட்டு இராசராசனின் 11-ஆம் ஆட்சியாண்டிலிருந்து 19-ஆம் ஆட்சியாண்டு வரையில் அமைந்த 9 ஆண்டுகளில் ஏதோ ஓராண்டைக் குறிக்கிறது. அந்த ஆண்டு எது? மறைந்த இடத்தில் எந்த ஒரு இலக்கம் இடப்படவேண்டும் என்பதே காஞ்சீபுரம் கல்வெட்டின் புதிர்.

## இராசாதிராசன் பட்டம் ஏற்ற காலம்

வரலாற்றுய்வாளர் இராசாதிராசன்

1. கி. பி. 1163-இல் பட்டம் ஏற்றான்
2. கி. பி. 1166-இல் பட்டம் ஏற்றான் என்னும்

இருவிதக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு உள்ளனர். இவ்விரண்டில் கி. பி. 1163 என்பதை ஏற்காது கி. பி. 1166 என்பதே சரியானதாகும் என்பதை 'இரண்டாம் இராசாதிராசன் காலம்' என்னும் கட்டுரையில் விளக்கியுள்ளோம்.

## 1163-இன் அடிப்படையாக நோக்கினால்

இருந்தபோதிலும் இராசாதிராசன் "கி. பி. 1163 மார்ச்சில் அரியணை ஏறினான்" என்னும் திரு. கீல்ஹார்னின் கருத்தை வாதத்திற்காக ஏற்று இச்சாசனத்தை நோக்குவோம். காஞ்சீபுரம் கல்வெட்டு இராசாதிராசனுடைய எட்டாம் ஆட்சியாண்டாகிய கி. பி. 1170-71-இல் வெட்

டப்பட்டது. இதனுள் ஐப்பசி மாதத்திற்குமுன் அமைந்த பதினைந்து வருடக் கால இடைவெளி பேசப்படுகிறது. அதனை நோக்குவோம்.

1. இராசாதிராசனின் 8-ஆம் ஆண்டு என்பது கி. பி. 1170 மார்ச் முதல் கி. பி. 1171 பிப்ரவரி வரையுள்ள பகுதி. ஐப்பசி மாதம் என்பது கி. பி. 1170 அக்டோபர் மாதப் பகுதியாகும். (2) கி. பி. 1170-இன் ஐப்பசிக்கு பதினைந்து வருடங்களுக்கு முன்னுள்ள தைமாதம் என்பது கி பி. 1156 ஜனவரியாகும். இது இராசராசனின் காலத்திற்குரியது. (3) இராசராசன் கி. பி. 1146-இல் பட்டமேற்றவன் என்பது உறுதி. எனவே கி. பி. 1156 ஜனவரி என்பது இவனுடைய 10-ஆம் ஆட்சியாண்டுதான் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.[2]

காஞ்சிக் கல்வெட்டு, 'உடையார் ராஜராஜதேவர்க்கு யாண்டு ய ( ) ஆவது தை மாஸமுதல்' என்று கூறு கிறது. இப்பகுதியில் கல்வெட்டில் 10 என்பதனை உணர்த் தும் 'ய' என்னும் தனிக்குறியீடு உள்ளது. தற்காலத்தில் 10 என்பதனை எழுத 1 என்னும் எண்ணினையும் 0 என் னும் குறியீட்டையும் இட்டு 10 என்று இடமதிப்பு முறை யில் எழுதுவதுபோல அக்காலத்தில் எழுதுவதில்லை. தனிக்குறியீடாகிய 'ய' என்பதனையே கையாளுவர். '0' என்பதற்குரிய குறியீட்டைக் கையாளும் வழக்கம் முன்

---

2. Ins. No. 136 of 1929-30 :—திருப்பாச்சூர்க் கல்வெட்டு இரண்டாம் இராசராசனின் 11-ஆம் ஆட்சியாண்டுக்கு உரியது. இதில் சக வருடம் 1078-இன் தைமாதம் குறிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டின் காலம் கி. பி. 1157-இன் தைமாதத்திற்குச் சமம். ஆகவே கி. பி. 1156-இன் தைமாதம் என்பது இராசராசனின் 10-ஆம் ஆட்சியாண்டின் காலமாகும் என்பதனை அறியலாம்.

பில்லை. எனவே இது இராசராசனின் பத்தாம் ஆண்டன்று. 'ம' என்பதன் பின் 1 முதல் 9 வரையுள்ள எண்களில் ஏதோ ஒன்று இருந்தாக வேண்டும் என்பது தெள்ளிது. ஆகவே இராசாதிராசன் கி. பி. 1163-இல் முடிசூடினான் என்று கொள்ளமுடியாது.

## 1166-ஐ அடிப்படையாகக்கொண்டால்

இப்பொழுது இராசாதிராசன் கி. பி. 1166-இல் பட்டம் ஏற்றவன் என்ற கருத்தினைக்கொண்டு காஞ்சீபுரம் கல்வெட்டினை நோக்குவோம். (1) இராசாதிராசன் கி. பி. 1166-இன் ஜனவரியில் பட்டம் சூடியவன். இவனின் 8-ஆம் ஆண்டின் ஐப்பசி மாதம் கி. பி. 1173-இன் அக்டோபருக்கு உரியது. (2) கி. பி. 1173-இன் ஐப்பசிக்கு 15 ஆண்டுகளுக்குமுன் உள்ள தை மாதத்து வருடம் கி. பி. 1159 ஜனவரி ஆகும். இடைவெளியில் 14 வருடம் 10 மாதங்கள் உள்ளமையால், 15 ஆண்டு இடைவெளி யாகக்கொள்ளலாம். கி. பி. 1159 ஜனவரி என்பது இராச ராசனின் 13 ஆம் ஆட்சியாண்டு ஆகும். (3) ஆகவே காஞ்சீபுரம் கல்வெட்டில் 'ம' என்பதன் பின் 3 என்னும் எண்ணின் இலக்கம்தான் இருத்தல் வேண்டும். கல் வெட்டின் வாசகத்தை,

1. ஸ்வஸ்திஸ்ரீ கட(ல்) சூழ்ந்த பார்மாத (ரு) ம் ............ கொப்பரகேஸரிபந்மரா(ன திரு) புவனச் சக்கர வர்த்திகள் ஸ்ரீ ராஜாதிராஜதேவர்க்கு யாண்டு அ ஆவது கார்த்திகை மாஸத்து முதற்றியதிநாள் உடையார் (2) ராஜராஜ(தே)தவர்க்கு யாண்டு ம (ங) ஆவது தைமாஸ முதல் திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜதேவர்க்கு யாண்டு அ ஆவது ஐப்பசி மா(ஸ)ம் (வ)ரை யாண்டு

பதிநஞ்சில் என்று நிரப்பி வாசித்தால் புதிர் விடுபடும். காஞ்சீபுரம் கல்வெட்டில் உள்ள புதிருக்கு இவ் விடை காண்பதன் மூலம் இராசாதிராசனின் ஆட்சித் தொடக்கம் பற்றிய குழப்பம் நீங்கி, இவன் கி. பி. 1166-இல்தான் பட்டமேற்றான் என்பது உறுதியாதல் வெள்ளிடைமலை[3].



3. பேராசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள், The Colas, Volume II, Part II, பக்கம் 657-இன் அடிப்பகுதியில் இச் சந்தேகத்தைக் கிளப்பி, 1 (9) என்று இருக்கமுடியாது என்று கூறியுள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

# மூன்றாம் குலோத்துங்கன்

தென்னார்க்காடு மாவட்டத்தில், எலவானாசூர் என்னும் இடத்தில் உள்ள, இராசராசனின் 13-ஆம் ஆண்டு (கி. பி. 1158–59)க்குரியதான கல்வெட்டில்,[1] 'இராசராசன் ஆயிரத்தளி அரண்மனையில் வீற்றிருந்த காலத்தில் ஒரு தானத்தைச் செய்தான்' என்று கூறப்பட்டுள்ளது. அப்போது அவனுக்கு மக்கள் இருந்தனரா ? என்பது அறியப் பெறவில்லை.

பல்லவராயன்பேட்டைச் சாசனம், இராசராசனின் மக்கள் ஒரு வயதும் இரு வயதும் உடையவராக இருந்த போது ஆயிரத்தளிப்படை வீட்டிலிருந்து இராசராசபுரத்திற்குக் கொண்டுவந்து பாதுகாக்கப் பெற்றதாகக் கூறுகிறது. சாசன ஆராய்ச்சியில் இராசாதிராசன் கி. பி. 1166-இல் முடிசூடுவதற்குப் பல வருடங்களுக்கு முன்னரே இராசராசனின் மக்கள் ஒரு வயதும் இரு வயதும் உடையவராக இருந்ததனை விளக்கியுள்ளோம். எனவே அம்மக்கள், சுமார் கி. பி. 1161–62-இல் இராசராசபுரத்திற்குக் கொண்டுவரப்பட்டனர் எனலாம்.

பல்லவராயன்பேட்டைச் சாசனம் கி. பி. 1173–74-க்கு உரியது; இராசராசனின் மக்கள் சிறுவர்களாக இருந்தமையினால், இராசாதிராசன் உரிமையில் முடி தரித்துக்கொண்டவன் என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது. இதனால், இச்சாசன காலத்தில் இராசராசனின் மக்கள் இராசாதிராசனின் பாதுகாப்பிலேயே இருந்ததனை அறியலாம்.

---

1 Ins, No. 163 of 1906.

அம்மக்களுள் ஒருவனே மூன்றும் குலோத்துங்கன் என்பது நாமறிந்த செய்தி. இவன், கி. பி. 1178-ஆம் வருடத்தில் (சுமார் 18 அல்லது 20-ஆம் வயதில்) அரியணை ஏறினன். இதன்பின் இரண்டு வருடங்கள் இவனும் இராசாதிராசனும் இணைந்து அரசாண்டனர். இவ்விரு மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தில் நடந்த சரித்திர நிகழ்ச்சிகளாக நாம் அறிவுறுத்தவுள்ள புதுச் செய்திகளைப் பின்வரும் பகுதிகளில் காண்போம்.



# மதுரை கொண்ட மாமன்னர்கள்

ஸ்ரீலங்கா என்று இன்று அழைக்கப்படும் சிங்களத் தீவு, சரித்திர காலத்தில் 'ஈழம்' என்று அழைக்கப்பட்டது. சோழர்களின் சரித்திரத்தில், முதல் இராசராசன் காலம் முதல் மூன்றும் குலோத்துங்கன் காலம் வரை உள்ள சுமார் இருநூறு வருடங்களில் சோழர்களுக்கும் ஈழநாட்டவருக்கும் அடிக்கடிப் போர்கள் மூண்டது உண்டு. சுமார் 100 வருடங்களுக்கு மேல் ஈழத்தின் வடபகுதி சோழர்களின் ஆட்சியின்கீழ் இருந்தது. வலிமை மிகுந்த கடற் படையைக்கொண்டு சோழ மாமன்னர்கள் ஈழத்தை வெற்றிகொண்டார்கள் என்பது சரித்திரம் தரும் உண்மைச் செய்தி. இன்றும் இலங்கையின் வடபகுதியில் தமிழ்மொழி பேசும் மக்களே அதிகமாக உள்ளனர் என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது.

## அரசியல் சூதாட்டம்

12-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஈழத்தை ஆண்ட அரசன் 'பராக்கிரமபாகு' என்பவனுவான். இவன் ஒரு சிறந்த பெருவீரன்; அஞ்சா நெஞ்சினன். இவன் தனது நாட்டை விரிவுபடுத்திக் கடல் கடந்து தமிழ் நாட்டிலும் தன் அரசுகொடியை நிலைநிறுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டான்.

இரண்டாம் இராசராசன் இராசாதிராசனுக்குக் கி. பி. 1166-இன் ஜனவரியில் இளவரசனுகை முடிசூட்டினுன்.

இதற்குப் பிறகு சில வருடங்கள் கழித்துத் தமிழக அரசியலில் சில சம்பவங்கள் நிகழ்ந்தன. அப்பொழுது பாண்டிய நாட்டில் குலசேகரபாண்டியன் என்பவனும் பராக்கிரம பாண்டியன் என்பவனும் அரசுரிமைப் போட்டியில் ஈடுபட்டனர். இந்த அரசுரிமைச் சூதாட்டத்தை ஈழ மன்னன் பராக்கிரமபாகு தனக்குச் சாதகமாகப் பயன் படுத்தினுன். பராக்கிரம பாண்டியன் ஈழமன்னனுன பராக்கிரம பாகுவைத் தனக்கு உதவிபுரியுமாறு வேண்டினன். தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்த பராக்கிரமபாகு ஒரு பெரும்படையை இலங்காபுரித் தண்டநாயகன், ஜகத்ரயத் தண்டநாயகன் என்பவர்களின்கீழ்ப் பாண்டி நாட்டிற்கு அனுப்பினுன். ஈழப்படை பாண்டி நாட்டை வென்று மதுரையையும் கைப்பற்றியது. குலசேகரபாண்டியன் மதுரையை விட்டு ஓடிச் சோழ மன்னன் இராசாதிராசனிடம் அடைக்கலம் புகுந்தான். ஈழப்படை வெற்றிமேல் வெற்றிகொண்டு, பாண்டிய நாட்டின் எல்லையில் இருந்த சோழப்படைகளையும் தளபதிகளையும் துரத்தியது. பராக்கிரமபாகு வெற்றி வாகை சூடிப் பராக்கிரம பாண்டியனின் மகன் வீரபாண்டியனைப் பாண்டி நாட்டு மன்னனுக மதுரையில் அமர்த்தினுன். மேலும் ஈழப்படைகள் சோழ ராஜ்யத்திற்கு உள்ளும் படையெடுத்து வரக்கூடிய நிலையும் உருவாகியது.

## பெருமான் நம்பிப்பல்லவரையனின் பணி

இராசாதிராசன் நிலைமையை உணர்ந்தான். திருச்சிற்றம்பலமுடையானுன பெருமான்நம்பிப்பல்லவரைய

னின்கீழ் ஒரு பெரும்படையைப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பினன். பெருமான்நம்பிப்பல்லவரையன், பாண்டி நாட்டிற்குச் சென்று போரிட்டு ஈழப்படையைப் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்தான். ஈழத்துத் தளபதிகளைக் கொன்று அவர்களின் தலைகளை மதுரையில் இருந்த கோட்டை வாசலில் தைப்பித்தான். குலசேகர பாண்டியனை இராசாதிராசன் பாண்டிநாட்டு மன்னனாக முடிசூட்டினன்.

## கல்வெட்டுச் சான்றுகள்

இதுவரை கூறிய வரலாறு கீழ்க்கண்ட கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது.

1. **ஆர்ப்பாக்கம் கல்வெட்டு.**[1] இது இராசாதிராசனின் ஐந்தாம் ஆட்சி ஆண்டாகிய கி. பி. 1170-71-க்கு உரியது. அப்போது மாமன்னன் இராசராசன் உயிருடன் இருந்தான். இப்போரில் கொண்ட வெற்றியை இராசராசன் தனக்குரியதாகக் கூறிக்கொள்ளவில்லை. இளவலே வெற்றி வாகையைச் சூடவேண்டும் என்னும் பெருந்தன்மையால், அப்பெருமையினை இராசாதிராசனுக்கு ஈந்தான்போலும்.

2. **பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டு.**[2] இது இராசாதிராசனின் 8-ஆவது ஆண்டாகிய கி. பி. 1173-74-க்கு உரியது. கல்வெட்டில் திருச்சிற்றம்பலமுடையானை

1. Ins. No. 20 of 1899
2. Ins. No. 433 of 1924

பெருமான்நம்பிப்பல்லவரையன் ஈழப்படையை வெற்றி கொண்டமை விரிவாகவும், தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது.

## போருக்குப்பின்னால்

மேற்குறித்த போர், கி.பி. 1170-71-க்கு உரிய ஆர்ப்பாக்கம் கல்வெட்டில் முதன் முதலாகக் குறிப்பிடப்பட்டு இருப்பதால், இச்சம்பவங்கள் கி. பி. 1169-இல் நடந்திருக்க வேண்டும். ஆகவே, குலசேகரபாண்டியன் கி. பி. 1169-இல் பாண்டி மன்னனாக மதுரையில் இராசாதிராசனால் அரியணை ஏற்றப்பட்டான் என்று கொள்ளலாம். சில வருடங்கள் சென்றன. மாமன்னன் இராசராசன் கி. பி. 1172-இல் இறந்தான். பல்லவராயன்பேட்டைச் சாசனத்தின் வாயிலாகப் பெருமான்நம்பிப்பல்லவரையனும் கி. பி. 1173-74 இல் இறந்தான் என்பது அறியப்படுகிறது.

## மீண்டும் போர்

சோழரிடம் தோல்வியுற்ற இலங்கை மன்னனான பராக்கிரமபாகுவின் காலத்தில் ஈழநாட்டில் குழப்பமொன்று நிகழ்ந்தது. பராக்கிரமபாகுவின் உடன்பிறந்தாள் மகனும் மானாபரணன் என்பவனின் மகனுமான ஸ்ரீவல்லபன் என்பவன் ஈழநாட்டரசுரிமையை அடைய முயல்வானானன். இக்காலத்தில் இலங்கை மன்னன் பராக்கிரமபாகு ஸ்ரீவல்லபனுடன் முரண்பட்டதோடு, தன் பகைவனான சோழரையும் சோழனால் ஆதரிக்கப்பெற்ற குலசேகர பாண்டியனையும் வெல்லத்தக்க காலத்தை எதிர்நோக்கி இலங்கை மண்டலத்தில் இருந்த ஊராத்துறை, புலைச்சேரி, மாதோட்டம், வல்லிக்காமம், மட்டிவாழ் ஆகிய இடங்களில் படகுகளைத் தொகுத்துப் படைதிரட்டலானான். சோழன் இச்

செய்தியை அறிந்தான். பராக்கிரமபாகுவோடு மாறுபட்டவனாக இருக்கும் ஸ்ரீவல்லபனை அழைத்துப் படையுதவி செய்ய முற்பட்டான். 'வேதவனமுடையான் அம்மையப்பனை அண்ணன் பல்லவரையன்' என்பவனுடைய தலைமையில் சோழர்படை ஈழநாட்டிற்குச் சென்று ஸ்ரீவல்லபனுக்குதவியாகப் போரிட்டது; ஈழத்தார் தொகுத்த படைகளை அழித்தது; ஊராத்துறை, புலைச்சேரி, மாதோட்டம், வல்லிக்காமம், மட்டிவாழ் முதலான ஊர்களை அழித்தது; ஈழநாட்டில் தென்வடலாக முப்பது காதமும், கீழ்மேலாக இருபது காதமும் உள்ள பகுதியை அழித்தது: சேனைத் தலைவர் பலர் கொல்லப்பட்டனர் சோழப்படைத் தலைமை ஏற்றவனை அண்ணன் பல்லவரையன் இப் போரில் தான் கைப்பற்றிய பெருந்திரவியங்கள், யானை, முதலான எல்லாப் பொருள்களையும் கொணர்ந்து சோழனுக்குக் காணிக்கையாக்கினன்.

## பழிதீர்த்த படலம்

இதற்கிடையில் பராக்கிரமபாகுவும் சூழ்ச்சியில் இறங்கினன். பாண்டிய மன்னன் குலசேகரனைத் தன் வயப்படுத்தினன். குலசேகரனும் தனக்குச் சோழ மன்னன் இராசாதிராசன் முன்பு செய்த உதவியை மறந்து ஈழத்து அரசன் பராக்கிரமபாகுவுடன் சேர்ந்துகொண்டான். இராசாதிராசனின் தளபதி அண்ணன் பல்லவரையன் மதுரையின் மீது படையெடுத்துச் சென்றான். நன்றி மறந்த குலசேகரனை நாட்டைவிட்டுத் துரத்திப் பராக்கிரமபாண்டியன் மகன் வீரபாண்டியனை அரசு கட்டிலுக்கு உரியவன் ஆக்கினன். சோழ மன்னன் இராசாதிராசன் வீரபாண்டியனைப் பாண்டி நாட்டு அரசனாக்கினன்.

**மதுரைகொண்ட மாமன்னர்கள்**

மேற்குறிப்பிட்ட ஈழப்போரும், இரண்டாம் பாண்டிப் போரும் திருவாலங்காடு, திருமயானம் என்னும் ஊர்களில் உள்ள கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன.[3] இக்கல் வெட்டுக்கள் இராசாதிராசனின் 12-ஆம் ஆட்சி ஆண்டின் 157-ஆம் நாளுக்கு உரியவை. அதாவது கி. பி. 1177 சூன் மாதத்திற்குரியவை.

இப்போர்களில் வெற்றிவாகை சூடிய காரணத்தால் இராசாதிராசன் கல்வெட்டுக்களில் "மதுரையும் ஈழமும் கொண்டருளியவனாக" அழைக்கப்படுகிறான். இவ்விதம் இவன் அழைக்கப்படும் முதல் கல்வெட்டு, தஞ்சை மாவட்டத்து ஆலங்குடியில் காணப்படுகிறது.[4] இக்கல்வெட்டு இவனுடைய 11-ஆம் ஆட்சி ஆண்டின் 182-ஆம் நாளுக் குரியது. கி. பி. 1176-இன் சூலை மாதத்திற்குச் சமமானது. ஆகவே இரண்டாம் பாண்டிப்போர் நடந்ததும், குலசேகரன் விரட்டப்பட்டதும், வீரபாண்டியன் பாண்டி மன்னனானதும் கி. பி. 1176-இல் நடந்திருக்கவேண்டும்.

மூன்றும் குலோத்துங்கன் கி. பி. 1178 சூலை மாதத்தில் அரசு கட்டில் ஏறினான் என்பது சரித்திரம் கண்ட உண்மை. மூன்றும் குலோத்துங்கனும் "மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய"வனாக அவனுடைய இரண்டாம், நான்காம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக்களில் புகழப்படுகிறான். இராசாதிராசனும் மூன்றும் குலோத்துங்கனும் மதுரையைக் கொண்டவர்களாகக் கூறும் கல்வெட்டுக்களின் பட்டியல்கள் அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

---

3. Ins. Nos. 465 of 1905 & 261 of 1925
4. Ins. No. 3 of 1899; S. I. I. VI 438

## மதுரையும் ஈழமும் கொண்டருளிய இராசாதிராசனின் கல்வெட்டுக்கள்

### பட்டியல் 1

| எண் | சாசன எண் | ஊர் | ஆட்சியாண்டு | வருடம் |
|---|---|---|---|---|
| 1. | 3/1899 | ஆலங்குடி | 11 | 1176சூலை |
| 2. | 465/1905 | திருவாலங்காடு | 12 | 1177சூன் |
| 3. | 261/1965 | திருமயானம் | 12 | 1177சூன் |
| 4. | 731/1909 | ஆலம்பாக்கம் | 13 | 1178-79 |
| 5. | 228/1917 | குறுக்கை | 13 | 1178-79 |
| 6. | 340/1914 | நாங்குப்பட்டி | 13 | 1178-79 |
| 7. | 193/1901 | தென்னேரி | 13 | 1178-79 |
| 8. | 80/1913 | திருச்செங்காட்டங்குடி | 13 | 1178-79 |
| 9. | 129/1927 | ஆத்தூர் | 14 | 1179-80 |
| 10. | 253/1925 | திருக்கடையூர் | 14 | 1179-80 |
| 11. | 58/1906 | திருமயானம் | 14 | 1179-80 |

## மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டுக்கள்

### பட்டியல் 2

| எண் | சாசன எண் | ஊர் | ஆட்சியாண்டு | வருடம் |
|---|---|---|---|---|
| 1. | 190 /1904 | திருவக்கரை | 2 | 1179-80 |
| 2. | 24B/1903 | திட்டக்குடி | 4 | 1181-82 |

இப் பட்டியல்களிலிருந்து நுணுக்கமான சில செய்திகளை அறியலாம்.

1. இரண்டாம் பாண்டிப்போர் கி. பி. 1176-இல் நடந்தது.

2. கி. பி. 1178 ஜூலையில் குலோத்துங்கன் முடிசூடியவன்.

3. பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து மதுரை கொண்டதை இருவருமே ஏற்கின்றனர்.

4. குறிப்பாகக் கி. பி. 1179-80-இல் அதாவது இராசாதிராசனின் 14-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக்களிலும், குலோத்துங்கனின் இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டிலும், ஒரே காலத்தில் இருவரும் மதுரைகொண்ட பெருமையை ஏற்கின்றனர்.

5. குலோத்துங்கன் மாமன் மகன்; இராசாதிராசன் அத்தை மகன்; கி. பி. 1178 முதல் 1180 முடிய இருவரும் ஒன்று சேர்ந்து ஆட்சிபுரிந்துள்ளனர். ஆகவே இருவரும் தோழமையுடன், உறவின் முறையை ஏற்று ஒழுகி வந்தனர் என்பதும், குலோத்துங்கன் அரியணை ஏறுமுன் இளங்கோப் பருவத்தில் இராசாதிராசனுடன்

சேர்ந்து பாண்டிப்போரில் ஈடுபட்டான்[5], என்பதும் தெளிவாகக் காணக்கிடக்கும் உண்மைகளாகும்.

6. ஆகவே இராசாதிராசனும், குலோத்துங்கனும் ஒன்று சேர்ந்து போரில் வெற்றி அடைந்த "மதுரை கொண்ட மாமன்னர்கள்" ஆவார்கள். இராசாதிராசனுக்கும், குலோத்துங்கனுக்கும் இடையில் விரோதம் இல்லை. இருவரும் நட்புரிமையுடன் ஒழுகி வந்தனர் என்பது இதனால் புலப்படும்.



5. இளங்கோப் பருவத்தில் இளவரசன் பேரரசனுடன் சேர்ந்து போரில் பங்கு கொண்டால், பிற்காலத்தில் இளவரசன் பேரரசனுடன் தன்னுடைய மெய்க்கீர்த்திகளிலும் கல்வெட்டுக்களிலும் அப்போரின் வெற்றியைத் தனக்கும் உரியதாக வடிக்கும் வழக்கம் உண்டு. இதனை முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன் முதலியவர்களின் மெய்க்கீர்த்திகளில் காணலாம். அவ்விதமே மூன்றும் குலோத்துங்கனும் இளங்கோப் பருவத்தில் இராசாதிராசனுடன் சேர்ந்து போரில் பங்கு கொண்ட பெருமையைத் தன்னுடைய கல்வெட்டுக்களிலும் ஏற்றிக்கொண்டான்.

# சிதம்பரம் கல்வெட்டு

இரண்டாம் இராசராசனின் மகனான மூன்றாம் குலோத்துங்கன் கி. பி. 1178 ஜூலை மாதம் 6-8-ஆம் தேதிகளுக்கிடையில் அரியணை ஏறினான் என்பதனை முன்பே குறிப்பிட்டுள்ளோம். இவன் கி. பி. 1217 வரை அரசாண்டவன். சோழர் சரித்திரத்தில் புகழ்மிக்க மாமன்னனாக விளங்கிய கடைசி அரசன் இவன் ஒருவனே ஆவான். இவனுக்குப் பின் அரசாண்ட மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் ஆகியோரின் காலங்களில் சோழநாடு சரிவுற்றுக் கி. பி. 1279-இல் பாண்டிய சாம்ராஜ்யத்தில் கரைந்துவிட்டது.

மூன்றாம் குலோத்துங்கன் ஆற்றல் மிக்க பெருவீரன்; தன் வாழ்நாள் முழுவதும் பல போர்க்களங்களைக் கண்டவன்; பாண்டியர், ஈழத்தார், வடதெலுங்கர், முதலிய மன்னர்களை வென்றவன். இம்மன்னன் தனி ஆட்சி நடத்துங்கால் செய்த முதற்போர் பாண்டியர்களுடன் நடத்திய போராகும். இப்போர்ச் செய்தியினைக் கூறும் கல்வெட்டொன்று சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் உள்ளது. இது மூன்றாம் குலோத்துங்கனின் 9-ஆம் ஆட்சி ஆண்டின் 88-ஆம் நாள் அன்று வெட்டப்பட்டது.[1] இக் கல்வெட்

---

1. S.I.I. Volume III No. 86, Pages 210-211; Ins. No. 457 of 1902. திருக்கொள்ளம்புதூர்க் கல்வெட்டில் இப்போர் நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. ஆட்சியாண்டு காணப்படவில்லை. கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ள வேறு சில விவரங்கள் வாயிலாக இக்கல்வெட்டு இவனுடைய நான்காம் ஆட்சிஆண்டுக்குப் பின்னமைந்த ஏதோ ஒரு ஆண்டில் வெட்டப்பட்டது எனத் துணியலாம். Ins. No. 1 of 1899.

டின் முதன் நான்கு வரிகளே சரித்திர ஆராய்ச்சிக்கு உரியன. அவ்வரிகளுள், (1) ஸ்வஸ்திஸ்ரீ || உ புயல்வாய்த்து வளம் பெருகப்பொய்யாத நான்மறையின் செயல்வாய்ப்பத் திரு மகளுஞ் ஜயமகளுஞ் சிறந்துவாழ வெண்மதி பொற்குடை விளங்க வெல்வேந்தரடி வணங்க மண்மடந்தை மனங் களிப்ப மனுநீதி தழைத் (2) தோங்கச் சக்கரமுஞ் செங் கோலுந் திக்கனைத்துஞ் செலநடப்பக் கற்பகாலம் புவி காக்கப் பொற்பமைந்த முடிபுனைந்(து) விக்கிரமபாண்டியன் வேண்ட விட்ட தண்டால் வீரபாண்டியன் மகன்பட ஏழகம்பட மறப்படைபடச் சிங்களப்படை மூக்கறுப் புண்டு அலைகடல் (3) புக வீரபாண்டியனை முதுகிடும்படி தாக்கி மதுரையும் அரசுங்கொண்டு ஜயஸ்தம்பம்நட்டு அம்மதுரையும் அரசும் நாடும் அடைந்த பாண்டியற்களித் தருளி மெய்ம் மலர்ந்த வீரக்கொடியுடன் தியாகக்கொடி எடுத்துச் செம்பொன் (வீ)ரசிம்ஹாஸனத்துப் புவன முழுதுடை (4) யாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பர கேசரிபந்மரான திருபுவனச் சக்கரவர்த்திகள் **மதுரை கொண்டருளின** ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு ஒன்பதாவது நாள் எண்ப(த்)தெட்டிறைல்-என்னும் மெய்க் கீர்த்திப் பகுதியுள்ளது.

இக்கல்வெட்டில் "பாண்டியமன்னன் விக்கிரம பாண்டியனின் வேண்டுகோளின்படி, குலோத்துங்கன் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச் சென்றான். வீர பாண்டியனைப் புறமுதுகிட்டு ஓடும்படி செய்தான். வீர பாண்டியனுடைய மகன் போரில் கொல்லப்பட்டான். வீரபாண்டியனுக்குத் துணையாக வந்த ஏழகப்படையும், மறவர் படையும் அழிக்கப்பட்டன. வீரபாண்டியனுக்கு உதவியாக வந்த சிங்களப்படை மூக்கறுப்புண்டு, அலை

கடல் புகுந்தது. குலோத்துங்கன் பாண்டி நாட்டை விக்கிரமபாண்டியனுக்கு அளித்தான்'' என்னும் சரித்திரச் செய்தி கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு, குலோத்துங்க னின் 9-ஆம் ஆட்சியாண்டின் - நாள் 88-க்கு உரியது. இது 1—10—1186-க்குச் சமமான காலமாகும். எனவே விக்கிரமபாண்டியனின் வேண்டுகோளின்படி குலோத் துங்கன் நடத்திய இப்போர், கி. பி. 1186-இல் நடந்திருக்க வேண்டும்.

**வீரபாண்டியன்**

கி. பி. 1176-இல் இராசாதிராசனால் அரசு உரிமை பெற்ற வீரபாண்டியன் சிங்களவர் நட்பினை ஏற்று, ஈழத்துப் படைத்துணையையும் பெற்று, சோழர்களோடு முரண்பட்டான். இதனைப் பொறாத குலோத்துங்கன் கி. பி. 1186-இல் வீரபாண்டியனை நீக்கி, விக்கிரமபாண்டி யனைப் பாண்டி மன்னனாக்கினான். இவ்வெற்றிக்குப் பின்னர் "மதுரை கொண்டருளியவன்'' என்று குலோத் துங்கன் புகழப்பட்டுள்ளான். இப்பெருமை இவனுடைய 8–9-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்களில் காணக் கிடக்கிறது.[2] இங்கு விவரித்த பாண்டிப் போரே குலோத் துங்கன் தனிப்பட்ட முறையில் நிகழ்த்திய முதற் பாண்டிப் போர் ஆகும்.

குலோத்துங்கன், கி. பி. 1186-இல் தான், முதன் முதலாக தனிப்பட்ட முறையில் பாண்டியனோடு போரிட் டான். ஆனால் இப்போருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்ன தாகவே இவனை, 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளியவனாக'க் கல்வெட்டுக்கள் அறிமுகப்படுத்து

---

2. Ins. No. 296 of 1927; S. I. I. VIII 297 S. I. I. III 86; S. I. I. V 990.

கின்றன. எனவே இதற்கு முன்னும் குலோத்துங்கன் பாண்டியனோடு போரிட்டிருக்கவேண்டும் என்பது உறுதி.

''இராசாதிராசன், மதுரை மன்னனாக இருந்த 'குலசேகரபாண்டியனை' அரசுரிமையில் இருந்து அகற்றினான்; 'வீரபாண்டியன்' என்பவனை அரசனாக்கினான். இவ்வீர நிகழ்ச்சிகளை விளைவிப்பதற்காகக் கி.பி 1176-இல் இராசாதிராசன் ஆற்றிய போரில் இளவரசனாக இருந்த குலோத்துங்கனும் கலந்துகொண்டான். இளவரசு நிலையில் அடைந்த இவ்வெற்றிக்குப்பின், மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய குலோத்துங்கன் எனப் பட்டான்'' எனலாம்.

**இவற்றைக் கூர்ந்து நோக்கினால்**

| | |
|---|---|
| இராசாதிராசன் பாண்டிப்போரில் குலசேகரனை நீக்கி வீரபாண்டியனைப் பட்டமேற்றியது. (குலோத்துங்கனும் இப்போரில் பங்கு கொள்ளுதல்) | கி.பி. 1176. |
| குலோத்துங்கன் பட்டம் ஏற்றது | கி.பி. 1178. |
| குலோத்துங்கன் வீரபாண்டியனை நீக்கியது | கி.பி. 1186-இல் |

நிகழ்ந்தன என்பது உறுதியாகும்.

கி. பி. 1178-க்குப் பின்னும் கி. பி. 1186-க்கு முன்னும் குலோத்துங்கன் பாண்டியர்களுடன் போரிடவில்லை என்பது உறுதி. எனவே குலோத்துங்கன், தான் பட்டம் ஏற்குமுன் பாண்டிப்போரில் இராசாதிராசனுடன் சேர்ந்து பங்கு கொண்டமையால், 'மதுரையும் பாண்டியன் முடித்

தலையும் கொண்டருளிய பரகேசரி' எனப்பட்டமையை அறியலாம். இதன் வாயிலாக இராசாதிராசனும் குலோத்துங்கனும் நண்பர்களாக இருந்தனர் என்பது மீண்டும் வலியுறுத்தப்பெறுகிறது.

## மாறுபடும் கருத்து

"குலோத்துங்கன் 2, 3, 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்களில், 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய'வனாகக் காணப்படுகிறான். இக்கல்வெட்டுக்கள் கி. பி. 1179-83-க்கு உரியவை. பாண்டிப் போரின் விவரங்கள் முதன்முதலாக இவனுடைய 9-ஆம் ஆட்சி யாண்டுக்குரிய சிதம்பரம் கல்வெட்டிலுள்ள மெய்க்கீர்த்தியில் கூறப்படுகின்றன; ஆகவே இவன் முதற் பாண்டிப் போரைக் கி. பி. 1180-இல் நிகழ்த்தியிருத்தல் வேண்டும்" என்று ஆய்வாளர் கருதினர். மதுரைகொண்ட குலோத்துங்கனை, அவனுடைய கல்வெட்டுக்களின் வாயிலாக ஆராய்வோம்.

## மதுரைகொண்ட குலோத்துங்கன்

பட்டியல் 1-இல் குலோத்துங்கன் பாண்டிப்போரை நிகழ்த்தியதால் பெற்ற விருதுகளுடன் கூடிய கல்வெட்டுக்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## இப்பட்டியலைக் கூர்ந்து நோக்கினால் ......

(1) கி.பி. 1179-80-இல் ஒரே ஒருகல்வெட்டில் மட்டும் "மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளியவனாகக்" குலோத்துங்கன் காணப்படுகிறான். இக்காலத்தில் இராசாதிராசனும் குலோத்துங்கனுடன் அரசாண்டவன். (2) கி. பி. 1180-81-இல் ஒருவித விருதும் குலோத்துங்க

## பட்டியல் 1

குலோத்துங்கனின் முதல் 9 ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக்களில்[3]

| ஆட்சி ஆண்டு | வருடம் | ஊர் | விவரம் |
|---|---|---|---|
| 2 | 1179-80 | திருவக்கரை | 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய' மட்டும் |
| 3 | 1180-81 | இல்லை | இல்லை |
| 4 | 1181-82 | திட்டக்குடி | 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய' மட்டும் |
| 5 | 1182-83 | திட்டக்குடி | 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய' மட்டும் |
| 6 | 1183-84 | இல்லை | இல்லை |
| 7 | 1184-85 | இல்லை | இல்லை |
| 8 | 1186 | திட்டக்குடி | 'மதுரை கொண்டருளிய' மட்டும் |
| 8 | 1186 | திருமயானம் | 'மதுரை கொண்டருளிய' மட்டும் |
| 9 | 1-10-1186 | சிதம்பரம் | 'புயல்வாய்த்து' என்னும் முழு மெய்க்கீர்த்தியுடன், பாண்டிப்போர் விவரங்களும், மதுரைகொண்டருளிய என்பதும் |
| 9 | 28-12-1186 | சீகாழி | ''மதுரைகொண்டருளிய'' மட்டும் |
| 9 | 1—6—1187 | கும்பகோணம் | ''மதுரைகொண்டருளிய'' மட்டும் |

3. The Colas Vol. II, Part II, Pages 673-80

னுக்கு இல்லை. (3) கி. பி. 1181–83 ஆகிய இவ்விரு (4, 5) ஆட்சியாண்டுகளில் திட்டக்குடி ஆலயத்தில் "மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளியவனாக" மட்டும் காணப்படுகிறான். (4) மேற்கண்ட முதல் ஐந்து ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக்களில் இவனுடைய பட்டப்பெயர் தனித்துத்தான் காணப்படுகிறது. இவனுடைய மெய்க் கீர்த்தியில் போரின் விவரங்கள் கூறப்படவில்லை. (5) கி. பி. 1183-84, 84-85-க்குரிய 6, 7-ஆம் ஆட்சியாண்டுகளில் மதுரையை வென்றதனால் ஆன எவ்விதப் பட்டமும் கூறப் படவில்லை. (6) ஆனால் கி. பி. 1186-இல் இவனுடைய 8-ஆம் ஆட்சியாண்டிலிருந்து "மதுரை கொண்டருளிய வன்" என்று கூறப்படுகிறான். (7) 1—10—1186-க்குரிய 9-ஆம் ஆட்சியாண்டில் முழுமையான மெய்க்கீர்த்தியில் பாண்டிப்போர் விவரங்கள் கூறப்படுகின்றன. கல்வெட் டில் "மதுரையும் அரசுங்கொண்டு ஜயஸ்தம்பம் நட்டு, அம்மதுரையும் அரசும் நாடும் அடைந்த பாண்டியற் களித்தருளி .........திருபுவனச் சக்கரவர்த்திகள் மதுரை கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்" என்று கூறப்படுகிறான். (8) 9-ஆம் ஆட்சியாண்டுக்குரியதும் 28-12-1186, 1-6-1187 தேதிகளில் வெட்டப்பட்டது மான கல்வெட்டுக்களில் "மதுரை கொண்டருளின" என்றே புகழப்படுகிறான்.

### தொகுத்து நோக்கினால் ......

முற்பகுதியில் "மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய" என்று காணப்படும் குலோத்துங்கனின் பட்டப்பெயர் மெய்க்கீர்த்தியில் அவ்வாறு கூறப்படவில்லை. தனித்தே இப்பட்டப்பெயர் உள்ளது. இத்துடன் இப் பெயர் நின்றுவிடுகிறது. இடையில் இரண்டு வருடங்

களுக்கு எவ்விதமான பட்டப்பெயருமில்லை. பிற்பகுதியில் கி. பி. 1186–87-இல் 8, 9-ஆம் ஆட்சியாண்டுகளில் "மதுரை கொண்டருளிய" என்றே அழைக்கப்படுகிறான். "பாண்டியன் முடித்தலையும்" என்ற தொடர் காணப்படவில்லை. போர் நிகழ்ச்சி விவரமாக மெய்க்கீர்த்தியில் கூறப்படுகிறது. ஆகவே, முற்பகுதியில் குலோத்துங்கன் "மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய" என்று புகழப்படுவது வேறு ஒரு மதுரைப் போரில் இவன் ஈடுபட்டதைத்தான் குறிப்பதாகும். இவன் இளங்கோப் பருவத்தில், அரியணை ஏறும் முன் இராசாதிராசனுடன் சேர்ந்து, கி. பி. 1176-இல் பாண்டிப் போரில் ஈடுபட்டான்; அதன் காரணமாகக் கி. பி. 1178-இலிருந்து முதல் ஐந்து ஆட்சியாண்டுகளில் "மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளியவனாகக்" கூறப்பட்டான் எனலாம். கி. பி. 1186-இல் முதன் முதலாகத் தனிப்பட்ட முறையில் பாண்டிப்போரை நிகழ்த்தி வெற்றிபெற்றான்; அதன் காரணமாக "மதுரை கொண்டருளியவன்" என்று கூறப்பட்டான் எனலாம். ஆய்வாளர் கருதுகிறபடி, குலோத்துங்கன் தனிப்பட்ட முறையில் பாண்டிப்போரைக் கி. பி. 1180-இல் நிகழ்த்தியிருந்தால், (1) ஏன் முற்பகுதியிலேயே அவ்விவரங்கள் கூறப்படவில்லை? (2) முதல் 8 ஆண்டுகளில் மெய்க்கீர்த்தியில் அப்பட்டப்பெயர் ஏன் காணப்படவில்லை? (3) மெய்க்கீர்த்தி வளர வளர சரித்திர நிகழ்ச்சிகளும் உடனுக்குடன் கூறப்படுமே; அவ்விதமில்லாது, முதன்முதலாக 9-ஆம் ஆட்சியாண்டில் அல்லவா மெய்க்கீர்த்தியில் போரின் விவரங்கள் கூறப்பட்டுள்ளன; அவ்வாறு கூறப்படும்போது "பாண்டியன் முடித்தலையும்" என்ற தொடர் நீக்கப்பட்டு விட்டதே; அது ஏன்? (4) பெருமை பொருந்திய

ஒரு போர் நிகழ்ந்து, வெற்றிகொண்டால், அதன் விவரங்களை 6 அல்லது 7 ஆண்டுகள் கழித்தா கல்லில் வெட்டுவர் ? என்னும் வினக்கள் எழுகின்றன. இவைகளுக்குச் சமாதானம் கூறமுடியாது. ஆகவே, இவைகளை ஆராய்ந்து பார்த்தால் கி பி. 1176-இல் இராசாதிராசனுடன் குலோத்துங்கனும் இளங்கோப் பருவத்தில் பாண்டிப் போரில் ஈடுபட்டான் ; பின் தன்னுட்சிக் காலத்திலும் தனிப்பட்ட முறையில் பாண்டிப் போரை நிகழ்த்தினன் என்னும் உண்மைகள் புலப்படும்.

## மூலகாரணம்

"குலோத்துங்கன் இளங்கோப் பருவத்தில் இராசாதிராசனுடன் சேர்ந்து போர் புரிந்தவன்" என்னும் எம்முடைய புதிய கருத்தின் அடிப்படைக் காரணம் பின்வருமாறு :

1. இராசாதிராசனும் குலோத்துங்கனும் இணைந்து இரண்டு வருடம் ஆட்சி புரிந்தனர்; இருவரிடையும் பகைமை ஏதும் இல்லை ; இருவரும் நட்புறவுடன் ஒழுகினர். 2. பேரரசனுடன் இளவரசன் இணைந்து செயல்படுதலும், போரில் ஈடுபடுதலும், ஆட்சிபுரியுங்கால் இருவரும் சேர்ந்து ஆட்சி புரிதலும், சோழ பரம்பரையின்—சரித்திரத்தின் அடிப்படைப் பொதுத் தன்மை, இராசாதிராசனுக்கும் குலோத்துங்கனுக்கும் கூட உரியதுதான். இவ்விரு ஆதாரத்தின் மேல் எழுந்த எம் புதிய கருத்துக்களை வரலாற்று உலகம் ஏற்குமாக.

## இரண்டு சம்புவரையர்

மூன்றும் குலோத்துங்கனுடைய இரண்டாவது ஆண்டுக் கல்வெட்டொன்றுல் " அம்மையப்பன் கண்டர்

சூரியன்'' என்பவனும், நான்காவதாண்டுக்குரிய கல்வெட்டொன்றால் ''அம்மையப்பன் பாண்டியான இராசராசச் சம்புவரையன்'' என்பவனும் ''பாண்டி யநாடு கொண்டவர்'' என்பது அறியப்படுவதால் பாண்டிப்போர் கி. பி. 1178–80-இல் நடந்ததாதல் வேண்டும் என்று அறிஞர் கருதுவர். இந்த 'இரண்டு சம்புவரையரும் இராசாதிராசன் காலத்திலும் வாழ்ந்தவர் ஆதலாலும், அப்பேர்தே பாண்டிநாடு கொண்டான்' என்று 'இவர்கள் குறிக்கப்பட்டுள்ளமையாலும்[4], 'பாண்டிநாடு கொண்டான்' 'மீனவனை வெங்கண்டான்' என்பன விக்கிரமசோழன் காலம் முதலாக செங்கேணிக் குலத்தினரான சம்புவரையர்களுக்கு வழங்கி வந்த பரம்பரைப் பெயராதலாலும்[5] சம்புவரையர் மூலமாக இப்போர் நிகழ்ச்சியின் காலத்தை வரையறுக்க இயலாது என்பது உறுதி.

### பின் குறிப்பு

குலோத்துங்கன் மீண்டும் கி. பி. 1188-இல் பாண்டிப் போரில் ஈடுபட்டான்; அதற்குப் பின்னரும் பல போர்களில் வெற்றி பெற்றான்; அதன் காரணமாக 9-ஆம் ஆட்சியாண்டுக்குப் பிறகு இவனுடைய பட்டப் பெயர்கள் மாறி மாறிச் செல்லுகின்றன. அந்நிகழ்ச்சிகள் இந்நூலின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டன ஆதலால் இங்கு ஆராயப்படவில்லை.

---

4. Ins. No. 195/1904; 222/1904; The Colas Vol. II Part II Pages 663, 669 & 686.

5. A. R. E. 1922-23 Part II Page 123 Para 92

# ஓர் அதிசய ஒற்றுமை

இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதி ராசன், மூன்றும் குலோத்துங்கன் ஆகிய மூவருடைய மெய்க்கீர்த்திகளில் ஒரு அதிசய ஒற்றுமை காணப்படுகிறது. 'இரண்டாம் இராசராசன் தன் சகோதரியின் மகனை இரண்டாம் இராசாதிராசனுக்கு முடிசூட்டினான்; சில ஆண்டுகள் இவனுடன் ஆட்சிபுரிந்து இறந்தான். இவனுக்குப்பின் இரண்டாம் இராசாதிராசன் ஆட்சி புரிந்தான். இவன் தன் ஆட்சியின் பிற்பகுதியில் குலோத்துங்கனுக்கு முடிசூட்டினான்; இரண்டு ஆண்டுகள் ஒன்றாக இருந்து ஆட்சிபுரிந்தான்; பின் ஆந்திர நாட்டுக்குச் சென்றான். இவனுக்குப்பின் மூன்றும் குலோத்துங்கன் ஆட்சி புரிந்தான்' என்று முன்பு நாம் விளக்கியுள்ளோம். பேரரசனின் ஆட்சியின் இறுதிப் பகுதியில், இளவரசனாக இருந்து, இணைந்து ஆட்சிபுரிந்து, பின்னர் ஒருவர்பின் ஒருவராக முறையே அரசு எய்திய மாமன்னர்களான இம் மூவருடைய மெய்க்கீர்த்திகளில் அமைந்துள்ள அதிசய ஒற்றுமை யாது? என நோக்குவோம்.

## இரண்டாம் இராசராசனின் மெய்க்கீர்த்திகள்

இரண்டாம் இராசராசனுக்கு உரியவையாக நான்கு மெய்க்கீர்த்திகள் இருக்கின்றன. அவைகள் வெவ்வேறு மங்கலமான வார்த்தைகளால் தொடங்குவனவாகும். அவற்றின் தொடக்கங்கள், (1) 'பூமருவிய திருமாதும்[1]

---

1. நிறைய உள்ளன; The Colas, Volume II, Part II, பக்கங்கள் 647 – 57 காண்க.

(2) பூமருவிய பொழில் ஏழும்[2] (3) புயல்வாய்த்து வளம் பெருக[3] (4) கடல் சூழ்ந்த பார்மாதரும்[4] என்பனவாகும். இந்நான்கு தொடக்கங்களையுடைய வெவ்வேறு மெய்க் கீர்த்திகளும் இரண்டாம் இராசராசனுக்கு உரியனவாகும். இத் தொடக்கங்கள் இதற்கு முன்னால் ஆட்சி செய்த சோழ அரசர்களுடைய மெய்க்கீர்த்திகளின் தொடக்கங் களல்ல என்பது அறியற்பாலதாகும்.

## இரண்டாம் இராசாதிராசனின் மெய்க்கீர்த்திகள்

இரண்டாம் இராசாதிராசனுக்கு உரியவைகளாக மூன்று மெய்க்கீர்த்திகள் காணப்படுகின்றன. இவை வெவ்வேறு மங்கலச் சொற்களால் தொடங்குவன. அத் தொடக்கங்கள் 1. 'கடல்சூழ்ந்த பார்மாதரும்' 2. பூமருவிய திருமாதும் 3. பூமருவிய திசைமுகத்தோன் என்பனவாகும். இம்மூன்று மெய்க்கீர்த்திகளில், 'கடல் சூழ்ந்த' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியே இராசாதி ராசனுடைய கல்வெட்டுக்களில் அதிக அளவில் வழங்கப் படுவதாகும். இம்மெய்க்கீர்த்தியின் துவக்கம் இரண்டாம் இராசராசனுடையதே ஆகும். இரண்டாவதாக அமையும் 'பூமருவிய திருமாதும்' என்னும் மெய்க்கீர்த்தி, இராசாதி ராசனுக்கு உரியதாகப் பல்லவராயன்பேட்டையில் உள்ள, 15-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில்[5] காணப்படு கிறது. இம்மெய்க்கீர்த்தி முழுமையும் இராசராசனுடை யதே ஆகும். மூன்றாவதான 'பூமருவிய திசைமுகத்தோன்' என்னும் மெய்க்கீர்த்தி இராசாதிராசனுக்கு உரியதாதலைக்

---

2. 248 of 1930; 486 of 1911: 191 of 1925
3. 165 of 1908
4. 219 of 1901; 375 of 1902
5. 11/1925.

கீழூர்க் கல்வெட்டால் அறியலாம்.[6] இம்மெய்க்கீர்த்தியின் தொடக்கச் சொல்லாக, இராசராசனுடைய மெய்க்கீர்த்தி களின் தொடக்கச் சொல்லாகிய 'பூமருவிய' என்னும் மங்கலச்சொல் அமைந்துள்ளது. ஒரே மங்கலச்சொல்லால் ஆன சொற்றொடரால் அடுத்தடுத்து ஆண்ட அரசருடைய மெய்க்கீர்த்திகள் தொடங்கும் ஒற்றுமையை வேறு எங்கும் காணுதல் இயலாது. 'பூமருவிய' என்பதற்குப் பின்னுல் உள்ள 'திசைமுகத்தோன்' என்னும் சொல்லால் இம் மெய்க்கீர்த்தி இராசாதிராசனுக்கு மட்டும், தனிப்பட்ட முறையில் அமைந்த மெய்க்கீர்த்தியாகக் காட்சியளிக்கிறது.

இவற்ருல் இரண்டாம் இராசராசனுக்குப்பின் ஆண்ட இராசாதிராசன், இராசராசனின் மெய்க்கீர்த்திகளின் தொடக்கங்களையே தனக்கும் உரியதாகக் கொண்டமையை உறுதியாக அறியலாம். இராசாதிராசனுக்கு என முதற் சொல் கொண்டு அடையாளம் அறிந்துகொள்ளத் தக்க வகையில் மெய்க்கீர்த்திகள் இல்லை. இவனுடைய தொடக் கச் சொற்கள், இராசராசனின் மெய்க்கீர்த்தியில் இருந்து இறக்குமதி செய்யப்பெற்றனவே ஆகும்.

## மூன்ரும் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்திகள்

மூன்ரும் குலோத்துங்கனுக்குரியனவாக மூன்று மெய்க்கீர்த்திகள் இருக்கின்றன. (1) '**புயல்வாய்த்து** வளம் பெருக' (2) 'புயல்வாய்த்து மண்வளர' (3) '**பூமரு விய திசை முகத்தோன்**' என்பன இவற்றின் தொடக்கங் களாகும். 'புயல்வாய்த்து' என்று தொடங்கும் மெய்க் கீர்த்தியே மூன்ரும் குலோத்துங்கனுக்கு உரியதாக மிகப் பல கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. இம்மெய்க்கீர்த்தி

6. 262/1902 S. I. I. Vol. VII. 890.

யில் 'புயல்வாய்த்து வளம்பெருக' என்னும் தன் தந்தையி னுடைய முழு மெய்க்கீர்த்தியைத் தானும் ஏற்றுக் கொண்டு, தன்காலச் சரித்திர நிகழ்ச்சிகளையும் கூறுகிறான். இவனுடைய மெய்க்கீர்த்திகளில் மற்றொன்றான, 'புயல் வாய்த்து மண் வளர' என்னும் மிக நீண்ட மெய்க்கீர்த்தி யின் தொடக்கச் சொல்லும் இரண்டாம் இராசராசனுடை யதே ஆகும். 'பூமருவிய திசைமுகத்தோன்' என்னும் மெய்க்கீர்த்தி மூன்றாம் குலோத்துங்கனுக்கு உரியதாகத் திருவெண்ணெய் நல்லூர்,[7] திருநறையூர்க்,[8] கல்வெட்டுக் களில் காணப்படுகிறது. இம் மெய்க்கீர்த்தி இராசாதிராச னிடமிருந்து குலோத்துங்கன் முழுமையாக ஏற்றுக் கொண்டதாகும்.

## ஓரதிசய ஒற்றுமை

(1) இராசாதிராசன். இராசராசனுடைய மெய்க் கீர்த்திகளின் தொடக்கச் சொற்களாகிய 'பூமருவிய திரு மாதும்' 'கடல் சூழ்ந்த' என்னும் மெய்க்கீர்த்திகளைத் தனக்கும் உரியதாக வைத்துக்கொண்டான். (2) 'புயல் வாய்த்து' என்னும் மெய்க்கீர்த்தியைத் தனக்கும் உரிய தாகக் கொள்ளவில்லை. (3) இராசராசனின் மெய்க்கீர்த்தி யில் உள்ள 'பூமருவிய' என்ற சொல்லுடன் 'திசைமுகத் தோன்' என்பதனை இணைத்து ஒரு தொடக்கத்தைத் தனக் குரியதாக ஏற்படுத்திக்கொள்கிறான்.

## மூன்றாம் குலோத்துங்கன்

(1) தன் தந்தையான இராசராசனுக்குரிய மெய்க் கீர்த்தியின் தொடக்கச் சொல்லான 'புயல்வாய்த்து'

---

7. 313/1902
8. 176/1908

என்னும் மெய்க்கீர்த்தியைத் தனக்கும் உரியதாக்கிக் கொள்கிறான். (2) தன் தந்தையிடமிருந்து, இராசாதிராசனுக்கும் வழங்கிய 'கடல் சூழ்ந்த' என்னும் மெய்க்கீர்த்தியைத் தனக்கும் உரியதாகக் கொள்ளவில்லை. (3) இராசாதிராசன், இராசராசனின் வழியில் தனிப்பட்டதாக அமைத்துக்கொண்ட 'பூமருவிய திசைமுகத்தோன்' என்னும் மெய்க்கீர்த்தியைக் குலோத்துங்கன் தனக்கும் உரியதாகக் கொள்கிறான். இச்செய்திகளை, The Colas Volume II Part II-இல் உள்ள கல்வெட்டுக்களை ஆராய்ந்தமையால் உருவாக்கிய இம் மூவரின் மெய்க்கீர்த்திப் பட்டியலால் அறியலாம். அப்பட்டியல் பின்வருமாறு.

## மூவரின் முழுமையான மெய்க்கீர்த்திப் பட்டியல்

| விவரம் | இராசராசன் II | இராசாதிராசன் II | குலோத்துங்கன் III |
|---|---|---|---|
| மொத்தக் கல்வெட்டுக்கள் | 72 | 85 | 300 |
| பூமருவிய பொழில் ஏழும் | 3 | இல்லை | இல்லை |
| பூமருவிய திருமாதும் | 25 | 1 | இல்லை |
| கடல்சூழ்ந்த | 2 | 23 | இல்லை |
| புயல்வாய்த்து | 1 | இல்லை | 35 |
| பூமருவிய திசைமுகத்தோன் | இல்லை | 1 | 2 |

இதனால் (1) 'பூமருவிய' என்பது மூவருக்கும் உரியதாக உள்ளது. (2) 'கடல் சூழ்ந்த' என்பது இராசராசனுக்கும் இராசாதிராசனுக்கும் உரியது. (3) 'புயல் வாய்த்து' என்பது இராசராசனுக்கும், மூன்றும் குலோத்துங்கனுக்கும் உரியது, என்பதனை அறியலாம். மெய்க்கீர்த்திகளில் அமையும் இவ்வதிசய ஒற்றுமை எதனைக் காட்டுகிறது என நோக்குவோம்.

### அமையக் காரணம்

இரண்டாம் இராசராசனுடைய மெய்க்கீர்த்திகள் இராசாதிராசன், மூன்றும் குலோத்துங்கன் ஆகியோரிடம் காணப்படுவது இவ்விருவரும் சோழ அரச பரம்பரையினர்; ஆளுதற்கு உரிமை படைத்தவர்கள் என்பதனைக் காட்டுகிறது.

இராசராசனுடைய மெய்க்கீர்த்தி இராசாதிராசனிடம் காணப்படுவது, இராசாதிராசன் தன் மாமனின் நாட்டாட்சியை உரிமையில் பெற்றமையை நிலை நிறுத்துவதுடன் மாமன் மீதுள்ள பெருமரியாதையைக் காட்டுவதும் ஆகும்.

தன் தந்தையிடமும், இராசாதிராசனிடமும் கொண்டிருந்த பற்றினையும், மதிப்பினையும் மூன்றும் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்திகள் காட்டுகின்றன.

தொகுத்து மதிப்பிடுங்காலத்தில், இராசாதிராசன், குலோத்துங்கன் ஆகியோரிடையே நிலவிய அன்பையும், பந்தத்தையும், நன்றியுணர்ச்சியையும் பிரதிபலிக்கக் கூடியதாக அமைவதே இவ்வதிசய ஒற்றுமை என்பது உறுதி.

## முன்னவர் பற்றிநின்ற வழி

கி. பி. 1070-71-இல் வீரராசேந்திரனும், அவன் மகன் அதிராசேந்திரனும் இறந்தனர். ஆகவே வீரராசேந்திரனின் சகோதரியின் மகனான முதற் குலோத்துங்கன் சோழ மன்னனானன். இவன் கி. பி. 1120 வரை அரசாண்டவன். முதற் குலோத்துங்கனுக்குப் பத்துவிதமான தொடக்கங்களையுடைய மெய்க்கீர்த்திகள் உள்ளன. அவைகளுள் ஒன்று 'வீரமே துணையாக' என்று தொடங்குவது ஆகும்.[9] இத் தொடக்கம் வீரராசேந்திரனுக்கு உரியதாகும். மாமனாகிய வீரராசேந்திரனின் மெய்க்கீர்த்தியின் தொடக்கத்தை மருகனாகிய முதற் குலோத்துங்கன் ஏற்று, அரச பரம்பரையின் ஒழுகலாற்றினை நிலை நிறுத்தினான். அவ்விதமே இரண்டாம் இராசாதிராசனும் தன் மாமனாகிய இரண்டாம் இராசராசனின் மெய்க்கீர்த்தியின் தொடக்கங்களை ஏற்கிறான் என்பது ஈண்டு ஒப்புநோக்கிக் களிக்கத்தக்கதாகும். பல்லவராயன்பேட்டைச் சாசனத்தில் "முன்னாளிலே காரியம் இருந்தபடி" என்னும் தொடரின் கருத்து இங்கும் எதிரொலிப்பதைக் காணலாம்.



9. 156/1923; 197/1919; 197/1929; 179/1914; 434/1912; 215/1919; 284/1923.

# பூமருவிய திசைமுகத்தோர்

சில ஆய்வாளர் இராசாதிராசனுக்கும், மூன்றும் குலோத்துங்கனுக்கும் இடையில் விரோதம் இருந்தது என்று கூறியிருக்கிறார்கள். அது பொருந்தாது என்பதனை முன்பே விளக்கியுள்ளோம். இச்செய்தியை மெய்க்கீர்த்தியும் உறுதி செய்கிறது.

பூமருவிய திசைமுகத்தோன்
படைத்தபெரும் புவிவிளங்கத்
தேமருவிய பதம்துளவத்
திருநெடுமால் இவன்என்ன
நீராழி புடைசூழ்ந்த
வரையாழி நெடும்புறத்தில்
ஓராழி தனிநடாத்த
உதயகுலத்து அவதரித்து
கருங்கலியின் இருள்ஒதுங்கக்
கதிர்வெண்குடை நிலாஎறிப்ப
அருங்கதிரின் வெயில்விரிக்கும்
மணிமகுடம் புனைந்தருளி
மண்களிப்பவும் மனம்களிப்பவும்
மலர்மடந்தையர் முதல்மங்கையர்
கண்களிப்பவும் தண்ணளிப்பப்
பெருங்கருணையால் முதற்காவல்பூண்டு
செம்பொன் வீரசிம்மாசனத்து
புவன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய
கோராஜகேஸரிபந்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்க்கு[1] .........

---

1. 262 of 1902 S. I. I. Vol. VII, 899; கீழூர் கல்வெட்டு

என்பது இரண்டாம் இராசாதிராசனின் மெய்க்கீர்த்தி களில் ஒன்று. இம் மாமன்னன், இரண்டாம் இராசராச னின் மகனை குலோத்துங்கனை வளர்த்து ஆளாக்கி, கி. பி. 1178-இல் அரசனாக்கினான்; இரண்டு ஆண்டுகள் உடன் உறைந்து சீரிய பயிற்சிகள் தந்தான். கி. பி. 1180-இல், ஆந்திர நாடு சென்று தங்கி ஆட்சி செய்யலானான் என்பது நாமறிந்த செய்தி.

மூன்றாண்டுகள் நகருகின்றன. குலோத்துங்கன், தன்னை ஆளாக்கிய அரசனைப் பிரிந்தமையால் பெருந்துயர் உறுகிறான். இராசாதிராசனை நினைவு கூர்ந்து — அவனு டைய மெய்க்கீர்த்தி முழுமையையும் தான் ஏற்றுக்கொள் கிறான். அதனைக் கல்லிலும் வடித்துக் காவலன் இராசாதி ராசனை நினைவில் நிறுத்திக்கொள்கிறான். அவனுடைய நெஞ்சத்து நினைவுகளைத் திருநறையூரில் உள்ள குலோத் துங்கனுடைய ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டுக் காட்டு கிறது.[2] அக்கல்வெட்டில் 'பூமருவிய திசைமுகத்தோன்' என்னும் மெய்க்கீர்த்தி இன்றும் முழுமையாகக் காட்சி தருகிறது.

இதன் பின்னர்ப் பல சாசனங்களில் 'புயல் வாய்த்து' என்னும் மெய்க்கீர்த்தியையே பரவலாக உபயோகித்திருக்

---

2. 176 of 1908. கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திரு நறையூர்ச் சிவாலயத்தில் இக் கல்வெட்டினை முழுதும் படித்தேன். மெய்க்கீர்த்தி முழுமையாக வெட்டப்பட்டுள்ளது. கீழூர்க் கல் வெட்டில் "வரையாழி நெடும்புறத்தில் ஓராழி தனிநடாத்த உ" என்னும் பகுதி சிதைந்துள்ளதாக, S. I. I. Vol. VII எண் 890-இல் வெளியிடப்பட்டுள்ளது. திருநறையூர்க் கல்வெட்டின் துணை கொண்டு கீழூர்க் கல்வெட்டில் சிதைந்துள்ள பகுதியைப் பூர்த்தி செய்தேன்.

கிருன் குலோத்துங்கசோழன். பன்னிரண்டாண்டுகள் கழிகின்றன. குலோத்துங்கனுடைய நெஞ்சில் இராசாதி ராசனுடைய நினைவலைகள் மேம்படுகின்றன. குலோத் துங்கனுடைய உள்ளப்பாங்கினைக் கூறுகிறது திரு வெண்ணைநல்லூரிலுள்ள ஒரு சாசனம்.[3]

"ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திசைமுகத்தோன் படைத்த பெரும்புவி விளங்க என்னும் சி மெய்க்கீர்த்தி முடிய எழுதித் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு 17-ஆவது ..........." என்று தொடங்கித் தொடர்கிறது இச்சாசனம். இது ஒரு அபூர்வ மான சாசனம். சாசனம் புயல்வாய்த்து என்ற மெய்க் கீர்த்தியை எழுதவில்லை. மற்றொரு மெய்க்கீர்த்தியைக் குலோத்துங்கனுக்கு உரியதாக்கிக் கூறுகிறது.

அது எப்படிப்பட்ட மெய்க்கீர்த்தி என்பது தெரி யுமா? பெருமை பொருந்திய மெய்க்கீர்த்தி. புகழ்படைத்த மெய்க்கீர்த்தி என்கிறது சாசனம். 'ஸ்ரீ மெய்க்கீர்த்தி' என்றும் 'சீர் மெய்க்கீர்த்தி' என்றும் சிறப்பிக்கிறது இக் கல்வெட்டு

அம் மெய்க்கீர்த்தி யாருடையது தெரியுமா? என்று கேட்டால், "அது மாமன்னன் இராசாதிராசனுடையது; அதனை நான் அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறேன். முழுமையாக ஏற்றுப் பெருமை கொள்கிறேன்" என்று பேசுவான் குலோத்துங்கன் என்பதனை நமக்குப் படம் பிடித்துக் காட்டுவதுபோலப் "பூமருவிய திசைமுகத் தோன் என்று தொடங்கும் ஸ்ரீ மெய்க்கீர்த்தியை முடிய எழுதுங்கள்" என்று ஆணையிடுகிறது இச்சாசனம்.

---

3. 313 of 1902, S. I. I. Vol. VII of 942

ஆய்வாளர் இச் சாசனத்தின் உட்கிடையைக் காண வேண்டும். இருவரிடையிலும் விரோதம் இருந்திருந்தால் பகை மன்னனின் மெய்க்கீர்த்தி முழுமையையும் குலோத் துங்கன் ஏற்றுக்கொள்வானா? பழைய சாசனங்களைப் பார்த்து முழு வடிவம் அறிந்துகொள்ளத் தூண்டுவானா? விரோதியின் மெய்க்கீர்த்தியை – ஸ்ரீ மெய்க்கீர்த்தி என்றோ சீர் மெய்க்கீர்த்தி என்றோ புகழ்ந்து விவரிப்பானா? என்று சிந்திக்கவேண்டும்.

எனவே இச்சாசனங்கள் வாயிலாகப் பூமருவிய திசை முகத்தோராகிய இராசாதிராசனுக்கும், குலோத்துங்கனுக் கும் இடையில் நட்புறவே நிலவியது; அன்பு உணர்ச்சியே மேலிட்டு இருந்தது என்பதனை அறிதல் எளிது. மற்றும் பிரிந்து வாழ்ந்து சோழ நாட்டை அரசு செய்த காலத்தில் தன் முன்னவன் இராசாதிராசனின் நினைவு வரும்போ தெல்லாம் தன் நன்றியுணர்ச்சியை வெளிப்படுத்தக் குலோத் துங்கன் தவறியதே இல்லை என்பதனை, திருநறையூரிலும், திருவெண்ணைநல்லூரிலும் உள்ள இச் சாசனங்கள் உறுதி செய்கின்றன எனலாம்.



# சித்தம் தெளியவைக்கும் சித்திசரம்

இரண்டாம் இராசராசன், இராசாதிராசன், மூன்றும் குலோத்துங்கன் ஆகியவர்களை மெய்க்கீர்த்திகளின் வாயிலாக ஒன்றாகப் பிணைக்கும் ஒரு தலம் உள்ளது. அது தஞ்சை ஜில்லாவில், கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருநறையூர் ஆகும். இத்தலம் சோழர்களின் தலைநகராகிய பழையாறையிலிருந்து (மும்முடிச் சோழமண்டலம்) சுமார் 5 மைல் கிழக்கே உள்ளது. இவ்வூரில் உள்ள சித்திசரம் என்னும் ஆலயத்தில் இம் மூன்று மாமன்னர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. இக் கல்வெட்டுக்களை நோக்குவோம்.

1. இரண்டாம் இராசராசன்: இவனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[1] இவ் வாலயத்தில் உள்ளது. இக்கல்வெட்டில் "புயல்வாய்த்து" என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி முழுமையாக வெட்டப்பட்டுள்ளது. இம் மெய்க்கீர்த்தியையே பிற்காலத்தில் இவன் மகனான மூன்றும் குலோத்துங்கன் முழுமையாகத் தன் சாசனங்களிலும் வடித்துக்கொண்டான்.

2. இரண்டாம் இராசாதிராசன்: இவனுடைய 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு[2] இவ்வாலயத்தில் உள்ளது. இதில் "கடல் சூழ்ந்த" என்னும் மெய்க்கீர்த்தி முழுமையாக உள்ளது. இம்முழு மெய்க்கீர்த்தி இரண்டாம் இராச

---

1. 165 of 1908
2. 172 of 1908

ராசனின் முழுமையான மெய்க்கீர்த்திகளில் ஒன்ருகும்.[3] மாமனுடைய மெய்க்கீர்த்தி முழுமையாக மருகனின் கல் வெட்டில் இவ்வாலயத்திலும் காட்சி தருகிறது.

3. மூன்ரும் குலோத்துங்கன்: இவனுடைய ஆரும் ஆண்டுக் கல்வெட்டு[4] இவ்வாலயத்தில் உள்ளது. இதில் இவன் தன் தந்தை இராசராசனிடமிருந்து பெற்ற 'புயல் வாய்த்து' என்னும் மெய்க்கீர்த்தி முழுமையாக வெட்டப் பட்டுள்ளது. இதில் குலோத்துங்கன் "வீரராசேந்திர தேவர்" என்று குறிக்கப்பட்டுள்ளான். இப் பெயர் மூன்ரும் குலோத்துங்கனுக்கு உரிய மற்ரெரு பெயராகும். இவனுடைய 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டும்[5] இவ்வாலயத் தில் உள்ளது. இதில் "பூமருவிய திசைமுகத்தோன்" என்னும் இராசாதிராசனின் மெய்க்கீர்த்தி முழுமையாக வெட்டப்பட்டு உள்ளதை முன் கட்டுரையில் விவரித்துள் ளோம். குலோத்துங்கன் தன் தந்தையிடம் இருந்தும், அத்தை மகனிடமிருந்தும் பெற்ற முழுமையான மெய்க் கீர்த்திகளை இவ்வாலயத்தில் வடித்துள்ளான்.

இம்மூவரின் கல்வெட்டுக்களும் முன்னவரைப் பின் பற்றிப் பின்னவர் பந்தபாசத்துடன் ஒழுகினர் என்பதைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் இவ்வொரு ஆலயத்தில் தான் காட்சியளிக்கின்றன.[6] இவ்வெல்லா மெய்க்கீர்த்தி

3. S. I. I. Vol. VII, 432 & 1005

4. 178 of 1908

5. 176 of 1908

6. நான் திருநறையூர்ச் சிவாலயத்திற்கு நேரில் சென்று இக் கல்வெட்டுக்களை முழுமையாகப் படித்து இக் கட்டுரையை உரு வாக்கினேன்.

**சித்தம் தெளியவைக்கும் சித்திரத்தில்**



களும் இம்மன்னர்களைக் "கதிரவன் குலத்தில்" அவதரித்தவர்கள் என்றும் பறைசாற்றுகின்றன. "பருதி வழித் தோன்றியவன் இரண்டாம் குலோத்துங்கன்" என்று அவனுடைய மெய்க்கீர்த்திகளும் புகலுகின்றன. இரண்டாம் குலோத்துங்கன் மகனே இரண்டாம் இராசராசன். ஆகவே இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய இம் மன்னர்கள் ஒரே பரம்பரையில் வந்தவர்களே என்னும் உண்மையை எடுத்துச் சொல்லும் தலமாகச் சித்தம் தெளியவைக்கும் சித்திசரம் திருநறையூரில் காட்சியளிக்கிறது.

# சாசனம் தரும் சத்திய சீலன்

பல்லவராயன்பேட்டைச் சாசனம் இராசாதிராசனின் 8-ஆம் ஆட்சியாண்டாகிய கி. பி. 1173—74-க்கு உரியது. சாசனத்தில் திருமந்திர ஓலை எழுதியவன் மீனவன் மூவேந்த வேளான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அரசன் இடும் ஆணையை உடனுக்குடன் எழுதுபவர் திருமந்திர ஓலைக்காரர் (Royal Secretary) எனப்படுவர். ஆகவே இச் சாசனம் இராசாதிராசனின் ஆணையின்கீழ் வழங்கப்பட்டதே ஆகும். சாசனங்கள் வெளியிடும் வழக்கங்களின் அடிப்படையில், இது முதலில் செப்புப் பட்டயங்களில் அறிவித்திருக்கப்பட்டு இருக்கவேண்டும். இதுவரை அப் பட்டயங்கள் கிடைத்தில.

பல்லவராயன்பேட்டை ஆலயத்திலுள்ள சாசனத்தைப் பலவாறாக விளக்கியுள்ளோம். விளக்கங்களைத் தவிர இச் சாசனத்தின்மூலம் நாம் ஒரு சத்திய சீலனைப் பெறுகிறோம். அவனை அடுத்த கட்டுரையில் சந்திப்போம்.



# சத்திய சீலன் – இராசாதிராசன்

இராசாதிராசனுக்கு ஒப்பானதொரு உத்தம அரச குமரனை எவ்வரச பரம்பரையிலும் இனிக் காணமுடியாது. பல்லவராயன்பேட்டைச் சாசனம் இராசாதிராசனின் உத்தம குணத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு. "நான் சோழ அரியணைக்கு நேர் உரிமையாளன் இல்லை. இராசராசனின் மக்கள்தாம் உரியவர்கள். ஆனல் அவர்கள் இளஞ் சிறுவர்களாக இருந்தார்கள். எங்கோ கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்த என்னைப் பிரயாணம் பண்ணுவித்தார்கள். முடி சூட்டினார்கள். சோழ அரசனுக்கினார்கள்" என்கிருன் இராசாதிராசன்.

"நானுக நாட்டாட்சியைத் தேடவில்லை. அது என்னைத்தேடி வந்தது. பிள்ளைகள் உரிய வயதுடையவர்களாக – பேரரசு நடத்தத்தக்கவராக – இல்லை என்ற ஒரே ஒரு காரணத்தால்தான் நான் அரசு பதவியை ஏற்றுக் கொண்டேன். அரசபோக ஆசையினுல் அல்ல. தக்க காலம் வரும்வரைக் காத்திருப்பேன். உரிய பிள்ளைகளிடம் ஒப்படைப்பேன்" என்னும் செய்திகளைச் சொல்லாமல் சொல்கிருன் அச் சோழமன்னன்.

**அரசகுல இரகசியம்**

சோழன் சொன்ன செய்தியைச் சிந்திக்க வேண்டும். இது ஒரு அரசகுல இரகசியம். இடைக்கால அரசனுகத் தன்னையாக்கினுர்கள் என்று கூறும் இரகசியம். இந்த இரகசியத்தை—இரண்டாம் இராசராசனும் மக்கள் முன் வைக்காத இரகசியத்தை – தமிழகத்தின்முன் வைக்கிருன் இராசாதிராசன். எப்போது எடுத்துரைத்தான்? அரசனுக

அவனை ஆக்கிய அருளாளன் இராசராசன் வாழ்ந்தபோதா? அவ்வாருனால் "இராசராசன் இருந்தான்; வற்புறுத்தினுன்; எழுதுமாறு செய்தான்" என்று ஒரு குறை கூறலாம். அவ்வாறன்றி மாமன்னனின் மதிப்புக்குரியவன், மன்னனின் மக்களைக் காத்த மதிமந்திரி, பெருமான் நம்பிப் பல்லவரையனுவது உயிருடன் இருந்தபோது இவ்வாறு உரைத்திருந்தானுனல், "தன்னை மன்னனுக்கிய மதியூகிக் கஞ்சினுன்; இவ்வாறு கூறினுன்"; என்று மாற்றுக் குறைத்து மதிப்பிட்டுவிடலாம். ஆனுல் அவ்வாறில்லையே. மாமன்னனும் மந்திரத் தலைவனும் மறைந்த பின்னுல், தட்டிக்கேட்கத் தக்கவர் யாருமில்லாத தருவாயில் "உரிய வயது உடைய பிள்ளைகள் இல்லாததால் நான் உரிமையில் வந்தவன்" என்னும் உணர்வு தோன்றுமாறு உரைக்கிருன்.

மறைக்கவில்லையே

சோழ சாம்ராஜ்யமே அவன் கரத்துள் அடங்கியிருக்கும் காலம். அவன் நினைத்தால் எது வேண்டுமாயினும் செய்யக்கூடிய அதிகாரத்தைக் கொண்டவன். அந்த நிலையில், யாருக்கும் தெரியாமல் மறைந்துகிடந்த இரகசியத்தை — நினைத்திருந்தால் மறைத்திருக்கக்கூடிய இரகசியத்தை – பொது அம்பலத்தில் புலனுக்குகிருன். எந்த ஒரு பெருமான் நம்பிப்பல்லவரையன் தன்னை அரசனுக்கினுனே, அதே அமைச்சன் அமைத்த ஆலயத்தில், அருமையான கல்வெட்டாக்குகிருன். பிரகாரத்திலோ, மண்டபத்திலோ வெட்டவில்லை. "இராசராசனின் மகனை மன்னனுக்குவேன்" என்று இறைவனிடத்தில் உறுதி உரைப்பதுபோல, தம் குல நாயகனுன சிவனுரின் கருவறையின் விதானத்தின் கீழ் கல்லில் வெட்டுகிருன்.

## முன்னவர் வழிபற்றி நிற்பேன்

இராசாதிராசன் ஏன் இந்த இரகசியத்தை எடுத்துரைக்கிருன் என்றும் நோக்குதல் வேண்டும். இவன் பெருமான் நம்பிப்பல்லவரையனைப் போற்றி, அவனுற்றிய பணிகளைப் பாராட்டி, அவன் இறந்தபின், அவனுடைய குடும்பத்தாருக்குத் தான நிலம் தந்தமைப்பற்றிக் கூறும் போது, இராசராசனின் மக்களைப்பற்றியும், தான் அரசனுனமை பற்றியும் எடுத்துரைக்கிருன். இராசாதிராசன், "சோழநாட்டு மக்களே பல்லவரையன் இராசராசனுடைய புதல்வர்களைப் பாதுகாத்தான். இன்னல்களை யெல்லாம் பரிகரித்தான். என்னை அரசனுக்கினுன். இன்றும் அம் மக்கள் பாதுகாப்புடன் உள்ளனர். நான் பல்லவரையன் பால் பற்றுக்கொண்டவன். அவன் வழி நிற்பவன். இராசராசனின் மக்களுள் ஒருவனைத்தான் உரிய தருணத்தில் மன்னனுக்குவேன்" என்று நாட்டு மக்களுக்குச் சொல்லுவது போலக் காட்சியளிக்கிறது இச்சாசனம்.

## பிள்ளைகளின் பாதுகாப்பு என் பொறுப்பு

சிலர் நினைப்பதுபோல, இராசாதிராசனுக்கும் குலோத்துங்கனுக்கும் இடையில் விரோதம் இருந்திருந்தால் — மாருன நோக்கங்கள் இருந்திருந்தால், தானே ஆளவேண்டும் என்ற தவருன நோக்கம் இருந்திருந்தால் — தானச் செய்தியை மட்டுமே தந்திருப்பான் என்பது உறுதி. "அன்று மன்னனின் புதல்வர்கள் ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திரம் உடையவர்களாக இருந்தார்கள்" என்று அறிவிக்கிருன் அரசன். "இன்றைய நிலை என்ன" என்று சோழநாடு கேட்குமல்லவா? "அன்று சிறுவர்கள், இன்று அரசு ஏற்றற்குரியவர்கள். இன்னல்கள் ஒன்றும் இல்லை.

என் பாதுகாப்பில், அரவணைப்பில் வளர்கிறார்கள், வாழ்கிறார்கள்" என்று எவ்விடத்திலும் துணிந்து கூறக்கூடிய ஒரு நிலையில்தான், முழுமையான இரகசியத்தை வெளியிடுகிறான்.

## மாறான நோக்கமில்லை

மன்னனின் மக்கள் மாய்ந்திருந்தால், இராசாதிராசனே கல்வெட்டில் கூறியிருப்பான். தவறான நோக்கத்தில் இருந்திருப்பானானால் — தானே நீடித்து அரசு புரியவும் விரும்பியிருப்பானானால் — இந்த இரகசியத்தை வெளியிடுவதால், மக்கள்முன் நன்றி மறந்தவனாக உலவ வேண்டிய நிலையைத் தானே தேடிக்கொள்ள வேண்டியவனாவான். அந்த ஒரு நிலையில் அவன் இருக்கவில்லை. உண்மையைத் தக்க தருணத்தில் வெளியிடுகிறான் அச்சத்தியசீலன்.

## என் மனம் தூய்மையானது

இந்த இரகசியத்தை அவன் வெளியிடும் காலத்தை வேறு ஒரு கோணத்திலும் நோக்கவேண்டும். அப்போது பாண்டி நாட்டில் தாயாதிச் சண்டை. அரியணை ஏறுபவன் "நீயா? அல்லது நானா?" என்று பாண்டி மன்னர்கள் வாரிசுப்போர் இடும் காலம். ஈழத்து மன்னனையும் உள்ளே புகவிட்டு அன்னியனுக்கும் இடம் கொடுத்து — சொந்த மண்ணிலேயே தமிழரின் இரத்தம் பெருக்கெடுத்து ஓடும் அளவிற்குத் தாயாதி, பங்காளி, உறவினர்களுக்குள் பயங்கரமான போர்கள் நடந்த காலம். பாண்டி நாட்டில் வாரிசுப்போர் நடக்கும் காலத்தில் இராசாதிராசன் "நான் உரிய மன்னனானவனல்ல; சந்தர்ப்பத்தால் உரிமையில் அரசனானேன்; அரியணைக்கு உரியவர்கள் மன்னனின் பிள்ளைகள்" என்ற இரகசியத்தை வெளியிடுகிறான் என்

ருல், இவனுடைய புனிதமான மனத்தூய்மையை எவ்வாறு புகழ்வது ?

"மாமன்னன் இராசராசனின் மக்களுக்கே அரசு பொறுப்பு அளிப்பேன்" என்று பல்லவராயன்பேட்டையில், மறைந்த பல்லவரையனுக்கு அஞ்சலி செலுத்துவது போன்று அமைகிறது இராசாதிராசனின் சாசனம்.

**கடமை முடித்தேன் – சென்று வருகிறேன்**

ஆண்டுகள் சில நகருகின்றன. இராசராசனின் மகன் குலோத்துங்கனைக் கொற்றம் ஏற்றற்குரியவனுக வளர்க்கிருன் இராசாதிராசன். தன்னுடன் பாண்டிப் படையெடுப்புக்களிலும், பங்குகொள்ளச் செய்கிருன். குலோத்துங்கனை கி. பி. 1178-இல் அரியணை ஏறச் செய்கிருன். அரசனுக்கியதோடு அரசியலிலும் பயிற்சி அளிக்கிருன். தன்னை முடிசூட்டி இராசராசன் பயிற்சி அளித்ததுபோல, தானும் உடன் இருந்து குலோத்துங்கனுக்கு இரண்டு வருடங்கள் அரசியலில் பயிற்சி அளிக்கிருன் அக்கொற்றவன். பின் குலோத்துங்கனிடம் முழுமையாக அரசை ஒப்படைக்கிருன். இராசராசனுக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றி விட்டோம் என்ற நிறைவுணர்ச்சியுடன், தன் கடமையைப் பூர்த்திசெய்து, "போய் வருகிறேன்" என்று குலோத்துங்கனிடம் விடைபெற்று ஆந்திர நாட்டுக்குச் சென்றுவிடுகிருன் வாய்மையும் மரபும் காத்த அச் சோழ மன்னன். கி. பி. 1181 முதல் ஆந்திர நாட்டில் அரசனுக இருந்து ஆட்சிபுரிகிருன்.

**நன்றி நவிலல்**

இராசாதிராசனின் கடமையுணர்ச்சி மூன்ரும் குலோத்துங்கனிடத்திலும் அலை பாய்கிறது, தன்னை ஆளாக்கி,

அரசனுக்கி, அரசியலில் பயிற்சி அளித்த இராசாதிராசனை நன்றி பாராட்டி வாழ்கிறான் குலோத்துங்கன். இராசாதிராசனின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்படிச் செய்வதே தான் அவனுக்குச் செய்யும் நன்றிக்கடன் என்பதை உணர்கிறான். இராசாதிராசன் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு, இடையில் விட்டுப்போன தான தருமங்களை மீண்டும் மீளாவைப்பதன்மூலம் தன் உணர்வை வெளிப்படுத்துகிறான். செம்பனார்கோயில்,[1] திருமயானம்,[2] சிதம்பரம்,[3] கோவந்தப்புத்தூர்,[4] பட்டீசரம்,[5] பெருஞ்சேரி[6] ஆகிய ஊர்களிலுள்ள ஆலயங்களில் உள்ள கல்வெட்டுக்களில் குலோத்துங்கன், இராசாதிராசனின் காலத்து நடந்த தருமங்களை மீண்டும் தொடர்ந்து செய்ய கட்டளைகள் பிறப்பித்துள்ளமையைக் காணலாம். அன்றியும் "பெரிய தேவர் இராசாதிராசதேவர்" என்று பெருமதிப்புடன் கல்வெட்டுக்களிலும் வடிக்கிறான். "பூமருவிய திசை முகத்தோன்" என்னும் இராசாதிராசனின் மெய்க்கீர்த்தியைத் தனக்கும் உரியதாக்கி, இராசாதிராசன்பால் தான்கொண்ட அன்பினை எக்காலத்திலும் எவரும் உணரும் வண்ணம் சாசனங்களில் வடிக்கிறான்.

## ஆனந்தக் கண்ணீர்

இச் சாசனங்கள், இராசாதிராசன் இராசராசனிடத்திலும், குலோத்துங்கன் இராசாதிராசனிடத்திலும் நன்றி உணர்ச்சியுடன் வாழ்ந்ததனை நமக்கு நவில்கின்றன. கடமை உணர்ச்சிமிக்க இக்காவலர்களின் நினைவு ஆனந்தக் கண்ணீர் ஒன்றையே நமக்கு அன்பளிப்பாக வழங்குகிறது.

---

(1) A. R. E. 171/1925; (2) 259/1925; (3) 262/1913; (4) 189/1929; A. R. E. 1929-II, 37; (5) 270/1927; A. R. E. 1926-27, I-27; (6) 37/1925.

# புங்கனூர்க் கல்வெட்டு

சித்தூர் ஜில்லாவில் புங்கனூர் என்னும் தலத்தில் இராசாதிராசனின் கல்வெட்டு ஒன்று உள்ளது.[1] இதில் ஆட்சியாண்டு பதினாலாவதான பன்னிரண்டாவது என்று குறிக்கப்பட்டுள்ளது. இது ஒரு விசித்திரமான குறிப்பீடு. இதனையும் இங்கு ஆராயவேண்டும். ஆய்வாளர் இக் குறிப்பினை நோக்கினர். " இராசாதிராசனின் கல்வெட்டுக் களில் ஆட்சியாண்டுகள் கி. பி. 1163-இலிருந்து ஒருவகை யிலும், கி. பி. 1166-இலிருந்து மற்றொரு வகையிலும் கணக்கிடப்பட்டு, இரண்டு வரிசைப்படிகளில் (Two sets of Initial dates) செல்லுகின்றன. ஆகவே, பதினாலா வது என்பதும், பன்னிரண்டாவது என்பதும் ஒன்று தான்'' என விளக்கினர்.[2] அப்படிக்கொண்டால் பதினாலா வது ஆன பதினொன்றாவது, அல்லது பதினைந்தாவது ஆன பன்னிரண்டாவது என்று அல்லவா வெட்டப்பட்டிருக்க வேண்டும். ஏன் அப்படி இல்லை ? என்ற வினா எழும்.

---

1. Ins. No. 209 of 1932

2. " From Pallavarayan Pettai inscription of this King (433 of 1924) we know that he actually succeeded to the Chola throne two years after his nomination by his predecessor Raja Raja II. The double date given in the present inscription would therefore show that one was calculated from the date of his actual accession and the other from that of his nomination." A. R. E. 1931-32, Page 37, Paragraph 18; Also see Ep. Ind. Vol. 31, page 271. Also see Ep. In. Vol, 22, page 86, Foot note 5.

ஆடுதுறை,[3] திருக்கோயிலூர்,[4] (இரு கல்வெட்டுக்கள்), வழுவூர்,[5] நந்தலூர்[6] ஆகிய ஊர்களின் கல்வெட்டுக்களில் ஆட்சியாண்டுகள் தெளிவாக முறையே 5, 7, 8, 12, 12 என்று காணப்படுகின்றன. ஆனால் சாசன அறிக்கைகளில் இவைகளை முறையே,

5-ஐ 8-ஆகவும் (வித்தியாசம் 3)
7-ஐ 10-ஆகவும் (வித்தியாசம் 3)
8-ஐ 12-ஆகவும் (வித்தியாசம் 4)
12-ஐ 15-ஆகவும் (வித்தியாசம் 3)
12-ஐ 15-ஆகவும் (வித்தியாசம் 3)

திருத்திக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. புங்கனூர்க் கல்வெட்டில் 12-ஆம் ஆண்டு 14-ஆம் ஆண்டுக்குச் சமம் என்றால், மேலே குறிப்பிட்டக் கல்வெட்டுக்களில்

5-ஐ 7-ஆகவும்
7-ஐ 9-ஆகவும்
8-ஐ 10-ஆகவும்
12-ஐ 14-ஆகவும்
12-ஐ 14-ஆகவும்

அல்லவா திருத்தச் சொல்லவேண்டும்? ஆகவே இவையெல்லாம் முன்னுக்குப்பின் முரணாகவும், குழப்பங்கள் நிறைந்தனவாகவும் உள்ளன என்பதனை அறியலாம்.

---

3. Ins. No. 19 of 1913
4. Ins. Nos. 311 of 1921; 343 of 1921
5. Ins. No. 428 of 1912
6. Ep. Ind, Vol, 10, page 127

**குழப்பங்கள் ஏன் ?**

1. கல்வெட்டில் உள்ள ஆட்சி ஆண்டினைத் திருத்தி வாசித்தல் கூடாது.

2. கி. பி. 1163-இல் இராசாதிராசன் அரியணை ஏறியவன் என்ற கருத்தினை விடாப்பிடியாகக் கொண்டு, அக் கருத்தினையே பெரிதும் பாதுகாக்க முயன்றதால் இக் குழப்பங்கள் உருவாயின.

**மீண்டும் புங்கனூர்**

மீண்டும் புங்கனூருக்கு வருவோம். கல்வெட்டில் பதினாலாவதான பன்னிரண்டாவது என்று உள்ளது. இதன் பொருள் என்ன ? சாசனங்களில் இரட்டை ஆண்டுகள் குறிக்கப்பெறும் இடங்களில் அந்த இரண்டு ஆண்டுகளை யும் கூட்டிவந்த மொத்தத் தொகையே சாசனத்தின் காலத்தைக் குறிப்பதாகும்.[7] இது ஒரு பொது விதி. ஆகவே, இவ்விதியினைப் புங்கனூர்க் கல்வெட்டிற்கும் அளித்துப் பொருள் காணவேண்டும். இதன்படி பதினாலாவது ஆன – பன்னிரண்டாவது என்பது.

(அ) பதினான்கு வருடம் ஆனபின்
(ஆ) பன்னிரண்டாவது வருடம்

அதாவது 26-ஆவது ஆண்டு என்று பொருள் கொள்ள வேண்டும்.

இராசாதிராசன் 14 ஆண்டுகளே சோழ நாட்டில் முழுமையாக ஆட்சி புரிந்தான் ; அவ்வாறு இருக்க, எவ் வாறு திடீரென்று இறுதி ஆட்சியின் 12 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு கல்வெட்டைக் காண இயலும்? என்ற வினா

7. தென் இந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 3, பகுதி 2 பக்கம் 369.

எழுகிறது. இவ்விஞவிற்குரிய விடையை, இராசாதிராசனே ஆந்திரத்தில் ஆட்சிபுரிய வைத்துத்தான் காணமுடியும்.

**வேல நாட்டுச் சிற்றரசர்கள்**

வேங்கிநாட்டுக் கீழைச்சாளுக்கிய அரசர்கள் சோழர் களுக்கு நெருங்கிய உறவினர். முதற் குலோத்துங்கனி லிருந்து ஆண்ட சோழ மன்னர்கள் "சாளுக்கியச் சோழர்" என்றே குறிப்பிடப்படுகிருர்கள். வேங்கி நாட்டுச் சிற்றரசர்களில் ஒரு பகுதியினர் வேலநாட்டுச் சிற்றரசர் கள் எனப்பட்டனர். இவர்கள் "தண்டாபுரி" என்னும் ஊரைத் தலைநகராகக்கொண்டு (குண்டூர் ஜில்லா, ரேபல்லி தாலூக்காவில் சந்தவோலு என்னும் ஊர்) ஆட்சி புரிந்த னர்.[8] இராசாதிராசனும் வேலநாட்டுச் சிற்றரசர்களுடன் தங்கியே ஆட்சி புரியலானுன்.[9]

இராசாதிராசனின் 30-ஆம் ஆட்சியாண்டுக்குரிய சாசனம் ஒன்று திராக்ஷாராமாவில் உள்ளது.[10] இதில் இராசாதிராசன் "வேங்கிக் கொங்க மகிபதி" என்றும், "திரிபுவனங்குச" என்றும் அழைக்கப்படுகிருன். மேலும் இராசாதிராசனின் 16-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், 28-இலிருந்து 49-ஆவது ஆட்சியாண்டு வரை உள்ள கல் வெட்டுக்களும் ஆந்திராவில் கிடைத்துள்ளன. இவைகளி லும் 'திருபுவனங்குச அல்லது திரிபுவனச்சக்கரவர்த்தி கள்' என்றே அழைக்கப்படுகிருன்.

வேலநாட்டுச் சிற்றரசர்கள் சோழர்களின் மேலாதிக் கத்தை ஏற்றுக்கொண்ட விசுவாசமான சிற்றரசர்கள்.

---

8. Ep. Ind, Vol, 29, page 226
9. Ep. Ind. Vol, 31, pages 271-2
10. S. I. I. Vol. IV, 1218

இச் சிற்றரசர்கள், இராசாதிராசனை மிக மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடத்தினார்கள். இவர்கள் தங்களுடைய நாட்டின் தென் எல்லை சித்தூர் ஜில்லாவில் உள்ள காளஹஸ்தி வரை பரவியுள்ளதாகச் சாசனங்களில் வடித்துள்ளார்கள்.[11] சோழ சாம்ராஜ்யத்தின் மேலாதிக்கத்தை ஏற்ற இச் சிற்றரசர்களுக்குச் சோழ மாமன்னர்களும் மிகுந்த செல்வாக்கை அளித்தனர். இராசாதிராசன் ஆந்திரத்திலிருந்து ஆட்சி புரியுங்கால், வேலநாட்டுச் சிற்றரசனை குலோத்துங்க பிரிதிவீஸ்வரன் என்பான் ஒருவனுடைய பெயரும் தெலுங்குக் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.[12]

இராசாதிராசன் ஆந்திரத்திலிருந்து, சிற்றரசர்களால் மரியாதையுடன், பெருமதிப்புடன் போற்றப்பட்டு ஆட்சி புரியுங்கால், அனேக தலங்களில் சாசனங்களை வடித்தான். அவைகளில் ஒன்றே சித்தூர் ஜில்லாவில், காளஹஸ்திக்கு அருகில் புங்கனூர் என்னும் ஊரில் உள்ள இராசாதிராசனின் 26-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகும். இராசாதிராசன் இக்கல்வெட்டை 26 என்று குறிப்பிடவில்லை. இவ்வூர் ஆந்திர, தமிழ்நாட்டு எல்லையில் உள்ளதாலும், அக்காலத்தில் தமிழ் பேசும் பிரதேசத்தில் இருந்ததாலும், ஆட்சியாண்டை 14-ஆவது ஆன(பின்) 12 என்று வடித்தான். முன்பு தமிழ்நாட்டில் முழுமையாக 14 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். "அது ஆன பிறகு" 12 ஆண்டுகள் கழித்து மீண்டும் ஒரு கல்வெட்டை வடித்தான் என்பதே புங்கனூர்க் கல்வெட்டின் பொருளாகும்.

---

11. Ep. Ind. Vol, 29, pages 228, 232, 237.

12. Ep. Ind. Vol. 31, page 272. Ins, No. 247 of 1893

ஆகவே, இச் சாசனம் கி. பி. 1192-க்கு உரியது. ஆனால் மூன்றாம் குலோத்துங்கன் இதை ஏற்பானா என்ற ஐயம் எழும். தன்னைச் சிறு பிராயம் முதல் வளர்த்து ஆளாக்கி, அரசனாக்கிய இராசாதிராசனின் இக்கல்வெட்டுக் குலோத்துங்கனுடைய சம்மதத்தைப் பெற்றதுதான். இராசாதிராசனுக்கு மிகுந்த மரியாதையையும், செல்வாக்கையும் குலோத்துங்கன் அளித்திருந்தான். குலோத்துங்கனுடைய 17-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று திருவெண்ணைநல்லூரில் உள்ளது.[13] இது 8-6-1195-க்குச் சமமானது. இதில் குலோத்துங்கன் "பூமருவிய திசைமுகத்தோன் என்னும் இராசாதிராசனின் சீர் மெய்க்கீர்த்தியை முடிய எழுதி என் கல்வெட்டைப் படியுங்கள்" என ஆணையிடுகிறான். கி. பி. 1195-இல் இராசாதிராசனின் மெய்க்கீர்த்தியை ஏற்கும் குலோத்துங்கன் கி. பி. 1192-இல் புங்கனூரில் வெட்டப்பட்ட இராசாதிராசனின் கல்வெட்டை மதித்தான், ஏற்றான் என்பதே பொருந்துவதாகும். குலோத்துங்கன் தன் வாழ்நாள் முழுவதும் இராசாதிராசனிடம் நன்றி மறவாது இருந்தான் என்பதற்குப் புங்கனூர்க் கல்வெட்டு ஒரு எடுத்துக் காட்டாகும். குலோத்துங்கனைப் பொறுத்தவரையில், சோழ நாட்டிற்கு இராசாதிராசன் என்றைக்குமே திரிபுவனச்சக்கரவர்த்திகள்தான். ஆந்திராவில், இராசாதிராசனின் ஏனைய எல்லாக் கல்வெட்டுக்களும் படியெடுக்கப்பட்டு வெளி வந்தால் சரித்திரத்தின் மற்றைய நிகழ்ச்சிகளும், உண்மைகளும் புலப்படும்.

---

13. S. I. I. VII 942

# கி. பி. 1146 முதல் 1182 வரை

கல்வெட்டுக்கள், செப்பேடுகள், சாசன அறிக்கைகள் ஆகியவைகளின் துணை கொண்டு, வரலாற்றுப் பகுதியினுள் ஆய்ந்த சரித்திர நிகழ்ச்சிகளைத் தொடர்வாரியாகக் காண்போம்.

1146 இரண்டாம் இராசராசன் அரியணை ஏறி, சோழ நாட்டை ஆட்சிபுரியத் தொடங்கினன்.

1166 ஜனவரி இராசராசன் தன் இரண்டு பிள்ளைகளும் சிறுவர்களாக இருந்தமையால், தன்னுடைய சகோதரி நெறியுடைப்பெருமாவின் மகனை எதிரிலிப் பெருமாளுக்கு முடி சூட்டினன்; எதிரிலிப்பெருமாள் "இராசாதிராசன்" என்னும் அபிஷேக நாமம் அளிக்கப்பட்டான். பெருமான் நம்பிப் பல்லவரையன் இப்பணியில் பெரும் பங்கு கொண்டான்.

1169 இராசாதிராசனின் ஆணையின்கீழ், பெருமான் நம்பிப் பல்லவரையன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து வென்று வந்தான்.

1172 இரண்டாம் இராசராசனின் மறைவு.

1173 பெருமான்நம்பிப் பல்லவரையனின் மறைவு.

1176 இராசாதிராசனின் தளபதி "அண்ணன் பல்லவரையன்" ஈழத்தின்மீது படை யெடுத்து வென்று வந்தான். பிறகு இவன் பாண்டிய நாட்டின்மீதும் படையெடுத்து வென்றான். இப்பாண்டிப் போரில் இராசராசனின் மகனாகிய குலோத்துங்கனும் பங்கு கொண்டான்.

1178 சூலை குலோத்துங்கன் இராசராசனின் இரு மக்களுள் ஒருவனுவான். இவன் அரியணை ஏறும் பருவம் உற்றான். ஆகவே, இராசாதிராசன் நாட்டை ஆளுவதற்கு உரியவனான குலோத்துங்கனை அரியணையில் ஏற்றினான். இருவரும் உடன் உறைந்து இரண்டு வருடங்கள் ஆட்சிபுரிந்தனர்.

1180 சூன் தன் மாமனாகிய மறைந்த இராசராசனுக்குக் கொடுத்த வாக்கினைக் காப்பாற்றிய இராசாதிராசன், முழுப் பொறுப்பினையும் குலோத்துங்கனிடம் அளித்து ஆந்திரம் சென்றான்.

1181 இராசாதிராசன் ஆந்திரத்திலிருந்து ஆட்சிபுரியத் தொடங்கினான்.

குலோத்துங்கன் கி. பி. 1217 வரை சோழ நாட்டில் அரசு புரிந்தான். இராசாதிராசன் கி. பி. 1215 வரை ஆந்திரத்தில் ஆட்சி புரிந்தான். இச்சம காலத்தில் இவ்விரு மாமன்னர்களும் நட்புரிமையுடன் ஒழுகினர்.



# ஸ்ரீ புஜண்டரின் காலக் கணக்கீடு

நான், இந்நூலை எழுதும் காலத்தில் அநேக புத்தகங்களையும், சாசன அறிக்கைகளையும் ஆராயவேண்டி வந்தது. காஞ்சீபுரம் கல்வெட்டின் துணைகொண்டு இராசாதிராசன் கி. பி. 1166-இல் முடி சூடியவன் என்று நிர்ணயித்தேன். இதற்குமேல் என்ன செய்வது என்று புரியவில்லை. மீண்டும் ஸ்ரீ புஜண்டரைக் கேட்கவேண்டும் என்ற அவா மேலிட்டது. 1975 டிசம்பர் மாதம் 10-ஆம் தேதி திரு இரமணி அவர்களைச் சந்தித்தேன். சுவடியில் மற்றும் சில விளக்கங்கள் கேட்கவேண்டும் என்று கூறினேன். திரு இரமணி அவர்களும் அருள் கூர்ந்து சுவடியை எடுத்துப் படிக்க ஆச்சரியமுடன் முக்கியமான சில விஷயங்களை அறிந்தேன்.

சுவடியில் ஸ்ரீபுஜண்டர் இராசாதிராசனின் திருமணத்தையும் அரியணை ஏறிய நிகழ்ச்சிகளையும் விவரித்தார். ஸ்ரீ புஜண்டர், "இரண்டாம் இராசராசன் தன் சகோதரி நெறியுடைப்பெருமாவின் மகனை இராசாதிராசனுக்கு, பார்த்திப வருடத்தில் தைத்திங்களில், உத்திரட்டாதியில், மீன லக்னத்தில் திருமணம் செய்வித்தான்; மறு தினம் இராசாதிராசனை அரியணையில் ஏற்றினான்; இராசாதிராசன் சிம்மாசனத்தில் வீற்றிருந்த சமயம் மறையவரும், புலவர்களும் அவன் பாதத்தில் விநாயகனை முன்னிட்டு இருக்கும்

ஒரு பொருளால் அருச்சித்தனர் ; தருமம் ஓங்குக என்றும் வாழ்த்தினர்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். மறை முகமாக, 'விநாயகனை முன்னிட்டு இருக்கும் ஒருபொருள்' என்று குறிப்பிடுவது ''அறுகம்புல்லை'' உணர்த்தும். ''மன்னன் அரியணை ஏறிய காலத்து மறையவர் அறுகம் புல்லால் அவன் பாதத்தில் அருச்சிப்பர். அறம் ஓங்குக என்றும் வாழ்த்துவர்'' என்று கலிங்கத்துப்பரணியில் கூறப்படும் செய்தியை இங்கு ஒப்புநோக்கி வியந்தேன்.

இராசாதிராசனின் திருமணம், அரியணை ஏறிய நாட் களின் பஞ்சாங்கக் குறிப்புக்களை ஸ்ரீபுஜண்டர் தந்தார். இக்குறிப்புக்களைக்கொண்டு கிறித்துவ ஆண்டை எப்படிக் கணிப்பது? இச் சமயத்தில் நண்பர் ஒருவர் மூலமாக எனக்கு ''எபிமரீஸ்'' புத்தகம் கிடைத்தது. காலக் கணக் கீட்டு முறையைக் கற்றேன். இடையில் நந்தலூர், திருப் பாச்சூர்க் கல்வெட்டுக்களின் சாசன அறிக்கைகள் தென் பட்டன. இதன் வாயிலாக ''இராசாதிராசன் அரியணை ஏறிய நாள்'' என்னும் கட்டுரையையும் வடித்தேன். ''எபிமரீஸ்'' துணைகொண்டு ஸ்ரீ புஜண்டரின் பஞ்சாங்கக் குறிப்புக்களைக் கிறித்துவ ஆண்டிற்குக் கணித்தேன். அதன்படி கிடைத்த நாட்களாவன :

இராசாதிராசன் திருமணம் புரிந்துகொண்ட நாள் 7—1—1166 ஆகும். ஆகவே, இராசாதிராசன் அரியணை ஏறியது இதற்கு அடுத்த நாளாகிய 8—1—1166 ஆகும். இராசாதிராசன் 4—1—1166-க்கும் 16—1—1166-க்கும் இடையில் உள்ள ஏதோ ஒரு நாளில் அரியணை ஏறினன் என்பதனைப் பக்கம் 138-இல் துணிந்து வரையறுத்துள்

ளோம். ஸ்ரீ புஜண்டர் கூறிய 8—1—1166 இப்பகுதியில் உள்ளதனைக் காணலாம்.

### இரண்டாம் இராசராசனின் இறுதிக்காலம்

ஸ்ரீ புஜண்டர், இராசாதிராசனுக்கு முடிசூட்டும் காலத்தில் அதாவது கி. பி. 1166 ஜனவரியில் இராசராசனுக்கு 52-ஆம் ஆண்டு நடந்துகொண்டிருந்தது என்பர். "ஐம்பத்திரண்டாம் ஆண்டதனில் துயர்கொண்டதொரு காலம்" என்பது குருவின் அருள்வாக்கு. இராசராசன் "ஐம்பத்தேழும் ஆனதொரு காலம் இறந்தான்" என்று கூறியுள்ளார். இதனால் இராசராசன் 57 வயது பூர்த்தியாகி 58-ஆம் வயது நடக்கும் காலத்தில் இறந்தான் என்பது புலப்படும். எனவே, கி. பி. 1172-இல் முற்பகுதியில் இராசராசன் இறந்தான் என்பதும் பெறப்படும். கல்வெட்டுக்களின் துணைகொண்டு ஆராய்ந்து பக்கம் 58-இல் இதனை உறுதி செய்துள்ளோம்.

### மூன்றாம் குலோத்துங்கன்

இராசாதிராசன் அரியணை ஏறிய காலமாகிய கி. பி. 1166 ஜனவரியில் குலோத்துங்கன் "ஆறும் ஆண்டு கொண்டு நின்றான்" என்று ஸ்ரீ புஜண்டர் கூறியுள்ளார். எனவே, குலோத்துங்கனுக்கு 6 வயது பூர்த்தியாகி 7-ஆவது வயது நடந்துகொண்டிருந்தது என்னும் செய்தி பெறப்படும். இவன் 18 வயது பூர்த்தியானபின் ஞானசிவர் உரைத்தபடி அரியணை ஏறி, பூரணமான ஆட்சியைப் பெற்றான். அதாவது 19-ஆவது வயது நடக்கும் காலத்தில் குலோத்துங்கன் சோழ மன்னனானான். இது கி. பி. 1178-இன் இடைப்பகுதிக்குச் சமமானது. கல்வெட்டுக்களின் துணைகொண்டு ஆராய்ச்சியாளர் குலோத்துங்கன் கி. பி.

1178 ஜூலை 6-ஆம், 8-ஆம் தேதிகளுக்கிடையில் அரியணை ஏறினான் என்றும் உறுதி செய்துள்ளனர்.

## ஆந்திராவில் இராசாதிராசன்

இராசாதிராசன் வேங்கி நாட்டில் 30 ஆண்டுகளுக்கு மேல் அரசு புரிவான் என்று ஞானசிவர் உரைத்தார். கல்வெட்டுக்களின்படி இராசாதிராசன் ஆந்திராவில் கி. பி., 1181 முதல் கி. பி. 1215 வரை அரசாண்டவன் என்பது பக்கம் 146-ல் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீபுஜண்டர் கூறியதுபோல் இராசாதிராசன் ஆந்திராவில் 30 ஆண்டுகளுக்குமேல் அரசாண்டவன் என்பதும் உறுதியாகிறது. இக்கணக்குகளைக் காணும் காலத்துச் சுவடியில் ஸ்ரீ புஜண்டரின் அருள் வாசகங்களில் எத்தனை உண்மைகள் புதைந்துள்ளன என்பதை அறியலாம்.



# ஆர்ப்பாக்கம் கல்வெட்டில் அகோர பூசை

" ஈழ மன்னனுன பராக்கிரமபாகு பாண்டி நாட்டின் மீது கி. பி 1169-இல் படையெடுத்தான். பிறகு ஈழப்படை சோழ ராஜ்யத்திற்கு உள்ளே நுழையக்கூடிய நிலையும் 'உருவாகியது" என்னும் செய்திகளை பக்கம் 157-இல் விவரித்துள்ளோம்.

ஈழப்படை முதலில் வெற்றி கொண்டதால் சோழ நாடே கலங்கியது. அப்பொழுது சோழப் பேரரசுக்கு உட்பட்டு இருந்த குறுநில மன்னனுன எதிரிலிச்சோழ சம்புவரையன் என்பான், சுவாமிதேவர் என்றழைக்கப் பட்ட உமாபதி தேவர் ஞானசிவர் என்னும் மகானிடம் இதனை விண்ணப்பித்தான். ஞானசிவர், ஈழப்படைத் தோல்வியுறவேண்டி 28 நாட்கள் அகோர பூசை செய்தார். இப் பூசையின் அருட்கடாட்சத்தால் பெருமான்நம்பிப் பல்லவரையன் ஈழப்படையை வென்றுன்; இராசாதிராசன் குலசேகரபாண்டியனைப் பாண்டிய மன்னனுக ஆக்கினுன். இதன் காரணமாகச் சம்புவரையன் ஞானசிவருக்கு ஆர்ப் பாக்கம் என்ற கிராமத்தையே தானமாக அளித்தான்.

இச் செய்திகள் இராசாதிராசனின் 5-ஆம் ஆட்சி யாண்டுக்குரிய ஆர்ப்பாக்கம் கல்வெட்டில் காணப்படுகின் றன.[1] இக்கல்வெட்டின் 27–30-ஆவது வரிகள் ஆராய்ச் சிக்குரியன.

வரி 27 : அவர்கள் பூசலிலே அறப்பட்டுத்

---

1. Ins. No. 20 of 1899; S. I. I. Vol. VI, 456; இவ் வாலயத்திற்கு நேரில் சென்றேன்.

வரி 28 : துரப்புண்டு போம்படிக்கு அத்ருஷ்ட முகத்தாலே வேண்டும் ய

வரி 29 : த்நம் பண்ணுகிறோமென்றருளிச் செய்து இருபத்தெட்டுநாள் அகோர

வரி 30 : சுபூசை பண்ணியருளினர்

என்பன அவ்வரிகளாகும். இக்கல்வெட்டிற்கு விளக்கங்கள் கூறும் காலத்து அறிஞர், இவ் அகோரபூசை சிவனுக்குச் செய்யப்பட்டதாகக் கருதினர்.[2] கல்வெட்டில் இப்பூசை இன்ன தெய்வத்திற்குத்தான் செய்யப்பட்டது என்றோ அல்லது இந்த இடத்தில்தான் செய்யப்பட்டது என்றோ கூறப்படவில்லை. "அகோர சுபூசை" என்றே தான் கூறப்பட்டிருக்கிறது.

வெற்றி வேண்டும் வீரர் கொற்றவையைப் பரவுதல் தான் இயல்பு. சோழர்கள் போரின் நிமித்தமாகக் காளியை முதற் தெய்வமாகக் கொண்டுள்ளதைப் பரணி நூல்கள் வாயிலாக அறியலாம். தவிரவும், இம்மாதிரியான பூசைகளைத் தலைநகரில்தான் செய்வார்கள். ஞானசிவருக்குத் தானமாக அளிக்கப்பட்ட ஆர்ப்பாக்கத்தில் இக்கல்வெட்டு உள்ளதால், அவ்விடத்திலேயே அகோரபூசை நடந்தது என்றும் கொள்ளமுடியாது.

சுவடியில் ஸ்ரீபுஜண்டர் அகோரபூசையைப் பற்றிக் கூறிய செய்திகள் 19–20-ஆம் பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளன. ஸ்ரீபுஜண்டர் கூறியவாறு அகோரபூசை தலை

---

2. A Topographical list on the inscriptions of the Madras Presidency by V. Rangacharya Vol. I, Page 353; No. 248.

நகராகிய மும்முடிச்சோழ மண்டலத்தில் காளிக்கே செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அகோரபூசையை மாமன்னன் இரண்டாம் இராசராசனே முன்னின்று நடத்தியதாக ஸ்ரீ புஜண்டர் கூறுகிறார். ஆர்ப்பாக்கம் கல்வெட்டிற்கு உரிய கி. பி. 1170-71-இல் இராசராசன் உயிருடன் இருந்தான் என்பதனைப் பக்கம் 158-இல் விளக்கியுள்ளோம். ஆகவே, ஸ்ரீபுஜண்டர் கூறியவாறு இராசராசனே மந்திரிகள், சம்புவரையன் ஆகியவர்கள் மூலம் இப்பூசைக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

சுவடி கேட்கும் காலத்து ஸ்ரீபுஜண்டர் மற்றும் ஓர் உண்மையையும் கூறினார். அதாவது, "சோழமன்னர்கள் போருக்குப் புறப்படும் முன் காளியை வழிபடுவார்கள். போரில் வெற்றி அடைந்து திரும்பியவுடன் அன்னையைத் துர்க்கையின் வடிவத்தில் வழிபடுவார்கள். இவ்விரு உருவ வழிபாட்டு முறைகளும் ஒரே தெய்வத்தை (அன்னையை) இரு நிலைகளில் வணங்கும் வழிமுறைகளாகும்" என்று ஸ்ரீபுஜண்டர் அருளினார். இதனைக் காண்போம்.

"பரணி நாளில், பேய்கள் கூடிக் காளியுடன் அளவளாவி மகிழும்; போரில் வென்ற மன்னரைப் புகழும்; நிணச்சோறு இட்டுப் பேய்கள் மகிழ்ந்து ஆடிப்பாடும்" என்பனவாகப் பரணி நூல்கள் அமைகின்றன. போரில் வென்ற மன்னனைக் காளியும் போற்றுவதாக இந் நூல்களில் கூறப்பட்டுள்ளன. வீரர்கள் காளியிடம், "சலியாத ஆண்மை அஞ்சாமை தந்தருள வேண்டும்" என்று வரம் கேட்பதாகக் கலிங்கத்துப் பரணியிலும் கூறப்பட்டுள்ளது.

சலியாத தனியாண்மைத் தறுகண் வீரர்

தருகவரம் ... ... ...

என்பது கலிங்கத்துப்பரணியில்வரும் 109-ஆவது தாழிசை. ஆகவே, மன்னர்களுக்குப் போரை முன்னிட்டுள்ள முதற் தெய்வம் காளியே என்பதை அறியலாம்.

## சோழ மன்னர்களின் காளி வழிபாடு

இந்நூலை எழுதுங்கால், நான் அநேக தலங்களுக்குச் சென்று கல்வெட்டுக்களை நேரடியாகக் காணவேண்டி யிருந்தது. அவ்வாறு சென்றவிடங்களில் சோழர்களின் காளி வழிபாட்டு முறையையும் அறியலானேன். சரித்திர ஆராய்ச்சிக்கு இச் செய்திகள் துணைபுரியும் என்ற கருத்தில், இதனையும் ஈண்டு இங்குச் சுருக்கமாக விளக்குகிறேன்.

கி. பி. 850-இல் சோழ ராஜ்யத்தைத் தாபித்த விஜயாலயன் தஞ்சைக் கோட்டை வாயிலில் ஓர் காளியைத் தோற்றுவித்தான். அக்காளியை 'நிசம்பசூதனி' என்னும் பெயரால் சோழ மன்னர்கள் வழிபட்டனர். இன்றும் இக் காளியைத் தஞ்சாவூர் குயவன் தெருவில் உள்ள காளி கோயிலில் காணலாம்.

சோழ மன்னர்கள் காளியையும், துர்க்கையையும் மூன்றுவிதமான உருவங்களில் வணங்கினார்கள். இம் மூன்று உருவங்களும் ஒரே தெய்வத்தின் வேறுபட்ட மூன்று திருவுருவங்களாகும்.

### காளி

16-ஆம் பக்கத்தினை அடுத்து நல்லூர்க் காளியின் திருவுருவத்தினை வெளியிட்டுள்ளோம். இந்நிலையிலுள்ள

காளியையே, சோழ மன்னர்கள் போருக்குச் செல்லுமுன் வழிபட்டார்கள். இம்மாதிரியான காளியை இதே வடிவத்தில் மும்முடிச் சோழமண்டலத்திலும், மற்றும் சில தலங்களிலும் காணலாம். உடையாளூரில் செல்வமாகாளியாகவும், திருக்கருகாவூரில் முல்லைக் காளியாகவும், சோழன் மாளிகையில் இளங்காச்சி அம்மனுகவும், திருவலஞ்சுழியில் அஷ்டபுஜக் காளியாகவும், சிதம்பரத்தில் தில்லைக்காளியாகவும், நீடூரில் மகா காளியாகவும் இவ்வன்னை இன்றும் காட்சி தருகின்றுள். கர்நாடக மாநிலத்தில் கோலாரில் "கோலாரம்மா" என்று வணங்கப்படும் அம்மனும் இவ்வன்னையின் வடிவமாகவே உள்ளது. ' மஹா காளி'' யின் சகஸ்ரநாம அருச்சனையில், ''கோலாபுர வாஸநி நமஹ'' என்று சொல்லப்படும் பதமும் இங்கு நோக்கத்தக்கது. இவ்வாலயத்தில் சோழ அரசர்களின் கல்வெட்டுக்களும் உள்ளன. (அரசர்கள், நின்றகோலத்தில் உள்ள காளியின் உருவத்தை வழிபடுதலும் உண்டு.)

**துர்க்கை**

சோழ மன்னர்கள் போரில் வெற்றிகொண்டபிறகு, அன்னையைத் துர்க்கையின் வடிவத்தில் வணங்கிஞர்கள். பக்கம் 32-இனே அடுத்து வெளியிடப்பட்டிருக்கும் பட்டிசரம் துர்க்கையின் திருவடிவம் இந்நிலையினைச் சார்ந்ததே. இம்மாதிரியான மற்றுமொரு துர்க்கையை (சிம்ம வாகனத்துடன் மகிடத்தின்மேல் நின்ற திருக்கோலத்தில், இடது கையில் கிளியுடன்) மேலக்கடம்பூர் சிவாலயத்தில் காணலாம். சிம்மம் இல்லாது மற்றைய இலட்சணங்களுடன் கூடிய அன்னையைத் திருநறையூர், கூகூர், சிதம்பரம் தில்லையம்மன்கோயில் ஆகிய இடங்களில் காணலாம். மகிடத்தின்மேல் நின்ற நிலையில் நான்கு, ஆறு, எட்டு கரங்

களுடன்கூடிய துர்க்கையும் (இடது கையில் கிளி இல்லாமல்) அநேக தலங்களில் காணப்படுகிறாள். துர்க்கை வெற்றியின் சின்னமாக வணங்கப்படும் அன்னையாகும்.

**கார்த்தியாயனி**

6—9-ஆம் நூற்றாண்டுகளில் சாளுக்கிய நாட்டில் கார்த்தியாயனி என்னும் அன்னை வழிபாடு பின்பற்றப்பட்டது. இவ்வன்னை வழிபாடு தமிழகத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவள் காளி, துர்க்கை ஆகிய இரண்டு நிலைகளுக்கும் நடுவணதாகக் காட்சி தருகிறாள். இத் திருவுருவத்தில் அன்னை அசுரனுடன் போரிடுவது போலவும், சிம்மம் மகிஷாசுரன்மீது பாய்வது போலவும், அன்னையுடன் போரிடுங்கால் அசுரன் கொல்லப்படுவது போலவும் காணப்படும். அன்னை எட்டு, பதினாறு அல்லது இருபது கரங்களுடன், பல ஆயுதங்களை ஏந்திப் போர் புரிவது போலக் காணப்படுவாள். அரசர்கள் போர் புரியுங்கால் போர்க்களத்தில்கூட (அருள் வேண்டி) இவ்வன்னையின் நினைவால் இருந்த காரணத்தால், அன்னையின் திருவுருவமும் இவ்வாறு காட்சியளிக்கின்றதுபோலும், "மஹாகாளியின்" சகஸ்ரநாம அருச்சனையில் உள்ள "கார்த்தியாயந்யை நமஹ" என்ற பதமும் இங்கு நோக்கத்தக்கது. அன்னையின் இவ்வுருவத் திருமேனியைக் கங்கைகொண்ட சோழபுரம், அம்மங்குடி, துக்காச்சி, கங்கைகொண்ட சோழபுரம் அருகில் உள்ள வீரரெட்டி அழகர்கோயில் முதலிய இடங்களில் காணலாம். ஆனால் இக் காலத்தில் இவ்வன்னை கார்த்தியாயனி என்று கூறப்படாது துர்க்கை என்றே அழைக்கப்படுகிறாள். அன்னையின் காயத்திரி மந்திரம் அருச்சனை மந்திரங்கள் வாயிலாகக் கார்த்தியாயனி,

துர்க்கை, மகிஷாசுரமர்த்தினி என்னும் பெயர்கள் ஒரே அன்னைக்கு உரியன என்பதனையும் அறியலாம்.[3]

## போரும் வெற்றியும்

மன்னன் போரில் வீரத்தை வெளிப்படுத்துகிறான்; வீரத்தில் கோபத்தின் நிழலைக் காண்கிறோம். போரில் வெற்றிகண்டபின், இவ்வெற்றி எதிரியைத் தோல்வியுறச் செய்ததால்ஆன "ஒரு யதார்த்த நிலையை" மட்டும் அடிப் படையாகக் கொண்டதாக இருத்தல் கூடாது; இதைத் தொடர்ந்து அமைதியும் சமாதானமும், மீண்டும் சுபீட்ச மும் ஏற்படவேண்டும் என்றுதான் மன்னன் நினைப்பான். காளியைப்போன்ற கோபமும், துர்க்கையைச் சார்ந்த சமரசமும் மன்னர்களுக்குத் தேவையானவை யாகும். "கோபேச காளி ஸமரே ச துர்க்கா" எனப்படும் த்யான ஸ்லோகம் இதனையே நினைப்பூட்டுகிறது.

## ஆர்ப்பாக்கம் கல்வெட்டில் அகோரபூசை

இவைகளைத் தொகுத்து நோக்கும்போது ஆர்ப்பாக்கம் கல்வெட்டில் கூறப்படும் அகோர பூசை, காளிக்குச் செய்யப்பட்டதே ஆகும் என்று துணிந்து கூறலாம்.



3. "காத்யாயனாய வித்மஹே கன்யகுமாரி தீமஹி தன்னோ துர்க்கிப் ப்ரசோதயாத்"

**சேர்க்கை எண் 1.**

## சோழவேந்தர் மரபு.

- விக்கிரமசோழன்
  - குலோத்துங்கன் II<br>கி. பி. 1133-50
    - இராசராசன் II<br>(1146 — 1172)
      - மூத்தோன்<br>(இவன் சமயப்பற்றுக் கொண்டு மணிபல்லவத் தீவுக்கு ஏகினன். இவன் பெயர் ஞானசேகரராசன்)
      - குலோத்துங்கன் III<br>(1178—1217)
    - நெறியுடைப்பெருமா<br>(இவள் நெறியுடைநாயகி ; கணவன் ஞானசேகரன்)
      - எதிரிலிப்பெருமாள் என்னும் இராசாதிராசன் II<br>(1166—1180)<br>(இவன் 1181—1215 வரை ஆந்திர நாட்டில் தங்கி அரசு புரிந்தான்)

---

இப்பட்டியல் ஸ்ரீ புஜண்டரின் அருள்வாக்கினை அடிப்படையாகக்கொண்டு, கல்வெட்டுக்களின் துணை கொண்டு உருவாக்கப் பெற்றதாகும்.

( ) இக் குறியீட்டுள் அமைந்தவர் பற்றிய பல விவரங்கள் ஸ்ரீ புஜண்டரால் அருளப்பட்டுள்ளன.

சேர்க்கை
எண் 2

## முன்னவர் பற்றிநின்ற வழி — விளக்கப் பட்டியல்

### சோழமன்னர்கள் வம்சாவளி




குறிப்பு: 1. முதல் இராசராசனிலிருந்து ஆண்ட மன்னர்கள் எண்களால் வரிசைப்படுத்தப் பட்டுள்ளனர்.
2. குலோத்துங்கன் I-உம் இராசாதிராசன் II-உம் பெண் வழி உரிமையால் மன்னரானவர்கள்.

## சேர்க்கை 3

பக்கம் 86-இன் அடிக்குறிப்பு 7-இல் சில சரித்திர நிகழ்ச்சிகளின் விவரங்களைச் சேர்க்கை எண் 3-இல் காணுமாறு குறிப்பிட்டிருந்தேன். முதற்குலோத்துங்கன் பெண் வழியில் வந்தவன் ; உரிமையில் முடிசூடியவன் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

வீரராசேந்திரனின் சகோதரியின் மகனை முதற் குலோத்துங்கன் உரிமையிற் மணிமுடி தரித்ததைப் போன்று, இராசராசனும் தன்னுடைய சகோதரியின் மகனை எதிரிலிப்பெருமாள் என்னும் இராசாதிராசனுக்கு முடிசூட்டினன் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

சில ஆய்வாளர் குலோத்துங்கன் உரிமையிற் மணிமுடி தரித்தவன் அல்லன், அரியணையைக் கைப்பற்றினன் என்று கருதுவதும் உண்டு. குலோத்துங்கன் உரிமையில் தான் மணிமுடி தரித்தான் என்னும் உண்மையை அடுத்து வரும் பகுதிகளில், "முன்னுளில் காரியம் இருந்தபடி" என்னும் தலைப்பின்கீழ் ஆராய்ந்துள்ளேன். இது ஒரு நீண்ட ஆராய்ச்சி. இவ்வாராய்ச்சி இதுவரை வெளிவராத சில புதுச்செய்திகளையும் தருகிறது. இதனைக் காண்போம்.



# மூன்றனில் காரியம் இருந்தபடி

முதல் இராசராசனுக்குப்பிறகு முதல் இராசேந்திரன் ஆட்சி புரிந்தான். இவனுக்குப்பின் இவன் மகனாகிய முதல் இராசாதிராசன் ஆட்சி புரிந்தான். இவனுக்குப் பிறகு இவனுடைய தம்பியாகிய இரண்டாம் இராசேந்திரன் ஆட்சி புரிந்தான். இரண்டாம் இராசேந்திரன் பரகேசரி என்னும் பட்டம் புனைந்து அரசு புரிந்தவன். இவன் தன்னுடைய மகனாகிய இராசமகேந்திரன் என்பவனை இராச கேசரி என்னும் பட்டத்துடன் அரியணை ஏற்றினான். ஆனால் இவன் சில வருடங்களே அரசாண்டு தன் தந்தையின் காலத்திலேயே இறந்தான். தொடர்ந்து அரசாண்டவனான இராசேந்திரனுக்குப் பிறகு இவன் தம்பி பரகேசரி வீரராசேந்திரன் அரசெய்தினான். இவ் வீரராசேந்திரன் எவ்வாண்டில் எம்மாதத்தில் ஆட்சியைத் தொடங்கினான்? என்பது முதலாவதாக ஆராயற்பாலது. இவ்வாய்வுக்கு இவன் காலத்தைச் சேர்ந்த பஞ்சாங்கக் குறிப்புக்களுடன் கூடிய கல்வெட்டுக்கள் துணை புரிகின்றன. கணிதவியலறிஞர் இவற்றின் காலங்களை வரையறுத்துள்ளனர். அக் கல்வெட்டுக்கள் பட்டியல் (1)-இல் தரப்பட்டுள்ளன.

### பட்டியல் 1

| ஊர் | ஆட்சி ஆண்டு | நாள் | சாசன எண் |
|---|---|---|---|
| மணிமங்கலம் | 5 | 10-9-1067 | 2/1892 E.I. VII, [P-9 |
| கிளையூர் | 7 | 27-1-1070 | 88/1925 |
| சீகாழி | 6 | 12-3-1069 | 376/1919 |
| கிளையூர் | 7 | 18-3-1070 | 87/1925 |
| யோகிமல்லவரம் | 7 | சகஆண்டு 991 | 273/1904 |

## பட்டியல் 2

## வீரராசேந்திரனின் ஆட்சிக்காலம் கி. பி. 1063—1070

| ஆட்சி ஆண்டு | மணிமங்கலம் படி | கிளையூர்படி | சீகாழிபடி | கிளையூர்படி | யோகிமல்லவரம்படி சக | கி. பி. |
|---|---|---|---|---|---|---|
| 8 | 10-9-70 | 27-1-71 | 12-3-71 | 18-3-71 | 992 | (70-71) |
| 7 | 10-9-69 | 27-1-70 | 12-3-70 | 18-3-70 | 991 | (69-70) |
| 6 | 10-9-68 | 27-1-69 | 12-3-69 | 18-3-69 | 990 | (68-69) |
| 5 | 10-9-67 | 27-1-68 | 12-3-68 | 18-3-68 | 989 | (67-68) |
| 4 | 10-9-66 | 27-1-67 | 12-3-67 | 18-3-67 | 988 | (66-67) |
| 3 | 10-9-65 | 27-1-66 | 12-3-66 | 18-3-66 | 987 | (65-66) |
| 2 | 10-9-64 | 27-1-65 | 12-3-65 | 18-3-65 | 986 | (64-65) |
| 1 | 10-9-63 | 27-1-64 | 12-3-64 | 18-3-64 | 985 | (63-64) |
| 0 | 10-9-62 | 27-1-63 | 12-3-63 | 18-3-63 | 984 | (62-63) |

•வீரராசேந்திரனின் காலத்தனவாகிய இவற்றின் துணையால் வீரராசேந்திரனின் . முதலாம் ஆட்சியாண்டு எது என்பதனைப் பின்னோக்கிச் சென்றால் அறியலாம். பின்னோக்கிச் செல்லும் கணக்கீடுகள் பட்டியல் 2-இல் தரப் பட்டுள்ளன.

பட்டியல் 2-ஐ நோக்கிய மாத்திரத்திலேயே வீர ராசேந்திரனின் ஆட்சி 18-3-1063-க்குப் பின்னால்தான் ஆரம்பமாகிறது என்பதனை எளிதில் அறியலாம். இதனை ஊன்றிப் பார்ப்போமானால் வீரராசேந்திரன் கி. பி 1063 மார்ச்சு மாதம் 18-ஆம் தேதிக்குமுன் அரியணை ஏற வில்லை என்பதும் 18-3-63-இலிருந்து 10-9-63-க்குள் அமைந்துள்ள காலப் பகுதியில் இருக்கும் ஏதோ ஒரு நாளில்தான் தனதாட்சியைத் துவக்கினான் என்பதும் தெற்றெனப் புலனாகும்.

இரண்டாவதாக வீரராசேந்திரனின் ஆட்சி எதுவரை செல்லக்கூடியது என்பது திட்டவட்டமாக அறியற் பாலது. வீரராசேந்திரன் ஏழு ஆண்டுகள் முழுமையாக ஆண்டவன் என்பதனைக் கல்வெட்டுக்கள் உறுதியாக்கு கின்றன. வீரராசேந்திரனின் மகனாகிய அதிராசேந்திர னின் கல்வெட்டொன்று, வீரராசேந்திரனின் எட்டாம் ஆட்சியாண்டில் இடப்பட்ட ஒரு உத்தரவைக் குறிப்பிடு கிறது.[1] ஆகவே வீரராசேந்திரன் 7 ஆண்டுகள் முழுமை யாக ஆட்சி புரிந்து, 8-ஆம் ஆண்டிலும் ஆட்சியைத் தொடங்கினான் என்பதும் அறியப்படுகிறது. வீரராசேந் திரன் கி. பி. 1063 ஏப்ரல், செப்டம்பர் பகுதியில் ஆட்சி யைத் தொடங்கியவனாதலால் இவனுடைய 7-ஆம் ஆண்

1. S. I. I. Vol. III 57.

டின் இறுதியும், 8-ஆம் ஆண்டின் தொடக்கக் காலமும் கி. பி. 1070 ஏப்ரல், செப்டம்பர் பகுதியில் உள்ளன என்பதனை எளிதில் அறியலாம்.

## அதிராசேந்திர சோழன்

வீரராசேந்திரனின் மகன் அதிராசேந்திரன் ஆவான். இவன் ஒரு இராசகேசரி. இவனுக்கு வீரராசேந்திரன் எப்போது முடிசூட்டினான் என நோக்குவோம். சித்தமல்லி என்னும் இடத்தில், அதிராசேந்திர சோழனின் 3-ஆம் ஆட்சியாண்டு 329-ஆம் நாளுக்குரியதான கல்வெட்டொன்றுள்ளது.[2] இதன் காலம் 3—5—1071 ஆகும். ஆகவே இவன் 9—6—1068-இல் அரியணை ஏறியவன் என்பது உறுதி. இக் கல்வெட்டிற்குப்பின் இவனுடைய வேறு கல்வெட்டுக்கள் இன்றுவரை இல்லாமையால், அதிராசேந்திரன் 3–5–1071 வரை உயிருடன் இருந்தான்; 1071-இன் இடைப்பகுதிக்கு மேல்தான் இறந்தான் என்று அறுதியிட்டு உணரலாம்.

## திருவல்லம் கல்வெட்டு

திருவல்லம் கோயிலில் அதிராசேந்திரனின் 3-ஆம் ஆட்சி ஆண்டின் 200-ஆவது நாளுக்குரிய கல்வெட்டு ஒன்று உள்ளது.[3] இதன் காலம் 25–12–1070-க்கு உரியதாகும். இது ஒரு நீண்ட கல்வெட்டு. இதில் கூறப்பட்டிருக்கும் செய்திகளால் சில உண்மைகளை அறியலாம். அவைகளை நோக்குவோம்.

(1) வீரராசேந்திரன், தன்னுடைய எட்டாம் ஆட்சியாண்டில் ஓர் உத்தரவை இட்டான். அதாவது, திரு

---

2. Ins. No. 5 of 1945-46

3. Ins, No. 15 of 1890; S. I. I. Vol. III 57

வல்லம் கோயிலுக்குச் சொந்தமான தேவதானக் கிராமங்கள், வீரராசேந்திரனின் 8-ஆம் ஆட்சியாண்டு முதல், வரியைத் திருவல்லம் கோயிலுக்கே செலுத்த வேண்டும் என்பது அவ்வுத்தரவு. என்றைக்கு உத்தரவு இடப்பட்டதோ அன்றிலிருந்துதான் வரி கணக்கிடப்பட்டுச் செலுத்தப்படத் தக்கதாகும். ஆனால், அதிராசேந்திரனின் ஆட்சிக் காலத்தில் கோயிலின் கணக்குகளைப் பார்த்த அதிகாரிகள் இவ்வுத்தரவை எவ்வாறு செயல்படுத்தினார்கள் என்பதனைக் காண்போம்.

(2) 25-12-1070 அன்று அதிகாரிகள் கணக்கைப் பார்த்தார்கள். வரியை அதிராசேந்திரனின் மூன்றும் ஆட்சியாண்டின் முதலாகக் கணக்கிட்டுச் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அவ்வரியிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கோயிலுக்கே நிவந்தம் செய்யவும் கட்டளை இட்டார்கள்.

(3) காலக் கணக்கீட்டின் வாயிலாக வீரராசேந்திரனின் எட்டாம் ஆட்சி ஆண்டு கி. பி. 1070 ஏப்ரல் செப்டம்பர் முதல், 1071 ஏப்ரல் செப்டம்பர் வரையுள்ள ஓராண்டுக் காலமாகும் என்பதை அறியலாம். அதிராசேந்திரனின் 3-ஆம் ஆட்சியாண்டு 1070 சூன் 9-ஆம் தேதி முதல் 1071 சூன் 8-ஆம் தேதியுள்ள பகுதியாகும். ஆகவே வீரராசேந்திரனின் 8-ஆம் ஆட்சி ஆண்டும், அதிராசேந்திரனின் 3-ஆம் ஆட்சி ஆண்டும் இணைந்து செல்லுகின்றன என்ற அடிப்படையில் சாசனத்தை நோக்குவோம்.

(4) கணக்கிடப்படும் வரி குறைவதோ, கூடுவதோ கூடாது. உத்தரவு இடப்பட்ட காலத்தில் இருந்துதான் கணக்கிடப்படவேண்டும். உத்தரவு இட்டது வீரராசேந்

திரனின் எட்டாம் ஆட்சியாண்டின் தொடக்கமாகும். இது கி. பி. 1070 ஏப்ரல், செப்டம்பருக்குள் உள்ள பகுதியாகும். இக்காலத்திலிருந்தே வரி கணக்கிடப்பட வேண்டும். ஆனால் வரி செலுத்துவதை அதிராசேந்திரனின் 3-ஆம் ஆட்சியாண்டின் முதல், அதாவது 9—6—1070 முதல் கணக்கிட்டனர். இதனால் உத்தரவு இடப்பட்ட வீரராசேந்திரனின் எட்டாம் ஆட்சியாண்டின் தொடக்கமும், வரியைக் கணக்கிடும் 9—6—1070-உம் ஒன்றுதான் என்பது விளங்கும். ஆகவே வீரராசேந்திரன் கி. பி. 1070 சூனில் உயிருடன் இருந்தான் என்பது நன்கு விளங்கும்.

(5) மேலும் ஒரு உண்மையும் அறியலாம். அதாவது உத்தரவு இடப்பட்டது ஒரு மன்னனின் ஆட்சியாண்டைக் குறிக்கிறது; உத்தரவு செயல்படுத்தப்படுவது அடுத்த மன்னனின் ஆட்சியாண்டைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இதன் பொருள் என்ன? உத்தரவைச் செயல்படுத்துபவன்தான் ஆட்சி புரிகிறான்; உத்தரவை இட்டவன் ஆட்சியில் இல்லை, அதாவது இறந்துவிட்டான் என்பதே இதன் பொருள். உத்தரவு இடும் காலத்தில் அதாவது கி. பி. 1070 சூனில் வீரராசேந்திரன் இறந்திருந்தால், அதிராசேந்திரனின் 3-ஆம் ஆண்டுமுதல் இடப்பட்ட உத்தரவு என்று குறிக்கப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு இல்லை. உத்தரவு வீரராசேந்திரன் இட்டதாகவே உள்ளது. ஆகையால் கி. பி. 1070-சூனில் உத்தரவை இட்ட வீரராசேந்திரன் உத்தரவு செயல்படுத்தப்படும் தினமாகிய 25—12—1070-இல் உயிருடன் இல்லை என்பதை இதன் வாயிலாக அறியலாம்.

(6) கல்வெட்டில் வீரராசேந்திரனின் 8-ஆம் ஆண்டு என்று வெளிப்படையாகக் கூறப்படவில்லை. ஏழாம்

ஆண்டின் எதிராம் ஆண்டு என்றே கூறப்பட்டிருக்கிறது. இதன் காரணம் என்ன என்பதையும் அறியவேண்டும். மகனின் 3-ஆம் ஆட்சி ஆண்டும், தந்தையின் எட்டாம் ஆட்சி ஆண்டும் ஒன்றுதான். தந்தை ஏழு ஆண்டுகளே முழுமையாக ஆட்சி புரிந்தான். எட்டாம் ஆண்டில் இறந்து விட்டான். 25—12—1070-ஐப் பொறுத்தவரை தந்தை இறந்தவனே. ஆக முழுமையான 8 ஆட்சியாண்டு இல்லாததாலும், தந்தை மகன் ஆகியோருடைய ஒரே ஆட்சிக்காலத்தில் உத்தரவு இடுதலும் (Ordered) செயல் படுத்துதலும் (Executed with effect from) நிகழ்ந்த தாலும், வீரராசேந்திரனின் 8-ஆம் ஆட்சி ஆண்டின் தொடக்கம், ஏழாம் ஆண்டின் எதிராம் ஆண்டின் முதல் என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டது.

## வேப்பங்குளம் கல்வெட்டு

வேப்பங்குளத்தில் அதிராசேந்திரனின் 3-ஆம் ஆட்சி ஆண்டின் 161-ஆவது நாளுக்குரிய கல்வெட்டு ஒன்று உள்ளது.[4] இது 16—11—1070-க்கு உரியது. இதிலும் வீரராசேந்திரனின் ஏழாம் ஆண்டின் எதிராம் ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக வீரராசேந்திரன் 16—11—1070-க்கு முன்னரே இறந்தான் என்பதும் அறியப்படும்.

## வீரராசேந்திரன்

இவற்றைத் தொகுத்து நோக்கினுல் வீரராசேந்திரன் 9—6—1070 அன்று உயிருடன் இருந்தான் என்பதும், 1070 சூன் மாதத்திற்குப் பின்னுல், நவம்பர் மாதத்திற்கு முன்னுல் இறந்தான் என்பதும் புலப்படும்.

---

4. Ins, No. 418 of 1902; S. I. I. Vol, VIII 4

## முதற்குலோத்துங்கன்

முதற் குலோத்துங்கன் வீரராசேந்திரனின் சகோதரியாகிய அம்மங்கையின் மகனுவான். இவன் வீரராசேந்திரனின் அண்ணன் மகளான மதுராந்தகியை மணம் புரிந்தவன். இவன் கி. பி. 13—6—1070-இல் முடிசூடியவன்.[5]

## தொகுத்து நோக்கினுல்

இதுவரை கூறப்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்து நோக்கும்போது, வீரராசேந்திரன் கி. பி. 1063 ஏப்ரலுக்கும், செப்டம்பருக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் அரியணை ஏறினுன். கி. பி. 1068-இல் ஜூன் மாதத்தில் 9-ஆம் நாளில் தன் மகனுக்கு முடிசூட்டி இளவரசன் ஆக்கினுன். கி. பி. 1070-இல் தான் உயிருடன் இருந்த காலத்திலேயே ஜூன் 13-ஆம் நாளன்று குலோத்துங்கனுக்கும் முடிசூட்டி வைத்தான். தன் எட்டாம் ஆட்சி ஆண்டு நடந்துகொண்டிருக்கும்போது அதாவது கி. பி. 1070 ஜூலைக்குப் பின்னுல்தான் உயிர் நீத்தான். வீரராசேந்திரன் இறந்தபின் அதிராசேந்திரன் சுமார் ஒரு வருடம் அரசு புரிந்தான்; 1071-இன் இடைப்பகுதியில் இறந்தான் என்ற செய்திகளை அறியலாம்.

## மற்ருெருவனுக்கும் முடிசூட்டுவானேன் ?

வீரராசேந்திரன் தன் மகனை இளவரசனுக்கி இருந்தான். ஆயினும் தன்னுடைய சகோதரியின் மகனுக்கும் முடிசூட்டினுன் என்பதை மேலே விளக்கியுள்ளோம். இவன் இவ்வாறு செய்ததற்குரிய காரணத்தைக் காண்போம்.

---

5. A. R. E. 1947-48, page 3.

**திருவொற்றியூர்க் கல்வெட்டில்**

வீரராசேந்திரன் தன் இறுதிக் காலத்தில் நோய்வாய்ப் பட்டவனாக இருந்தான் என்பதனைத் திருவொற்றியூரில் உள்ள வீரராசேந்திரனின் காலத்ததான கல்வெட்டு ஒன்று உணர்த்துகிறது.[6] இதில் ஆட்சியாண்டில்லை. இக் கல் வெட்டு இவனுடைய பட்டத்தரசி கோயிற்களித்த நிவந் தங்களைக் குறிக்கிறது. இந்நிவந்தங்கள், ஸ்ரீ வீரராசேந் திர தேவர் உடல்நலம் பெறவும், சக்கரவர்த்திகளின் வம்சம் விருத்தியாகவும், தன் திருமாங்கல்ய பலம் சிறக்க வும், தன் பிள்ளையின் உடல் நலம்பெறவும் அரசியால் தரப்பெற்றன எனச் சாசனம் தெளிவாக்குகிறது.

இச்சாசன வாயிலாக மனைவி தன் மாங்கல்யம் பாது காக்கப் பெறவேண்டும் என இறைவனை வேண்டும் அள விற்குக் கணவரான வீரராசேந்திரன் நோய்வாய்ப்பட்டிருந் தான் என்பதனையும், வீரராசேந்திரனின் மகனான அதி ராசேந்திரனுக்கு மக்கள் இல்லாததால் சோழ வம்சம் விருத்திபெற வாய்ப்பில்லாததாக இருந்தது என்பதனையும் அதிராசேந்திரனும் நோய்வாய்ப்பட்டிருந்தான் என்பதனை யும் உணர்கிறோம்.

முதல் இளவரசனான அதிராசேந்திரன் நோய்வாய்ப் பட்டிருந்தவன். அந்நோயாலேயே இறந்தவன். அதி ராசேந்திரன் உற்றிருந்த நோயின் கொடுமையைக் கூகூரில் உள்ள கல்வெட்டுத் தெளிவாக்குகிறது.[7] அது அதிராசேந் திரன் தன்னாட்சியின் மூன்றுமாண்டில் (கி. பி. 1070-1) கொடிய நோய்வாய்ப்பட்டுத் துன்புற்றான் என்றும் அவன்

---

6. Ins. No. 128 of 1912; A. R. E. 1913 II 32,

7. Ins. No. 256 of 1902; S. I. I. Vol. VII, 884

உடல் நலம்பெறும் பொருட்டு இவ்வூர்க் கோயிலில் தினந் தோறும் தேவாரத் திருப்பதியங்கள் ஓதப்பெற்றன என்றும் கூறுகிறது.

இவ்விரு சாசன வாயிலாகவும் கி. பி. 1070—71-இல் சோழ நாடு இருந்த நிலையை அறியலாம். வீரராசேந்திரன் தன் இறுதியாண்டில் நோய்வாய்ப்பட்டான். தன்னால் 1068-இல் இளவரசனாக ஆக்கப்பட்டிருந்த தன் மகன் அதிராசேந்திரன் வாரிசில்லாதவனாகவும் நோய்வாய்ப்பட்டும் இருத்தலைக் கண்டான். இச் சூழ்நிலையில் வீரராசேந்திரன் தானும், தனது மகனான அதிராசேந்திரனும் நோயின் கொடுமையால் இறந்துவிட்டால் என்ன செய்வது என்று யோசித்து, முடிவில் தன் சகோதரியின் மகனான குலோத்துங்கனுக்குப் பட்டம் கட்டிவைத்தான். தான் இறந்த பின், வாரிசில்லாமல் தன் மகனும் இறந்துவிட்டால் சோழ நாட்டின் அரசுரிமைப்பற்றிக் குழப்பம் ஏற்படும் என்று முன்கூட்டியே யோசித்து முன்னெச்சரிக்கையாக இதைச் செய்தான்.

வீரராசேந்திரன், பட்டத்திற்கு உரிய தக்க தகமைகள் குலோத்துங்கனிடம் உள்ளன என்பதை அறிவான். குலோத்துங்கன் கங்கைகொண்ட சோழபுரத்தில் பிறந்து வளர்ந்தவன். மேலும் சகோதரியின் மகன்; தன் அண்ணனின் மாப்பிள்ளை. வீரராசேந்திரனுடன் போர்க்களங்களில் பங்கு கொண்டவன்; அரசியலிலும் பயிற்சி உள்ளவன். முதல் இராசராசனின் மகளான குந்தவையின் பேரன். குலோத்துங்கனின் உடலில் 75 சதம் சோழர்களின் இரத்தமே ஓடுகிறது. ஆகவே குலோத்துங்கனைத் தனக்கு, அல்லது அதிராசேந்திரனுக்குப்பின் வரக்கூடிய

மன்னனாக ஆக்கிவைத்தான். இவ்வாறு வீரராசேந்திரன் ஒரு ஏற்பாட்டினைச் செய்துவைக்காமல் இருந்திருந்தால்,

(1) வீரராசேந்திரனும், அதிராசேந்திரனும் இறந்த பிறகு அரியணைக்குப் போட்டிகள் ஏற்படும்.

(2) கி. பி. 1012 முதல் 1070 வரையிலான 58 வருட இடைவெளியில் முதல் இராசேந்திரனின் ஆட்சித் தொடக்கத்திலிருந்து ஆண் வழியில் வந்த திறமையான அரச குமாரர்கள் பலரும் அநேக போர்களில் ஈடுபட்டு மறைந்தொழிந்தனர். ஆகவே அரியணைக்குப் பெண் வழியில் வந்த திறமைசாலிகளே போட்டியிடுவர். அப்படிப் போட்டியிடுபவர்கள் மேலைச் சாளுக்கிய விக்கிரமாதித்தியனும், குலோத்துங்கனுமாகத்தான் இருப்பார்கள்.

(3) குலோத்துங்கன் வீரராசேந்திரனின் சகோதரியின் மகன். இவன் வீரராசேந்திரனின் அண்ணனாகிய இரண்டாம் இராசேந்திரனின் மகளும், இராசமகேந்திரனின் சகோதரியுமான மதுராந்தகியை மணம் புரிந்தவன்.

(4) விக்கிரமாதித்தியன் வீரராசேந்திரனின் மகளும், அதிராசேந்திரனின் சகோதரியுமாகிய ராஜசுந்தரியை மணம் புரிந்தவன்.

(5) ஆகவே அரசு வாரிசில்லாத நிலையில் குலோத்துங்கனும், அதிராசேந்திரனின் சகோதரியின் கணவனாகிய விக்கிரமாதித்தியன் தன் வாரிசை முன் வைத்தும் சோழ நாட்டுரிமையை நாடினால் உள்நாட்டுக் குழப்பங்களும், போரும் மூளலாம். இதைத் தடுப்பதற்காகவும், தானும் தன் மகனும் நிச்சயமாய் இறந்துவிடுவோம் என்று உணர்ந்ததாலும், வீரராசேந்திரன் குலோத்துங்கனுக்கு முன்னெச்சரிக்கையாகப் பட்டம் கட்டி வைத்தான்.

(6) அதிராசேந்திரனுக்கு வாரிசு இல்லை. வீரராசேந்திரன் இறந்தபிறகு, அதிராசேந்திரனுக்கு ஒரு மகனும் பிறந்து, அதிராசேந்திரனும் நோயால் இறந்துவிட்டால், அதிராசேந்திரனின் மகனல்லவா ஆளவேண்டும்? அதனால் இப்பொழுதே குலோத்துங்கனுக்கு முடிசூட்டி வைத்தால், பிற்காலத்தில், அதிராசேந்திரனின் மகன் வளர்ந்து ஆளானபின் அரசை அம் மகனிடத்துக் குலோத்துங்கன் தந்திடல் வேண்டும் என்பதும் ஒரு நோக்கமாகலாம். அந்த அளவுக்கு, நம்பிக்கைக்கு உரியவனாகக் குலோத்துங்கனும் விளங்கினான்.

வீரராசேந்திரன் முன்கூட்டித் தீர்க்க தரிசனமாக நினைத்தபடியே நடந்தது. வீரராசேந்திரன் கி. பி. 1070-இன் பிற்பகுதியில் இறந்தான். அதிராசேந்திரனும் கி. பி. 1071-இன் இடைப்பகுதியில் வாரிசில்லாமல் இறந்தான். ஆகவே, முன்பே பட்டம் சூட்டப்பட்டிருந்த குலோத்துங்கன் முழு உரிமை படைத்த, குலமணி மகுடம் உரிமையில் சூடிய சோழப் பேரரசனானான். குலோத்துங்கனின் பெயர் இராசேந்திரன் என்றுதான் அவனுடைய முதல் மூன்று ஆண்டுக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. இவனுடைய நான்காம் ஆண்டுக் கல்வெட்டுக்களிலிருந்து இவன் குலோத்துங்கன் என்று அழைக்கப்படுகிறான். சோழர் குலம் விடுபட்டுப்போகாமல், குலத்தைத் தழைக்கச் செய்தவன் (குலத்தை உத்தங்கம் செய்தவன்) என்ற பொருளில் குலோத்துங்கன் என்ற பெயரை ஏற்றான். வீரராசேந்திரனே குலோத்துங்கனுக்கு முடிசூட்டிவைத்தான் என்னும் உண்மையான வரலாறு கலிங்கத்துப்பரணியிலும் கூறப்படுகிறது. அதனையும் நோக்குவோம்.

## கலிங்கத்துப்பரணியில் கூறப்படும் செய்தி

கலிங்கத்துப்பரணி என்னும் சயங்கொண்டார் இயற்றிய அரிய தமிழ் நூல் அக்காலத்தின் வரலாற்றினைத் தெளிவாக விளக்குகிறது. இந்நூலில் அமைந்த திருவவதாரம் என்னும் பகுதியை நோக்குவோம். குலோத்துங்கன் கங்கைகொண்டசோழபுரத்தில் இருந்த அரண்மனையில் பிறந்தான்; கங்கைகொண்டசோழபுரத்திலேயே வளரலானான்; பெரியோர் இவனுக்கு ஐம்படைத்தாலி அணிவித்தனர்; நடைபயின்றான்; மழலை மொழிந்தான்; பூணூல் அணிந்தான்; உடைவாள் பயின்றான்; யானை, குதிரையேற்றங்கள் அறிந்தான்; படைக்கலப் பயிற்சியிலும், கலைநூல் பயிற்சியிலும் வல்லவனானான். இவ்வாறு குலோத்துங்கன் வளரும் காலத்தில் வீரராசேந்திரசோழன் குலோத்துங்கனை இளவரசன் ஆக்கினான்.

இசையுடனெ டுத்தகொடி அபயனவ
  னிக்கிவனை இளவரசில் வைத்த பிறகே
திசையரச ருக்குரிய திருவினை
  முகப்பதொரு திருவுளம டுத்தருளியே

என்பது தாழிசை.

குலோத்துங்கன் இளவரசன் ஆன உடனே வடநாட்டின்மீது படையெடுத்தான். வயிராகரத்தை எரியூட்டினான்; சக்கரக் கோட்டத்தை அழித்தான்; வடவகை தேசங்களில் பல வெற்றிகள் பெற்று வடநாட்டில் இருந்தான். வடநாட்டில் குலோத்துங்கன் போரில் ஈடுபட்டிருந்தபோது தென்னகத்தில் வீரராசேந்திரன் இறந்தான்.

மாவுகைத் தொருதனி அபயன் இப்படி
வடதிசை மேற்செல மன்னர் மன்னவன்
தேவருக் கரசனுய் விசும்பின் மேற்செலத்
தென்றிசைக் குப்புகுந் தன்மை செப்புவாம்

என்பது தாழிசை. பின் குலோத்துங்கன் தென்னகத்திற்கு வந்து அரசனுனன் என்று கலிங்கத்துப்பரணி கூறுகிறது. பரணி நூலில், வீரராசேந்திரன் குலோத்துங்கனுக்கு முடி சூட்டி இளவரசனுக்கினுன் என்றும் இளவரசன் குலோத்துங்கன் வடநாடு சென்ருன் என்றும் வடநாட்டுப் போரில் ஈடுபட்டிருந்த காலத்தில் வீரராசேந்திரன் இறந்தான் என்றும் குலோத்துங்கன் தமிழ் நாடடைந்து தனக்குள்ள உரிமை காரணமாக முடி சூடினுன் என்றும் கூறப்பட்டுள்ளமையைக் காலக்கணக்கீடும் உறுதி செய்கின்றது.

## ஆய்வாளரும் முதற் குலோத்துங்கனும்

முதற் குலோத்துங்கன் அரியணை ஏறியதுபற்றி இரண்டு விதமான கருத்துக்களை அறிஞர் கொண்டுள்ளனர். ஒரு சாரார் குலோத்துங்கன் அரியணையைக் கைப்பற்றியவன் என்பர். இன்னெரு சாரார் அவன் உரிமை காரணமாக முடிசூடியவன் என்பர்.

## கைப்பற்றியவன்

முதலாவதாகக் குலோத்துங்கன் சோழ அரியணையைக் கைப்பற்றியவன் என்பார் கருத்தினை நோக்குவோம்.

'கைப்பற்றியவன்' என்பவர்கள் தமக்கு ஆதாரமாக விக்கிரமாங்கதேவசரிதம் என்னும் நூலினைக் கொண்டனர். இவர்கள் "வீரராசேந்திரன் கி. பி. 1070-இல் இறந்தான்: சில வாரங்களில் அதிராசேந்திரனும் இறந்தான்;

ஆகவே சந்தர்ப்பம் கைகூடியதால் குலோத்துங்கன் அரியணையைக் கைப்பற்றினான்'' என்று முடிவு கட்டினர். 1945-ஆம் ஆண்டில் வெளியான அதிராசேந்திரனின் சித்தமல்லிக் கல்வெட்டு இம்முடிவினரைக் கலக்கியது. அதிராசேந்திரன் கி. பி. 1071 சூன் வரையிலும் உயிர் வாழ்ந்தவன் என்பது அறியவந்தது. இதற்குப் பின்னர் இவ்வாய்வாளர் தம் வாதங்களை மட்டும் மாற்றிக்கொண்டனர். குலோத்துங்கனின் கல்வெட்டுக்களில் காணப்படும் கி. பி. 1071-ஆம் ஆண்டுக் கலவரங்களைத் தமக்குச் சாதகமாகக் கொண்டனர். ''குலோத்துங்கன் வீரராசேந்திரன் இறந்த பிறகு கி. பி. 1070 சூனில் தன்னை மன்னனாகப் பிரகடனப் படுத்திக் கொண்டான்; சிறிது சிறிதாகச் சோழ நாட்டில் தன் ஆதிக்கத்தை வளர்த்துக் கொண்டான். மேலும் நாட்டில் கலவரங்களினால் அதிராசேந்திரன் கொல்லப் பட்டான். இத்தருணம் குலோத்துங்கனுக்கு அரியணையைக் கைப்பற்றச் சாதகமாயிற்று'' என்று மேலும் விளக்கங்கள் தந்தனர்.[8] தற்போது இக்கருத்தினரின் வாதங்களை நோக்குவோம்.

முதலாவதாக, இவர்கள் கலிங்கத்துப்பரணி முதலான நூல்களில் கூறப்பெற்றுள்ள செய்திகளை உண்மை எனக் கொள்ளவில்லை. தமக்கு எதிராக இருப்பனவற்றைப் புனைந்துரை (கற்பனை)யாக அமைந்த புகழ்ச்சியுரைகள் என்று தள்ளினர். 'சயங்கொண்டார், அதிராசேந்திரனைக் கலிங்கத்துப்பரணியில் கூறவில்லையே' என அந்நூலுக்கும் குறைகண்டனர். இவ்விரு கருத்துக்களும் தமிழ் நூல்களுக்கு குறை தருவனவல்ல; அதிராசேந்திரன் நோய்வாய்

---

8. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 3, பகுதி 2, பக்கம் 77 முதலாகக் காண்க.

பட்டவனாக இருந்தவன். அவனைப்பற்றி உள்ளவாறு கூறுவது நூலுக்கு அமங்கலமல்லவா? எனவே சயங்கொண்டார் கூறாது இருந்தார் எனலாம். ஆனால் விக்கிரம சோழனுலாவில் ஒட்டக்கூத்தர்

"—அங்கவன்பின்

காவல் புரிந்தவனி காத்தோனும்" — —

என இவனைப்பற்றிக் கூறியுள்ளார். குலோத்துங்கன் அரியணையைக் கைப்பற்றியவன் என்றால் வேறு யார் அரியணைக்குரியவன் என்று இவ்வாய்வாளர் சுட்டிக்காட்டத் தவறியமையும் இங்குக் குறிப்பிடத் தக்கது. இங்கே குலோத்துங்கன் அரியணையைக் கைப்பற்றியவன் என்று ஆய்வாளர் ஆதாரமாகக் கொள்ளும் விக்கிரமாங்கதேவ சரிதத்தின் பாட்டுடைத் தலைவனைப்பற்றியும் அந் நூலிற் கண்ட செய்திகளைப்பற்றியும் நோக்குவோம்.

**பில்ஹணர்**

குலோத்துங்கன் அரியணையைக் கைப்பற்றியவன் என்று சாளுக்கிய நாட்டு வடமொழி நூலான விக்கிரமாங்க தேவசரிதம் கூறுகிறது. இதை எழுதியவர் பில்ஹணர் என்னும் வடமொழிப் புலவர். இவர் ஆறாம் விக்கிரமாதித்தியனின் அவைக்களப் புலவர்.

**விக்கிரமாதித்தியன்**

சோழர்களும், மேலைச் சாளுக்கியர்களும் ஜன்ம விரோதிகள். வீரராசேந்திரன் மேலைச் சாளுக்கிய அரசனை ஆகவமல்ல சோமேஸ்வரனை ஐந்து தடவைக்குமேல் புறங்கண்டவன். இறுதிப்போரில் கி. பி. 1067-இல் கூடல் சங்கமத்தில் வீரராசேந்திரனை எதிர்க்கமுடியாது சோமேஸ்

வரன் ஒளிந்துகொண்டான். பின் வீரராசேந்திரன் விஜய வாடாவில் சாளுக்கியர்களைத் தோற்கடித்தான். சோமேஸ்வரனின் இரண்டாம் மகனான விக்கிரமாதித்தியனும் தோற்கடிக்கப்பட்டான். வீரராசேந்திரனின் படைத் தளபதிகளில் ஒருவனான குலோத்துங்கனும் இளமைப் பருவத்தில் இப்போரில் பங்குகொண்டான். இப்போரில் குலோத்துங்கனும், விக்கிரமாதித்தியனும் போர்க்களத்தில் சந்தித்தவர்கள். குலோத்துங்கன் ஜயமடந்தையைத் தழுவினான். விக்கிரமாதித்தியன் தோற்றோடிப்போனான். கி. பி. 1068-இல் ஆகவமல்லன் இறந்தான். விக்கிரமாதித்தியன் தன் அண்ணன் இரண்டாம் சோமேஸ்வரனிடம் பகைமை கொண்டு சோழர்களுடன் சேர்ந்து அண்ணனின் நாட்டில் பாதியைக் கொண்டான். பின் அண்ணனுக்கு எதிராகச் சோழர்களுடன் நட்புறவு செய்துகொண்டு வீரராசேந்திரனின் மகளும், அதிராசேந்திரனின் சகோதரியுமான ராஜசுந்தரியை மணந்தான். பிற்காலத்தில் இவன் தன்னுடைய தம்பியாகிய ஜெயசிம்மனையும் துரத்திவிட்டான். பில்ஹணர் என்னும் புலவர் இவ் விக்கிரமாதித்தியனின் சரித்திரத்தை எழுதினார். அதில் அவர் குலோத்துங்கன் அரியணை ஏறியது பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியதாவது,[9]

**விக்கிரமாங்கதேவ சரிதம்**

"விக்கிரமாதித்தியனுக்குத் திருமணம் நடந்த சிறிது காலத்துக்கெல்லாம் அவன் மாமனாரான சோழ மன்னன் இறந்தான். அதனால் சோழ நாட்டிலே அராஜகம் ஏற்

9. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 3, பகுதி 2, பக்கங்கள் 85, 86.

பட்டது. இதைக் கேள்வியுற்ற மன்னன் இறந்துபோன வேந்தன் மகனுன தன்னுடைய மைத்துனனுக்கு உதவி யளித்து அவனுடைய அரசை நிலைநிறுத்த வேண்டுமென்ற நோக்கம் ஒன்றையே கொண்டு உடனே புறப்பட்டுக் காஞ்சீபுரத்தை விரைந்து அடைந்தான். காஞ்சீபுரத்திலே சில நாட்கள் தங்கித் துஷ்டவர்க்கத்தை அடிபணிய வைத்தான். பிறகு கங்காகுண்ட (அதாவது கங்கைகொண்ட சோழபுர)த்துக்குச் சென்று எதிரியின் பலத்தை அழித்துச் சோழராஜ குமாரனுடைய அரசை ஸ்திரமாக்கினுன். அப்பால் ஒருமாத காலம் அவன் அவ்விடத்திலே தங்கி யிருந்து நிலைமையை ஒழுங்கு செய்தான். அமைதி ஏற் பட்டு விட்டதென்று திருப்தியடைந்த விக்கிரமாதித்தியன் திரும்பித் துங்கபத்திரைக் கரையை அடைந்தான்.''

'' சில நாட்களே ஆனபின், அதிராஜேந்திர சோழன் அவனுடைய குடிமக்கள் திரும்பவும் செய்த கலகத்தில் கொல்லப்பட்டதும் வேங்கிநாட்டு வேந்தனுன ராஜிகன் (குலோத்துங்கன்) என்பான் திருவின் அருளும் கூடிய தால் சிங்காதனத்தைக் கைப்பற்றினுன். குடிலமனமுள்ள அவன் தனக்கு விக்கிரமாதித்தியனுல் அபாயம் நேரிடக்கூடு மெனச் சந்தேகித்து, பின்புறத்திலிருந்து இவன் கவனத்தை வேறு வழியில் திருப்புவதற்காக இவனுடைய இயற்கை விரோதியான சோமதேவனேடு (இரண்டாம் சோமேசுவர னேடு) நட்புரிமை பூண்டு சீர்செய்துகொண்டான்......... விக்கிரமாதித்தியனுக்குத் தீங்கு விளைவிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனே குல விரோதியான சோழன் ராஜிகனேடு கூட்டுச் சேரும்படியாகத் தன் அண்ணனுக்குப் பரந்த பெருமனம் படைத்த விக்கிரமாதித்தியன் என்ன செய்து விட்டான்? அரசநெறியில்லாத ராஜிகனைக் கடிந்து

தண்டிப்பதற்காக விக்கிரமாதித்தியன் தண்டு எடுத்துக் கிளம்பியபோது சோமதேவன் (இரண்டாம் சோமேசுவரன்) தன் முழுப் பலத்தோடும் வெகுவேகமாக இவன் பின்னாலே துரத்திச் சென்றான்........... திராவிட சேனையின் கூட்டம் தயாள மனம் படைத்த விக்கிரமாதித்தியனை அணுகியதும் கடைசியாக அவனுக்குக் கெடுதி செய்யும் சந்தர்ப்பம் வாய்த்து அவனை சோமேச்வரனும் நெருங்கினான்." "போரும் நடந்தது ; விக்கிரமாதித்தியன் வெற்றியடைந்தான். தன் அண்ணன் சோமேசுவரனைச் சிறை பிடித்தான். ராஜிகன் (குலோத்துங்கன்) தோற்றோடிப் போனான்" என்றும் பில்ஹணர் கூறுகிறார். பில்ஹணரின் இக்கூற்றுக்களையே ஆதாரமாகக்கொண்டு ஆய்வாளர் குலோத்துங்கன் அரியணையைக் கைப்பற்றியவன் என்று முடிவு கட்டினர்.

## இதனை ஆராய்வோம்

இச் சரித்திரம், வீரராசேந்திரன் இறந்தபின், விக்கிரமாதித்தியன் சோழ நாடு அடைந்து தலைநகரில் ஒரு மாதம் தங்கினான் என்று கூறுகிறது. காஞ்சீபுரத்திலிருந்த துஷ்டர்களை அடக்கினனென்றும், சோழ நாட்டில் கலகங்களை நீக்கினான் என்றும் கூறுகிறது. ஆனால் அப்போது குலோத்துங்கன் சோழ நாட்டில் இல்லை. இக்காலத்தில் குலோத்துங்கன் வடநாட்டில் போரில் ஈடுபட்டிருந்தான் என்று கலிங்கத்துப்பரணியும் கூறுவதால், சோழநாட்டின் கலகங்களுக்கும், குலோத்துங்கனுக்கும் ஏதும் தொடர்பு கிடையாது என்பதனை அறியலாம். பில்ஹணரும் இக் கலகங்களுக்கும், குலோத்துங்கனே காரணம் என்றும் கூறவில்லை. அவரும், அப்போது குலோத்துங்கன் வேங்கி

நாட்டில் இருந்தான், அதிராசேந்திரன் இறந்த பிறகே வந்தான் என்று கூறுகிறார்.

வீரராசேந்திரன் நோய்வாய்ப்பட்டு இறந்தான்; அதிராசேந்திரனும் நோய்வாய்ப்பட்டவன் என்பதனைத் திருவொற்றியூர்க் கல்வெட்டால் அறிகிறோம். இக்காலத்தில் திறமை மிக்க குலோத்துங்கனும் இல்லாததாலும், அதிராசேந்திரன் நோய்வாய்ப்பட்டு இருந்ததாலும் மன்னனின் நேரடி நிர்வாகம் தளர்ச்சி உற்றதாலும் கலகங்கள் விளைந்தன என்பது உறுதி. இவை அரசுரிமை சம்பந்தமான கலகங்கள் அல்ல. கீழ்மட்ட மக்களிடையும், வலங்கை இடங்கைப் பகுதியினர் இடையும் ஏற்பட்ட கலகங்கள் என்பதைக் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியலாம். இவைகளை அடக்கித் தன் மைத்துனனுக்கு விக்கிரமாதித்தியன் உதவிபுரிந்தான் என்றால் இது இயற்கையே. சில ஆராய்ச்சியாளர் இதனைக்கொண்டு விக்கிரமாதித்தியனே அதிராசேந்திரனை அரியணையில் ஏற்றினான் என்பர். ஆனால் அதிராசேந்திரன் வீரராசேந்திரன் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகட்கு முன்னரே முடி சூட்டப்பட்டவன் என்பதைக் காலக்கணக்கீடு வாயிலாக அறியலாம்.

விக்கிரமாதித்தியன் சோழ நாட்டில் தங்கக் காரணம் என்ன? அதிராசேந்திரன் நோய்வாய்ப்பட்டு இருந்தான்; அவனும் விரைவில் இறந்துவிடுவான் என்பது விக்கிரமாதித்தியனுக்குத் தெரிந்ததுதான். அப்படி அதிராசேந்திரன் ஒருவேளை இறந்தால், அதிராசேந்திரனின் சகோதரியாகிய ராஜசுந்தரியின் கணவனாகிய தானும் தன் வாரிசை முன் வைத்துச் சோழநாட்டு அரியணைக்குப் போட்டியிடலாம் என்ற நப்பாசையும் ஏன் விக்கிரமாதித்தியனுக்கு இருந்

திருக்கக் கூடாது? ஆனால் முன் எச்சரிக்கையாக வீர ராசேந்திரன் குலோத்துங்கனுக்கு முடிசூட்டியிருந்தான் என்பதை அறிந்ததும் விக்கிரமாதித்தியன் ஏமாந்திருக்க லாம். அவ்வேமாற்றத்தின் பிரதிபலிப்பைத்தான் பில்ஹண ரும் எதிரொலிக்கிறார் எனலாம். பில்ஹணர், "திருவின் அருளும் கூடியதால் குலோத்துங்கன் அரியணையைக் கைப்பற்றினான்" என்கிறார். திருவின் அருள் கூடியவனை —லக்ஷ்மி கடாக்ஷம் பெற்றவனை அரியணை கரம் நீட்டி அல்லவா வரவேற்கும்? அவன் அரியணையைக் கைப்பற்ற வேண்டிய அவசியம் இல்லையே? குலோத்துங்கன் முன் னரே வீரராசேந்திரனால் முடிசூட்டப்பட்டவன் என்பதை அறிந்ததால்தான் பில்ஹணர் குலோத்துங்கனைத் "திருவின் அருள் கூடியவன்" என்றார். ஆனால் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, அடுத்த அடியிலேயே அரியணையைக் கைப் பற்றியவன் என்றும் கூறினார்.

இச் சரித்திரத்தில் கூறப்படும் போர் கி. பி. 1075-76-இல் நடந்ததாகும். இப்போரில் சோமேஸ்வரன் குலோத் துங்கனோடு சேர்ந்துகொண்டு தன் தம்பியான விக்கிரமா தித்தியனை எதிர்த்தான் என்பது சரித்திரம்கண்ட உண்மை. இதனைக் கூறும்போது பில்ஹணரின் காழ்ப்புணர்ச்சியை யும் காணலாம். "விக்கிரமாதித்தியனுக்கு, இவனுடைய அண்ணனே இயற்கை விரோதியாம்; குலோத்துங்கன் குடிலமனமுள்ளவனும்; அரச நெறியில்லாதவனும்; சோழன் குல விரோதியாம்" — இப்படியெல்லாம் கூறிச் செல்கிறார் பில்ஹணர்.

விக்கிரமாதித்தியனின் நிலை என்ன? ஒரு காலத்தில் இவன் வீரராசேந்திரனுடன் சேர்ந்துகொண்டு தன் அண்

ணனைத் தோல்வியுறச் செய்தான். சோழனின் மகளையும் மணந்தான். அந்தச் சோழகுலம், குலவிரோதியாம்? இப்போது அண்ணனை சோமேசுவரன் சோழனை குலோத்துங்கனுடன் சேர்ந்தால், அண்ணன் இயற்கை விரோதியாம்? இத்தனைக் குணநலம் படைத்தவனும் தன் அண்ணனின் நாட்டை ஒருகாலத்தில் பகைவருடன் சேர்ந்து கவர்ந்தவனும், சோழ அரசகுமாரியை மணந்து, அந்தச் சோழ குலத்தையே இழிக்கின்றவனும், பிற்காலத்தில் தன் தம்பியாகிய ஜெயசிம்மனை விரட்டியவனுமாகிய விக்கிரமாதித்தியனின் புலவர், உரிமையிற் மணிமுடி தரித்த குலோத்துங்கனை அரசநெறியில்லாதவன் என்று கூறுகிறார். அப்படியானால் அவருடைய நோக்கத்தில் அரசநெறியுள்ளவன் வேறு யார் உளர்? இவையெல்லாம் நோக்கினால், விக்கிரமாங்கதேவ சரிதம் காழ்ப்புணர்ச்சியைப் பிரதிபலிக்கும் ஒரு காவியமே என்பது புலனாகும். திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்களும் இதனை வலியுறுத்தியுள்ளார்.[10]

அதிராசேந்திரன் கொலை செய்யப்பட்டான் என்பதும் ஒரு பொய்யான செய்திதான். அவன் நோயால் இறந்தான் என்பதனைக் கல்வெட்டுக்களால் அறியலாம். அப்படி அவன் கொலை செய்யப்பட்டிருந்தால், பிற்காலத்தில் குலோத்துங்கன் இதனை விசாரித்துக் குற்றம் புரிந்தவர்களைத் தண்டித்திருப்பான். ஒருகாலத்தில் தன் அண்ணனைக் கொலை செய்தவர்களை முதல் இராசராசன் விசாரித்துத் தண்டித்தான். அவ்விதமே குலோத்துங்கனும் செய்திருப்பான். இவற்றையெல்லாம் தொகுத்து நோக்குமிடத்து

10. பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி 1, பக்கம் 266.

விக்கிரமாங்கதேவ சரிதத்தில் குலோத்துங்கனைப்பற்றிக் கூறியவைகளை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

### உரிமையில் வந்தவன்

முதற் குலோத்துங்கன் உரிமையில் மணிமுடி சூடியவன்தான். கல்வெட்டுக்கள், காலக்கணக்கீடு, கலிங்கத்துப் பரணி, விக்கிரமசோழனுலா, குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி ஆகியவைகள் இக்கருத்தினையே உறுதி செய்கின்றன.

### புதிய செய்திகள்

சரித்திர ஆய்வாளர் இதுவரை பின்வருகின்ற காலக் கணக்கீட்டினைக் கொண்டுள்ளனர்.

(1) கி. பி. 1069 இன் கடைப் பகுதியில் அல்லது 1070-இன் முற்பகுதியில் வீரராசேந்திரன் இறந்தான். (2) இவனுக்குப்பின் அதிராசேந்திரன் சில மாதங்களோ அல்லது வாரங்களோ அரசுபுரிந்து இறந்தான். (3) கி. பி. 1070 சூன் மாதம் 9-ஆம் தேதியன்று குலோத்துங்கன் முடிசூடினன்.

இக்காலக் கணக்கீடு, "குலோத்துங்கன் அரியணையைக் கைப்பற்றியவன்" என்று கூறும் ஆய்வாளர்களுக்குச் சிறிது சாதகமாகத்தான் இருந்து வருகிறது. இக்கணக்கீடே இன்றுவரை பின்பற்றப்பட்டும் வருகிறது.

பிற்காலக் கல்வெட்டுக்களின் கண்டுபிடிப்புக்களைக் கொண்டு புதிய காலக் கணக்கீட்டினை நிறுவியுள்ளேன். அதிராசேந்திரனின் கல்வெட்டைக்கொண்டு கி. பி. 1070 சூனில் வீரராசேந்திரனே குலோத்துங்கனுக்கு முடிசூட்டி

வைத்தான் என்பதையும் நிரூபித்துள்ளேன்.[12] தமிழ்க் காவியமாகிய கலிங்கத்துப்பரணி ஒரு பொய்யா மொழி என்பதை நிரூபிக்கும், இக் காலக்கணக்கீட்டைத் தமிழ்ப் புலவர் உலகம் வரவேற்குமாக.

கி. பி. 1070 சூனுக்குமேல் நவம்பருக்குள் வீரராசேந்திரன் இறந்தான். இவனுக்குப்பின் இவனுடைய மகனுன அதிராசேந்திரன் ஓராண்டுக்காலம் ஆட்சி புரிந்து கி. பி. 1071 சூனுக்குமேல் இறந்தான். பிறகு, முதற் குலோத்துங்கன் முன்னமேயே தன் மாமனுன வீரராசேந்திரனுல் பட்டம் கட்டப்பட்ட காரணத்தால் கி. பி. 1071 சூனுக்கு மேல் முழு உரிமை படைத்த சோழப் பேரரசனுனுன். இப் புதுச் செய்திகளை வரலாற்று உலகம் ஏற்குமாக.

### பல்லவராயன்பேட்டைச் சாசனம்

இவ்வாய்வுகளுக்குப்பின் நாம் மீண்டும் பல்லவராயன் பேட்டைச் சாசனத்திற்கு வருவோம். இதில் "முன்னுளில் காரியம் இருந்தபடி" என்னும் தொடருக்குச் சில ஆய்வாளர்கள், "முதற்குலோத்துங்கனை முன்னோடியாகக் கொள்ளக்கூடாது. அவன் அரியணையைக் கைப்பற்றிய

---

12. "வீரராசேந்திரனே குலோத்துங்கனை இளவரசில் வைத்தான் என்று கொள்ளலாம். ஆனுல் இன்றுவரை கிடைத்துள்ள அதிராசேந்திரனின் கல்வெட்டுக்கள், சரித்திரத்தில் அவனுடைய நிலைமை ஆகியவைகளைக்கொண்டு, அவ்வாறு நிர்ணயிக்கமுடியவில்லை" என்று திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் 1935-இல் கூறினுர்கள். The Colas Vol. I. page 349. அப்பெரியார் அன்று முன்னோடியாகக் கூறியது 1976-இல் நிரூபிக்கப்படுகின்றது.

வன் (Usurper). ஆகவே, சாசனத்தில் உள்ள தொடர் குலோத்துங்கனைக் குறிக்காது'' என்றனர்.[13] இதனை நோக்குவோம்.

முதற் குலோத்துங்கன் உரிமையில் மணிமுடி தரித்தவன்தான் என்பதை நாம் திட்டவட்டமாக நிரூபித்துள்ளோம். சாசனத்தில் கண்டுள்ளபடி முடிசூட்டப்பட்டுத் திருஅபிஷேகம் செய்யப்பட்டவன் இராசாதிராசன். இரண்டாம் இராசராசனே அவனுக்கு முடிசூட்டினான். "முன்னாளில் காரியம் இருந்தபடி'' இராசராசனே விசாரணை செய்து இம்முடியை எடுத்தான். இராசராசனும், இராசாதிராசனும் முதற் குலோத்துங்கனின் வழித்தோன்றல்களே ஆவர். ஆகவே, இராசராசனின் மனநிலையில்தான் "முன்னாளில் காரியம் இருந்ததை'' நோக்க வேண்டும். இராசராசனின் கண்ணோட்டத்தில், அவனுடைய பாட்டனின் தந்தையாகிய முதற் குலோத்துங்கன் உரிமையில் அரியணை ஏறியவனாகத்தான் காட்சியளிப்பான். இராசராசன் ஆவணங்களைப் பார்த்திருப்பான்; அவைகளும் இக்கருத்தையே உறுதி செய்யும். இவன் கலிங்கத்துப்பரணியைக் கற்றவன். ஒட்டக்கூத்தரிடத்து உலாக்கேட்டவன். பிள்ளைப்பருவத்தில் முதற் குலோத்துங்கனின் மடியில்கூட தவழ்ந்து விளையாடி மகிழ்ந்திருக்கலாம். குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியையும் நன்கு அறிவான். ஆகவே, முதற் குலோத்துங்கனையே முன்னோடியாக வைத்து இராசராசன் முடிவெடுத்தான் என்பதே சாலப்பொருந்துவதாகும். பில்ஹணர், விக்கிரமாதித்தியன் ஆகியவர்களின் கூற்றுக்களை இராசராசன் ஏற்கமாட்டான் என்பது நிச்சயம்.

---

13. E. P. Ind. Vol. 31. Page 224. Foot note 2.

**முன்னாளில் காரியம் இருந்தபடி**

இப்பொழுது இராசராசனின் மனோநிலையில் இருந்து முன்னாளில் காரியம் இருந்தபடி விசாரணை செய்து நாமும் ஆராய்ந்தால் உண்மை புலப்படும்.

"இராசராசனின் இரண்டு பிள்ளைகளும் இளஞ் சிறுவராக இருக்கின்றனர். தான் இறந்துவிட்டால் சோழ பரம்பரையின் கதி, அரியணையின் நிலை என்ன ஆவது? என்று இராசராசன் யோசிக்கிறான். முற்காலத்தில் விஜயாலயனின் நேர்வழியின் சோழப் பரம்பரைத் தொடர் விட்டுப் போகக்கூடிய சூழ்நிலையில் அக்காலத்தில் அரச குடும்பத்தினர் என்ன செய்தனர் என்றும் விசாரணை புரிகிறான். ஆவணங்களைப் பார்த்தும், பெரியோர்கள், மதி மந்திரிகள் ஆகியோர்களிடத்து ஆலோசித்தும் ஒரு நிலையான முடிவை எடுக்கிறான்.

"ஒருகாலத்தில் வீரராசேந்திரன் நோய்வாய்ப்பட்டிருந்தான். இவன் மகன் அதிராசேந்திரனும் நோய்வாய்ப் பட்டிருந்தான். வீரராசேந்திரன் தான் இறந்துவிட்டாலும், தன் மகன் அதிராசேந்திரனும் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டாலும், அரியணைக்குப் போட்டிகள் ஏற்பட்டு, நாட்டில் குழப்பங்கள் ஏற்படும் என்பதை உணர்ந்தான். ஆகவே முன்னெச்சரிக்கையாகத் தன் சகோதரியாகிய அம்மங்கையின் மகனுக்கு — குலோத்துங்கனுக்கு முடிசூட்டியிருந்தான். தான் இறந்துவிட்டாலும் தன் மகனும் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டாலும் குலோத்துங்கனே தொடர்ந்து உரிமையில் ஆளலாம்; ஆனால் தான் இறந்த பின், அதிராசேந்திரனும் ஒரு மகனைப் பெற்று, நோயின் கொடுமையால் அதிராசேந்திரனும் இறந்தால், பிற்காலத்

தில், • குலோத்துங்கன் அதிராசேந்திரனின் மகனிடத்து உரியகாலத்தில், அரசினை நல்கிட வேண்டும் என்றும் விதித்தான்.''

இந்த முறையையே தானும் பின்பற்றவேண்டும் என்று இராசராசனும் நினைக்கிறான். தன் மக்கள் சிறுவர்களாக இருப்பதைக் காண்கிறான். முடிசூட்டப்படுவதற்கு உரிமையும் தகுதியும் உடையவனும் தன் சகோதரி நெறியுடைப்பெருமாவின் மகனுமான எதிரிலிப்பெருமாளைத் தேர்ந்தெடுக்கிறான். அவனுக்கு முடிசூட்டி இராசாதிராசன் என்ற அபிஷேக நாமமும் அளிக்கிறான். தான் இறந்தபின் சோழநாட்டை இராசாதிராசனே ஆட்சி புரிய வேண்டும். தன் பிள்ளைகள் உரிய வயதை அடைந்தவுடன், அவர்களில் ஒருவனிடம் இராசாதிராசன் அரசினை நல்கிட வேண்டுமென்றும், இராசராசன் விதிக்கிறான். ஒருசமயம் பிள்ளைகள் இயற்கை மரணம் எய்தினல் இராசாதிராசனே தொடர்ந்து ஆட்சி புரியலாம் என்றும் இராசராசன் தீர்மானிக்கிறான்.''

இவ்வாறு இராசராசன் ''முன்னாளில் காரியம் இருந்தபடி'' விசாரணை செய்து, செயல்படுத்திய முடிவையே பல்லவராயன்பேட்டைச் சாசனம் அறிவிக்கிறது.

## முன்னாளில் நினைத்தபடி, பின்னாளில் நடந்தது

இராசராசன் எடுத்த முடிவையே சரித்திரமும் சார்ந்து செல்லுகிறது. பல்லவராயன்பேட்டைச் சாசனத்தை அறிவித்ததின் வாயிலாக, இராசாதிராசனின் பாதுகாப்பில் பிள்ளைகள் வளர்ந்தார்கள் என்பதனை அறிகிறோம். குடுமியான்மலைக் கல்வெட்டின் வாயிலாக, அப் பிள்ளைகளில் ஒருவன் குலோத்துங்கன் என்பதை அறிகிறோம்.

மதுரைகொண்ட மாமன்னர்கள் வாயிலாக இராசாதிராசன் சோழ நாட்டினைப் பெருமையுறச் செய்ததை அறிகிறோம். காலக்கணக்கீட்டின் வாயிலாக இராசாதிராசனும், குலோத் துங்கனும் இரண்டு வருடங்கள் இணைந்து ஆட்சிபுரிந்தனர் என்பதை அறிகிறோம். உரிய காலத்தில் இராசாதிராசன் அரசினை குலோத்துங்கனிடம் அளித்து, ஆந்திரம் சென் றான் என்பதையும் அறிகிறோம். மெய்க்கீர்த்திக் கட்டுரை கள், புங்கனூர்க் கல்வெட்டுக்களின் வாயிலாகப், பிரிந்து வாழ்ந்த காலத்தும், இராசாதிராசனும் குலோத்துங்கனும் பாசத்துடனும், நேசத்துடனும் இருந்தனர் என்பதையும் அறிகிறோம். சத்தியசீலன் இராசாதிராசன் என்னும் கட்டுரையின் வாயிலாக, வாய்மையும் மரபும் காத்த ஒரு உத்தமமான சோழ அரசனைப்பற்றிய சரித்திர உண்மையை யும் அறிகிறோம்.

## சோழனின் அறநெறி

சோழப் பேரரசர்களின் பரம்பரையில் ஒரு அறநெறி யைக் காணலாம். சூழ்நிலை காரணமாகவே ஒரு மன்னன் உரிமையில் முடி சூடுவான். தக்க தருணத்தில் உரியவ னிடத்து அம் மணிமுடியைத் திரும்பவும் அம்மன்னன் அளிப்பான். முதல் இராசராசன் உரிமையினாலும், குடி மக்கள் விருப்பத்தாலும் அரியணை ஏறும் பேறு பெற்றான். ஆனால் தன் சிறிய தந்தையாகிய உத்தமசோழனே, அரி யணைக்குரியவன் என்பதைக் கருதி, அவனிடமே அரசினை நல்கினான். உத்தம சோழனும் தான் இறப்பதற்குமுன், தக்க தகமைகள் பெற்ற முதல் இராசராசனுக்கே மீண்டும் அவ்வரசினை உரிமையின்கண் நல்கினான். முதற்குலோத் துங்கனும் குல மணிமகுடம் உரிமையிற் சூடினான். இரண் டாம் இராசாதிராசனும், உரிமையிற் மணிமுடிசூடிப் பின்

உரியவனாகிய மூன்றாம் குலோத்துங்கனிடத்துத் தக்க தருணத்தில் அரசினை நல்கினான். உரியவனும், உரிமையின் கண் வந்தவனும், பாசத்துடனும், நேசத்துடனும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனோபாவத்துடனும் ஒழுகும் தன்மையைச் சோழர் பரம்பரையில்தான் காணலாம்.

"பொருவில் மனுநெறி வாழப் பொன்மகுடம் கவித்தருளிய" சோழனின் அறநெறி இதுவே யாகும்.

## முடிவுரை

யானும் "முன்னாளில் காரியம் இருந்ததை" கல்வெட்டுக்கள் வாயிலாகப் பல "விசாரணைகள் செய்து", ஆராய்ந்து, இப்புதுச் செய்திகளை அருளுடைத் தமிழகத்தின் முன் வைத்துள்ளேன். தமிழ் அன்னை ஏற்பாளாக.



## சேர்க்கை 4

### திருத்தங்கள்

1. பக்கம் 5-ல் அடிக்குறிப்பு 4-இல் உள்ள ‘தொகுதி-21’ என்பதனை ‘தொகுதி-31’ என்று வாசிக்கவும்.

2. பக்கம் 54-இல், வரி 8-இல், ‘இனுங்காறு என்றும்’ என்பதாக உள்ளதனை ‘இனுங்காறு என்னும்’ என்று வாசிக்கவும்.

3. பக்கம் 77-இல், வரி 13-இல், (1178–1216) என்று அச்சாகி உள்ளது. இதனை (1178–1217) என்று திருத்தி வாசிக்கவும்.

4. பக்கம் 202-இல், வரி-1, வரி-15 ஆகியவைகளில், கி. பி. 1192 என்று அச்சாகியுள்ளது. இதனைக் கி. பி. 1191-92 என்று திருத்தி வாசிக்கவும்.

## SUMMARY OF THIS BOOK

King Vijayalaya was the founder of the Chola empire established in the year A. D. 850. In his direct line was born Raja Raja the Great who ascended the throne in A. D. 985. The subsequent Kings in the line of this dynasty were:

| | | | |
|---|---|---|---|
| (1) | Rajendra I | (8) | Vikrama Chola |
| (2) | Rajadhi Raja I | (9) | Kulothunga II |
| (3) | Rajendra II | (10) | Raja Raja II |
| (4) | Rajamahendra | (11) | Rajadhi Raja II |
| (5) | Vira Rajendra | (12) | Kulothunga III |
| (6) | Adhi Rajendra | (13) | Raja Raja III |
| (7) | Kulothunga I | (14) | Rajendra III |

Around A. D. 1280 the empire was absorbed into the Pandyan fold. Modern Thanjavur was the capital of the empire upto A. D. 1025. Later Gangaikonda Cholapuram (at present a small village in Trichinopoly District) was the capital till the end. Mummudichola-mandalam or Palayari (now a small village 4 miles south of modern Kumbakonam) was the seat of the Royal family.

### In this Book

In this book "Aruludaich Cholamandalam" I have dealt in detail with the chronology of the three Chola Kings namely Raja Raja II, Rajadhi Raja II and Kulo-thunga III in the period between A. D. 1146 and 1182. The main subject and the thesis established in this book

are the result of a comprehensive study and research work done by me with supporting evidences from Inscriptions, Ephemerical calculations and relevant records.

## Raja Raja II

Raja Raja II commenced his reign in the year A. D. 1146. He was followed by Rajadhi Raja II after whom Kulothunga III ascended the throne in the year 1178. The relationship among these three Kings and the circumstances under which the latter became Kings, are still under debate. The chronology of events so far held runs as follows:

In the year A.D. 1163, Raja Raja II fell sick. He wanted to appoint a heir apparent for the throne. Since his two sons were then one and two years old respectively, Raja Raja selected Edirilipperumal (son of Neriyudaipperumal, grand son of Vikrama Chola) as the next heir apparent. However, the Great King died in the same year. Edirili was then a young Prince. During his four years of probation period, the administration of the empire was looked after by the trusted Chief Minister, Pallavaraiyan. In A. D. 1166, Pallavaraiyan anointed Edirili as King and gave him the royal (anointed) name "Rajadhi Raja II". Rajadhi Raja ruled upto the middle of A. D. 1178 when Kulothunga III ascended the throne.

## Basis

The above mentioned chronology was based on the interpretation given to the Pallavarayanpettai Inscrip-

tion. of Rajadhi Raja (433/1924) engraved in his 8th regnal year. This inscription was discovered in 1924 and the original text was published in Ephigraphia Indica Volume 21, page 184. Sri Venkatasubba Ayyar has discussed the subject in detail.

